# தமிழ் இலக்கியத்தில் எதிர்காலவியல்

முனைவர் ச. சிவகாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
சென்னை-600 113

# தமிழ் இலக்கியத்தில் எதிர்காலவியல்

ச.சிவகாமி

இணைப்பேராசிரியர்

இலக்கியம் மற்றும் சுவடியியல் புலம்

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தரமணி, சென்னை - 113

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Tamil̲ Ilakkiyattil Etirkālaviyal |
| Author | : | Dr. S. Sivakami<br>Associate Professor<br>Faculty of Tamil Literature and Manuscripts,<br>I.I.T.S., Chennai - 600 113. |
| Publisher & copyright | : | International Institute of Tamil Studies<br>C.P.T. Campus, Chennai - 600 113. |
| Publication No | : | 399 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2001 |
| Paper Used | : | 18.6 kg TNPL Super Printing |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 11 point |
| No. of Pages | : | xvi + 176 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 45/- |
| Printing | : | Pavai Printers (P) Ltd.,<br>Chennai - 600 014<br>Phone : 8532441, 8532973 |
| Subject | : | Futurology in Tamil Literature |

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.

# அணிந்துரை

மனிதன் சென்ற காலத்தில் கிடைத்த பட்டறிவால் நிகழ்காலத்தை எண்ணி நாளைய எதிர்காலம் எப்படி அமைய வேண்டும் என்று சிந்தித்துத் திட்டமிடுவது எதிர்காலவியல் என்று கூறலாம்.

எதிர்காலவியல் என்பது எதிர்காலத்தைப் பற்றிக் கணித்துரைப்பது. அறிவியல், தொழில் நுட்பம், கணினி முதலியவற்றின் வேகமான வளர்ச்சி. இன்று உலகில் பலவகையான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே இன்று ஒவ்வொரு துறையும் மாற்றம் பெற்றுள்ளன. எனவே புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், உலகில் மாறுதல் என்பது இயல்பானது என்ற கருத்தில் 'மாறுவது இயற்கை' என்று ஆத்திசூடியில் குறிப்பிட்டுள்ளது இங்கு நினைவுகொள்ளத்தக்கது.

எதிர்காலவியல் தோற்றத்திற்கு அறிவியல் வளர்ச்சியே காரணமாகும். எதிர்காலவியல் என்ற கலைச்சொல்லுக்கு முன்னறிதலுக்கான புதிய அறிவியல் என்பது பொருள். ஒ.கா. பிளஷ்ட் கைம் எனும் செர்மன் வரலாற்று ஆசிரியர் *1948*இல் இச்சொல்லை முதன்முதலாகக் கையாண்டார். எதிர்காலவியல் பற்றிய ஆய்வின் விளைவாக எதிர்காலவியல் எனும் தனித்துறை இந்தியப் பல்கலைக் கழகங்களில், குறிப்பாகத் தமிழகப் பல்கலைக்கழகங்களில் அமைப்பெற்றது.

எதிர்காலவியலில் ஊக முறையில் உய்த்துணர்தல், தொடர்ந்துவரும் போக்கை ஒட்டிய முன் அறிதல், ஒரு குறிப்பிட்ட நிகழ்வு குறித்த கணிப்பு முதலியவை தனித்தனியாக நோக்கப்படுகின்றன. எதிர்காலம் குறித்த கணிப்புப் பற்றிய விதிமுறைகளை வரையறுப்பது மிகவும் கடினம் என்பதை எதிர்காலவியலார் பலர் ஒப்புக்கொண்டுள்ளனர். அறிவியல் தொழில்நுட்பத் துறையிலும் கலை இலக்கியத் துறையிலும் எதிர்காலம் பற்றிய கணிப்புகள் வேறுபடுகின்றன.

எதிர்காலத்துவம் என்பது வலிமைமிக்க இத்தாலியக் கலை இயக்கம். இலக்கியக் கலை இயக்கமாக *1909*இல் பிலிப்போ தாமசோ மாரினைட்டியால் தோற்றுவிக்கப்பட்டது. பொயசியா, லாசெர்பா, லே பிகாரோ இதழ்களில் இந்தக் கருத்துகள் வெளியிடப்பெற்றன. இதன் உணர்வை நவீனவியம் என மாரினெட்டி வருணித்தார். வேகம், பெரிய எந்திரத் தொழில் மையங்கள் நகரமயமாதல் ஆகியன நவீனமயத்தின் முத்திரைகள். நவீன வாழ்க்கையை இயக்கிடும் இயந்திரங்கள் போன்றவற்றில் புதிய அழகு, அமெரிக்க அழகியல், போர்களைப் புகழ்தல் முதலியன இலட்சிய வடிவம் பெற்றன. புனைவியல் சார்ந்த மிகை உணர்ச்சிப்போக்கை எதிர்த்து முழக்கமிட்டார். ஒருவகையில் அந்தக் கலை இலக்கியத்துவம் பழமை மரபை மறுக்கத் தூண்டியதுடன் பழமையைப் பாதுகாக்கும் அனைத்து அமைப்புகளையும் அழித்தொழிக்கத் தூண்டியது. மற்றொரு வகையில் நிகழ்காலத்தைப் போற்றிப் பரவியது. வேகம், சக்தி, இயந்திரங்களின் அழகு ஆகியவற்றை உயர்த்திப் புகழ்ந்தது. *1910*இல் "எதிர்காலத்துவ ஓவியர்களின் கொள்கை அறிக்கை' ஓவியரும் சிற்பியுமான அம்பர்டோ போக்கியோனி, ஓவியர்கள் கியாகோமோ பல்லா, காரிலோ காரா, ஜினோ செவரினி மற்றும் லூய்கி ருஸ்ஸாலோ (எதிர்காலத்துவ

இசையை இசையமைத்தவர்) ஆகியோரால் கையெழுத்திட்டு வெளியிடப்பெற்றது. பிற வெளியீடுகளாலும் கவனத்தை ஈர்க்கும் கிளர்ச்சிகளாலும் இவ்வியக்கம் முன்னிலை பெற்றது.

ஓவியங்களில் எதிர்காலத்துவ ஓவியர்கள் உலகளாவிய இயங்கு முறைகளைப் பித்தாகப் பற்றியிருந்தனர். எல்லாப் பொருள்களும் எப்போதும் இடையறா இயக்கத்தில் இருப்பதால், தொடர்ந்த உருவமாற்றம் நடைபெறுவதால் "வடிவம்" என்பது முடிந்த உறுதியான நிலையில்லை என்று கருதினர். வெற்றிடத்தில் வடிவம் இயங்குவதே வெளி என்றனர். வடிவத்தை மனம் போனபடி உருக்குலைப்பதாலும் அதன் இயக்கத்தை ஒரு கோல ஒழுங்கில் அமைப்பதாலும் இயக்கத்தை மாற்றும் விசைகளுக்குக் கோட்டுருவம் தருவதாலும் இந்த மாற்றங்களைப் பதிவு செய்ய முயன்றனர்.

இலக்கியத்தில் எதிர்காலத்துவம் மொழியின் தொடர் அமைப்பு ஒழுங்கைச் சிதைத்திடுவதையும் ஓசைச் சீரைக் கலைப்பதையும் கொள்கைகள் ஆக்கியது. அதன் தீவிர வடிவங்களில் துண்டுதுண்டான கருத்துவெளிப்பாடுகள், குழப்பமான பெயர்ச்சொல், முடிவிலா வினைச்சொல் தொடர்கள், இடைச்சொல் இல்லாமை, எதுகை அல்லது இயைபு நயமின்மை என விளங்கின. தட்டச்சு மூலம் இடம்பிரித்துக் காட்டுவதன்றி, நிறுத்தக் குறிகள் இடுவதில்லை. எல்லாக் குறியீடுகளும், வேதியியல் கணிதக் குறியீடுகள் உட்படப் பயன்படுத்தப்பட்டன. கூச்சல்களும் இடம்பெற்றன.

சோவியத் நாட்டில் எதிர்காலத்துவம் வலுவான தாக்கம் செலுத்தியது. முதலில் செவர்யானின் ஈகோ எதிர்காலத்துவம், பிறகு போரிஸ்பாஸ்டர்கூக், மற்றும் மாயாகோவ்ஸ்கி ஆகியோர்

பங்குபெற்றனர். சிறிதுகாலம் பொதுவுடைமைக் கலைக்கூடத்தின் அதிகாரபூர்வக் கலை வடிவமாயிருந்தது. கிளைபினிகோவ் குழு இதன் ஒழுங்கற்ற தன்மையை வலியுறுத்தியது. கியூபோ எதிர்காலத்துவம் முறையில் அறிவுபூர்வமான கவிதை மொழியைப் போதித்தது. இதன் கருத்துகள் இமேஜினிசம், கன்ஸ்ட்ரக்டிவிசம், வோர்ட்டிசிசம் போன்ற பல கலை இலக்கியங்களில் தாக்கம் செலுத்தின.

அழிவியல்வாதிகளான டாடாயிஸ்டுகளைப் போலன்றி, எதிர்காலத்துவ வாதிகள், தங்கள் காலகட்டத்தின் பல்வேறு வகைமைகள், அதன் வாய்ப்புகள் மற்றும் சாதனைகளை வரவேற்றுப் போற்றினர். போக்கியோனியின் சிற்பங்களும், பல்லா, காரா, செவரினி ஆகியோரின் ஓவியங்களும் இந்த உணர்வைப் பிரதி பலித்தன. *1912* இல் பாரிஸ் நகரில் எதிர்காலத்துவவாதிகள் நடத்திய கண்காட்சி எதிர்காலத்துவக் கூறுகளை உட்படுத்தி நடைபெற்றது. இதன் பொதுவான தாக்கம் இங்கிலாந்தில் சிறிதுகாலம் நிலவிய வோர்ட்டிசிசத்திலும் இருந்தது. கி.பி *20* ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அக்கலை இலக்கியம் மறைந்துவிட்டது.

ஆனால் எதிர்காலவியல் இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறது. ஏனெனில் நிகழ்காலப் போக்குகளை ஒட்டிய முன் அறிதலுக்கான அறிவியல் கருதுகோள் அடிப்படையில் அமைந்திருப்பதால் எதிர்காலவியல் துறை இன்றும் நிலைத்துள்ளது.

ஒவ்வொரு மனிதனும் எதிர்காலம் எப்படி இருக்கவேண்டும் என்று ஏங்குவது இயல்பு. அவ்வாறு எண்ணிப்பார்ப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். செழுமையான பட்டறிவு மிக்கவர்களே எண்ணத் தலைப்படுகின்றனர்.

பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம்,

**'காலந்தாமே மூன்றென மொழிப.'** (தொல். *199*)

என்று குறிப்பிடுகிறது. காலத்தைத் தொல்காப்பியம் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற நிலையில் மூன்றாகப் பகுத்துள்ளது *(தொல்.200).*

எனவே எதிர்காலச் சிந்தனை பழந்தமிழர்களிடையே இருந்ததை இந்நூற்பா வழி அறியலாம்.

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் மாந்தர்கள் பகைமையற்ற வாழ்க்கையை வாழவேண்டும் என்பதைக் "கோள் வல் உளியமும் கொடும் புற்று அகழா: வாள் வரி வேங்கையும் மான் கணம் மறலா: அரவும், சூரும், இரை தேர் முதலையும், உருமும், சார்ந்தவர்க்கு உறுகண் செய்யா-செங்கோல் தென்னவர் காக்கும் நாடு என, எங்கணும் போகிய இசையோ பெரிதே" என்று குறிப்பிடுகிறார். இங்கு ஒன்றுடன் ஒன்று பொருதுபவை பகை உணர்வு அற்று வாழ்வதாகக் கற்பனை செய்துள்ளார்.

கம்பராமாயணத்தில் கம்பர் "வண்மை இல்லை, ஓர் வறுமை இன்மையால்; திண்மை இல்லை, ஓர் செறுநர் இன்மையால்; உண்மை இல்லை, பொய் உரை இலாமையால்; வெண்மை இல்லை, பல் கேள்வி மேவலால்" என்று ஒரு புதிய உலகைப் படைத்துள்ளார்.

மேலும் "எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே, இல்லாரும் இல்லை: உடையாரும் இல்லை மாதோ" என்று வறியவரும் செல்வரும் இல்லாத சரிநிகர் வாழ்வைப் பாடியுள்ளார்.

மக்கள் கவிஞர் பாரதியார் 'புதிய கோணங்கி' என்ற பாடலில் 'நல்ல காலம் வருகுது; நல்ல காலம் வருகுது; சாதிகள் சேருது; சண்டைகள் தொலையுது; தரித்திரம் போகுது; செல்வம் வளருது; படிப்பு வளருது; பாவம் தொலையுது; படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால், போவான் ஐயோவென்று போவான். வியாபாரம் பெருகுது தொழில் பெருகுது; தொழிலாளி வாழ்வான்; சாத்திரம் வளருது; சூத்திரம் தெரியுது; யந்திரம் பெருகுது; தந்திரம் வளருது; மந்திரமெல்லாம் வளருது; சாமிமார்க்கெல்லாம் தைரியம் வளருது; தொப்பை சுருங்குது; சுறுசுறுப்பு விளையுது; சாத்திரம் வளருது; சாதி குறையுது; நேத்திரம் திறக்குது; நியாயம் தெளியுது; பழைய பயித்தியம் படீலென்று தெளியுது; வீரம்வருகுது; மேன்மை கிடைக்குது; தர்மம் பெருகுது என்று இந்தியாவின் எதிர்காலம் எப்படி அமைய வேண்டும் என எண்ணிப் பாடியுள்ளார்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ''புதுமையிலே விரைந்தோடு-ஒன்று போனவழிச் செல்லும் மந்தையில் ஆடு, எதிலும் நிசத்தினைத் தேடு, பொய் எவர் சொன்னபோதிலும் நீ தள்ளிப்போடு" என்று பாடியுள்ளார்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பழமை ஒழிந்து புதுமை பிறக்க விழைந்தார். புதிய சிந்தனைகள் மானிடச் சமூகத்தை ஆட்கொள்ள வேண்டும் என்று விரும்பினார். அதன் அடிப்படையிலேயே, "சாதிமத பேதங்கள் மூட வழக்கங்கள் தாங்கி நடைபெற்றுவரும் சண்டைப்புலகிதனை ஊதையினில் துரும்புபோல் அலைக்கழிப்போம்; பின்னர் ஒழித்திடுவோம்; புதியதோர் உலகம் செய்வோம் என்றும், புதியதோர் உலகம் செய்வோம் -கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம் பொது உடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம் புனிதமோடதை எங்கள் உயிரென்று காப்போம்" என்றும் பாடினார்.

சாதி, சமயம், மூடநம்பிக்கைகள், பெண் அடிமை, பிற கொடுமைகள் நிலவும் இச்சமூகத்தை விரைவில் மாற்றிப் புதிய உலகை உருவாக்கவேண்டும் என்று பாரதிதாசன் விரும்பினார்.

இந்நிறுவனத்தில் இலக்கியம் மற்றும் சுவடிப்புலத்தில் இணைப் பேராசிரியராகப் பணியாற்றும் முனைவர் ச. சிவகாமி **தமிழ் இலக்கியத்தில் எதிர்காலவியல்** என்ற இந்த நூலைப் படைத்துள்ளார். தமிழ் இலக்கியத்தில் எதிர்காலவியல் சிந்தனைகள் இடம் பெற்றுள்ள இடங்களை நூலாசிரியர் நன்கு விளக்கியுள்ளார். மேலும் இப்பொருண்மையில் எழுதப்பட்ட முதல் நூல் என்பதால் இந்நூல் பெருமை பெறுகிறது. இந்நூலாசிரியர் முனைவர் ச. சிவகாமி உழைக்கச் சலிக்காதவர். ஆய்வுத்திறன் மிக்கவர்.

இந்நூலை மதிப்பீடு செய்த மதுரைக் காமராசர் பல்கலைக்கழக எதிர்காலவியல் துறைத் தலைவர் முனைவர் ஆனந்தவல்லி மகாதேவன் அவர்களுக்கு நன்றி.

இந்நிறுவன வளர்ச்சியில் ஆக்கமும் ஊக்கமும் காட்டிவருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வி அமைச்சர் முனைவர் மு. தம்பிதுரை அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் திருமிகு. சு. இராமகிருட்டிணன் இ.ஆ.ப. அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

இந்நூலினை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட் அவர்களுக்கு நன்றி.

**இயக்குநர்**

# வாயில்

திட்டமிட்ட வாழ்வே எதிர்கால நல்வாழ்விற்கான வழிகாட்டி என்ற கருத்து இன்று ஆழ வேரூன்றியுள்ளதன் காரணமாக வாழ்விற்கு வளம்சேர்க்கும் எல்லாத் துறைகளிலும் திட்டமிடல் இடம் பெற்றுள்ளது. இத்திட்டமிடல் நேற்றைய பட்டறிவு, இன்றைய நிலை இவற்றைக் கருத்தில் கொண்டு நாளை எப்படியிருக்கும்; எப்படி யிருந்தால் நல்லது; அதற்கு இன்று செய்ய வேண்டியன யாவை; அதன் இன்றைய, நாளைய பயன் என்ன என்பனவற்றிற்கு விடைகாணும் கல்வியாக, எதிர்காலவியலாக மலர்ந்துள்ளது.

ஞாலத்தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மன்றம், செண்பகனூரில் *1993* சூலை *11 - 13* ஆம் நாட்களில் நடத்திய கருத்தரங்கில் கட்டுரை வழங்க நேரிட்டது. அதற்கு என்ன பொருளில் கட்டுரை வழங்கலாம் என்று எண்ணிய பொழுது 'எதிர்காலவியல்' சிந்தை கவர 'தமிழ் இலக்கியத்தில் எதிர்காலவியல்' என்ற கட்டுரை படைக்கப்பட்டு *11-6-93*இல் கருத்தரங்கில் இடம் பெற்றது. அதன் தூண்டல் இப்பொருள் பற்றித் தொடர்ந்து சில கட்டுரைகளை அவ்வப்போது எழுத ஏதுவாயிற்று. அப்பொழுது இயக்குநர் பொறுப்பில் இருந்த முனைவர் அன்னிதாமசு இப்பொருளில் நூல் படைக்கப் பணித்தார். எனவே அன்று இருந்த அறக்கட்டளைப் பொறுப்புப் பணிகளுடன் கூடுதலாக இப்பணியும் மேற்கொள்ளப்பட்டது. திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகப் பேராசிரியர், ஆங்கில மொழித் துறைத் தலைவர், முனைவர் கே. செல்லப்பன் 'Problems of Futurology' எனும் நூலைப் பார்வைக்கு அனுப்பி உதவினார். எதிர்காலவியலறிஞராகவும் எதிர்காலவியல் இலக்கியப் படைப்பாளராகவும் உள்ள திரு. சுஜாதா இப்பொருள் பற்றிய என் வினாக்களுக்குப் *(27-8-93)* பதிலளித்துத் தெளிவூட்டினார். இப்பின்புலத்தில் தமிழிலக்கியத்தைக் களனாகக் கொண்டு ஓர் அறிமுக நூலாக, இப்புதிய அணுகு முறையின் முதல் நூலாக வெளிவருகிறது. எனவே இப்பின்னணியினர் என்றும் என் நெஞ்சில் நிறுத்தற்குரியர். எதிர்காலவியல் துறை சார்ந்த நூற்பட்டிய லொன்றை அனுப்பித்தந்த பாரதிதாசன் பல்கலைக்கழக இத்துறைப் பேராசிரியர் முனைவர் ராஜேந்திரனும் இங்கு நினைக்கத்தக்கவர்.

சென்னைக் கிறித்துவக் கல்லூரி, அதன் தமிழ்த்துறை சார்பில் எதிர்காலவியல் தொடர்பான கருத்தரங்கு ஒன்றினை நடத்தி, இடம் பெற்ற

கட்டுரைகளைத் 'தமிழர் எதிர்காலவியல்' எனும் தலைப்பில் வெளியிட்டு *(11-12-93)* தமிழில் எதிர்காலவியலுக்கு அடிக்கல் நாட்டிய பெருமை கொள்கிறது. கவிதை, பெண்ணியம், சுற்றுச்சூழல், மாணவர், நுண்கலை, தொழில்நுட்பம், மொழி, பண்பாடு, ஆன்மீகம், கல்வி, சினிமா, கல்விச் சூழல் ஆகிய துறைகளில் தமிழினத்தின் எதிர்காலம் குறித்த கட்டுரைகள் இதில் இடம் பெற்றுள்ளன. பாராட்டி வரவேற்கத்தக்க நூலாக இது அமைகிறது.

இதே காலக்கட்டத்தில் *(டிச. 1993)* டாக்டர் ஆ. யோகமூர்த்தி, 'சுற்றுச்சூழல் – எதிர்காலச் சிந்தனை' எனும் நூலை வெளியிட்டுள்ளார். சுற்றுச் சூழலை மையமிட்ட நூலாக அமையினும் இது எதிர்காலவியலுக்கு ஓர் அறிமுகமாக, எதிர்காலக் கல்வி பற்றிய சிந்தனையை யுள்ளடக்கியதாகவும் சிறப்புற்றுள்ளது. தமிழில் நூல் வடிவம் கண்டுள்ள இவ்விரு எதிர்காலவியல் நூல்களும் தத்தம் போக்கில் குறிக்கத்தக்கனவாகும்.

நிறுவன வெள்ளிக்கிழமை கருத்தரங்கில் முனைவர் தே. ஆல்பர்ட் பதின்மூன்றாண்டுகட்கு முன்பே *31-1-86*-இல் 'இலக்கியத்தில் வருங்கால எண்ணங்கள்' என்ற கட்டுரை தந்து, இலக்கியத்தில் எதிர்காலவியல் அணுகுமுறைக்கு வித்திட்டுள்ளார். இதினின்றும் முற்றிலும் மாறுபட்ட பார்வையை இந்நூல் வழங்குகிறது என்பதும் சுட்டத்தக்கது.

நூலின் முதல் கட்டுரையான 'எதிர்காலவியல் அறிமுகம்' என்பது எதிர்காலவியலை, அதன் விளக்கம், தோற்றம், வளர்ச்சி, இயல்பு, நோக்கம், பயன், எதிர்காலவியலறிஞர் இயல்பு, இந்தியாவில், தமிழகத்தில் இதன் நிலை என்பன குறித்த செய்திகள் வழி விளக்குகின்றது.

'இலக்கியத்தில் எதிர்காலவியல்' எனும் அடுத்த கட்டுரை எதிர்காலவியலுக்கு இலக்கியம் நல்ல களனாய் அமைவதைச் சுட்டும் வகையில் அமைகிறது. அறவிலக்கியத்திற்கும் எதிர்காலவியலுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு திருக்குறள் கொண்டு இங்கு விரிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. பாட்டியல்களின் எதிர்காலச் சிந்தனைச் சார்பும் சுட்டப்பட்டுள்ளது.

மூன்றாவதாக அமையும் 'பழந்தமிழில் எதிர்காலச் சிந்தனை' தொல்காப்பியம், சங்கவிலக்கியம், குறள், சிலம்பு கொண்டு இலக்கியத்துள் எதிர்காலவியல் கொள்ளும் இடம், பழந்தமிழரின் எதிர்காலச் சிந்தனைகள் முதலானவற்றை இயம்புகிறது.

'வாழ்வியலில் எதிர்காலச் சிந்தனை' என்றமையும் அடுத்த கட்டுரை, கம்பனைக் களமாகக் கொண்டு எதிர்காலவியல் கோட்பாடுகளை வரையறுக்க முனைந்துள்ளது.

அடுத்து வரும் 'எதிர்காலவியல் இலக்கியம்', தமிழில் தனித்ததொரு இலக்கிய வகையாக இன்று வளர்ந்து கொண்டிருக்கும் எதிர்காலவியல் இலக்கியம் தமிழில் தோன்றி இடம்பெற்றுள்ள நிலை, அதன் இயல்பு, பிற இலக்கியங்களினின்றும் மாறுபட்டு நிற்கும் தன்மை, அதன் நோக்கம், பயன் முதலானவற்றைக் கொண்டுள்ளது.

இவ்வகையிலக்கியத்தின் பொருட்கூறுகளை, 'எதிர்காலவியல் இலக்கியப் பொருண்மை' எனும் அடுத்த கட்டுரை பகுப்பாய்வு செய்கிறது.

எதிர்காலவியலோடு மிக நெருங்கி, நிகழ வாய்ப்பற்றது என்ற நிலையில் வேறாகி நிற்கும் இன்பக்கனவுலகு பற்றியும் இந்நூல் சிந்தித்துள்ளது. எதிர்காலம் பற்றிய உந்துதலும், விழைவுமே இதற்கும் அடிப்படையாதலின் இங்கு இணைக்கப்பட்டுள்ளது. பொதுநிலையில் இன்பக் கனவுலகு பற்றிய விளக்கம், தமிழில் இடம்பெறும் தன்மை, வெளிப்போந்துள்ள இன்பக்கனவுலக இலக்கியங்கள், அவை உணர்த்தும், வேண்டும் சமுதாயம் ஆகியவை, 'இன்பக்கனவுலகச் சமுதாயம்' எனத் தொடரும் கட்டுரையாகிறது.

இன்பக் கனவுலகச் சிந்தனையாளராக இளங்கோவடிகள் அன்றே சிறந்துள்ளதை 'இளங்கோவின் இன்பக் கனவுலகம்' காட்டுகிறது.

எதிர்காலத்தமிழ் பற்றிய சிந்தனைகளையும் உள்ளடக்கும் பொழுதுதான் நூலுக்கு ஓர் முழுமைத் தன்மை அமையும் என்ற உணர்வில் நிறைவாக, 'இருபத்தோராம் நூற்றாண்டுத் தமிழ்' அமைகிறது. இதில் தமிழ் மொழி, தமிழிலக்கணம், தமிழிலக்கியம், தமிழ்க் கல்வி, தமிழாய்வு, மக்கள் தொடர்புக் கருவிகளில் தமிழ் என்னும் அறு கோணங்களில் தமிழின் எதிர்காலம் கணிக்கப்பெற்றுள்ளது. தமிழின் எதிர்காலம் ஒளிமயமாக இன்று நாம் என்ன செய்ய வேண்டும் என்றும் சிந்தித்துள்ளது.

எதிர்காலவியலை அறிமுகப்படுத்துதல், இலக்கியத்தில் எதிர்காலச்சிந்தனைகளை இனங்காட்டுதல், எதிர்காலவியல் இலக்கியம் எனும் புதிய இலக்கிய வகை தமிழில் கால்கொண்டுள்ள நிலையை ஆராய்தல், எதிர்காலத்தில் தமிழின் நிலையைக் கணித்தல் எனும் நான்குவிதப் பார்வைகளில் இந்நூல் அமைந்துள்ளது.

இலக்கியத்தைக் களனாகக் கொண்டு இன்னும் பல ஆய்வுகள் எதிர்காலவியல் அணுகுமுறையில் செய்யவியலும். குறிப்பாகத் தமிழ்ப்புராணங்கள், நாட்டுப்புறக் கதைகள், பக்தியிலக்கியம், தற்காலக் கவிதை என்பனவற்றில் விரிவாக நோக்கலாம். இவற்றால் எதிர்காலவியல் பற்றிய நுணுக்கங்கள் பலவும் புலனாகும். அவை தமிழினத்தின் பழம்பெருமை காணவும், நாளைய தமிழரின் வாழ்வியல் வளத்திற்கு வழிகாட்டவும் துணையாகும்.

நூல் வெளியீட்டிற்குத் துணை நின்ற வல்லுநர் குழு உறுப்பினர்கள் முனைவர் தமிழண்ணல், முனைவர் இ. சுந்தரமூர்த்தி மற்றும் நிறுவன இயக்குநர் முனைவர் ச.சு. இராமர் இளங்கோ, செம்மையாக நூலாக்கம் செய்தளித்துள்ள பாவை அச்சகத்தார் ஆகியோர்க்கும் என் நன்றி உரித்து.

*ச.சிவகாமி*

# உள்ளே

எதிர்காலவியல் அறிமுகம் 1

இலக்கியத்தில் எதிர்காலவியல் 24

பழந்தமிழில் எதிர்காலச் சிந்தனை 33

வாழ்வியலில் எதிர்காலச் சிந்தனை 41

எதிர்காலவியல் இலக்கியம் 69

எதிர்காலவியல் இலக்கியப் பொருண்மை 79

இன்பக் கனவுலகச் சமுதாயம் 123

இளங்கோவின் இன்பக் கனவுலகம் 142

இருபத்தோராம் நூற்றாண்டுத் தமிழ் 152

நிறைவுரை 169

ஆய்வுக்களங்கள் 171

துணைநூல்கள் 172

சிறப்புச் சொல்லகராதி 174

# எதிர்காலவியல் - அறிமுகம்

எதிர்காலவியல் – சொல்லாக்கம்
விளக்கம்
எதிர்காலவியலும் பிற துறைகளும்

- இன்பக்கனவுலகு
- சோதிடவியல்
- சமூகவியல்

பிறதுறைகளில் எதிர்காலவியல்
எதிர்காலவியல் தோற்றமும் வளர்ச்சியும்
முன்னோடிகள்
இயல்பு
நோக்கம்
அணுகுமுறை
வகைகள்
பயன்
எதிர்காலவியலாளர் இயல்பு
எதிர்காலவியலாளரில் குறிக்கத்தக்க சிலர்
இந்தியாவில் எதிர்காலவியல்
தமிழகத்தில் எதிர்காலவியல்

# எதிர்காலவியல் - அறிமுகம்

நேற்று எப்படி இருந்தோம்? இன்று எப்படி இருக்கிறோம்? நாளை எப்படி அமைய வேண்டும்? நேற்றைய வாழ்வில் தொடர விரும்புவது எது? தொடர்வது எது? தவிர்க்க விரும்புவது எது? இன்றைய வாழ்வின் நிறைகுறை என்ன? நாளைய வாழ்வில் வளர்ச்சி / மாற்றம் வேண்டுவது எவற்றில்? எப்படி? ஏன்? நாளை பெற வேண்டுவதைப் பெறும் முயற்சியில் இன்றைய செயல்பாடு என்ன? என்பன போன்றவற்றை எண்ணும் கல்வியாக எதிர்காலவியல் (Futurology) அமைகிறது. உருவாக்கப்பட்ட, எதிர்கால எதிர்பார்ப்பின் நிறைவேற்றத்திற்கான திட்டம் (Plan) இன்று நடைமுறைப் படுத்தப்படுவதை எதிர்காலவியல் காட்டுகிறது. எதிர்காலச் சிந்தனைகளை அறிவியல் - தொழில்நுட்ப வளர்ச்சி 'எதிர் காலவியல்' எனும் கல்வியாக்கி எல்லா வளர்ச்சித் துறைகளிலும் தனிக்கவனம் பெறச்செய்துள்ளது.

அஃறிணை உயிர்களே தம் எதிர்காலம் பற்றிக் கவலைப் படும் பொழுது (எறும்புகள் மழைக்காலத்திற்குத் தேவையான உணவுப் பொருளைத் தொகுத்தல் போல்வன), பகுத்தறிவு கொண்ட மானிடரிடம் இவ்எதிர்காலச் சிந்தனை வேர் கொண்டிருப்பது இயல்பே. மனித சமுதாய வரலாற்றைத் திரும்பிப் பார்ப்பின் அதன் வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் அவனின் திட்டமிட்ட எதிர்காலச் சிந்தனையும் பெருங்காரணமாக அமையக் காணலாம்.

இன்று அனைத்துத் துறைகளிலும் ஆட்சி செய்யும் கருத்தாக எதிர்காலவியல் விளங்குகின்றது. எதிர்காலத்தைப் பற்றிய அச்சமும் எதிர்நோக்கும் நிகழ்காலத் திட்டமிடலையும் எச்சரிக்கை யுணர்வையும் தோற்றுவித்துள்ளன. அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிகள் நிகழ் காலத்தவரை, எதிர்காலத்தின் மீது ஆழ்ந்த அக்கறை கொளச் செய்துள்ளன. மனிதனுக்குத் தேவையான இயற்கை வளங்கள் எங்கே, எவ்வளவு, எப்படியிருக்கின்றன என்பதை ஓரளவு துல்லியமாக வரையறுத்துக் காட்டுவதாலும் தேவையின் அளவையும் கணித்துரைப்பதா

லும் எதிர்காலம் பற்றிய எச்சரிக்கையுணர்வு தீவிர மடைந்துள்ளது. எரிபொருள், உணவுப் பொருள் போன்றவற்றின் பற்றாக்குறை; சுற்றுப்புறச் சூழல் கேட்டால் விளைந்துள்ள வானியல் மாற்றங்கள், தீமைகள்; இயற்கைச் சீற்றங்கள் போன்றன உலகநாடுகளில் நிகழ் காலத்தவரை விழிப்படையச் செய்துள்ளன. எனவே, எங்கும் எத்துறையிலும் எதிர்காலக் கணித்துரைப்பு என்பது இன்று இயல் பாகிறது.

## எதிர்காலவியல் - சொல்லாக்கம்

'Futurum' எனும் இலத்தீன் சொல்லும் 'logos' எனும் கிரேக்கச் சொல்லும் இணைந்து, 'futurology' எனும் ஆங்கிலச் சொல்லைத் தந்துள்ளன.[1] எதிர்காலத்தைப் பற்றிய அறிவியல் எனும் பொருளில் 'எதிர்காலவியல்' என்பது இதன் தமிழாக்கமாகிறது. இதற்கு வருங்கால இயல், வருநாளியல் எனும் மொழி பெயர்ப்புகளும்[2] காணப்படுகின்றன. எனினும் 'காலந் தாமே மூன்றென மொழிப' எனத் தொல்காப்பியர் (சொல் 199) சுட்டும் பொழுது அவற்றை இறப்பு, நிகழ்வு, எதிர்வு (சொல் 200) என்றே குறிப்பதாலும், தொன்று தொட்டு வழக்கிலும் ஏட்டிலும் இடம் பெறும் சொல்லாக விளங்குவதாலும், எதிர்கொளவிருப்பது என்பதாலும் எதிர்வு என்பது ஏற்கப்பட்டு எதிர்காலவியல் என்ற சொல்லே இந்நூலில் பயன்படுத்தப் படுகிறது. காலம் எனும் முதன்மைச் சொல் லிருக்கையில் அதனைக் குறிப்பால் உணர்த்தும் 'நாள்' என்பதனைக் கொள்வது பொருத்தமாகத் தோன்ற வில்லை. மற்றும் 'காலம்' எனும் சொல்லின் முழுமைப் பொருளை 'நாள்' தராமையும் சுட்டத்தக்கது.

---

1. I. Bestuzhev - Lada; Bourgeois Futurology; The Futurists; Alvin Toffler (ed); Random House, New York; 1972; p.194.

2. தே. ஆல்பர்ட்; இலக்கியத்தில் வருங்கால எண்ணங்கள்; தட்டச்சுப் படி (உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், வெள்ளிக்கிழமை வாரக் கருத்தரங்குக் கட்டுரை) 31.1.86.

மணவை முஸ்தபா; காலந்தேடுந்தமிழ்; மீரா பப்ளிகேஷன்; சென்னை; 1987; பக் 167 - 168.

**எதிர்காலவியல் - விளக்கம்**

''இன்றைய செயற்பாடுகளின் நாளைய விளைவுகளைக் கணித்துரைப்பது; நாளைய எதிர்ப்பார்ப்பிற்கேற்ப இன்றைய செயல்களைத் திட்டமிடுவது எதிர்காலவியல்'' எனச் சுருங்க உரைக்கலாம். ''இது முழுமையான நிலையில் மனிதனின் நாளைய சமுதாய, பண்பாட்டு நிலையைச் சுற்றி நிற்கிறது. உடலியல், உளவியலில் ஏற்படும் மாற்றங்களுடன் பண்பாட்டுச் செயற்பாடுகளையும் முற்றிலுமாக இக்கணிப்பிற்கு உட்படுத்துகிறது. மற்றும் மனிதனுக்கும் அவனது பண்பாட்டிற்கும் இடனாகும் அனைத்து இயற்கை காரணிகளையும் துணை கொள்கிறது. உலகின் முன்னேற்றத்திற்கான எதிர்கால வாய்ப்புகள், எதிர்காலத்திய நிலவுலகு பெறவிருக்கும் படிப்படியான மாற்றங்கள், அதன் காலநிலை, செடி கொடி உயிர் வகைகள் போன்றவற்றிற்கான எண்ணற்ற கருதுகோள்களின், கோட் பாடுகளின் வரிசையில் எதிர்காலவியல் செயல்படுகிறது'' என்பர்.[3] மனிதனைச் சுற்றியுள்ள, மனிதனுடன் தொடர்பு கொண்டுள்ள அனைத்தையும் எதிர்காலவியல் கருத்துள் கொண்டு, நாளைய அவனின் நிலையைக் கணித்துரைக்கிறது.

''எதிர்காலம் பற்றிய விழிப்புணர்வும், உந்துதலும் எதிர்காலவியல் கல்விக்கு அடிப்படையாகிறது. இது இரு துறைகளின் இணைவில் மட்டுமின்றிப் பல துறைகளின் கணிப்பில் உருவாக்கப்படும் துறையாகும். நாளைய வாழ்க்கைக்குத் தேர்வு செய்ய பல வழிமுறைகளைக் காட்டிடினும் நிகழ்

---

3. Since Futurology encompasses the destiny of man, the future of his society, and the tomorrow of his culture, it must deal not only with his prospective biological and psychological evolution, but also with the entire range of his future cultural activities. Moreover, it includes all the nature (physical, geographical etc.) factors and processes which wil have a bearing on man and his culture in the times to come ..... Futurology can take in only the long-range hypotheses and theories concerning the prospects of the universe, the future evolution of the earth, the tomorrow of its climate, flora and fauna.

Ossip Flechthein, Futurology - The New Science or Probability?; The Futurists; op. cit; p. 272.

காலத்திலிருந்து எதிர்காலத்திற்குச் செல்வதான அடை யாளத்தை இக்கல்வி வரைகிறது'' என்றும் நவில்வார்.[4]

''பல துறைகளில் காணப்படும் வளர்ச்சிகளின் பிற்கால விளைவுகளை ஒட்டு மொத்தமாக ஆராய்ந்து, எதிர்கால வாழ்வை இவை எவ்வாறு பாதிக்கும் என்பதையும், எந்த விதமான வளர்ச்சிகள் நாளைய வாழ்க்கைக்குத் தேவை என்பதையும் ஆராய்கிறது எதிர்காலவியல்'' என்ற பாப்கிராஸஸ் கருத்தும் சுட்டத்தக்கது.[5]

பொதுவாக, எதிர்காலவியலை, 'மானிட சமூகத்தின் நேற் றைய இன்றைய நிலைகளைக் கருத்துட் கொண்டு, குறிப்பிட்ட ஒன்றின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்று கருதுகோள்களின் அடிப்படையில் கணித்துரைப்பது என விளக்கலாம். இதனால் இவ் அறிவியல் நம் முன்னே விரிந்திருக்கும் மாற்றங்களை மதிப்பீடு செய்து, விரும்பும் எதிர்காலத்தைத் தேர்வு செய்து அதனை உருவாக்கத் திட்டமிடும் கலையாகவும் சிறக்கிறது.

மாற்றம் என்பது இயற்கை; அது அனைத்துத் துறை களுக்கும் பொதுவானது; அதனை அறிவியல் தொழில் நுட்பம் விரைவுபடுத்துகிறது. இதனை 'எதிர்கால ஆய்வின் முக்கிய பார்வை, நாளுக்கு நாள் பெருகிவரும் அறிவியல், தொழில் நுட்பச் சாதனைகளை நோக்கியே உள்ளது. ஏனெனில் தொழில் நுட்பத்தில் ஏற்படக்கூடிய ஒவ்வொரு முன்னேற்றமும் சமு தாயத்தைப் போய்ச் சேருகிறது. அதனால், பல நல்ல அல்லது கெட்ட விளைவுகள் உண்டாகின்றன' எனக் காட்டுவர்.[6]

எதிர்காலவியலின் அடிப்படை நோக்கம் மனிதச் சமுதாய முன்னேற்றம் என்பது புலனாகிறது. எனவே குறிப்

---

4. Futurology is learning by awareness and learning by consciousness. It is an inter - disciplinary, or even a multi - disciplinary discipline. It is more a choice of alternatives than drawing a line from the present to the future.

   V. NarayanKaran Reddy; Problems of Futurology; Sterling publishers Private limited; New Delhi; 1985; p. 3.

5. ஆ. யோகமூர்த்தி; எதிர்காலச் சிந்தனை - சுற்றுச் சூழல்; சேகர் பதிப்பகம்; சென்னை; மு.ப.டிச 1993; ப. 100.

6. மேற்படி பக். 101.

பிட்ட ஒரு சில துறைகள் என்றில்லாது ஒட்டு மொத்தமான மாற்றம், வளர்ச்சி, அனைத்து துறைகளிலும் முயற்சி என் பன வேண்டப்படுவதால் இன்று பரவலாக அனைத்துத் துறையினரும் தம்தம் துறையின் எதிர்காலத்தைக் கணித் துரைத்துப் பிறவற்றிற்குத் துணை நிற்கின்றனர். தேவைப்படின் பிறவற்றின் துணையைப் பெற்றுக் கொள்கின்றனர். சான்றாக உணவுப் பொருள் உற்பத்தியில் அக்கறை கொள்ளும் வேளாண் துறை, மக்கட் தொகை பெருக்கத்தை, அதன் பிறப்பு இறப்பு விகிதத்தை உள்ளடக்கிய புள்ளி விவரத்தைத் தெரிந்து கொள்ளு தல் மிகத் தேவை; மற்றும் நிலவளன், நீர்வளன் பற்றியும் அறிய வேண்டியுள்ளது. இவ்வாறு மனித சமூக முன்னேற்றம் என்பது ஒன்றோடு ஒன்று ஏதேனும் ஒரு வகையில் பின்னிப் பிணைந்துள்ள அனைத்துத் துறைகளையுமே சார்ந்தமை கிறது.

### எதிர்காலவியலும் பிற துறைகளும்

இன்பக்கனவுலகு (Utopia), சோதிடம், சமூகவியல் போன்ற துறைகளோடு நெருங்கிய தொடர்புடையதாக எதிர் காலவியல் அமையினும் அடிப்படையில் வேறுபாடு கொள் கிறது.

### இன்பக்கனவுலகும் எதிர்காலவியலும்

மனிதனின் எதிர்காலம் எப்படியிருக்க வேண்டும் எனப் படைப்பாளர் கருதுகிறாரோ அதற்கேற்ப முழுக்க முழுக்க கற்பனையாக அமைவது இன்பக்கனவுலகு. இதில் எதிர்காலத் தில் நிகழக்கூடிய வாய்ப்புக் கூறுகள் மிகக் குறைவே. ஆனால் எதிர்கால வியலாளர் நேற்றையும் இன்றைய நிலையையும் கருத்துட் கொண்டு நாளை எங்ஙனம் அமையக்கூடும் என்று அறிவியல் நோக்கில் ஆய்ந்து கூறுவர். இவர்தம் கணிப்பிற் குக் காரண காரியங்கள் உண்டு. எனவே எதிர்காலவியல் சிந்தனைகள் உண்மையாதற்கு வாய்ப்புண்டு. 'மனித சமூகத் தின் மேன்மை' காணும் விருப்பமே இரண்டிற்கும் அடிப்படை என்ற வகையில் இரண்டும் ஒன்றுபடுகின்றன. இன்பக்கன

வுலகு கற்பனையில் மூழ்கித்திளைக்க, எதிர்காலவியல் அதற்கான சாத்தியக்கூறுகளை அறிவியலறிவுடன் ஆய்ந்து, அதனை அடைவதற்காக இன்று மேற்கொளள வேண்டிய நடைமுறைகளையும் வகுத்துரைக்கிறது. முன்னது வெறும் படைப்பாக நின்றுவிட, பின்னது ஆழ்கல்வியாக, நடப்பியலாக வளம் பெறுகிறது.

### சோதிடவியலும் எதிர்காலவியலும்

சோதிடம், அதில் நம்பிக்கை உள்ளவர்க்கு வானியல் கணிப்பின் அடிப்படையில், ஊகங்களைக் கொண்டு எதிர்கால முரைப்பதாகும். கைரேகை, காணும் கனவு முதலானவை கொண்டும் வருவதுரைப்பது காணப்படுகிறது. இது நிகழ்கால நிகழ்வுகளையும் மாற்றஞ் செய்யக்கூடியது. ஆனால் நிகழ்கால நிலையைக் கருத்துட் கொண்டே, அதனை அடிப்படையாக்கியே, எதிர்காலவியல் கணக்கிடப்படுகிறது. எனவே சோதிடத்தை விட நம்பிக்கைக்குரியதாகிறது. சோதிடம் அண்மை எதிர்காலத்தைப் பேச (near future) எதிர்காலவியல் நீண்ட தொலை நோக்கும் உடையது. சோதிடம் தனிநபர் சார்ந்தது; எதிர்காலவியல் சமுதாயம் சார்ந்தது என்பதும் சுட்டற்பாலது. சமூக அங்கத்தினரின் ஒரு பகுதியினர் சோதிடவியலில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருப்பதால் இங்கு எதிர்காலவியலோடு ஒப்பு நோக்குவது தேவையாகிறது.

### சமூகவியலும் எதிர்காலவியலும்

இரு இயல்களுக்கும் அடிப்படை இலக்கு, சமூகம் என்ற வகையில் இரண்டும் இங்கு ஒப்பிடப்படுகின்றன. மனிதனை உள்ளும் (குடும்பம்) புறமுமாகக் (பழக்க வழக்கம், நம்பிக்கை, பண்பாடு) காட்டுதல் என்ற நிலையில் சமூகவியலும் எதிர்காலவியலும் ஒன்றுபடினும் பெரிய வேறுபாடுகளும் உள. சமூகவியல் எழுதப்பட்ட, எழுதப்படாத கலைப் பொருட்கள் முதலான ஆவணங்களை, வரலாற்றடிப்படையில் முதன்மைப் பண்புடன் நோக்கி அமைவது; இறந்த; நிகழ்காலங்களைக் காட்டுவது, இவை எதிர்காலவியலில்

சிறப்புறவில்லை. எதிர்காலக் கணிப்பே இதன் முதன்மைப் பண்பு. ஊகம், பொதுக் கருத்து, விளக்கம் காணல் இவையே இங்குச் சிறப்புறுகின்றன. எப்படியிருந்தது, இருக்கிறது என் பதைச் சமூகவியல் காட்ட, அதன் அடுத்த நிலையாக எதிர் காலத்தில் எப்படியிருக்கும் என்பதை எதிர்காலவியல் பேசு கிறது.

நடந்ததை வரலாற்றியல் விரித்துரைக்க, எதிர்கால வியல் நடக்கவிருப்பனவற்றிற்கு வரலாறு காண்கிறது என வரலாற்றியலோடும் இதனை ஒப்பிடலாம்.

### பிற துறைகளில் எதிர்காலவியல்

முன்பே சுட்டியபடி, இயற்கையிலமைந்த அல்லது மனிதன் புடைத்த அனைத்துத் துறைகளும் இன்று தத்தம் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியுள்ளன. அச்சிந்தனை களின் அடிப்படையில் மாற்றத்தையும் வளர்ச்சியையும் காண் கின்றனர். மற்றும் தம்மை எதிர்காலத்தில் நிலைநிறுத்திக் கொள்ளுதல், அதற்கேற்ற தகுதியை வளர்த்துக் கொள்ளுதல் - எதிர்காலச் சமூகத்திற்கு இயன்றவரையில் பயன்விளைவித் தல் என்பன அடிப்படை நோக்கமாகின்றன.

சான்றாகக் கல்வித்துறையை எடுத்துக் கொண்டால் இன்று, இன்றைய மாணாக்கர்க்கு இதனால் நாளைய பயன் என்ன? எப்படி அவர்கள் பயன்படுத்தக்கூடும் அல்லது பயன் பெற முடியும்? நாளைய அவர்களின் தேவையை இது எங் ஙனம் நிறைவு செய்யும்? அல்லது வழிகாட்டும்? சமுதாயத் திற்கு எந்த அளவு பயன் கிடைக்கும்? கல்வியின் எந்தெந்த துறைகள் தேவை? எவையெவற்றை எங்ஙனம் இணைக்க லாம்? கல்விப் பயிற்சியில் தேவையான மாற்றங்கள் யாவை? ஆசிரியருக்குரிய, மாணாக்கருக்குரிய தகுதிகள் யாவை? அடிப்படைத் தேர்வு முறைகள் சரிதானா? மாற்றம் பெற வேண்டுமா எனப் பலவாக வினாக்கள் தொடரக் காணலாம். அவற்றிற்கு விடை காண்பதும் செயல் படுத்துவதும் மேல் நடவடிக்கையாகிறது. இங்கு அடிப்படை நோக்கம் எதிர்கால நலன் என்பதில் ஐயமில்லை.

''கல்வி என்பது எதிர்காலத்தை வைத்தே உருவாவது. அதேபோல் கல்விதான் எதிர்காலத்தின் பல உருவங்களைக் கோடிட்டுக் காட்டுவது. ஆகவே கல்வி, எதிர்காலம் இவை இரண்டும் ஒன்றுக்குள் ஒன்றாக இணைந்துள்ளன எனக் கூற லாம்.'' என்ற கருத்தும்[7] இங்கு நோக்கத்தக்கதாம்.

**எதிர்காலவியல் தோற்றமும் வளர்ச்சியும்**

மனிதன் என்று தன் நாளைய வாழ்விற்கென்று பொருட் சேமிப்பைத் தொடங்கினானோ அன்றே எதிர்காலவியலுக் கான கால்கோள் தொடங்கியது எனலாம். உணவுப் பொருள் பாதுகாப்பில் தொடங்கிப் படிப்படியாகப் பிறவற்றிலும் புகுந்திருக்க வேண்டும். ஆனால் அதனை ஒரு கல்வியாகக் காணவும், எத்துறையிலும் தொலைநோக்குடன் செயல்பட வும் இயன்றது இந்நூற்றாண்டில் தான். அறிந்தோ, அறியா மலோ எதிர்காலம் பற்றிய உணர்வும் அதற்கேற்ற செயல் பாடும் எத்தகு வேறுபாடுமின்றி மானிடர் அனைவரிடமும் இடம் பெறக் காணலாம். எதிர்கால வாழ்க்கைச் செழுமையை இன்றைய திட்டமிட்ட செயற்பாட்டில் உணர்த்துகின்றனர். ஓரளவு அறிவு முதிர்ச்சியடைந்த சிறுவர் சிறுமியரிடமும் இதனை, இதன் விளைவுகளை இன்று காண முடிவது இன் றைய மனித சமூகத்தின் வளர்ச்சி எனக் கொள்வதில் தவ றில்லை. 'மனிதன் நிகழ்காலத்தில் வாழ்ந்து கொண்டிருந்தா லும், எப்பொழுதும் எதிர்கால வாழ்வையே விரும்பி மதிக் கிறான்' எனும் பிரெட் எல். போலக் (Fred L. Polak) கருத்தும்[8] இவண் எண்ணத்தக்கது.

''1909-இல் பில்போ டொமாஸோ மாரினெட்டி (Filippo Tommaso Marinetti) எனும் இத்தாலியக் கவிஞரால் உருவாக்கப் பட்டது எதிர்காலவியல். இவர் இதனை முதன்முதலில் தம் ஓவியக் கலையில் பயன்படுத்தினார். தொடர்ந்து பலரால் போற்றப்பட்டு 1912-இல் பாரிஸில் கண்காட்சி யொன்றும் எதிர்காலவியல் தொடர்பான ஓவியங்களைக் கொண்டு நடத்தப்

---

7. மேற்படி ப. 142.

8. V. Narayan Karan Reddy; op. cit; p. 93.

பட்டது. பின் இலண்டன், பெர்லின் போன்ற நகரங்களில் நடத்தப்பட்ட போதிலும் முதலாம் உலகப்போரின் பின் சிறப்பிழந்தது.''[9]

இதன்பின் செர்மானிய சமூகவியலாளரான ஓ. பிளெட்ச் தீம் (O. Flechtheim) என்பவரால் 'எதிர்காலவியல்' (futurology) எனும் முத்திரையுடன் உருவாக்கப்பட்டது.[10] 1960களின் தொடக்கத்தில் பரவலாக உணர்த்தப்பட்டு இன்று அனைத்துத் துறைகளிலும் சிறப்பிக்கப்படும் ஒன்றாக வளர்ந்துள்ளது.

இன்று முதன்மைச் சிறப்பும், இன்றியமையாமை யும் உணரப் பட்ட சூழலில் எதிர்காலச் சிந்தனையை, விழிப் புணர்வை ஊட்டும் கல்வியை முதன்முதலில் ஆல்வின் டோஃப்ளர் (Alvin Toffler) உருவாக்கினார். இவர் 1966-இல் நியூயார்க்கில் உள்ள 'நியூ ஸ்கூல் ஃபார் சோஷியல் ரிசர்ச்' என்ற கல்வி, ஆராய்ச்சி நிறுவனத்தில் முதன்முதலில் எதிர்காலம் பற்றிய படிப்பை, பாடத்தை நடத்தினார்.[11]

தொடர்ந்து இன்று ருசியா, பிரான்சு, மேற்கு ஐரோப்பா, இந்தியா எனப் பல நாடுகளிலும் முன்குறிகாட்டல், எதிர்கால ஆய்வு, எதிர்காலவியல், எதிர்காலவியல் கல்வி எனப்பல வாறாகப் போற்றப்பட்டு வருகிறது.[12] இன்று உலகளாவிய இயக்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுச் சுமார் ஐம்பது நாடுகளின் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நிறுவனங்கள், தனிச்சிறப்புடைய துறையாக இதற்குப் பெருமையளித்து மிகுந்த ஆர்வத்துடன் ஆய்வில் ஈடு பட்டுள்ளன. மற்றும் அமெரிக்காவின் முதன்மை

---

9. Encyclopaedia Britannica - Vol. 9; William Benton (Publisher); Ency; Brit./ INC; Chicago; 1972.

10. Beshuzhev - Lada; op. cit.

11. ஆ. யோகமூர்த்தி; முன் சுட்டியது; ப. 149.

12. The subject of Futurology is known differently in different countries. In the USSR, it is popularly called Prognostics; in France, Futuribles; in Western Europe, Future Research; and in the United States of America, Futurism. In India the study of this subject is gaining ground in most of its scientific and technological establishments under the broader heading of Futurist and Futuristic Studies.

V. NarayanKaran Reddy; Op.cit; preface.

நிறுவனங்கள் பல, வளமிக்க எதிர்காலத்திற்கான ஆய்வு களில் மிகத் தீவிரமாக முனைந்துள்ளன.[13] உலக நாடுகளில் அமெரிக்கா இதற்கு மிகுந்த சிறப்பளிப்பது இதனால் பெறப் படும்.

எதிர்காலவியல் கல்வி வளர்ச்சியில் மூன்று படிநிலை களைச் சுட்டுவர். (1) 1970 களின் முன்பகுதியில் எதிர்காலம் பற்றிய விழிப்புணர்வு கொண்டுவரப்பட்டது முதல் நிலை யாகக் கருதப்படுகிறது. (2) அடுத்து 1980-ஐ ஒட்டிய காலக் கட்டத்தில் எதிர்கால வளர்ச்சிக்கு, மேம்பாட்டிற்குத் துணை யாகக் கூடிய தனிமனிதரின் நுண்ணறிவும், பலதுறைகளில் தனித்திறனும், உயர்பண்பும் கொண்ட குழுவினைத் திரட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது. (3) மூன்றாவது படியாக 1990களில் புதிய உலக மறுமலர்ச்சிப் பாதைக்காக, இன்றைய சமூகத்தை மாற்றும் பணிக்கான தேவைகளைப் புனரமைத்தல் மேற்கொள் ளப்படுகிறது என அவற்றை விரித்துரைப்பார்.[14]

இன்று நன்கு வளர்ந்து நிலைபெற்றுள்ள இப்புதிய அறிவுத் துறை, குறிப்பிடத்தக்க அளவு எதிர்காலவியலறிஞரை (futurologists) உலக முழுவதும் எல்லாத் துறைகளிலும் அதி கரிக்கச் செய்துள்ளது என்பதும்[15] சுட்டத்தக்கது.

## எதிர்காலவியல் முன்னோடிகள்

'எதிர்காலவியல்' தனித்துறையாக, கல்வியாக இனங் காண்பதற்கு வழிகாட்டிய, அடிப்படை அமைத்துத் தந்த எதிர் காலச் சிந்தனையாளர் சிலரைச் சுட்டிச் செல்வதும் இங்கு இன்றியமையாததாம்.

---

13. ibid.

14. Futurology as a work of the world order Reform seems to have undergone three stages in its growth. In the first stage, awareness of the problem was brought to the forefront in the 1970's. In the second, there was mobilization of the resources in terms of individual skills and collective talents. This came about in the 1980's. The Third stage was restructuring of needs and transforming of society etc. towards a new global Reform which came about in the 1990's.

 - V. NarayanKaran Reddy; op. cit; pp 13 - 14.

15. Ibid

பிரெஞ்சு சிந்தனையாளரான அகஸ்டிக் காம்தே (Augustic Comte, 1798 - 1857) தம்முடைய 'சமூக மெய்யியல்' (Social Philosophy or Social Physics) என்னும் கட்டுரையில் புதிய சக்தி வாய்ந்த சமூக முன்னேற்றத்தை ஆராய்ந்துள்ளார். அதனுள் எதிர்காலத்திய அரசியல் மற்றும் சமயம் பற்றிய சிந்தனைகளை அளித்துள்ளார். ஹெர்பர்ட் ஸ்பென்சர் (Herbert Spencer 1820 - 1903) என்னும் இங்கிலாந்து தத்துவஞானி, வாழும் உயிரினங்கள் ஒவ்வொன்றும் அடி மட்டத்திலிருந்து மேனிலை வரையிலான பரிணாம வளர்ச்சியைப் பெறல் உலகியலின் குறிப்பிடத்தக்க பண்பு என்றுரைத்துள்ளார். அறிவியலின் வழி, அறியாதிருக்கின்றனவற்றையும் வெளிக் கொணரும் அறிவினைப் பெற முடியும் என்பது அவரது கணிப்பாகும்.[16]

அமெரிக்காவில் 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவரான இதழாளர் வாட்கின்ஸ் (Watkins) என்பாரும் இங்குச் சுட்டத்தக்கவராவார். இவர் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பொதுவான மாற்றங்களைப் பற்றியும் அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சிகள் பற்றியும் ஒரு பட்டியலிட்டுக் காட்டியுள்ளார். அச்சிந்தனைகள் 1990 டிசம்பர், அமெரிக்க இதழான ஹோம் ஜர்னலில் (Home Journal) வெளியிடப்பட்டுள்ளது.[17]

## எதிர்காலவியல் இயல்பு

எதிர்காலம் பெறவிருக்கும் உண்மை நிலை, முதன்மைப் பொருள் குறித்த துப்புகளை அளிக்கும் 'நிகழக்கூடிய அறிவியல்' (Science of Probability) எதிர்காலவியல் ஆகும். எனினும் இது இயற்பியல், வேதியியல் போன்ற பிழையற்ற மிகச்சரியான அறிவியல் அன்று, பல்துறை ஒருங்கிணைந்த செயற்பாடு மற்றும் கல்விக்கான தொகுப்புக்களனாக (Synthetic area) இது அமைகிறது.[18]

---

16. Ibid pp 5 - 6.
17. ஆ. யோகமூர்த்தி; முன் சுட்டியது; பக். 35 - 36.
18. V. NarayanKaran Reddy; op. cit; pp 3 - 4.

அறிவின் புத்துலகான எதிர்காலவியல் எல்லாத் துறைகளோடும் தொடர்பு கொள்ளினும் சமூக மெய்யியல் (Social Philosophy), புனைவு சமூகவியல் (Theoretical Sociology), வளர் உளவியல் (Developmental Psychology), பண்பாட்டு மானிடவியல் (Cultural Anthropology) மற்றும் மனிதனின் இம்மை மறுமைக் கோட்பாட்டியல் (Human Eschatology) ஆகியவற்றுடன் மிக நெருங்கிய உறவு கொண்டது. எனவே எதிர்காலவியல் சிந்தனைகள் அல்லது முடிவுகள் பொதுத் தன்மை அல்லது தொகுப்பு நிலை இயல்பினவாகத் தென்படு கின்றன.[19]

சுற்றுப்புறச் சூழலின் உறுதிப்பாட்டிற்குச் சிறப்பளிக் கும் எதிர்காலவியல் போர், வறுமை, சமூக அநீதி, சுற்றுப்புறச் சூழல் சீர்குலைவு எனும் நான்கினை முதன்மைச் சிக்கல்களாக அழுத்திக் காட்டுகிறது. இது எதிர்காலத்திற்கு மிகத் தேவை யான தனிச் சலுகை கொண்டோரையும் மற்றவரையும் ஒன் றாக்கப் பயன்படும் புதிய கல்வி நெறியை உருவாக்குவதில் மிகுந்த அக்கறை செலுத்துகிறது.[20]

எதிர்காலவியலை வாழ்க்கையும் சமூகமும் இணைந்த நிறுவனமாகவும் கருதலாம். இது அண்மையதாக அமையும் சிக்கல் மற்றும் விரைந்து தீர்க்க வேண்டிய சிக்கல் எனும் (Immediate and Urgent Problems) இரண்டிற்கும் சமமான முக்கியத்துவமளிக்கிறது. இரண்டும் ஒருங்கே தோன்றும் பொழுது விரைந்து தீர்க்க வேண்டிய சிக்கலுக்கு முதன்மைக் கவனிப்பு அளிக்கப்படுகிறது.[21]

## எதிர்காலவியல் நோக்கம்

எதிர்காலவியல் கல்வியின் தேவை குறித்து ஆல்வின் டோஃப்ளர், 'வரலாற்றிலிருந்து நாம் பாடம் கற்றுக்கொள்ளா விட்டால், அதனை மீண்டும் அனுபவிக்கும் கட்டாயம் நேரிடும்

19. Ibid p. 6.
20. Ibid p. 17.
21. Ibid pp 4 - 5.

என்பது உண்மை. ஆனால் எதிர்காலத்தை நாம் மாற்றியமைக்கா விட்டால் அதனைச் சகித்துக் கொண்டே ஆக வேண்டும். மேலும் அது மிக மோசமானதாகவும் இருக்கும்' என்ற[22] எச்சரிக்கையின் வழி வலியுறுத்துவார். எனவே எதிர்காலவியல் பல இலக்குகளை முன்னிட்டே அமைகிறது என்பது வெளிப்படை.

எதிர்காலவியலின் எல்லாத் திட்டங்களும் மனிதனைச் சுற்றியே அமைகின்றன. மனிதன் அடையும் வெற்றி மனிதனுக்காகவே அமைகிறது. ஆகவே எல்லா, எதிர்காலத்திற்கான நடவடிக்கைகளும் மனிதனுக்குச் சிறப்பளித்தலை, வாழ்வை மேம்படுத்தலை நோக்கமாகக் கொண்டுள்ளன.[23]

அடிமை நிலை, காலனி ஆதிக்கம், வல்லரசு மேலாண்மை, இன வேறுபாடு முதலானவற்றை அறவே ஒழிப்பதை முதன்மை இலக்காகக் கொண்டு, அதற்கு வகை செய்யும் உலக இயக்கத்துடன் ஒருங்கிணைந்து செயல்படுவது சிறப்பாகக் குறிக்கத் தக்கதாகும்.[24] இதன் காரணமாக எதிர் காலவியலை, இன்றைய உலகின் நடைமுறை நிகழ்ச்சிகளுக்கான புதிய சீர்திருத்தத்தையும், மாறிவரும் விதிமுறைகளைக் கொண்ட புதிய சமூகவியலறிவையும் எடுத் துரைப்பது எனவும் கருதலாம்.[25]

## எதிர்காலவியல் அணுகுமுறை

ஊகங்களின் அடிப்படையில் கணித்துரைக்கும் எதிர் காலவியல், அதற்கு மேற்கொள்ளும் வழிமுறைகள் இங்கு அணுகு முறையாகக் குறிக்கப்படுகிறது. ''கற்பிதங்கள் முற்றிலும் சரியானதாக இருக்க வேண்டுமென்பதில்லை, ஆனால் மிகப்

---

22. Alvin Toffler rightly says. 'If we do not learn from history we shall be compelled to relive it: True. But if we do not change the future we shall be compelled to endure it. And that could be worse.'
 - Ibid p. 80.
23. Ibid p. 5
24. Ibid p.17
25. Ibid.

பெரிய அளவில் பயனுடையதாக இருத்தல் வேண்டும்; தவறுகள் கூட அதற்குரிய பயன்பாட்டை உடையன. ஆகவே எதிர்காலச் சிந்தனையில் ஈடுபடும் பொழுது உயர்ந்த கற்பனை நலனும் ஒன்றைப் பற்றிய ஆழ்ந்த நுண்ணறிவும் மிகத் தேவையானது; இது நூறு விழுக்காடு சரியான கணிப்புகள் என்பதை விட இன்றியமையாததாகும்.'' என்பார் இத்துறை வல்லுநரான ஆல்வின் டோஃப்ளர்.[26] எனவே துறைசார்ந்த நுண்ணறிவுடன் கற்பனைத் திறனுடன் அணுகுதல் எதிர்காலவியல் பண்பாகிறது எனலாம்.

ஒப்பீடு, விசாரணை, புதிய கருத்தாக்கங்களின் தேடல் முதலான உத்திகளும் எதிர்காலவியல் அணுகுமுறைகளாகின்றன. இவை வளர்ந்து வரும் நமது தேவைகளை ஈடு செய்யத் தயாராகும் நிலையில் போதிய அளவு தகுதியான மாற்றுகளை நல்குகின்றன.[27]

பொதுப் போக்குக் கணிப்புரைகளுடன் (Trend Predictions) எண்ணியல் (Numerical) முறையிலும் எதிர்காலவியல் அணுகப்படுகிறது. கற்பிதம் (guesswork); கவனமான ஊகம் (careful conjectures); முன்னோடிப் பரிசோதனைகள் (Probe antecedents); உள்ளுணர்வு (intuitive prognosis) ஆகியனவும் இன்றைய எதிர்காலவியல் அணுகுமுறைக்குப் பயனாகின்றன. இவையனைத்தும் அண்மை மற்றும் சற்றுத் தொலைவிலான எதிர்கால முன்னறிவித்தலுக்குப் பெரிதும் துணை செய்கின்றன.[28]

### எதிர்காலவியல் - வகைகள்

ஊகங்களின் அடிப்படையில் எதிர்காலவியல் அமைவதனால் அதன் பார்வைகள் பலவிதமாக அமைகின்றன. குறிப்பாக இரண்டைப்பற்றி அறிய முடிகிறது.

---

26. Ibid p.82.

27. Ibid p.2.

28. Ibid pp. 7-8.

மார்க்சியம் அல்லது பொதுமக்கள் எதிர்காலவியல் (Marxist or Commoners Futurology), தன் முன்னுணர்த்தலை அடிப் படையான, உடனடித் தேவைகளில் மிகுந்த அக்கறை காட்டு கிறது. உணவு உற்பத்தி, தொழில், பொருளாதாரம் போன்ற வற்றின் எதிர்காலத்தில் இவர்கள் ஈடுபடுகின்றனர். இவர்களி னின்றும் வேறுபட்டவர்களாகப்பழமைப்பற்றாளரின் எதிர் காலவியல் (Bourgeois Futurology) அமைகிறது. இவர்களது நோக்கும், இலக்கும், செயற்பாடும் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகள், நாடுகளுக்கிடையே ஆன உறவு, பூமி மற்றும் கோள்களின் புதிய கண்டுபிடிப்புகள், தொழில் வளர்ச்சி முதலானவற்றை நோக்கியமைகிறது.[29] எதிர்கால வியலாளர் தம் கணிப்பிற்கு எதனை முதன்மைப்படுத்துகின்றனர், எதில் மிகுந்த அக்கறை கொள்கின்றனர் என்பனவற்றைப் பொறுத்து வகைப் படுவதை உணர முடிகிறது.

இன்று அமெரிக்காவில் எதிர்காலவியலாளருக்கு எதி ரானதொரு எதிர்காலவியல் இயக்கமும் (Counter Futurist - movement) தோன்றியுள்ளதை அறியமுடிகிறது என்பர்.[30]

### எதிர்காலவியலின் பயன்

எதிர்காலவியல் என்பது எதிர்காலம் பற்றிய அறிவிய லாயினும் அது நிகழ்கால அறிவியலாகவும் திகழ்வதால் எதிர்காலவியல் கல்வியும் ஆய்வும், முன்னேற்றத்திற்குரிய முயற்சிகளுக்கான மிகத் தேவையான இன்றியமையாத பயிற்சியாகப் பயன்படுகின்றன.[31]

உலகம் முழுமைக்கும் பலவிதமான நாகரிக எண்ணங் களையும், வாழ்வியலையும் எதிர்காலவியல் அளித்து அவற் றுள் ஏற்புடையதைத் தேர்வு செய்ய ஊக்கமளித்தல்[32] மற்றொரு பயனாகும்.

---

29. Ibid p.9.
30. Ibid p. 8.
31. Ibid p. 2
32. Ibid p. 17.

ஏறக்குறைய எல்லா அறிவுத்துறைகளிலும் அறிவியல் நெறியில் எதிர்கால வளம் நோக்கி முன்திட்டமிடலும், அடித் தளமிடுதலும் அமைதலால் எதிர்காலவியல் மனிதனும், இயற் கையும், சமூகமும் எதிர் கொள்ளும் மிகக் கடினமான சிக்கல் களைத் தீர்ப்பதற்குப் பெரிதும் துணைபுரிகிறது.[33]

இன்றைய உலகச் சிக்கல்களை ஆராய்தல்; எதிர்காலச் சிறப்பிற்குப் பல நல்ல திட்டங்களை யளித்தல்; இன்றைய, எதிர்காலத் தேவைகளுக்கான தனிச்சிறப்புடைய தேர்ந்த இலக்குகளை வெற்றிகொள்வதற்கான நடைமுறை உத்தி களைக் காட்டுதல் என மூன்று வகைத் தொழிலால்[34] எதிர் காலவியல் இன்றைக்கே பயனுடையதாகிறது.

இன்று எல்லாத் துறையிலும் திட்டமிடுநர்க்கும், கொள்கை உருவாக்குநர்க்கும் எதிர்காலவியல் வேண்டிய தரவுகளையும், குறிப்புகளையும் பெருமளவு கொடுத்துதவு கிறது.[35]

தொழில் அடிப்படையில் மிகுந்த முன்னேற்றம் கண் டுள்ள நாடுகள் இன்று பெருமளவு அறிவியல் முன்னறிவித் தல்களில் நம்பிக்கை செலுத்தியிருப்பதும் சுட்டத்தக்கது. மற்றும் உலகை நெறிப் படுத்தும் திட்ட நிறுவனத்தின் (Institute for World Order Project) கணிப்பின் படி, உலகின் முதன்மை கருது கோள்களான அமைதி, விடுதலை, சமூகநீதி போன்றவற்றில் நல்ல வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளதாகக் கூறப் படுகிறது.[36]

### எதிர்காலவியலாளர் (Futurist, Futurologist) இயல்பு

எதிர்காலத் திட்டமிடுதலில் ஈடுபடும் அறிஞர் - எதிர் காலவியலாளர் குறித்தும் சில கருத்துரைகள் அறியவருகின்றன.

---

33. Ibid p. 4.
34. Ibid p. 13.
35. Ibid, p. vi
36. Ibid p.14.

எதிர்காலத்தின் மீதும், எதிர்காலத்தை முன்னுணர்த்தும் கணிக்கும் எதிர்காலவியல் இயக்கத்தின் மீதும் நம்பிக்கையுடையவரே எதிர்காலவியலாளர் ஆவார்[37]. சமூகத்திற்குத் தேவையான மாற்றுத்திட்டங்களின் மீது ஆழ்ந்த நுண்ணறிவு நோக்குடையவராகவும், நன்கு திட்டமிடக் கூடியவராகவும் இருத்தல் முதல் தேவையாகும். மனிதநேய மிக்கவராக, பிறர் நலம் பேணும் பெற்றியாளராகவும் இதில் மாறாத உறுதியுடையவராகவும் இருத்தல் வேண்டும். அவருடைய திட்டங்கள் எதிர்கால நலன் நோக்கியும், சிந்தனைகள் மனிதனைச் சுற்றியுமாக அமைதலும் இன்றியமையாதது என்பர்.[38]

பல்துறைசார்ந்து திட்டமிடுபவராகவும், சந்தர்ப்ப சூழ்நிலையின் அழுத்தத்தால் எழும் சிக்கல்களுக்கு உடனடித் தீர்வு தர முனைபவராகவும் அமைதல் சிறப்பானது.... எப்பொழுதும் முன்னேற்ற வளர்ச்சிப்படிகளில் வெற்றி காண்பவராகவும் இருத்தல் நல்லது. 'இவர் அரசு அமைப்புகள் மீது நம்பிக்கையற்றவராகவோ (anarchist) பழமை எதிர்ப்பாளராகவோ (iconoclast) இருத்தல் கூடாது. மறைந்து போன, தரக்குறைவான சித்தாந்தங்களையோ பழைமை வாதத்தையோ முன்வைத்தல் கூடாது. நன்கு திட்டமிடக் கூடியவராகவும் படைப்புத் திறனுடையவராகவும் அமைதல் சிறப்பு. அப்பொழுதுதான் அவர் தடைகளை மீறித் தம் பணியில் வெற்றிகாண இயலும்.[39]

## எதிர்காலச் சிந்தனையாளரில் குறிக்கத்தக்க சிலர்

உலகை ஒரு குடைக்கீழ் கொணர்ந்து, மக்களின் உடனடித் தேவைகளையும், தொடர்ச்சியாக அமையும் தேவை

37. Ibid p. 8.

38. The futurologist is primarily a planner, an insightful seeker of alternative models' for society. He is invariably a humanist an objectivist and, above all, an altruist. His planning depends upon the welfare of the future and his philosophy is man centered philosophy.

Ibid, p.5.

39. Ibid, pp. 17 - 19.

களையும் கண் காணித்து, அவற்றில் விரும்பும் மாற்றத்தைத் தீர்மானித்து அவர்களின் வாழ்க்கையை மேலும் பொருளுடையதாகவும், திருப்தியாகவும் நிறைவடையச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ள எதிர்காலச் சிந்தனையாளர் சிலர் கருத்துரைகள் இங்கே எடுத்துரைக்கப்படுகின்றன.

தம்முடைய எதிர்கால அதிர்ச்சி (Future Shock, 1970), மூன்றாவது அலை (The Third Wave, 1960) எனும் இரு நூல்களால் உலகின் கவனத்தைத் தம்பால் ஈர்த்தவர் ஆல்வின் டோஃப்ளர். எதிர்காலத் திட்டவரைவில் தன்னிகரற்றவராக இவர் போற்றப்படுகிறார். இவரது கருத்துப்படி எதிர்காலத்தைத் தனிமனிதனே உருவாக்குகிறான்; இயந்திரச் சூழல் அன்று. உறுதியான, தெளிவான எதிர்காலக் கணிப்பிலிருந்தே எல்லாக் கல்வியும் தோன்ற வேண்டும். நம்பிக்கை நிறைந்த துடிப்பான இளைய சமுதாயத்திற்கு மாறி வரும் சூழலுக்கு ஏற்ற கல்வியைத் தர வேண்டும். பழைய உயிர்ப்பற்ற கல்வியால் பயனில்லை. இவரது எதிர்காலக் கோட்பாடு நாளைய உலகம் சிறப்பாக அமையும் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறது.[40] வில்லியம் எப். அக்பர்ன் (William. F. Ogburn) எனும் உலகறிந்த சமூக மாற்றக் கணிப்பாளர் இவரினின்றும் வேறுபடுகிறார்.[41]

பொதுவுடைமைக்கும் மக்களாட்சிக்கும் இடையே நடக்கும் இன்றைய போராட்டத்தில் பொதுவுடைமை வெல்லும் காலம் ஒன்று வந்தே தீரும் என்பார் ஹெர்மன் கான் (Herman Kahn). சித்தாந்தங்களும் பண்பாட்டுக் கூறுகளும் வரலாற்றை ஒரே நாளில் மாற்றிவிட முடியாது எனினும் அவை மாற்றத்தை முன் சுட்டும் அறிகுறிகளாகும். உண்மையில் விழிப்புணர்விலும், மதிப்புகளிலும் மாற்றம் கொணர்தல் முதன்மைப்பணியாகும். அப்பொழுது தான் சமூக நிறுவனங்களில் எதிர்நோக்கும் உண்மையான மாற்றம் நிகழ வாய்ப்புண்டு என்பது டானியல் பெல் (Daniel Bell) என்பார் எண்ணமாகும்.[42] மற்றும் மார்கரெட் மீடு (Margaret Mead) பிரெட்

40. Ibid pp. 82 - 83.

41. Ibid p. 15.

42. Ibid p. 88 - 90

எல். போலக் (Fred L. Polak), எல். பெஸ்ட்ஹேவ் லடா (L. Bestuzhev Lada), எம்.எஸ். ஐயங்கார் (M.S. Iyengar); அரவிந்தர் (Sri Arobindo) போன்றோரும் இத்துறை வல்லுநராவர்.[43]

எதிர்காலவியல் ஆய்வு குறித்தும் அறிஞர் சிலர் தம் கருத்துரைத் துள்ளனர்.[44]

அரசுத்துறை நிறுவனங்கள் மட்டுமின்றித் தனியார் நிறுவனங்களும் இன்று 'எதிர்கால ஆய்வில்' இறங்கித் தாம் செய்யும் தொழில்கள் வெற்றிகரமாக நடைபெறப் புதிய வழிவகைகளைக் கண்டறிந்து நல்ல இலாபம் ஈட்டி வருகின்றன.[45]

---

43. Ibid pp 80 - 104.

44. ''எதிர்கால ஆய்வு ஒரு புதிய பயிற்சியாகும். மனிதனின் முயற்சிகளால் ஏற்படும் புதிய எண்ணங்களையும் கருத்துகளையும், சாதனைகளையும் மீண்டும் மீண்டும் ஆராய்ந்து அவற்றில் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்து நடைமுறைக்குக் கொண்டுவரத் தேவைப்படும் பயிற்சிக்கு எதிர்கால ஆய்வு பயன்படும்'' - ஹெரால்டு ஷேன்

''இன்றைய வளர்ச்சிகளால் நாளைய விளைவுகள் அச்சமூட்டும் தன்மை கொண்டவையாக இருக்கக் கூடாது. ஒரு ஒழுங்கு முறையோடு இன்றைய வளர்ச்சிகளின் உண்மை விளைவுகளை அறிய எதிர்கால ஆய்வு உதவுகின்றது.'' - ராய் அமாரா

''ஒரே துறையில் காணப்படும் வளர்ச்சியை மட்டுமே கணக்கிட்டு எதிர்காலத்தை ஆராயாமல், மனித வளர்ச்சியில் பல துறைகளின் தேவைகள் ஒன்றோடு ஒன்று இணைந்திருப்பதனால் பல துறைகளில் நடை பெற்றுவரும் வளர்ச்சிகளையும் கருத்தில் கொள்கிறது எதிர் கால ஆய்வு'' - டிராபன் சாப்மன்

''எதிர்காலத்தைக் குருட்டுத்தனமாக எதிர் பார்ப்பதைக் காட்டிலும் அதற்காக நம்மைத் தயார் செய்து கொள்வதும் சிறந்தது. இதற்காகவாவது எதிர்கால ஆய்வை நாம் வரவேற்க வேண்டும்'' - ஜான்வெல்கல்.

''பல துறைகளில் காணப்படும் வளர்ச்சிகளின் பிற்கால விளைவுகளை ஒட்டு மொத்தமாக ஆராய்ந்து, எதிர்கால வாழ்வை இவை எவ்வாறு பாதிக்கும் என்று ஆராய்வதும், எந்த விதமான வளர்ச்சிகள் நாளைய வாழ்க்கைக்குத் தேவை என்பதையும் ஆராய்கிறது எதிர்கால ஆய்வு.'' - பாப் கிராஸஸ்

ஆ. யோக மூர்த்தி; முன் சுட்டியது; பக். 99 - 100.

45. மேற்படி ப. 149.

## இந்தியாவில் எதிர்காலவியல்

எதிர்காலவியல் கல்வியிலும் ஆய்விலும் இந்தியாவும் அதிக அக்கறை காட்டுகிறது. 1989-ஆம் ஆண்டிலிருந்து இங்குப் பட்டப்படிப்பில் இக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.[46] எனினும் இந்தியாவில் இது போதுமான வளர்ச்சி பெறவில்லை என்பது ஆய்வாளர் துணிபாக உள்ளது. இம் முடிவிற்கு அவர், 'நம்முடைய எதிர்காலத் தேவைக்காகப் பலமாற்றுக் கூறுகளை வளரச் செய்ய வேண்டியுள்ளது; இத்தேவைகளுக்கு, அடிப்படையான அறிவியல், தொழில் நுட்பம், மானுடவியல், கல்வியியல் முதலான துறைகளில் போதுமான வளர்ச்சி பெற வேண்டும்; ஒருங்கிணைந்து ஒற்றுமையுணர்வுடன் மனிதநேயத்துடன் அறிவியல் துணையுடன் செயல்படும் பொழுதுதான் வாழ்க்கையில் முன்னேற்றம் காண முடியும்; சிறப்பான எதிர்காலத்திற்காகச் சரியாகத் திட்டமிடவும் கூடும்' என விளக்கம் தருகிறார்.[47] மக்களிடையே தோன்றியுள்ள விழிப்புணர்வும் கல்வியெழுச்சியும் விரைவில் இந்தியாவின் எதிர்காலத்தை ஒளிரச் செய்யும் எனக் கருதலாம்.

## தமிழகத்தில் எதிர்காலவியல்

காந்தி கிராமம், மதுரை காமராசர், பாண்டிச்சேரி எனப் பல பல்கலைக் கழகங்களில் எதிர்காலவியல் பாடமாக்கப்பட்டுள்ளமை, அதற்குத் தமிழகம் அளித்துள்ள வரவேற்பைக் காட்டுகின்றது. கருத்தரங்கு நிகழ்த்தி அது நூலாக்கம் காணும் சூழலும் நிலவுவது[48] தமிழகத்தில் அதற்கு நல்ல எதிர்காலம் இருப்பதைச் சுட்டுகிறது. துறைசார்ந்த தனி நூலும் மலர்ந்திருப்பது[49] இத்துறை தமிழகத்தில் நன்கு வளம் பெறும் என்பதை உணர்த்துகிறது.

46. மேற்படி ப. 150.
47. V. Narayan Karan Reddy; op. cit; p.3.
48. தமிழர் எதிர்காலவியல்; (பதி) ப. டேவிட் பிரபாகர்; சென்னைக் கிறித்தவக் கல்லூரி; சென்னை; 1993.
49. ஆ. யோகமூர்த்தி; முன் சுட்டியது

எதிர்காலவியல் இலக்கியப் படைப்பில் தனிவிழைவு காட்டும் கதாசிரியர் சுஜாதா சிறந்த எதிர்காலவியல் சிந்தனை யாளராகவும் விளங்குவது குறிப்பிடத்தக்கது. அவரது, எதிர் காலம் பற்றிய சிந்தனைகள் சில: 1) எதிர்காலவியலின் ஆதார மான அறிவியல் கருத்துகளில் கற்பனை இருக்கக் கூடாது. அறிவியல் சித்தாந்தங்களுக்குக் காலம் இல்லை. அவைகளில் நிகழ்கால ஆராய்ச்சிகளைத் தொடர்ந்தால் ஏற்படப் போகும் நன்மை தீமைகளைப் பற்றிச் சொல்ல வேண்டும். அதில் சமூக அக்கறை இயல்பாக வந்துவிடும். இப்போதைய இரண்டு உதாரணங்கள்: 'ஜெனிட்டிக் இன்ஜினியரிங்' அடிப்படை யில் எதிர்காலத்தில் நன்மை, தீமை இரண்டையும் தரும். நன்மை பயிர்களுக்கு அதிகம் தண்ணீர் தேவையின்றி அதிக மாக விளைச்சல் தருவது. 'ஜெனிட்டிக் இன்ஜினியரிங்' முறைப் படி ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கலாம். எதிர்காலத்தில் இது காவிரிப்பிரச்னைக்கு நிரந்தர தீர்வு தரும். அதே ஜெனிட்டிக் இன்ஜினியரிங் முறையின்படி வக்கிரமான உயிரினங்களை மனிதனால் உண்டாக்க முடியும். இது தீயது.[50]

2) 21-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே உலகின் ஒட்டு மொத்த அறிவு ஒரு சிலுக்கனுள் (CD) அடங்கிவிடும். எனவே நமது மூளையின் பயன் அப்பொழுது என்ன? ... ஏறக்குறைய மூளையைப் போல, தன்னிச்சையுடன் செயல்படக் கூடிய Super Computer இன்னும் ஒரு நூற்றாண்டிற்குள் வந்து விடும்.[51]

3) என் அபிப்பிராயத்தில் எதிர்காலத்தில் எலெக்ட்ரா னிக்ஸ் நம் அந்தரங்க வாழ்க்கையில் மிகவும் குறுக்கிடப் போகிறது. .... எனவே Communication Mediaவைக் கட்டுப் படுத்துபவர்கள் உலகையே கட்டுப்படுத்த முடியும். மற்றொரு முன்னேற்றம் மருந்துகள் .... மருந்துகள் மூலம் மனித மனங் களைக் கட்டுப்படுத்தும் நாட்கள் அதிக தூரத்தில் இல்லை.[52]

---

50. ஆய்வாளர் மடலுக்குச் சுஜாதா அளித்த பதில் (27.8.93)

51. சுஜாதா; 26.9.94 அன்று, மைய தோல் பொருள் ஆய்வு நிறுவனத்தில் (Central Leather Research Institute) பேசியது.

52. சுஜாதா; சொர்க்கத் தீவு, குமரிப் பதிப்பகம், நாகப்பட்டினம்; மு.ப.சன. 1975; முன்னுரை பக். 7-8.

4) மார்ஷல் மக்லூஹன் என்னும் எதிர்காலவியலாளர் 'குளோபல் வில்லேஜ்' உலகக் கிராமம் என்னும் சித்தாந்தம் சொன்னார். இண்டெர்நெட் போன்ற சர்வதேச வலைப்பின் னல்கள் மக்லூஹனை மெய்ப்பிக்கின்றன. தற்போது வியாபாரி கள் சிலர் கண்ட மேனிக்கு இண்டெர்நெட்டைக் கெட்டவழி யில் பயன்படுத்துகிறார்கள் என்ற குற்றச்சாட்டு கிளம்பியிருக் கிறது. எந்த நல்ல விஷயத்திலும் கொஞ்ச காலத்தில் நஞ்சு கலந்துவிடும் என்பது இருபத்தோராம் நூற்றாண்டின் ஆரம்ப சித்தாந்தமாக இருக்கும் (குமுதம் 21-ன் விளிம்பு).

இன்று அனைத்துத் துறைகளிலும் தன் இன்றியமை யாமையைத் தெளிவாக உணர்த்தியுள்ள எதிர்காலவியல் எதிர் காலத்தில் இன்னும் சிறப்பான வளர்ச்சி பெற்று எதிர்கால உலகை முற்றிலுமாக மாற்றியமைத்துச் சீரான பாதையில் மேன்மைப்படுத்தும் எனக் கருதலாம்.

# இலக்கியத்தில் எதிர்காலவியல்

தொல்காப்பியமும் தொலைநோக்கும்
அறவிலக்கியமும் எதிர்காலவியலும்
குறள்வழி எதிர்காலச் சிந்தனை வகைகள்

அணுகுமுறைகள்
திட்டமிடல்
நோக்கின் தேவை

பாட்டியலாரின் எதிர்காலவியல் சிந்தனை
இலக்கியத்தில் எதிர்காலவியல் அணுகுமுறை

# இலக்கியத்தில் எதிர்காலவியல்

தமிழின் முதல் நூலாம் தொல்காப்பியமே, தமிழர் காலம் பற்றிய சிந்தனையில் தெளிவு பெற்றிருந்தமையைக் 'காலம் தாமே மூன்றென மொழிப' (சொல். 199) என்றும் அவை இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்றும் மொழிவதன் வழி காட்டுகிறது. இதன் இன்றியமையாமையை, செய்யுள் உறுப்பு களுள் ஒன்றாகக் காலத்தைச் சுட்டுவது கொண்டு (பொருள். 310) உணரலாம்.

**இறப்பே நிகழ்வே எதிர தென்னும்**
**திறத்தியல் மருங்கில் தெரிந்தனர் உணரப்**
**பொருள் நிகழ்வு உரைப்பது கால மாகும் (பொருள். 503)**

என, இலக்கியத்துள் முக்காலமும் இடங் கொள்ளுதல் புலப்படுத்தப் படுகிறது.

### தொல்காப்பியமும் தொலைநோக்கும்

இருப்பதைக் கொண்டு வருவதை ஊகம் செய்யும் தொலைநோக்குத் தமிழரிடையே இருந்ததைத் தொல் காப்பியரின்,

**விருந்தே தானும்**
**புதுவது புனைந்த யாப்பின் மேற்றே (பொருள் 540)**

எனும் நூற்பாவால் அறியலாம். தனிப்பாடல்களால் தழைத் துள்ள தமிழில் புதுவகை இலக்கியங்கள் தோன்றும்; அதற்கு யாப்பு வழி வகுக்கும் என்பது அவரது கருத்தாகும். பின்வந்த இலக்கியங்கள் இதனை மெய்ப்பிக்கின்றன. 'பழையன கழித லும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்ற நன்னூலார் (462) கருத்தும் இணைத்து நோக்கற்பாலது.

## அறவிலக்கியமும் எதிர்காலவியலும்

அறவிலக்கியங்களைத் தமிழில் எதிர்காலவியலுக் கானத் தோற்றுவாயாகக் கருதலாம். ஒருவரின் அண்மை எதிர்காலச் சிறப்பு, அதன் காரணமாகச் சமுதாயம் பெறும் சிறப்பு எனும் நோக்கில் இவ் வெண்ணம் எழுகிறது. ஒருவர் தன்னளவிலும் சமுதாயப் பங்கேற்பிலும் நல்லொழுக்க முடையவராக, இருத்தலை அறிவுறுத்தும் இயல்பான அற விலக்கியங்களாதலின் ஒட்டு மொத்தமான எதிர்கால நன்மை, முன்னேற்றம் என்பது இதன் அடிப்படை இலக்காகிறது. இவை வாழ்வில் ஒருவர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங் களையும், விலக்க வேண்டியனவற்றையும் மொழிவது அவரது எதிர்கால நலன் நோக்கியே என்பது வெளிப்படை. தனிநலம் பின் சமுதாய நலமாக உருவெடுக்கிறது. திருக்குறள் வழி இதனை விளக்கலாம். அதனால் எதிர்காலவியல் கோட்பாடு களும் தெளிவுறக் காணலாம்.

## எதிர்காலச் சிந்தனை வகைகள்

1) எதிர்காலம் பற்றிய தனிமனிதனின் தன்னைப் பற்றிய சிந்தனை, பிறர்நலம் நாடும் சமுதாயச் சிந்தனை, பலர் கூடித் திட்டமிடும் சமுதாயச் சிந்தனை என எதிர்காலச் சிந்தனையை வகைப்படுத்தலாம். இதில் திருக்குறள் தனி மனிதரின் (வள்ளு வர்) பிறர் நலம் நாடும் சமுதாயச் சிந்தனையாகிறது. அதனுள் அவர் சமுதாய நலனுக்கு வித்திடும் தனி மனித நலம் குறித்தும் (அன்புடைமை, இனியவை கூறல்) எண்ணியுள்ளார்.

2) அவரவர் மனநிலைக்கேற்ப ஆக்கம் அல்லது அழிவு வழியில் எதிர்காலச் சிந்தனையமைகிறது. சமுதாயச் சிற்பி யாக, உலகப் பொதுமறை வழங்கிய வள்ளுவரின் சிந்தனை 'ஆக்கல் வழி'ப் பட்டது என்பது சொல்லாமலே விளங்கும். அவரது பட்டறிவு, குறளின் கருத்துக் கோவைக்குப் பெரிதும் துணை நின்றது என்பதில் ஐயமில்லை.

3) திருக்குறளில் காணும் எதிர்காலச் சிந்தனைகளை (1) அண்மையில் தோன்றக் கூடியது (319); (2) நீண்ட நெடுங்காலத் தைக் கருத்துட் கொண்டது (67); (3) இப்பிறவியையும் மீறிச் செல்

வது (398) என மூவகை ஆக்கலாம். முன்னிரண்டும் தனிமனிதன், சமுதாயம் என இரண்டிற்கும் ஏற்புடையதாகிறது. இறுதி பல பிறவியில் நம்பிக்கை கொண்ட தனிமனிதனுக்கு மட்டுமே பொருந்துவதாகும்.

4) எதிர்காலச் சிந்தனை நுண்பொருள், பருப்பொருள் என இரண்டிலும் அமைதலுண்டு என்பதை முறையே 'உள்ளத்தாற் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்' (291), 'பயன் மரம் உள்ளூர் பழுத்தற்றால் செல்வம் நயனுடையான் கண் படின்' (216) எனும் குறட்பாக்கள் உணர்த்துகின்றன.

5) எதிர்காலச் சிந்தனையாளரின் இச்சிந்தனைகள், நிகழக் கூடிய எதிர்காலம் (Possible future), நிகழ்வதற்கு வாய்ப்புள்ள எதிர்காலம் (Probable future); தாம் விரும்பும் எதிர்காலம் (Preferable future) என மூவகைப்படுகின்றன.[1] திருக்குறள் அறநூலாதலின் இம்மூன்றையுமே உட்கொண்டுள்ளது. 'ஞாலம் கருதினும் கைகூடும் காலம் கருதி இடத்தாற் செயின்' (484) என்பது நிகழாது என்பதைவிட நிகழும் என்பதற்கு மிகுதியான வாய்ப்புள்ள 'நிகழக் கூடிய எதிர்காலத்தை'ச் சுட்டுகிறது. நடக்கக் கூடும், நடக்காமலும் போகலாம் என ஐயப்பாட்டுடன் அமைவது 'நிகழ்வதற்கு வாய்ப்புள்ள எதிர்காலம்' எனும் இரண்டாம் வகை. இதனை, 'தீயவை செய்தார் கெடுதல் நிழல் தன்னை வீயாது அடி உறைந்தற்று' (208) என்பதில் பெறலாம். நிகழ்வதற்கு வாய்ப்பில்லை என அறிந்தும் அவ்வாறு நிகழ வேண்டும் என்ற அவாவின் தூண்டுதலில் அமையும் சிந்தனையாக, 'விரும்பும் எதிர்காலம்' அமைகிறது. 'வித்தும் இடல் வேண்டும் கொல்லோ, விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்' (85) எனும் குறள் இதற்குச் சான்றாகும்.

---

1. The Science of futurism or the futurist movement has three well-defined furturibles; the probabe, the possible and the preferable future. That which is credible, plausible and resumable is probable future and that which is liable, feasible and attainable is possible future and lastly, that which is choiceable, favourable and desirable is preferable future.
   - V. Narayankaran Reddy, op cit; p. 4.

## எதிர்காலச் சிந்தனையின் அணுகுமுறைகள்

எதிர்காலச் சிந்தனை அனைத்துத் துறைகளிலும் காணப் படினும் அவை கணிக்கும் முறை ஒன்றுபோல் அமைவ தில்லை. தனித்துறையாக எதிர்காலவியல் வளர்ந்துள்ள நிலை யில் பல்வேறு வகையான கணித்தல் முறைகள் பின்பற்றப் படுகின்றன.[2] இன்றைய இவ்வணுகுமுறைகளை அன்றைய வள்ளுவர் அறிந்திருக்க வாய்ப்பில்லை ஆயினும் அவற்றுள் இரண்டு பொருந்தி வரக் காண்கிறோம். ஒரு நுண்ணறிவாள ரின் முன்னுணர்தல் (genius forecasting) எனத் திருக்குறளைப் போற்றலாம். தம் குறட்படைப்பிற்கு வள்ளுவர் 'பொதுப் போக்கு அடிப்படைக் கணிப்பு நெறியைக்' (Trend, Extrapolation) கையாண்டுள்ளார் எனக் கொள்வதில் தவறில்லை. இம் முறை சமூகவியலாளரால் இன்று பெரிதும் பயன்படுத்தப் படுகிறது. நடைமுறையின் பொதுப் போக்கு எப்படி அமை கிறது என்பதனை அளவிட்டு அதன் அடிப்படையிலே, அதுவே தொடரக்கூடியது என்ற கணிப்பில் எதிர்காலத்தை உறுதி செய்தல் இதன் பொதுப் பண்பு. 'இகழ்ச்சியில் கெட் டாரை உள்ளுக; தாம் தம் மகிழ்ச்சியின் மைந்துறும் பொழுது' (539) என்பது போன்ற குறட்பாக்கள், வள்ளுவரும் குறளை இப்போக்கில் படைத்துள்ளதை உணர்த்தும்.

சமூகநிலை முன்னுணர்த்தல் (Social forecast) அறி வியல் மற்றும் தொழில்நுட்ப முன்னுணர்த்தல் (Scientific and Technological forecast) என்னும் இயலடிப்படையிலான எதிர்காலவியல் பகுப்பு முறையில் வள்ளுவரின் குறள் சமூக நிலை முன்னுணர்த்தலாக நிற்றலும் குறிப்பிடத்தக்கது.

## எதிர்காலத் திட்டமிடல்

எதிர்காலத் திட்டமிடலை வள்ளுவர் எங்ஙனம் மேற் கொண்டார் என்ற வினாவிற்கு விடைகாணல் அரிதாயினும் அவரது குறளில் எதிர்காலத் திட்டமிடல் அமைய வேண்டிய

---

2. Theodore J. Gordon; The Current Methods of Futures Research; The futurists; op cit; pp 164 - 189.

முறைமையையும் அவற்றின் தேவையையும் உணர்த்தியுள் ளார். திட்டமிடும் எதிர்காலம் நல்லனவற்றை விளைவிப்ப தாக அமைதல் வேண்டும் என 'நன்மையும் தீமையும் நாடி நலம் புரிந்த தன்மையான் ஆளப்படும்' (511) எனும் குறளில் தெளிவுபடுத்துகிறார். திட்டமிட்ட ஒன்று வெற்றிபெற வேண்டு மானால் எவையெவற்றையெல்லாம் கருத்துட் கொளவேண் டும் என்பதனைப் 'பொருள் கருவி காலம் வினை இடனொடு ஐந்தும் இருள் தீர எண்ணிச் செயல்' (67) என்பதால் விளக்கு கிறார்.

## எதிர்கால நோக்கின் தேவை

பொருள் செயல்வகை, காலமறிதல், இடனறிதல், வினை செயல்வகை, வினைத்திட்பம், வினைத் தூய்மை முதலான அதிகாரங்களால் இவற்றின் இன்றியமையா மையை வலியுறுத்துகிறார். கருவி, திட்டத்தின் இயல்பைக் குறித்து மாறுபடக்கூடுமாதலின் தனிச்சுட்டு நிலை அமைய வில்லை எனக் கருதலாம். திட்டமிடலுக்குப் பட்டறிவின் பயனை, இன்றியமையாமையை, 'செய்வினை செய்வான் செயல்முறை, அவ்வினை உள்ளறிவான் உள்ளம் கொளல்' (678) என்பதில் காட்டி, அதனைப் பெரியாரைத் துணை கோடல், பெரியாரைப் பிழையாமை எனும் இரு அதிகாரங் களில் விரிவாகத் தருகிறார்.

திட்டமிடல் முன்பின் விளைவுகளையும் எதிர் நோக்கி, ஒன்றின் வழி இயன்ற பிற நன்மைகளையும் பெற முயல் வதாய் அமைய வேண்டுமென்பதை 'வினையால் வினை யாக்கிக் கோடல் நனைகவுள் யானையால் யானை யாத்தற்று' (678) என்பதில் உணர்த்துகிறார்.

## எதிர்காலவியல் நோக்கு

எத்துறையும் ஓர் அடிப்படை இலக்கினை, நோக்கினைக் கொண்டிருத்தல் இயல்பு. மனித வாழ்விற்கு நலனுக்கு உறு துணையான எல்லாத்துறைகளும் அதன் வளர்ச்சிக்கு இடை யூறாக இருப்பனவற்றை, இருக்கப் போவனவற்றைக்

கண்டுணர்ந்து, அவற்றைக் களைந்து, அவற்றின் தேவைக் கேற்ப வளர்த்து முன்னேறிச் செல்வதை எதிர்காலவியலின் ஒரு நோக்காகக் கருதலாம். வள்ளுவரின் எதிர்காலச் சிந் தனை *'அல்லவை தேய அறம் பெருகும் நல்லவை நாடி இனிய சொலி (செயி)ன்' (96)* என்பதை இலக்காகக் கொண் டுள்ளது வெள்ளிடைமலை.

எதிர்காலம் பற்றிய சிந்தனையும் திட்டமிடலும் அதற் குரிய செயற்பாடும் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் தேவை என்பதையும் பலவிடங்களில் குறள்காட்டுகிறது. இக்கூற்றின் உண்மையை, *'வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரி முன்னர் வைத்தூறு போலக் கெடும்' (435); 'உள்ளத்தனையது உயர்வு' (595)* போன்ற குறட்பாக்கள் ஐயமறக் காட்டுகின்றன. *'ஒன்றா உலகத்து, உயர்ந்த புகழ் அல்லால் பொன்றாது நிற்பது ஒன்று இல்' (233)* ஆதலின், பொருள் பொதிந்த நிறை வாழ்வே ஒவ்வொருவரின் வாழ்க்கை நோக்காக, அதற்கான திட்டமிடலாக, செயலாக அமைதல் வேண்டும் என்பது வள்ளுவரின் வேணவா.

எதிர்கால வாழ்வுத் திட்டமிடல் நன்றதன்பாற்பட வேண்டியதன் தேவையை, *'மனம் தூயார்க்கு எச்சம் நன்று ஆகும், இனம் தூயார்க்கு இல்லை நன்று ஆகாவினை' (456)* என நம்பிக்கையின் துணை கொண்டும், *'களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து ஆவது போலக் கெடும்' (238)* என எச்சரித் தும் வலியுறுத்துகிறார். இவ் வெதிர்காலச் சிந்தனையின் பய னாய் மனிதன் தன் தவறுகளைத் திருத்திக் கொண்டு முன் னேற்றப்பாதையில் முயற்சிக்கக் கூடும். இதனால் புதிய புதிய ஆக்கங்களையும் பெறக்கூடும் என்பது வள்ளுவரின் அசையா நம்பிக்கை.

நினைப்பதெல்லாம் நடந்து விடுவதில்லை; திட்டங்கள் பொய்த்துப் போதலும் உண்டு என்பதை வள்ளுவர் நன்கறிந்தே இருந்தார் என்பதை, *'அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ் வியான் கேடும் நினைக்கப்படும்' (169)* எனும் குறட்பாவில் காட்டுகிறார். எனினும் *'தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சி தன் மெய் வருத்தக் கூலிதரும்' (619)* என்று ஊக்கப்படுத்து கிறார்.

நாளைய எதிர்பார்ப்புகளுக்காகத் திட்டமிட்டுச் செயற் பட முனைவது இன்றாதலின் 'நாளை என்பது இன்றே' (Tomorrow is today) எனறு வழங்கப்படுவதைத் திருக்குறள் வழி அறநூல்கள் மெய்ப்பிக்கின்றன.

## பாட்டியலாரின் எதிர்காலவியல் சிந்தனை

பாட்டியலாரிடையே எதிர்காலவியல் சிந்தனை அழுத்த மாகப் பதிந்திருப்பதை அவர்கள் தரும் சிற்றிலக்கிய வகை, விளக்கங்கள் கொண்டு துணியலாம். தாம் பாட்டியல் படைக் கும் காலத்தில் எழுந்திருந்த சிற்றிலக்கியங்களின் (தூது, உலா, பிள்ளைத் தமிழ்) தோற்ற அடிப்படையை ஆராய்ந்த பொழுது, அக் கோணத்திலேயே வேறு சிலவும் தோன்றுதற்கான வாய்ப்புகளைக் கண்டனர். அவற்றையும் இனி, எதிர்காலத் தில் தோன்றக் கூடும் எனும் கணிப்பில் சிற்றிலக்கிய வகை களாக வகுத்துரைத்தனர். பாட்டியல் தரும் சிற்றிலக்கிய எண் ணிக்கை 201 ஆக விரிந்துள்ளமைக்கு[3] இதுவும் காரணம் ஆகும். 'ஐம்படை விருத்தம், குடைமங்கலம், மறம், இல்லற வெள்ளை, கண்படை, துயிலெடை, கடாநிலை, கடைநிலை போல்வன சான்றுகள், இவர்கள் கருத்துப் போல் பிற்காலத்தில் பள்ளு (உழத்திப்பாட்டு), குறவஞ்சி (குறத்திப் பாட்டு) போல்வன தோன்றியமை இவ்வெண்ணத்தினை வலி யுறுத்துகின்றது.

## இலக்கியத்தில் எதிர்காலவியல் அணுகுமுறை

தமிழிலக்கியத்தில் எதிர்காலவியலை இருநிலைகளில் அணுகலாம் ஒன்று எதிர்காலவியலைக் கருவாகக் கொண்ட இலக்கியங்கள் பற்றிய ஆய்வு; தமிழிலக்கியத்தின் எதிர்காலம் எப்படியிருக்கும் எனக் காண்பது மற்றொன்று. பாடுபொருள், யாப்பு, பாடற்றலைமை, வடிவம் எனப்பல நிலைகளில் மாற்ற மும், புத்தெழுச்சியும் கொண்டுள்ள தமிழிலக்கியம் எதிர் காலத்தில் எப்படியிருக்கும் எனக் காண்பதும் தனித்த விரிந்த

3. ச.வே. சுப்பிரமணியன்; தமிழ் இலக்கிய வகையும் வடிவும்; தமிழ்ப்பதிப்பகம்; சென்னை; 1984; பக். 50 -70.

ஆய்விற்குரியது. எதிர்காலவியலை எவ்வகை இலக்கியத்துள்ளும் அணுகலாம் என்பதைத் தொடரும் 'பழந்தமிழில் எதிர்காலச் சிந்தனை'; 'வாழ்வியலில் எதிர்காலச் சிந்தனை' எனும் கட்டுரைகள் உணர்த்துகின்றன.

''வருங்காலச் சிந்தனைக் கருத்துகளுடன் நம் இலக்கியப் படைப்புகளை நாம் மீண்டும் நோக்கினால் இலக்கியங்களில் ஓர் புதுமையைக் காணலாம். பல புதுமைக் கருத்துகள் தோன்றும். வாழ்ந்த காலத்தை அவை படம்பிடித்துக் காட்டுகின்றன என்பது ஒருநிலை; சற்று உறுதியற்றநிலை; அவை வருங்காலக் கனவைக் காட்டுகின்றன என எண்ணி ஆராய்ந்தால் அவற்றின் புதுத்திறன், புதுமைத் திறன் வெளியாகும் எனபது உண்மை. இலக்கிய ஆய்வின் வளர்ச்சிக்கு இது பெரும் துணை செய்யும் என்பது உறுதி'' எனும் கருத்தும்[4] இவண் இணைத்து நோக்கத்தக்கது. படைப்பாளரின் எவ்வகை, எந்தக் கற்பனைகள், கனவுகள் நனவாகின்றன எனக் காண்பதும் சுவைமிக்க ஆய்வாக அமையும்.

---

4. தே. ஆல்பர்ட்; முன் சுட்டியது; ப. 5.

# பழந்தமிழில் எதிர்காலச் சிந்தனை

மறுமைச் சிந்தனை
வழித்தோன்றல் பற்றிய சிந்தனை
எதிர்காலக் கணிப்பு
எதிர்காலச் சிந்தனையை வெளிப்படுத்துவன

- வாழ்த்து
- நிமித்தம்
- கனவு
- நிலையாமை
- மறுமை

எதிர்காலச் சிந்தனை வலியுறுத்தல்
தொன்மம்
விளைவுகள்

# பழந்தமிழில் எதிர்காலச் சிந்தனை

இழையணி யானை இயல்தேர் அஞ்சி
அதியமான், பரிசில் பெறுஉம் காலம்
நீட்டினும் நீட்டாது ஆயினும், களிறுதன்
கோட்டு இடைவைத்த கவளம் போலக்
கையகத்தது; அது பொய் ஆகாதே;
அருந்த ஏமாந்த நெஞ்சம்;
வருந்த வேண்டா; வாழ்க; அவன் தாளே (புறம். 101)

எனும் ஔவையார் பாடல் அதியமானின் பண்பறிந்த நிலையில் நிகழவிருப்பதை முன்னறிவுறுத்தலாக அமையக் காணலாம். இது கொண்டு பழந்தமிழிலும், எதிர்காலச் சிந்தனை காணல் இயல்பாயமைவதை உணரலாம். இச்சிந்தனைகளைப் பண்டைத் தமிழரின் எதிர்காலச் சிந்தனை எனவும் கொள்ளலாம்.

### மறுமைச் சிந்தனை

உயிர்வாழ்க்கை பலபிறவிகள் தொடரும் எனும் நம்பிக்கையினர் தமிழராகலின் இப்பிறவியையும் மீறி மறுமை, எழுபிறப்பு இவற்றிலும் இன்றைய செயற்பாட்டின் விளைவுகள் காணப்படும் என்ற கருத்தினைப் பரவலாகப் பேசியுள்ளனர்.

இம்மை உலகத்து இசையொடும் விளங்கி
மறுமை உலகமும் மறுவின்றி எய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர்க் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்மலோர் எனப்
பல்லோர் கூறிய பழமொழி (அகம் 66:1-6)

என்பதனைச் சான்றாகக் காட்டலாம். வள்ளுவர்,

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கள்
விழுமம் துடைத்தவர் நட்பு (107)

ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து (398)

என எழுமை வரை நீட்டிச் சிந்திப்பதில் தனிவிருப்பு காண்கிறார். மறுமைப் பேற்றிற்கு மக்கட் செல்வம் முதன்மை பெறுவதும், நட்பும் கல்வியும் எதிர்கால நலனுக்கு மிகத் தேவையானதொன்றாவதும் இங்கு வெளிப்படுகின்றன. கல்விக்கு இன்றைய எதிர்காலவியலாளரும் சிறப்பான அக்கறை காட்டுவது சுட்டத்தக்கது.

மறுமைச் சிந்தனை சிலம்பிலும் தொடர்வதை, கோவலனின்றி வருந்தி நின்ற கண்ணகியிடம் அவளது தோழி, தேவந்தி,

கடலொடு காவிரி சென்ற லைக்கும் முன்றில்
மடலவிழ் நெய்தலம் கானல், தடம் உள,
சோம குண்டம் சூரிய குண்டம் துறை மூழ்கிக்
காமவேள் கோட்டம் தொழுதார், கணவரொடு
தாமின்புறுவர் உலகத்துத் தையலார்
போகம் செய் பூமியினும் போய்ப் பிறப்பர் (9: 57-61)

எனக் கூறுவது கொண்டு காட்டலாம். ஆனால் இன்றைய சூழலில் எதிர்காலவியல் என்பது இன்றைய மானிடரின் மறுமையைப் பற்றிச் சிந்திக்கவில்லை. அவர்களது வழித் தோன்றல்களையே கருத்துட் கொண்டுள்ளனர் என்பது குறிக்கத் தக்கது.

**வழித்தோன்றல் பற்றிய சிந்தனை**

பழந்தமிழர் தம் வழித்தோன்றல் நலம் பற்றியும் சிந்தித்ததை,

செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி
எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து (112)

எனும் குறள் வழி காட்டலாம்.

### எதிர்காலக் கணிப்பு

எதிர்காலச் சிந்தனையின் இரு இயல்புகளையும் பழந் தமிழில் பார்க்க முடிகிறது. இன்றைய செயற்பாடுகளின் நாளைய விளைவுகளைக் கணித்துரைக்கும் இயல்பினை 'ஆற்றுப்படைப்' பாடல்களில் காணலாம். கோப்பெருஞ் சோழன் வாழ்வை வெறுத்து வடக்கிருந்து உயிர்விடத் துணிந்த பொழுது, தன்னைக் காணாமலே இதுவரையில் நட்புக் கொண்டிருந்த பிசிராந்தையாரும் துன்புற்ற தன் இறுதிக்காலத்தில், உறுதியாக வருவார். அவருக்கும் இடம் ஒதுக்க வேண்டும் என வலியுறுத்தியதை,

**கேட்டல் மாத்திரை அல்லது, யாவதும்**
**காண்டல் இல்லாது யாண்டு பல கழிய**
**வழு இன்று பழகிய கிழமையர் ஆயினும்**
**அரிதே தோன்றல்! அதற்பட ஒழுகல் என்று**
**ஐயம் கொள்ளன்மின், ஆர் அறிவாளீர்!**
**இகழ்விலன், இனியன், யாத்த நண்பினன்,**
**புகழ்கெட வரூஉம் பொய் வேண்டலனே,**
**தன்பெயர் கிளக்கும் காலை, 'என் பெயர்**
**பேதைச் சோழன்' என்னும் சிறந்த**
**காதற் கிழமையும் உடையன்; அதன் தலை**
**இன்னது ஓர் காலை நில்லலன்;**
**இன்னே வருகுவன்; ஒழிக்க அவற்கு இடமே**

**(புறம் 216)**

எனும் புறப்பாடல் காட்டுகிறது. இங்கு நட்பின் ஆழம், சிறப்பு மட்டுமின்றி ஒருவர் பற்றிய மிகச் சரியான கணிப்பும் வெளிப் படக் காண்கிறோம். இதனைப் பிசிராந்தைார், தன் நண் பன் சோழன் எண்ணம்போல் வந்து மெய்ப்பித்ததும் சங்கப் பாடலால் பாராட்டப் பெற்றுள்ளது (புறம் 218).

நாளைய எதிர்பார்ப்பிற்கேற்ப இன்றைய செயல்களைத் திட்டமிட்டமைப்பது எனும் இயல்பினை, 'உள்ளது சிதைப் போர் உளரெனப் படாஅர்; இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவெனச்' சொல்லியவன்மை தெளியக் காட்டிப் பொருள் வயிற் பிரியும் (குறுந். 283) தலைவன் செய்கையில் அறியலாம்.

இவ்விரு இயல்புகளுமே (எதிர்பார்ப்பு, செயல்திட்டம்) வள்ளுவரின் எதிர்காலச் சிந்தனையில் இடங் கொண்டிருப்பது நவிலற்பாலது.

**வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**
**பருவந்து பாழ்படுதல் இன்று (83)**

**புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும் செய்யாது**
**இகழ்ந் தோர்க்கு எழுமையும் இல் (538)**

எனும் குறட்பாக்கள் முறையே அவற்றிற்குச் சான்றாகின்றன.

### எதிர்காலச் சிந்தனையை வெளிப்படுத்துவன

எதிர்காலச் சிந்தனைகளை அறிவுறுத்தும் தன்மையினவாகச் சில கூறுகள் பழந்தமிழில் பரவிக்கிடக்கக் காண்கிறோம். வாழ்த்து, நிமித்தம், கனவு, நிலையாமை, மறுமை முதலியன அவை. தொல்காப்பியர் சுட்டும்,

**வழிபடு தெய்வம் நிற்புறம் காப்பப்**
**பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து**
**பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தும் (பொருள் 415)**

**வேம்புங் கடுவும் போல வெம் சொல்**
**தாங்குதல் இன்றி வழி நனி பயக்குமென்று**
**ஓம்படைக் கிளவியின் (பொருள் 417)**

மொழியும் **வாயுறை வாழ்த்தும்** உள்ளத்தக்கன. இரவலர் தம் புரவலரை,

**தண்டா ஈகைத் தகை மாண் குடுமி**
**தண்கதிர் மதியம் போலவும், தெறுசுடர்**
**ஒண்கதிர் ஞாயிறு போலவும்**
**மன்னிய பெரும! நீ நிலமிசையானே (புறம் 6:26-29)**

என வாழ்த்துதல் அவர்தம் எதிர்காலம் எல்லா நலனும் பெற்றுக் குறைவின்றிப் பெரும் புகழுக்குரியதாக விளங்க வேண்டுத

லாகும். இவ்வாழ்த்து அவர்தம் குலமரபுத் தொடர்ச்சியின் பெருமை குறித்தும் உள்ளடக்கி நிற்றல் நோக்கத்தக்கது.

**வேதின வெரிநி னோதி முது போத்து**
**ஆறுசெல் மாக்கள் புட்கொளப் பொருந்தும்**
**சுரனே சென்றனர் காதலர்** (குறுந். 140:1-3)

**புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை**
**உள்ளிச் சென்றோர்ப் பழியலர் அதனால்**
**புலவேன்** (புறம் 204:10-12)

எனும் **நிமித்தம் பார்த்தலும்,** பழந்தமிழரின் பழக்கவழக்கங் களில் காணப்படுதல் எதிர்கால நன்மைக்கான எதிர்நோக்குத லாக அமையக் காணலாம். கோடிட்டுப் பார்த்தல் (குறுந். *358*), ஆழியிழைத்தல் (அகம் *351*), விரிச்சி கேட்டல் (முல்லை - *16-18*), புள் வரவு (தொல். பொருள். *88 : 16-17*), கனவு (புறம் *260*) என இந்நிமித்தம், அதாவது வருவதை முன்னுணர்த்தும் செய லாகக் கருதுதல் மற்றும் பலவாக விரிந்து காணப்படுவது எண் ணத்தக்கது. சிலம்பில் கண்ணகி, கோவலர் கனவுகளும், இமி லேறு எதிர்ந்தது இழுக்கென அறியாது கோவலன் தொடர்ந்து வினைவயப்பட்டதும் (*16:100-1*) இணைத்துக் காணத்தக் கன. இவையும் இவை போல்வனவும் தமிழரின் நம்பிக்கை வயப்பட்ட எதிர்காலச் சிந்தனைகளாகும். இங்குச் சங்க இலக்கியம் சுட்டும் அகவல் மகளிர் (குறுந். *23*); சிலம்பு காட் டும் நிமித்திகர் (சிலம்பு *30 : 174-176*) ஆகியோரும் எண்ணத் தக்கவராம். அன்றைய சூழலில் எதிர்காலம் பற்றிக் கணித் துரைப்பவராக, அதனைத் தொழிலாகக் கொண்டவராக இவர் கள் அமைகின்றனர்.

'மன்னா வுலகத்து மன்னுதல் வேண்டுவோர் அறம் செய்க' (புறம் *165*) என **நிலையாமை** எதிர்கால நோக்குடன் மொழியப்படுகின்றது. இது போன்றே 'சுரும்பார் கண்ணிப் பெரும் பெயர் நம்முன் ஈண்டுச் செய் நல்வினை யாண்டுச் சென்றுணீஇயர் உயர்ந்தோர் உலகத்துப் பெயர்ந்தனன் ஆகலின்' (புறம் *174 18-20*) என மறுமைப் பேற்றுக்காக நிகழ்கால நல் வினை வேண்டுவதும் எதிர்காலச் சிந்தனையாக மலர்கிறது. இவை போன்றே இறை வழிபாடும் இன்றைய நலனை மட்டுமின்றி எதிர்கால நலனையும் உள்ளடக்கியது என்ற

வகையில் அது எதிர்காலச் சிந்தனையின் விளைவு எனக் கொள்வதில் தவறில்லை.

### எதிர்காலச் சிந்தனை வலியுறுத்தல்

எதிர்காலச் சிந்தனையை மானிடர்க்கு வலியுறுத்தும் அறவிலக்கியம், 'இடுக்கண் வருங்கால் நகுக அதனை அடுத் தூர்வது அஃதொப்பது இல்' *(621)* என எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை விதைக்கிறது. இன்றைய நற்செயற்பாடுகளின் நன்மையாக,

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து** (126)

என்றும் தீயனவற்றின் தீமையாக,

**தீயவை செய்தார் கெடுதல் நிழல் தன்னை**
**வீயாது அடி உறைந்தற்று** (208)

என்றும் எடுத்துக்காட்டி எதிர்கால நல்வாழ்விற்கு இன்று நல்வினையாற்ற வேண்டுகிறது. மற்றும் இதனை அழுத்தம் திருத்தமாக,

**கெடுவல்யான் என்பது அறிக தன் நெஞ்சம்**
**நடுஓரீஇ அல்ல செயின்** (116)

என எச்சரித்தலும் குறிக்கத்தக்கது. செய்ய வேண்டியனவும் செய்யக் கூடாதனவும் எதிர்கால நோக்கில் வலியுறுத்தப்படல் அறவிலக்கியத்தின் முதன்மை நோக்காகிறது. பிற, தேவைக் கேற்ப ஏற்புடை இடங்களில் மொழிதலும் சுட்டற்பாலது. செவியறிவுறூஉ துறை இதற்குத் தக்க சான்றாகும் (புறம் *184*). தொடர் நிலைச் செய்யுளாம் சிலப்பதிகாரத்துள்ளும் ஆங் காங்கே கவுந்தியடிகள், சாரணர் வழி அறம் இயம்புதலுடன் காப்பிய ஆசிரியர் இளங்கோவடிகள் நூலின் இறுதியில் தோன்றி நல்வழி காட்டலும் நோக்கத்தக்கது.

### தொன்மம்

தொன்மங்களும் எதிர்காலச் சிந்தனை கொள்வதை, 'காய் கதிர்ச் செல்வனே கள்வனோ என் கணவன்; கள்வனோ

அல்லன் கருங்கயற்கண் மாதராய் ஒள்ளெரி உண்ணும் இவ் வூர் என்றது ஒரு குரல்' *(18:51-53)* என்னும் கண்ணகி வினாவும், கதிரவன் விடையும் காட்டும். இவண் சிலம்பின் கதை மாந்தர் பழம்பிறப்புக் கதைகளும் இணைத்துக் காணத்தக்கன.

**விளைவுகள்**

இன்றைய செயற்பாடுகள், நாளை தரவிருக்கும் பயன், தன்மை, வழித்தோன்றல், சுற்றம் என முந்நிலைகளில் பாதிப்பை விளைவிக்கும் என்பதையும் அறியமுடிகிறது.

**பற்றற்றோம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்று என்று**
**ஏதம் பலவும் தரும்** (275)

எனத் தன்மைக்கும்,

**தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல்** (67)

என வழித் தோன்றலுக்கும்,

**கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்**
**உண்பதூஉம் இன்றிக் கெடும்** (166)

எனச் சுற்றத்திற்கும் சான்று காட்டலாம். சமூக நலனில் அக்கறை கொள்வோர் எதிர்காலச் சிந்தனையுடன் செயல் படுவதை இது காட்டுகிறது.

இங்ஙனம் பழந்தமிழில் எதிர்காலச் சிந்தனை இடம் பெறுவது போன்று தொடர்ந்து எழுந்த இலக்கியங்களிலும் இதனைக் காணவியலும். எப்படி இலக்கியத்துள் எதிர்காலத் தைப் பார்க்கக் கூடுமோ அதே போன்று குறிப்பிட்ட இலக்கியம் எதிர்காலத்தில் எப்படி வரவேற்கப்படும்; அதன் நிலை என்ன என்பன குறித்தும் ஆய்வு செய்ய முடியும். காட்டாக வலம்புரி ஜானின் 'பாரதி - நேற்று இன்று நாளை ....' எனும் நூலைச் சுட்டலாம். எனவே இலக்கியத்துள்ளும் எதிர்காலவியல் பார்வை சிறப்பிடம் கொள்வதும், இன்னும் பலவாறாகக் கிளை பரப்பி வளர வேண்டியிருப்பதும் அறியத்தக்கன.

# வாழ்வியலில் எதிர்காலச் சிந்தனை

## தேவை -

நம்பிக்கையூட்டல் - செயல் திறன் தூண்டல் - இளையோர் வளர்ச்சி

## எதிர்காலச் சிந்தனையியல்பு -

1) அண்மை - தொலைவு - மறுபிறவி
2) இயல்பான எழுச்சி - திட்டமிடல்
3) தானே முடிவெடுத்தல் - பிறர் வழிகாட்டல்
4) மகிழ்ச்சியளித்தல் - துன்பந்தரல்

## எதிர்காலக் கணிப்பு முறை -




## எதிர்காலக் கணிப்பிற்கு அடிப்படையாவன -

கடமையுணர்வு - பிறர் நலம் பேணல் - பொது நல நோக்கு - கடந்தகால நிகழ்வுகள் - நிகழ்காலத் துன்பம் - முன்நிற்கும் சிக்கல் - எதிர்நோக்கும் இலக்கு - பட்டறிவு - தொடர்புடையார் பண்பு - நம்பிக்கைகள் - வசைமொழி (சாபம்)

## எதிர்காலத் திட்டத்தின் செயல் முறை -

சூள் - முன்னோட்டம் - வரிசைப்படுத்தல் - துணைகாணல் - இடம் பொருள் ஏவல் காணல்.

## விளைவுகளும் காரணங்களும் -




3) புலம்பல் (4) மெய்ம்மை காணல் (5) பழமொழி கூறல்

## இன்றைய நிகழ்வில் எதிர்காலத்தின் தாக்கம்

- எதிர்காலம் பற்றிய அச்சம் - தன்னலம் - புகழ் வேட்கை - பழியஞ்சல் - வாழ்க்கை இலக்கு - வாழ்த்து - வேண்டல்

## எதிர்காலவியல் கோட்பாடுகள்

# வாழ்வியலில் எதிர்காலச் சிந்தனை

சமூக இயக்கத்திற்கு, மேன்மைக்கு உறுதுணையாய் அமையும் பல்வேறு துறைகளில் மட்டுமின்றி, மக்களின் அன்றாட வாழ்விலும் எதிர்காலம் பற்றிய சிந்தனை (அனைவர் வாழ்விலும்) சிறப்பிடம் பெறுகிறது. பால், இன, இட, மொழி, தகுதி, பண்பு, பருவம் முதலான எந்த வேறுபாடும் இதனைப் பாதிப்பதில்லை. இன்றைய வாழ்வே நாளைய விடியலை எதிர்நோக்கி என்பதில் எவ்வித கருத்து மாறுபாடும் இல்லை. எதிலும் ஓர் வளர்ச்சியை, மாற்றத்தை விரும்பும் மனிதன் எதிர்காலம் பற்றிய கற்பனையோடுதான் அதற்கான முயற்சியை மேற்கொள்கிறான். எனவே ஒவ்வொருவர் வாழ்வோடும் எதிர்காலம் பற்றிய சிந்தனை எப்பொழுதும் இரண்டறக் கலந்ததாக அமைகிறது. எனவே இதன் தேவை, இயல்பு, சிறப்பு போல்வன குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது. இதற்குக் களனாகக் கம்பன் 'இராமாவதாரம்' கைக் கொளப்பட்டுள்ளது. அதன் பரந்து விரிந்த களன் இத் தேர்விற்குக் காரணமாகிறது.

**தேவை**

எதிர்காலச் சிந்தனையின் தேவை என்ன? அதாவது எதிர்காலம் பற்றி ஏன் சிந்திக்க வேண்டும் என்பதற்கான விளக்கமாக இது அமைகிறது.

1. வாழ்வில் எல்லோரும் எப்பொழுதும் எதிர்பார்த்த வெற்றி பெறுவதோ அன்றிப் பல்வேறு காரணங்களினால் மகிழ்ச்சியாக இருப்பது என்பதோ நடைமுறையில் இயலாததொன்றாகும். தோல்வி தழுவும் பொழுதும் துன்பச் சூழல் தாக்கும் பொழுதும் மனிதன் இயல்பான மனநிலையிலிருந்து மாறிச் சோர்வடைகிறான். செயல் ஆக்கம் தடைபடுகிறது. மேலும் மேலும் துன்பப்புதைகுழிக்குள்ளேயே மூழ்கும் ஒருவனைக் கரையேற்ற, இன்றைய துன்பத்தை மறந்து நாளைய வெற்றியை எதிர்நோக்கி நடைபயிலச் செய்ய **நம்பிக்கையூட்டுதல்** தேவை

யாகிறது. இந்நம்பிக்கை எதிர்காலம் ஒளிமயமாக விளங்கும் என்பதை எவ்வகையிலேனும் உணர்த்திச் செயல்பட வைக்கிறது. துன்பத்தின் பிடியிலிருந்து மீட்டு நாளைய நல்வாழ்வை நோக்கி முன்னேற வைக்கிறது. எனவே வாழ்வின் எப்பருவத்தினருக்கும், பல்வேறு சூழல்களில் இத்தகு எதிர்காலம் பற்றிய நம்பிக்கை விதை தேவைப்படுகிறது.

அசோகவனத்தில் துன்பமே உருவாய் உயிரையும் முடிக்கத் துணிந்த சீதைக்கு ஆறுதலும், வாழ்வில் ஒட்டுதலும் ஏற்படுத்தியது அனுமன் மற்றும் திரிசடையின், எதிர்காலம் பற்றிய நம்பிக்கை யளிக்கும் மொழிகளே என்பது வெளிப்படை. தான் கண்ட கனவின் வழி சீதையைத் திரிசடை தேற்றுகிறாள். வரவிருக்கும் இராவணனின் அழிவினை முன்சுட்டுதலாகக் கனவு அமைய, அக்கனவு முழுமையடையுமுன் சீதை எழுப்பி விட்டதாகத் *(5107 - 5120)* திரிசடை நவில்கிறாள். அதனால் மனவாறுதலும், எப்பொழுது அந்நன்மை நடக்கும் என்ற ஏக்கமும் கொண்ட சீதையின் நிலையினை,

**'பொன்மனை புக்க அப்பொருஇல் போதினில்**
**என்னை நீ உணர்த்தினை; முடிந்தது இல்' என,**
**'அன்னையே! அதன் குறை காண்' என்று, ஆயிழை,**
**'இன்னமும் துயில்க' என, இருகை கூப்பினாள்** (5121)

எனக் கம்பன் காட்டுகிறான். இது போன்றே இராமனின் தூதாக வந்த அனுமனின் ஆறுதல் மொழிகள் அவளுக்கு எதிர்காலம் பற்றிய பயத்தைப் போக்குகின்றன. இராமனால் தனக்கு இவ்வசோகவனத்திலிருந்து சிறைவீடு கிடைக்கும் என்ற நம்பிக்கையை வளர்க்கின்றன. *(5383 - 5418)*

**ஈண்டு, ஒரு திங்கள், இவ் இடரின் வைகுதல்**
**வேண்டுவது அன்று; யான், விரைவின் வீரனைக்**
**காண்டலே குறை; பினும் காலம் வேண்டுமோ?**
**ஆண்தகை இனி ஒருபோதும் ஆற்றுமோ?** (5410)

என்பது போன்ற தேறுதல் மொழிகளால் அவள் இடர்க்கடலினின்றும் கரையேறியதை,

**ஆக இம்மொழி ஆசுஇல கேட்டு, அறிவுற்றாள்**
**ஓகை கொண்டு களிக்கும் மனத்தள் உயர்ந்தாள்**
**போகை நன்று இவன் என்பது புந்தியில் வைத்தாள்**
**தோகையும், சில வாசகம் இன்னன சொன்னாள் (5419)**

என்பது தெளிவாக விளக்குகிறது.

2) ஒருவரின் எதிர்கால நலன் நோக்கி அவர்தம் **செயல் திறனைத் தூண்டவும்,** முறைப்பட சிறப்புற முற்றுவிக்கவும் இத்தகு நம்பிக்கை மொழிகள் பெரிதும் துணை நிற்பதாலும் வேண்டப்படுகின்றன. தான் செய்யும் வேள்வி காக்க விசுவா மித்திரர் தயரதனிடம், 'நின் சிறுவர் நால்வரினும் கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதி' என வேண்ட, தன் உயி ரினையே கேட்பதாகத் தயரதன் உணர்ந்து வருந்துகிறான். இராமனுக்குப் பதில் தானே வருவதாகக் கூற விசுவாமித்திரர் சினம் கொள்கிறார். எனவே வசிட்டன் இடைபுகுந்து,

**பெய்யும் மாரியால் பெருகு வெள்ளம் போய்**
**மொய் கொள் வேலைவாய் முடுகும் ஆறுபோல்,**
**ஐய! நின் மகற்கு அளவுஇல் விஞ்சை வந்து**
**எய்து காலம் இன்று எதிர்ந்தது (329)**

என்று தயரதனை அமைதிப்படுத்துகிறான், விசுவாமித்திர ருடன் இராமன் செல்வதால் அவனுக்குப் பலவிதமான நன்மைகள் கிடைக்கும்; அவற்றை நீ தடைசெய்தல் அறி வாகுமா என எடுத்துரைத்து, இராமனை அவருடன் அனுப்ப வேண்டுகிறான். குருவின் மொழிகளை ஏற்றுக் கொண்டு தயரதனும் இராமனை விசுவாமித்திரருடன் அனுப்பி வைக் கிறான். இராமனும் தன் கைவண்ணம், (தாடகை வதம்) கால்வண்ணம் (அகலிகை மீட்பு) காட்டி மிதிலைச் செல்வியை யும் வில்லொடித்துப் பெறுகிறான். அவனுள் பொதிந்து கிடந்த வீரமும் ஈரமும் வெளிப்படுகின்றன. இராமனின் ஆற்றலை உலகறியும் நல்வாய்ப்பாக இது அமைகிறது. பற்பல படைக் கலன்களையும், மந்திரங்களையும் விசுவாமித்திரன் அருளால் பெற்று, இராவண வதத்திற்கான முன்பயிற்சியும் பெறுகிறான்.

3) பெரியோர் சிறியோர்க்கு அறிவுரை பகர்தல் அவரது எதிர்கால நலன் மற்றும் வளர்ச்சி குறித்தாம். **இளையோரைச்சான்**

**றோர் வழிநடத்திச் செல்லலே** நல்ல சமூகத்தை உருவாக்குவதற்கு ஓர் நெறியாகும். இப்பாங்கில் பிறர் நலன் நாடல், பொதுநலன் நாடல் என்ற நோக்கில் அறிவுரை பயன்பட்டு, அது எதிர்காலச் சிந்தனை வெளிப்பாட்டின் ஒரு கூறாகித் தன் தேவையை உறுதிப்படுத்துகிறது. தம்பி சுக்கிரீவனுக்குத் தமையன் வாலி,

> **மதஇயல் குரக்குச் செய்கை மயர்வொடு மாற்றி, வள்ளல்**
> **உதவியை உன்னி, ஆவி, உற்றிடத்து உதவுகிற்றி;**
> **பதவியை எவர்க்கும் நல்கும் பண்ணவன் பணித்த யாவும்**
> **சிதைவு இல செய்து, நொய்தின் தீர்வு அரும் பிறவி தீர்தி,**
>
> **அரசியல் - பாரம் பூரித்து அயர்ந்தனை இகழாது, ஐயன்**
> **மரை மலர்ப் பாதம் நீங்கா வாழுதி; மன்னர் என்பார்**
> **எரி எனற்கு உரியார் என்றே எண்ணுதி; எண்ணம் யாவும்**
> **புரிதி; 'சிற்றடிமை குற்றம் பொறுப்பர்' என்று**
> **எண்ண வேண்டா** (4077 - 78)

என அறிவுறுத்துவதைச் சான்றாக்கலாம். படையுடன் வருவேன் என்று கூறிச் சென்ற காலத்தில் வாராமையால் சுக்கிரீவன் மீது இராம இலக்குவர் கொண்ட சீற்றம் வாலி கூற்றின் உண்மையை வெளிப்படுத்தக் காணலாம்.

## எதிர்காலச் சிந்தனையியல்பு

எதிர்காலம் குறித்து எண்ணும் எண்ணங்களின் தன்மை எப்படி அமைகிறது என்பது இங்குப் பேசப்படுகிறது.

1. பொதுவாக எதிர்காலச் சிந்தனைகள் மிக **அண்மையைக்** குறித்தது; **நீண்ட தொலைவில்** வரக்கூடியது; **இப்பிறவி கடந்தும்** செல்வது என மூவகைக் கால இடைவெளியினதாக எண்ணப்படக் காண்கிறோம்.

கைகேயி கேட்ட வரத்தால் தன்னிலை இழந்த தயரதன் கோசலையிடம், 'பொன் ஆர் வலயத் தோளான் கானோ புகுதல் தவிரான்; என் ஆர் உயிரோ அகலாது ஒழியாது' (1677) என இராகவனின் காடு புகுதலையும் தன் உயிர் பிரிதலையும் உறுதியாக நிகழக் கூடியதொன்றாக அறுதியிட்டுக் கூறுவது அண்மையில் தோன்றும் எதிர்காலம் குறித்த மொழியாகும்.

இராமனைத் தேடி காடு வந்த பரதன், இராமனின் ஆணை யின்படி நாடு திரும்பும் பொழுது,

**ஆம் எனில், ஏழ் - இரண்டு ஆண்டில், ஐய! நீ**
**நாம நெடுநகர் நண்ணி, நானிலம்**
**கோமுறை புரிகிலை என்னின், கூர் எரி**
**சாம் இது சரதம்; நின் ஆணை சாற்றினேன் (2507)**

எனச் சூளுரைப்பது பதினான்கு ஆண்டுகளுக்குப் பின் நிகழக் கூடியதை அல்லது தான் செய்யவிருப்பதைச் சுட்டுவதாகும்.

தூதுவந்த அனுமனிடம் சீதை, தன் கரிய திருமேனிச் செம்மலிடம் கூறும்படி,

**ஈண்டு நான் இருந்து இன் உயிர் மாயினும்**
**மீண்டு வந்து பிறந்து தன் மேனியைத்**
**தீண்டலாவது ஓர் தீவினை தீர்வரம்**
**வேண்டினாள், தொழுது' என்று விளம்புவாய் (5379)**

என்பதில் எதிர்காலம் இப்பிறவி கடந்தும் செல்வது அறியத் தக்கது.

2) எதிர்காலம் பற்றிய சிந்தனை மிக **இயல்பாகத்** திடீரென அமைதலும் உண்டு; அல்லது **திட்டமிடப் படுதலாகவும்** அமையும். இருக்கும் சூழல் இதனை உருவாக்குகிறது. இலங்கையில் ஒவ்வொருவர் மனையாகச் சனகன் மகளைத் தேடிச் செல்லும் அனுமன் இந்திரசித்தின் மாளிகையில் அவனைக் கண்ணுற்ற போது,

**வளையும் வாள் எயிற்று அரக்கனோ? கணிச்சியான்**
**மகனோ?**
**அளையில் வாள் எரி அனையவன் - யாவனோ? அறியேன்**
**இளைய வீரனும், ஏந்தலும், இருவரும் பல நாள்**
**உளைய உள்ள போர் இவனொடும் உளது (4975)**

என்று கணித்துரைப்பது முன்னதற்குச் சான்றாகிறது. இராவணனுடன் போரிட்டே சீதையை மீட்க வேண்டி வரும்; அவ்வாறு போர் நிகழுங்காலை இந்திரசித்திற்கும் இலக்குவனுக்குமிடையே பெரும்போர் நிகழும் வாய்ப்புளது என அவனைக் கண்டளவிலேயே கணித்துரைப்பது கூறத்தக்கது.

எதிர்கால விளைவினைத் திட்டமிட்டு எண்ணிச் செயற்படுதலையும் அவன் வழியே நிறுவலாம். தேவியைக் கண்டுத் தூதுரைத்துத் தன்பணி முடித்த அனுமன் இனி மேற்கொண்டு செய்ய வேண்டியது குறித்து எண்ணும் பொழுது,

**இப்பொழிலினைக் கடிது இறுக்குவென்; இறுத்தால்**
**அப்பெரிய பூசல் செவி சார்தலும், அரக்கர்**
**வெப்புறு சினத்தர் எதிர்மேல் வருவர்; வந்தால்**
**துப்பு உற முருக்கி, உயிர் உண்பல், இது சூதால்** (5434)

எனத் திட்டமிடுவது காட்டாகிறது. திட்டத்தைச் செயலாக்கித் தன் எண்ணத்தில் அனுமன் வெற்றி பெறுவதைத் தொடரும் காப்பிய நிகழ்வுகள் காட்டுகின்றன.

3) தன் எதிர்காலம் குறித்துத் **தானே முடிவெடுத்தல் அல்லது பிறர் எதிர்காலத்திற்கு வழிகாட்டல்** என்பதாகவும் இதன் இயல்பமைகிறது.

**இன்னும், ஈண்டு ஒரு திங்கள் இருப்பல் யான்;**
**நின்னை நோக்கிப் பகர்ந்தது நீதியோய்!**
**பின்னை ஆவி பிடிக்ககிலேன்; அந்த**
**மன்னன் ஆணை; இதனை மனக்கொள் நீ** (5373)

என்று சீதை, தூதுவந்த அனுமனிடம் உரைப்பது அவள் தன் எதிர்காலம் பற்றித் தானே முடிவு செய்வதாக அமைகிறது. இராமனுடன் வனம்புக முனைந்த இலக்குவனிடம் அவனது தாய் சுமித்திரை,

**'பின்னும் பகர்வாள் மகனே! இவன் பின் செல்; தம்பி**
**என்னும் படி அன்று, அடியாரினின் ஏவல் செய்தி;**
**மன்னும் நகர்க்கே இவன் வந்திடின் வா; அது அன்றேல்**
**முன்னம் முடி'** (1752)

என்று மொழிவது பிறர் எதிர்காலத்திற்கு வழிகாட்டலாம்.

4) எதிர்காலம் பற்றிய சிந்தனை **மகிழ்ச்சியளித்தலாகவும்** இருக்கலாம். அன்றித் **துன்பத்தையும்** காட்டலாம். சீதையைச் சூழ்ச்சியால் தூக்கிச் செல்ல வந்த இராவணனின் எதிர்காலச் சிந்தனை இன்பப் பெருக்காக அமைவதை,

**உளைவுறு துயர்முகத்து ஒளிஇது ஆம் எனின்**
**முளை எயிறு இலங்கிடும் முறுவல் என்படும்?**
**தளை அவிழ் குழல் இவட் கண்டு தந்த என்**
**இளையவட்கு அளிப்பென், என் அரசு என்று எண்ணினான்**
**(3350)**

என்பது தருகிறது. சீதையின் அழகில் மயங்கித் தன்னை மறந்து இன்பக்கடலில் மூழ்கிய இராவணன், அவள் தனக்கே சொந்த மாகிவிட்டாள் என்ற கற்பனையில் திளைத்துத் தன்னரசையே தானம் செய்யவும் துணிகிறான். எதிர்கால நினைவோட்டத் திலேயே இது அமைவதும் சுட்டத்தக்கது.

இராம - இராவணப் போரில் இலக்குவனால் இந்திர சித்து வீழ்த்தப்பட்டவுடன் அவனது உடல்மீது விழுந்து கதறும் அவனது தாய் மண்டோதரி,

**பஞ்சு எரி உற்றது என்ன அரக்கர் தம் பரவை எல்லாம்**
**வெஞ்சின மனிதர் கொல்ல, விளிந்ததே! மீண்டது இல்லை;**
**அஞ்சினேன் அஞ்சினேன்; அச்சீதை என்று அமுதால் செய்த**
**நஞ்சினால், இலங்கை வேந்தன் நாளை இத்தகையன்**
**அன்றோ (9238)**

என எதிர்காலம் இருள்மயமாகப் போகவிருப்பதைச் சுட்டி யழுவது பின்னதற்குச் சான்றாம். இராவணனின் எண்ணம் ஈடேறவில்லை; ஆனால் மண்டோதரியின் கணிப்புப் பொய்க்க வில்லை; உண்மை யாகிறது.

**எதிர்காலக் கணிப்பு முறை**

எதிர்காலச் செயல் பற்றிய கணிப்பினைத் **தனியாள்** மேற் கொள்ளுதல் அல்லது ஒருவருக்கு மேற்பட்ட **குழுவினர்** இணைந்து கணித்தல் என்பதாக இது அமைகிறது. இது ஒரு தனியாள் அல்லது ஒரு குடும்பம் அல்லது ஒரு இனம் குறித்த எதிர்காலத் திட்டமிடலாக அமையலாம்.

பரதன் தன் எதிர்காலத் திட்டம், செயல் குறித்துத் தானே முடிவெடுப்பதை,

**நல்நெறி என்னினும், நான் இந்நானில**
**மன் உயிர்ப் பொறை சுமந்து இருந்து வாழ்கிலேன்**
**அன்னவன் தனைக் கொணர்ந்து, அலங்கல் மாமுடி**
**தொல் நெறி முறைமையின் சூட்டிக் காண்டிரால் (2260)**

என்ற பாடல் காட்டுகிறது. தன்னிடம் அடைக்கலமாக வீடணன் வந்தபொழுது, அவன் தன் எதிரியிடமிருந்து வருதலாலும் எதிரியுடனான போருக்கு முனைந்திருக்கும் வேளையாதலாலும் இராமன் அவனை ஏற்றுக் கொள்வது பற்றித் தன் நண்பர் குழாத்துடன் இணைந்து ஆலோசித்தலை,

**அப்பொழுது, இராமனும் அருகில் நண்பரை,**
**இப்பொருள் கேட்ட நீர் இயம்புவீர் - இவன்**
**கைப்புகற்பாலனோ? கழியற்பாலனோ?**
**ஒப்புற நோக்கி, நும் உணர்வினால் என்றான் (6419)**

எனக் கம்பன் காட்டுகிறான்.

கூனி, கைகேயியின் மனதைத் திரித்து,

**இரு வரத்தினில், ஒன்றினால் அரசு கொண்டு, இராமன்**
**பெரு வனத்திடை ஏழ் - இரு பருவங்கள் பெயர்ந்து**
**திரிதரச் செய்தி, ஒன்றினால்; செழு நிலம் எல்லாம்**
**ஒரு வழிப்படும் உன் மகற்கு; உபாயம் ஈது (1488)**

என்று மொழிவது குடும்பச் சூழலில் எதிர்கால நலன் நோக்கிய முடிவினை ஒருவர் துணிதலைக் காட்டுகிறது. இராமன் சீதையின் திருமணம் பெரியோரால் உறுதி செய்யப்பட்டு அதற்குரிய நன்னாள் குறிக்கப்படல் பலர் கூடி முடிவெடுத்தலை உணர்த்துகிறது.

இராம - சுக்கிரீவரிடையே தோன்ற விருக்கும் நட்பு இராமனுக்கு மட்டுமின்றிச் சுக்கிரீவனுக்கும் - அதனால் அவன் குலத்துக்கும் பெரும் பயனுடையதாய் இருக்கும்; எனவே இருவருக்குமிடையில் நட்பு உருவாகச் சொல்லின் செல்வன் பெரிதும் விரும்பி அதற்காகச் செயல்படலை,

**யானும் என் குலனும் இவ்வுலகும் உய்ந்தமை எனா**
**மானவன் குணம் எலாம் நினையும் மா மதியினான்**

**மேலவன், திருமகற்கு உரைசெய்தான், 'விரை செய்தார்**
**வாலி என்ற அளவு இலா வலியினான் உயிர் தெறக்**
**காலன் வந்தனன்; இடர்க்கடல் கடந்தனம்' எனா**
**ஆலம் உண்டவனின் நின்று அருநடம் புரிகுவான்**
**(3786 - 3787)**

எனக் கம்பன் காட்டுவான். சுக்கிரீவன் துணையாக அவன் பின் வந்த வானர இன நலம் நோக்கி, ஒளிந்து வாழ்கின்ற அவலம் நீங்கி உரிமையுடன், வளமுடன் சிறப்புற வாழ வேண்டிய எதிர்காலத்திற்குத் துணையாக இராமனின் நட்பினை அனுமன் தானே முன்னின்று நிறைவேற்றுதல் இங்கு வெளிப்படுகிறது. அந்த நல்வாழ்விற்குத் தற்பொழுது பெரும் தடையாக நிற்கும் வாலியை வீழ்த்துவதையே இராம - சுக்கிரீவர் நட்பில் தம் பக்க பயனாக அனுமனின் பேரறிவு கணக்கிடுகிறது.

இனநலன் நோக்கிய எதிர்காலத் திட்டங்களைப் பலர் கூடி முடிவெடுத்தலே மிகுதியாகக் காணப்படுகிறது. இராமனை அரசனாக்க தசரதன் தன் அமைச்சரவையைக் கூட்டி அதன் ஒப்புதல் பெறல் *(1326 - 1360)*; இலங்கைப் போர்க்கு முன்னும் இடையிலும் இராமனும் இராவணனும் தத்தம் குழுவினருடன் அவ்வப்போது கலந்துரையாடியே மேல் நடவடிக்கையில் ஈடுபடல் *(6785 - 6834; 6974 - 6985)* எனப் பல காட்சிகளை இதற்குச் சான்றாக்கலாம். பல்லாயிரக் கணக்கானோரின் எதிர்காலம் என்பதால் தனி ஒருவரின் முடிவினைவிட பலர் கூடிப் பல கோணங்களிலும் விவாதித்து, திட்டத்தின் செயற்பாட்டால் விளையக் கூடிய பலாபலனை நுணுகி நோக்கி ஆய்ந்து முடிவெடுத்தலே வெற்றிக்கு வழிவகுக்கும்; பலரின் அறிவுத்திறனும் இதற்கு இன்றியமையாததாகும் என்பன இதனால் புலப்படுகின்றன.

### எதிர்காலக் கணிப்பிற்கு அடிப்படையாவன

எதிர்காலம் பற்றிய சிந்தனையை, திட்டமிடலை உருவாக்கும் காரணிகள் இங்குக் கருதப்படுகின்றன. அவை பலவாக அமைகின்றன.

1. **கடமையுணர்வு** எதிர்காலம் பற்றிச் சிந்தித்துச் செயல்பட வைக்கிறது. செங்கோல் ஆட்சி செலுத்தித் தன் மக்களை மிகச் சிறப்பாக வாழச் செய்த தயரதன், தனக்கு மகப்பேறு இன்மையால் இனி, தன் கீழ் வாழும் மக்கள் என் செய்வர் என்று கவல்வதை இதற்குக் காட்டாக்கலாம்.

**அறுபதினாயிரம் ஆண்டும் மாண்டு உற**
**உறுபகை ஒடுக்கி, இவ்உலகை ஓம்பினேன்**
**பிறிது ஒரு குறைஇலை, என் பின் வையகம்**
**மறுகுவது என்பது ஓர் மறுக்கம் உண்டு அரோ** (182)

2) **பிறர் நலம் காணும் பெற்றிமையுடனும்** இது நிகழும் என்பதை இராமன், சூரியன் மைந்தன் சுக்கிரீவனோடு தோழமை கொண்ட போது,

**உன்தனக்கு உரிய இன்ப துன்பங்கள் உள்ள முன் நாள்**
**சென்றன போக, மேல்வந்து உறுவன தீர்ப்பல்; அன்ன**
**நின்றன, எனக்கும் நிற்கும் நேர்' என மொழியும் நேரா,**
**மற்று, இனி உரைப்பது என்னே? வானிடை, மண்ணில் நின்னைச்**
**செற்றவர் என்னைச் செற்றார்; தீயரே எனினும் உன்னோடு**
**உற்றவர் எனக்கும் உற்றார்; உன் கிளை எனது; என் காதல்**
**சுற்றம், உன் சுற்றம், நீ என் இன் உயிர்த் துணைவன் என்றான்** (3811, 3812)

என்று கூறிய உறுதியில் காணலாம். தன் மனை (உருமை) பிரிந்து, நாடு துறந்து, உயிர் பொருட்டுத் தன் தமையன் வாலிக்குப் பயந்து அவன் வர இயலாத ருசியமுக பர்வதத்தில் மறைந்து வாழுகின்ற தன் நண்பனின் அவலநிலை இராமனை இவ்வாறு பேசச் செய்கிறது.

3) சிறுபான்மை **பொதுநல நோக்கும்** இதற்கு இடனாகிறது. உரோமபதன் ஆட்சிக் காலத்தில் தொடர்ந்து பல ஆண்டுகள் மழையின்மையால் பெருந்துயருற்று, மழை வருவதற்குரிய செயற்பாடுகள் பற்றி உன்னிய பொழுது, கலைக்கோட்டு முனியின் வருகை நாட்டில் மழையைக் கொணரும் என்று அறிந்தான். அம் முனிவனைத் தன் நாட்டிற்கு அழைப்

பது பற்றிய முடிவில் அவனவை மகளிர் முன்வந்த நிலை இதனை உணர்த்தும்.

**ஓத நெடுங்கடல் ஆடை உலகினில் வாழ்**
**மனிதர் விலங்கு எனவே உன்னும்**
**கோதுஇல் குணத்து அருந்தவனைக் கொணரும் வகை**
**யாவது? எனக் குணிக்கும் வேலை,**
**சோதி நுதல், கருநெடுங்கண், துவர் இதழ்வாய்**
**தரளநகை, துணைமென் கொங்கை**
**மாதர் எழுந்து; 'யாம் ஏகி, அருந்தவனைக்**
**கொணர்தும்' என வணக்கம் செய்தார் (216)**

எனும் பாடல் அக்காட்சியைத் தீட்டுகிறது.

*4) **கடந்தகால நிகழ்ச்சிகளும்** எதிர்காலத் திட்டமிடலுக்கு உரமாகின்றன. வனம் புகுந்த இராமனைச் சித்திரகூட மலைவாழ் முனிவர் அங்கேயே விதிக்கப்பட்ட பதினான்கு ஆண்டுகளையும் கழிக்க வேண்டினர். அதற்கு இராமன், தன் பின் கான் புகுந்த அயோத்தி மக்களைக் கருத்தில் கொண்டு, இங்கேயும் அவர்கள் வந்துவிடக்கூடும் என்று உணர்ந்து,*

**பூண்ட மாதவன், அம்மொழி விரும்பினன் புகல**
**'நீண்டது அன்று இது நிறை புனல் நாட்டுக்கு; நெடுநாள்**
**மாண்ட சிந்தைய! இவ்வழி வைகுவென் என்றால்**
**ஈண்ட யாவரும் நெருங்குவர் (2030)**

என மொழிவது சான்றாம்.

*5) **நிகழ்காலத்தில் அனுபவித்துக் கொண்டிருக்கும் துன்பமும்** எதிர்காலச் செயல்பாட்டிற்கு வழிகாட்டுகிறது என்பதை, இராமன் காடு செல வேண்டும் என்பதறிந்த இலக்குவன் பெருஞ்சீற்றமுற்று,*

**புவிப்பாவை பரம்கெட, போரில் வந்தோரை எல்லாம்**
**அவிப்பானும், அவித்து அவர் ஆக்கையை**
**அண்டம் முற்றக்**
**குவிப்பானும், எனக்கு ஒரு கோவினைக் கொற்றமௌலி**
**கவிப்பானும் நின்றேன்; இது காக்குநர் காமின் (1722)**

என்று முழங்குவதில் காணலாம்.

6) எதிரே **முன்நிற்கும் சிக்கலும்** எதிர்காலச் சிந்தனையைத் தூண்டக் காணலாம். இதனை எதிர்காலம் பற்றிய அச்சவுணர்வு எனவும் கொள்ளலாம். இராமனைப் பழிதீர்க்க எண்ணிய கூனி,

**தூண்டும் இன்னலும் வறுமையும் தொடர்தரத் துயரால்**
**ஈண்டு வந்து உனை இரந்தவர்க்கு, இருநிதி அவளை**
**வேண்டி ஈதியோ? வெகுள்தியோ? விம்மல் நோயால்**
**மாண்டு போதியா? மறுத்தியோ? எங்ஙனம் வாழ்தி**
**(1478)**

என்று கைகேயியின் மனத்தில் எதிர்காலம் பற்றிய அச்சத்தை ஏற்படுத்தித் தன் காரியத்தை முடித்துக் கொள்கிறாள். இதில் அவள் பெற்ற வெற்றியை,

**அனைய தன்மையள் ஆகிய கேகயன் அன்னம்,**
**வினை நிரம்பிய கூனியை விரும்பினள், நோக்கி**
எனை உவந்தனை; இனியை என் மகனுக்கும்
அனையான்
புனையும் நீள்முடி பெறும்படி புகலுதி (1485)

என்ற கைகேயியின் கூற்று புலப்படுத்தும்.

7) ஒருவரின் **எதிர்நோக்கும்**, அதனை நிறைவேற்றிக் கொள்ளும் இலக்கில் எதிர்காலச் செயற்பாட்டைக் கணித்து அதன்படி நிகழ்த்தும் என்பதனை இராவணன், சீதையைக் கவர்ந்து செல்ல முனைந்த பொழுது தீட்டிய திட்டத்தால் வலியுறுத்தலாம்.

**வெப்பு அழியாது என் நெஞ்சம் உலர்ந்தேன்,**
**விளிகின்றேன்**
**ஒப்பு இலர் என்றே, போர் செய்ய ஒல்லேன்; உடன்**
**வாழும்**
**துப்பு அழி செவ்வாய் வஞ்சியை வௌவ, துணை**
**கொண்டிட்டு**
**இப்பழி நின்னால் தீரிய வந்தேன் இவண்' என்றான்**
**(3242)**

**'என்ன மாமாயம் யான் மற்று இயற்றுவது? இயம்புக'**
**என்றான்**
**'பொன்னின் மான் ஆகிப்புக்கு, பொன்னை மால்**
**புணர்த்துக' என்ன**
**'அன்னது செய்வென்' என்னா மாரீசன் அமைந்து**
**போனான்**
**மின்னுவேல் அரக்கர் கோனும் வேறு ஒரு நெறியில்**
**போனான் (3275)**

எனக் கம்பன் காட்சிப்படுத்துவான்.

7) எதிர்காலத் திட்டமிடலுக்கு, செயற்பாட்டிற்கு, கணிப்பிற்கு அடிப்படையாகும் காரணிகளுள் **பட்டறிவிற்குப்** பெரும் பங்குண்டு; மற்றும் அதுவே முதன்மையும் பெறுகிறது. கும்பகருணன் தன் உயிரிழக்கும் தறுவாயில் இராவணனைக் குறித்து,

**அய்யன் வில் தொழிற்கு ஆயிரம் இராவணர்**
**அமைவிலர்; அந்தோ! யான்**
**கய்யும் கால்களும் இழந்தனென்; வேறு சில**
**உதவல் ஆம் துணை காணேன்**
**மய்யல் நோய் கொடு முடிந்தவன் நாள் என்று,**
**வரம்பு இன்றி வாழ்ந்தானுக்கு**
**உய்யுமாறு அரிது' என்று தன் உள்ளத்தின்**
**உணர்ந்து, ஒரு துயருற்றான் (7622)**

என்னும் கம்பன் கவி இதற்குச் சீரிய சான்று. இதனைப் பின் னாளில் மண்டோதரியும் (9238) மொழிதல் காணத்தக்கது.

8) தம்மோடு **தொடர்புடையோர் பண்புகளும்** எதிர் காலக் கணிப்பில் சிறப்புப் பெறுவதைக் கம்பனின் இராம காதைப் பலவிடங்களில் பேசுகிறது. கைகேயியிடம் தயரதன், 'நீ வரம் பெற்றாலும் கொள்ளான் நின் சேய் இவ்வரசு' (1520) என்றல்; இராமன் காடு செல்வான் என்பதறிந்த நகரமாந்தர் 'ஆளான் பரதன் அரசு' (1707); 'சீதை மணவாளன் தன்னோடும் தீக்கானம் போதும் அன்றேல் புகுதும் எரி' (1708) என்றல்; இராமனின் தூதாக இராவணனிடம் சென்று திரும்பிய அங்கதன், 'முற்ற ஓதி என்? மூர்க்கன் முடித்தலை அற்ற போது

அன்றி ஆசை அறான்' (7016) என இராவணனின் நிலையைக் கணித்துரைத்தல் என்பன குறித்தற்பாலன. இவை மெய்யாதலும் கதைப் போக்கில் காணப்படுகிறது.

இத்தகு கணிப்புகள் சிலவேளைகளில் பொய்த்துப் போதலை, இராமன் பற்றிய வாலியின் கருத்தான,

**நின்றபேர் உலகு எலாம் நெருக்கி நேரினும்**
**வென்றி வெஞ்சிலை அலால் பிறிது வேண்டுமோ?**
**தன் துணை ஒருவரும், தன்னில் வேறு இலான்**
**புன் தொழில் குரங்கொடு புணரும் நட்பனோ?**

**தம்பியர் அல்லது தனக்கு வேறு உயிர்**
**இம்பரின் இலது என எண்ணி ஏய்ந்தவன்,**
**எம்பியும் யானும் உற்று எதிர்ந்த போரினில்**
**அம்பு இடை தொடுக்குமோ, அருளின் ஆழியான்?**
**(3968, 3969)**

என்பன காட்டுகின்றன. அவன் கணிப்பிற்கு மாறாக இராமன், குரக்கினச் சுக்கிரீவனுடன் நட்புக் கொண்டு, அண்ணன் - தம்பிப் போரில் மறைந்திருந்து வாலியைக் கொன்றதே நடந்தது.

8) பொதுவாக மக்களிடையே காணும் **நம்பிக்கைகளும்** எதிர்காலக் கணிப்பை நல்குகின்றன. இந்நம்பிக்கைகளும் பலவற்றின்பால் அமைதல் அறியலாம். சிறையிருந்த செல்வி தன் துயர் ஆற்றும் திரிசடையிடம்,

**நஞ்சு அனையான், வனத்து இழைக்க நண்ணிய**
**வஞ்சனை நாள், வலம் துடித்த; வாய்மையால்**
**எஞ்சல; ஈண்டு தாம் இடம் துடிக்குமால்**
**அஞ்சல் என்று இரங்குவாய் அடுப்பது யாது என்றாள்.**

**என்றலும் திரிசடை 'இயைந்த சோபனம்!**
**நன்று இது! நன்று! எனா நயந்த சிந்தையாள்**
**'உன் துணைக் கணவனை உறுதல் உண்மையால்'**
**(5103, 5104)**

என்று நிமித்தம் வழி எதிர்கால நம்பிக்கை பெறுகிறாள். இத்துடன் அந்நம்பிக்கையைத் திரிசடை தான் கண்ட,

**வன்துணைக் கோள் அரி இரண்டு மாறு இலாக்**
**குன்றிடை உழுவை அம் குழுக் கொண்டு ஈண்டியே**

**வரம்பு இலா மதகரி உறையும் அவ்வனம்**
**நிரம்புற வளைத்தன; நெருக்கி நேர்ந்தன**
**வரம்பு அறு பிணம்படக் கொன்ற; மாறு இலாப்**
**புரம்புக இருந்தது ஓர் மயிலும் போயதால்**
**(5118, 5119)**

எனும் கனவாலும் வளர்ப்பதைப் பார்க்கலாம்.

உயர்ந்தோர், கீழோர்க்கு அவர் செய்கை காரணமாகத் தண்டனை போல் வழங்கும் **வசை (சாபம்) மொழியும்** எதிர் காலக் குறிப்பாக நம்பப்படுகிறது. தன் தோள் மீது ஏறிக் கொண்டால் நொடியில் அவளது தலைவன் இராமனிடம் சேர்ப்பதாகக் கூறும் அனுமனிடம் சீதை,

**தீண்டினான் எனின், இத்தனை சேண்பகல்**
**ஈண்டுமோ உயிர் மெய்யின்? 'இமைப்பின் முன்**
**மாண்டு தீர்வென்' என்றே நிலம் வன்கையால்**
**கீண்டு கொண்டு, எழுந்து ஏகினன் கீழ்மையான்**

**'மேவு சிந்தைஇல் மாதரை மெய் தொடின்**
**தேவு வன்தலை சிந்துக நீ' என**
**பூவில் வந்த புராதனனே புகல்**
**சாவம் உண்டு; எனது ஆர்உயிர் தந்ததால்**
**(5364, 5365)**

என்று உரைக்கும் மொழிகள் இதனை மெய்ப்பிக்கும். எதிர் காலச் செயற்பாட்டில் **சோதிடம்** வகிக்கும் முதன்மையிடத்தை,

**அரசவை விடுத்தபின், ஆணை மன்னவன்,**
**புரைதபு நாளொடு பொழுது நோக்குவான்**
**உரைதெரி கணிதரை ஒருங்கு கொண்டு, ஒரு**
**வரைபொரு மண்டபம் மருங்கு போயினான் (1398)**

எனும் தயரதன் செயல் உணர்த்தும். இராமனுக்கு முடி சூட்டக் கூடிய நன்னாளைத் தேர்தற்காகத் தயரதன் இங்குக் காலக் கணிதரை (சோதிடர்) நாடுகிறான்.

இவைதவிர, **சமய நம்பிக்கையின்** காரணமாகவும் எதிர்கால நலன் நோக்கிய செயற்பாடுகள் உண்டு என்பதையும் அறிய முடிகிறது. மகவில்லாக் குறையால் வருந்தும் அயோத்தி அரசன் தயரதனிடம், வசிட்டன்,

**'மாதிரம் பொருத திண்தோள் மன்ன! நீ வருந்தல்; ஏழ் - ஏழ்**
**பூதலம் முழுதும் தாங்கும் புதல்வரை அளிக்கும் வேள்வி**
**தீது அற முயலின் ஐய சிந்தை நோய் தீரும்' (208)**

என வேள்வி செய்யத் தூண்டுதலும், அதனை அவன் நிறை வேற்றலும் *(261 - 274)* எண்ணத்தக்கன.

மக்களின் வாழ்க்கைத்தாகம் இவற்றின் மீது பெரு நம் பிக்கை கொண்டு எதிர்காலத்தைத் தம் விருப்பிற்கேற்ப மாற்றிக் கொள்ளவும், வேண்டாதனவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வும் அல்லது எதிர் கொள்வதற்கான முன்னேற்பாடுகளில் இறங்க வும் தூண்டுகின்றன.

## எதிர்காலத் திட்டத்தின் செயல்முறை

தற்போதைய நிலையிலிருந்து தன்னை மேம்படுத்திக் கொள்ள அல்லது தனது வாழ்வியல் இலக்கை, நோக்கை நிறை வேற்றிக் கொள்ள வகுக்கப்படும் திட்டங்களை மானிடர் எப்படிச் செயல்படுத்துகின்றனர்; நடைமுறைக்குக் கொண்டுவருகின்றனர் என்பது இங்கு நினைக்கப்படுகிறது. இச்செயல்முறையும் நோக்குகளுக்கு ஏற்ப, சூழலுக்கு ஏற்ப, செயல்படுத்துபவருக்கு ஏற்ப எனப் பலவாகக் காணப்படுகிறது.

1. குறிப்பிட்ட ஒன்றைக் கண்டிப்பாக நிறைவேற்றியே தீருவேன் என்று **சூளுரைத்தல்,** அதாவது மன உறுதிப் பாட் டினை வெளிப்படுத்தி அல்லது உள்ளடக்கி அதன்படிச் செய லில் முனைதல் ஒருவழியாகிறது. சீதையைத் தேடிச் செல்லும் அனுமன் கடல் கடக்கும் பொழுது, சிறிது பொழுது தங்கி இளைப்பாறிச் செல வேண்டும் மைந்நாக மலையிடம் *(4795)* தன் பணியை வலியுறுத்தி மறுப்பது சிறந்த சான்றாகும்.

**வருந்தேன்; அது என்துணை வானவன் வைத்த காதல்;**
**அருந்தேன் இனி யாதும், என் ஆசை நிரப்பி அல்லால்**
**பெருந்தேன் பிழிசாலும் நின் அன்பு பிணித்த போதே**
**இருந்தேன் நுகர்ந்தேன்; இதன்மேல் இனி ஈவது**
**என்னோ? (4799)**

*என்பது அவ்வினிய கவி.*

*2) மிகப் பெரிய பணியாயின், முதற்கண் அதனோடு ஒத்த, இயைந்த சிறியதொன்றைச் செய்து முடித்துப்பின் தன் வெற்றியின் இலக்கை அணுகுதல் பிறிதொரு நெறியாகும். வாலியை வீழ்த்துவதற்குரிய பெருவலியை இராமன் பெற்றுள்ளான் என்பதை அறிதற்குரிய* **முன்னோட்டமாக** *முதற்கண் மராமரங்கள் வீழ்த்தப் படுவதைக் காட்டாக்கலாம்.*

**மாகம் நீண்டன குறுகிட நிமிர்ந்த மரங்கள்**
**ஆக ஐந்தினோடு இரண்டின் ஒன்று உருவ, நின் அம்பு**
**போகவே என்தன் மனத்து, இடர்ப்போம் (3865)**

*என்று சுக்கிரீவன் வேண்ட,*

**ஏழு மாமரம் உருவி, கீழ் உலகம் என்று இசைக்கும்**
**ஏழும் ஊடுபுக்கு உருவி, பின் உடன் அடுத்து இயன்ற**
**ஏழ் இலாமையால் மீண்டது அவ் இராகவன் பகழி**
**(3880)**

*என்று அந்நிகழ்ச்சி காட்சிப்படுத்தப்படுகிறது.*

*3) எதிர்கால முன்னேற்றத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்வுகள் நிகழ்த்தப்பட வேண்டியிருப்பின் அவ்வினைகள்* **வரிசைப் படுத்தப்பட்டு** *அதற்கேற்ப செயலாக்கப் படுகின்றன. அவற்றின் தேவை, நோக்கம், நிறைவேற்றுதற்குரிய வழி முறைகள், இடைப்படும் இடையூறு முதலானவை கருத்துட் கொளப்பட்டே இவ் வரிசைமுறை அமைகிறது. சானகியின் பிரிவால் பித்தேறிய இராமனிடம் முதலில் தேவியைச் சிறை மீட்போம் எனச் சுக்கிரீவன் கூற, அதனை இராமன் மறுத்து வாலிவதையை முதன்மைப்படுத்துவான் (3927). இராமன் கூற்றை ஏற்று அனுமன்,*

**கொடுந் தொழில் வாலியைக் கொன்று, கோமகன்**
**கடுங்கதிரோன் மகன் ஆக்கி, கைவளர்**
**நெடும்படை கூட்டினால் அன்றி, நேட அரிது,**
**அடும்படை அரக்கர்தம் இருக்கை - ஆணையாய்**
**(3929)**

*என அதற்குக் காரணகாரியம் காட்டுவது உணரத்தக்கது.*

*4) எடுத்துக் கொண்ட முயற்சியைச் சீரிதின் முடிக்கத்* **துணை தேவைப்**படும் *பொழுது அத்துணையும் அதற்குரிய ஆற்றலுடையதாகத் தேர்வு செய்யப்படும். இதனை, இராவண னுடன் போர் தொடங்குமுன் இராமன் போர் அறப்படி முதற் கண் தூதனுப்ப நினைத்து, அதற்குரியனாக அங்கதனைத் தேர்ந் தெடுத்தல் நோக்கு தற்குரியது.*

**மாருதி இன்னம் செல்லின், மற்று இவன் அன்றி வந்து**
**சாருநர் வலியோர் இல்லை என்பது சாரும் அன்றே**
**ஆர் இனி ஏகத்தக்கார்? அங்கதன் அமையும்; ஒன்னார்**
**வீரமே விளைப்பரேனும் தீது இன்றி மீள வல்லான்**
**(6982)**

*என இதனைக் கம்பன் தெளிவாகக் காட்டியுள்ளான்.*

*5) நோக்க நிறைவேற்றத்திற்குச் சரியான* **இடம், பொருள், ஏவலும் தெரிந்திருக்க** *வேண்டும். திட்டமிட்டுச் செயற்படுத்தப்படும் எதிர்காலக் கணிப்புகளில் இவை தவறாது இடம் பெறுகின்றன. இதனை, தன் வேள்வி காப்பதற்காக இராம இலக்குவரை அழைத்துச் சென்ற விசுவாமித்திரன் அப்பணி நிறைவேறியவுடன் மிதிலைக்கும் அழைத்துச் செல்வதில் காணலாம்.*

**இருந்த குலக் குமரர்தமை, இரு கண்ணின்**
**முகந்து அழகு பருக நோக்கி,**
**அருந்தவனை அடி வணங்கி, 'யாரை இவர்?'**
**உரைத்திடுமின் அடிகள்!' என்ன**
**விருந்தினர்கள்; நின்னுடைய வேள்வி**
**காணிய வந்தார்; வில்லும் காண்பார்**
**பெருந்தகைமைத் தயரதன் தன் புதல்வர் என**
**அவர் தகைமை பேசலுற்றான் (636)**

என இந்நிகழ்ச்சி விளக்கம் பெறுகிறது. தாடகை வதம் மிதலைச் செல்வியின் திருமணத்திற்கும் இடனாவது இங்கு உணர்த்தப் படுகிறது. இதனால் எதிர்வினைத் திறம்படக் கணித்து, முறைப் பட உரியனவற்றை நிகழ்த்தும் பொழுது உரிய இலக்கை அடைவதுடன் துணைப்பயன்களாகப் பிறவற்றையும் அடை தல் கூடும் என்பது வெளிப்படுகிறது.

## விளைவுகளும் காரணங்களும்

எதிர்காலத் தேவையை நன்கு சிந்தித்து அதன் சூழலைத் திறம்படக் கணித்துத் திட்டமிட்டதனை மேற்கொண்டபின் அதன் முடிவு எப்படி அமைகிறது; அம்முடிவான விளைவின் காரணங்கள் யாவை என்பனவும் சிந்திக்கப்பட வேண்டியன வாகும். அவை தொடரும் எதிர்காலத்திற்கு வழிகாட்டுதலாக வும், தவறுகளிலிருந்து மீளுதலாகவும் அமையும். எனவே அவையும் இங்கே எண்ணப்பட்டுள்ளன.

வெற்றி அல்லது தோல்வி என்பதே உடனடி விளைவாக அமைகிறது. வெற்றிக்குரிய காரணங்களாகக் கம்பன் காட்டுவன தொடர்கின்றன.

***1. சரியான கணிப்பு:*** கருதுகோள்கள், ஊகங்கள் இவற்றுட னும் தான் எதிர்காலம் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. எனவே மிகத் தெளிவாக, சிறப்பாகக் கணிக்கும் ஆற்றல் இன்றியமையாத தாகிறது. இதனால் சரியான கணிப்பு நிகழ்ந்து, அதற்கேற்ப செயற் பட்டு வெற்றிக்கனி பறிக்கப்படுகிறது. இராகவன் தேவியைத் தேடிவந்த அனுமன் முதலாய வானர வீரரிடம், அவளது இருப் பிடம் அறிந்த சம்பாதி,

**எல்லீரும் சேறல் என்பது எளிது அன்று அவ்இலங்கை மூதூர்;**
**வல்லீரேல் ஒருவர் ஏகி, மறைந்து அவண் ஒழுகி, வாய்மை**
**சொல்லீரே துயரை நீக்கித் தோகையைத் தெருட்டி, மீள்திர்;**
**அல்லீரேல் என்சொல்தேறி, உணர்த்துமின் அழகற்கு அம்மா!** (4709)

என மொழிதலும், 'பொய் உரை செய்யான் புள் அரசு' *(4711)* என்றவர் தேறி இலங்கை செல்லக்கூடிய ஒருவனாக அனுமனைத் தேர்ந்தனுப்பலும் எண்ணற்பாலன.

**நல்லவும் ஒன்றோ, தீயவும் நாடி, நவைதீரச்**
**சொல்லவும் வல்லீர்; காரியம் நீரே துணிவுற்றீர்;**
**வெல்லவும் வல்லீர்; 'மீளவும் வல்லீர்; மிடல் உண்டே**
**கொல்லவும் வல்லீர்; தோள் வலி என்றும் குறையாதீர்**
**(4721)**

என அஞ்சனையின் புதல்வன் குறித்த அவர்தம் கருத்துரை முற்றும் சரியாகி நிற்றலைச் சுந்தரகாண்டம் விரிவாகத் தருகிறது. இராமாயணத்துள் சீதையின் இருப்பிடம் அறிதல் என்பது மிகப் பெரும் அருஞ்செயல் என்பது இவண் கருதத் தக்கது.

***2) விடாமுயற்சி:*** கணிப்பும் நடைமுறைப்படுத்தும் திட்டமும் குறைவற அமைந்தால் மட்டும் போதாது. நோக்க நிறை வேற்றத்திற்கான விடா முயற்சியும் வெற்றிக்கு மிகத் தேவையான தொன்று என்பதைக் கூனியின் செயற்பாட்டால் உணர்த்தலாம். இராமனைப் பழிவாங்கும் தனது முயற்சி வெற்றிபெற, முதலில் அவள் கைகேயியைத் தன்னிச்சைப் படிச் செயற்படுத்துதல் தேவை யாயிற்று. முதலில் அவள் அதில் தோல்வி கண்டாலும் *(1459 - 70)* விடாது முயன்று தன் சொல்வன்மையால் தன் கையகப்படுத்தித் தன் நோக்கை நிறைவேற்றிக் கொண்டாள். இதனை,

**உரைத்த கூனியை உவந்தனள், உயிர் உறத் தழுவி,**
**நிரைத்த மாமணி ஆரமும் நிதியமும் நீட்டி,**
**இரைத்த வேலை சூழ் உலகம் என் ஒரு மகற்கு**
**ஈந்தாய்**
**தரைக்கு நாயகன் தாய் இனி நீ எனத் தணியா**

**நன்று சொல்லினை; நம்பியை நளிர்முடி சூட்டல்**
**துன்று கானத்தில் இராமனைத் துரத்தல் இவ்விரண்டும்**
**அன்றது ஆம் எனில் அரசன் முன் ஆர் உயிர் துறந்து**
**பொன்றி நீங்குதல் புரிவென் யான்; போதி நீ**
**(1489, 1490)**

என்னும் கைகேயி மொழி தெளிவாக்குகிறது.

***3) செயல்திறன்:*** கணிப்பின் வெற்றிக்கு இடனாகும் காரணிகளுள் இதுவும் முதன்மையான தாகும். சரியான கணிப் பும், விடாமுயற்சியும் முறையான செயல் திறன் இல்லா விடின் வெற்றிகாணல் அரிது. எனவே இதன் தேவையும் கருதப்பட வேண்டியதாகும். இதற்கு மிகச் சிறந்த சான்றாக இராமகாவியத்துள் அனுமன் அமைகின்றான். காப்பியத் தலை வன், திருமாலின் திருவவதாரமான இராமனே,

**தீவினை யாம் பல செய்ய, தீர்வு இலா**
**வீவினை முறைமுறை விளைவ, மெய்ம்மையாய்!**
**நீ அவை துடைத்து நின்று அழிக்க நேர்ந்ததால்;**
**ஆயினும் அன்பினாய் யாம் செய் மாதவம்**
**(10264)**

**மாருதி தன்னை ஐயன் மகிழ்ந்து, இனிது அருளின் நோக்கி**
**ஆர் உதவிடுதற்கு ஒத்தார், நீ அலால்? அன்று செய்த**
**பேர் உதவிக்கு யான் செய் செயல் பிறிது இல்லை; பைம்பூண்**
**போர் உதவிய திண் தோளாய்! பொருந்துறப் புல்லுக!**
**(10351)**

என்று மனம் நெகிழ்ந்து நிற்றல் சான்று.

தோல்விக்கான காரணங்களில் முதன்மையாகக் குறிக்கத் தக்கது ***(1) மிகை நம்பிக்கை*** ஆகும். தன்னம்பிக்கை எல்லை கடக்கும் பொழுது அது மிகை நம்பிக்கையாகிச் செயல்திறனைக் குறைத்துத் தோல்வியைத் தழுவுகிறது.

**ஆற்றல் இல் அமரரும் அவுணர் யாவரும்**
**தோற்றனர்; எனை யவர் கொல்லற் பாலரோ?**
**கூற்றும் என்பெயர் சொலக் குலையும்; ஆர் இனி**
**மாற்றவர்க்கு ஆகி வந்து எதிரும் மாண்பினார்?**

**பேதையர் எதிர்குவர் எனினும் பெற்றுடை**
**ஊதிய வரங்களும் உரமும் உள்ளதில்**
**பாதியும் என்னதால் பகைப்பது எங்ஙனம்?**
**நீ துயர் ஒழிக!** **(3962, 63)**

எனும் வாலியின் மிகை நம்பிக்கை, தனக்கு வேண்டிய பாது காப்பைப் புறக்கணிக்கச் செய்து எதிர்காலத்தையே இல்லாத காலமாக்கிக் கொண்டது தகுந்த காட்டாகும்.

**2. தவறான கருதுகோள்:** எதிர்காலம் அல்லது செய்ய விருக்கும் செயல் பற்றிய கணிப்பில் ஏதேனும் ஒரு பகுதியில் தவறு நேர்ந்தாலும் கூடத் தோல்வி உறுதியாகிறது. திட்ட மிட்டு முன்பெற்ற வரத்தைப் பயன் கொண்டு இராமன் காடேகவும், பரதன் முடிசூடவும் வழிவகுத்த கைகேயியால் முற்றிலுமான வெற்றிபெற முடியாமைக்கு, அவள் பரதன் பற்றிச் சிந்திக்கத் தவறியது அல்லது தவறாகக் கணித்ததே யாகும். அவளது கனவு,

பாதுகம் தலைக்கொடு, பரதன் பைம்புனல்
மோது கங்கையின் கரைகடந்து முந்தினான்
போது உகும் கடிபொழில் அயோத்தி புக்கிலன்;
ஓது கங்குலில் நெடிது உறக்கம் நீங்கினான்

நந்தியம் பதியிடை நாதன் பாதுகம்
செந்தனிக் கோல் முறை செலுத்த, சிந்தையான்
இந்திரியங்களை அவித்து இருத்தல் மேயினான்
அந்தியும் பகலும் நீர் அறாத கண்ணினான்
(2513, 2514)

எனச் சிதறுண்டதை அனைவரும் அறிவர்.

**3. சூழல்:** கணிப்பும், திட்டமும் எல்லாம் சரிவரப் பொருந்தினும் செயல் நிறைவேற்றத்திற்குரிய சூழல் ஏற்புடைய தாக அமையா விடினும் தோல்வியே சொந்தமாகும். 'ஞாலம் கருதினும் கைகூடும் காலம் கருதி இடத்தாற் செயின்' என வள்ளுவரும் (484) இதனை வலியுறுத்தியுள்ளார். மாயப் போரி னால் இந்திரசித்து இலக்குவனை மயக்குவித்துப் பிரமாத்திரத் தால் வீழ்த்தியதை இங்கு நினைவு கூரலாம். (8602 - 8610).

'வெங்கண் வானரக் குழுவொடும், இளையவன் விளிந்தான்
இங்கு வந்திலன், இராமன் இப்போது' என இகழ்ந்தான்
சங்கம் ஊதினன்; தாதையை வல்லையில் சார்ந்தான்;
பொங்கு போரிடைப் புகுந்துள பொருள் எலாம் புகன்றான் (8625)

என இந்திரசித்தின் மாய வெற்றி இயம்பப்பட்டுள்ளது. இதில் இலக்குவன் பெற்ற தோல்வி தற்காலிகமானதாயினும், இது வும் ஓர்வகையில் தோல்விதான் என்பதனை மறுத்தற்கில்லை. இதற்குச் சூழலே காரணம் என்பதும் ஏற்கற்பாலதே. மாரீச னின் மறைவும், இலக்குவன் சீதையைப் பிரிதலும் இதன் பாற்பட்ட பிற நிகழ்ச்சிகளாம்.

வெற்றி, தோல்வி என்பன மட்டுமின்றிப் பிறசிலத் துணைக் கூறுகளும் விளைவுகளாய் விளைதல் உண்டு. அவை யாவன:

1. தோல்வியின் அழுத்தம் **ஏக்கமாய்** வடிவெடுத்தல் கூடும். இராவணனைத் தனியே சென்று வீழ்த்தும் முயற்சி யில் தோல்வி கண்ட சுக்கிரீவன்,

**காட்டிலே கழுகின் வேந்தன் செய்தன காட்ட மாட்டேன்**
**நாட்டிலே குகனார் செய்த நன்மையை நயக்க**
**மாட்டேன்**
**கேட்டிலேன் இன்று கண்டும், கிளிமொழி மாதராளை**
**மீட்டிலேன்; தலைகள் பத்தும் கொணர்ந்திலேன்**
**வெறுங்கை வந்தேன் (6933)**

எனப் புலம்புவதைச் சான்றாக்கலாம்.

2. வாழ்வியலின் உண்மையை, மெய்ம்மையை, தத்து வத்தை உணரும் **பட்டறிவு** கிடைக்கிறது. கும்பகர்ணன் தன்னை இராமனிடம் அழைத்துச் செல்ல வந்த வீபீடணனிடம்,

**ஆகுவது ஆகும் காலத்து; அழிவதும் அழிந்து சிந்திப்**
**போகுவது; அயலே நின்று போற்றினும் போதல்**
**திண்ணம்**
**சேகு அறத் தெளிந்தோர் நின்னில் யார் உளர்**
**(7437)**

என வாழ்க்கைத் தத்துவம் உணர்த்தித் தன்னால் வர இயலாமை யைக் காட்டுகிறான்.

3. **முன்னோர்களின் மொழிகளை நினைவு கொள்ளு தலும்** அமைகிறது. இலக்குவன் முதலானோர் இந்திரசித்தின் நாகபாசத்தால் கட்டுண்ட போது இராமன் வருத்தமுற்ற காலை யில் விபீடணன் அவனிடம்,

**பின்னரும் எழுந்து பேர்த்தும் வணங்கி, எம்பெரும! யாரும்**
**இன் உயிர் துறந்தார் இல்லை; இறுக்கிய பாசம் இற்றால்**
**புல்நுனைப் பகழிக்கு ஓயும் தரத்தரோ புலம்பி உள்ளம்**
**இன்னலுற்று அயரல், வெல்லாது அறத்தினை பாவம்**
**(8234)**

என்று பழமொழி கூறி ஆற்றுப்படுத்தலைக் காட்டாக்கலாம்.

4. கனவு, நிமித்தம், சோதிடம் முதலானவற்றில் **நம்பிக்கை** வைத்தல் போல்வனவும் துணைவிளைவுகளே எனவும் கருதலாம்.

## இன்றைய நிகழ்வில் எதிர்காலத்தின் தாக்கம்

ஒவ்வொருவரும் தம் வாழ்வில் அன்றாடம் மேற்கொளும் பொதுப்பணிகள் தவிர அவ்வப்போது சில தனிச் செயல்களைப் புரிவதிலும் ஈடுபடுகின்றனர். அவை எதிர்கால நோக்கு அடிப்படையில் நிற்றல் கண்கூடு. அவ்வாறு நிகழ்கின்ற செயல்களுக்கு எதிர்காலம் எத்தகைய பின்னணியை வழங்குகிறது என்பதனை இங்கு நோக்கலாம்.

1. **எதிர்காலம் பற்றிய அச்சம்** குறிப்பிட்ட செயலைச் செய்யத் தூண்டுகிறது. அசோக வனத்தில் தன் உயிரை மாய்த்துக் கொள்ள முனைந்த சீதைக்குத் தனது எதிர்காலம் பற்றிய அச்சம் எழுந்ததே காரணம் என்பது அவளது வாய்மொழியால்,

**அற்புதன், அரக்கர்தம் வருக்கம் ஆசுஅற**
**வில்பணி கொண்டு, அரும்சிறையின் மீட்ட நாள்**
**'இல்புகத் தக்கலை' என்னில், யானுடைக்**
**கற்பினை, எப்பரிசு இழைத்துக் காட்டுகேன் (5247)**

எனத் தெளிவாக உணர்த்தப்படுகிறது.

2. **தன்வலம்** காரணமாதலை, சூர்ப்பணகை

**விடியல் காண்டலின், ஈண்டு தன் உயிர் கண்ட வெய்யாள்**
**படிஇலாள் மருங்கு உள்ள அளவு எனை அவன் பாரான்**
**கடிதின் ஓடினென் எடுத்து, ஒல்லைக் கரந்து, அவள் காதல்**
**வடிவினானுடன் வாழ்வதே மதி (2821)**

எனத் திட்டமிட்டுச் சீதையைத் தூக்கிச் செல்ல முயன்றதில் அறியலாம். இத்தன்மை மிகுதியான செயற்பாடுகளுக்குக் காரணமாதல் உள்ளங்கை நெல்லிக்கனி. இது பிறரைப் பாதிக்கும் போது விரும்பத் தகாததாகிறது.

3. செயலாற்றலுக்கான பின்புலத் தூண்டுதல்களுள் **புகழ் வேட்கையும்** ஒன்றாகும். இதனை வீடணனின் அடைக்கலம் தெளி வாக்கும்.

**விளைவினை அறியும் மேன்மை வீடணன், 'என்றும் வீயா**
**அளவு அறு பெருமைச் செல்வம் அளித்தனை ஆயின் ஐய!**
**களவு இயல் அரக்கன் பின்னே தோன்றிய கடமை தீர**
**இளையவற் கவித்த மோலி என்னையும் கவித்தி' என்றான் (6506)**

எனக் கம்பன் இதனைப் பாடுவான்.

4. புகழ்வேட்கை போன்றே **பழிச் சொல்லும்** பிறிதொரு தூண்டலாவதை, தயரதனில்

**'இறந்திலன் செருக்களத்து இராமன் தாதை; தான்**
**அறம் தலை நிரம்ப, மூப்பு அடைந்த பின்னரும்**
**துறந்திலன், என்பது ஓர் சொல் உண்டானபின்**
**பிறந்திலென் என்பதின் பிறிது உண்டாகுமோ? (1335)**

எனும் கூற்றால் அறியலாம். அயோத்தி மக்களின் வசைச் சொல்லுக்கும் அஞ்சித்தான் தயரதன் இராமனுக்கு முடி சூட்டும் முடிவினை மேற்கொண்டு அதற்கான முயற்சியில் முனைகிறான்.

5. இவை தவிர, **வாழ்க்கை இலக்கும்** நிகழ் செயலை உறுதிப்படுத்துகிறது. ஒவ்வொருவருடைய வாழ்விலும் சிறியதோ, பெரியதோ, பிறருக்குப் பயனளிப்பதோ, அன்றதோ; சரியோ, தவறோ; ஏதோ ஒருவகையில் ஒரு இலக்கினை முன்னிட்டே வினைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இலக்குவனின் வாழ்க்கை இலக்கு,

நீர் உள எனின் உள, மீனும் நீலமும்
பார் உள எனின் உள, யாவும்; பார்ப்புறின்
**நார் உள தனு உளாய்! நானும் சீதையும்**
**ஆர் உளர் எனின் உளம்? அருளுவாய்!** (1757)

என இராமனாகவே நிற்றலால் தான் அவன் வினைகள் அதனை ஒட்டியே அமையக் காண்கிறோம். அவன் தன் மனை துறந்து இராமன் பின் வனம் போனதற்கும் இதுவே காரணமாம்.

6. ஒவ்வொருவர் வாழ்விலும் தவறாது இடம் பெறும் காரணிகளுள் **வாழ்த்தும்** ஒன்றாகும். பெரியோர் சிறியோரை வாழ்த்துவதால் அவர்தம் எதிர்காலம், நன்கு ஒளிரும்; எண்ணியன கைகூடும் என்ற நம்பிக்கை பொதுவானது. தூதுவந்து தன் உயிரைக் காத்த அனுமனை, சீதை,

**பாழிய பணைத்தோள் வீர! துணை இலேன்** பரிவு தீர்த்த
**வாழிய வள்ளலே!** யான் மறு இலா மனத்தேன்
என்னின்
ஊழி ஓர் பகலாய் ஓதும் யாண்டு எலாம், உலகம்
ஏழும்
ஏழும் வீவுற்ற ஞான்றும் இன்று என இருத்தி
என்றாள் (5299)

என வாழ்த்துதலைச் சுட்டலாம்.

7. இது போன்றே பெரியோரிடம் சிறியோர் தம் எதிர்கால நலன் நோக்கி விண்ணப்பித்தலும் உண்டு. **அவ்வேண்டல்களும்** இதனுள் கருதத்தக்கனவே. இதனை வாலி, இராமனிடம்

ஓவிய உருவ! நாயேன் உளது ஒன்று பெறுவது
உன்பால்;
பூ இயல் நறவம் மாந்தி, புந்தி வேறு உற்ற போழ்தில்
தீவினை இயற்றுமேனும் எம்பிமேல் சீறி, என்மேல்
ஏவிய பகழி என்னும் கூற்றினை ஏவல் என்றான்.

இன்னம் ஒன்று இரப்பது உண்டால்; எம்பியை
உம்பிமார்கள்
தன் முனைக் கொல்வித்தான் என்று இகழ்வரேல்,
தடுத்தி தக்கோய்!
முன்முனே மொழிந்தாய் அன்றே, இவன் குறை
முடிப்பது ஐயா!
பின் இவன் வினையின் செய்கை அதனையும்
பிழைக்கல் ஆமோ? (4068 - 69)

என வேண்டுதல் கொண்டு வலியுறுத்தலாம். இங்ஙனம் எதிர் காலம் என்பது இன்றைய நிகழ்காலத்துள்ளேயே நிகழ் செயல்களிலேயே ஒவ்வொருவர் வாழ்விலும் ஒன்றி நிற்கக் காண்கிறோம்.

**எதிர்காலவியல் கோட்பாடுகள்**

*நிலையாமை எதிர்காலச் சிந்தனைக்கு எதிரான கருத்தினைத் தோற்றுவிப்பினும் மனிதர் வாழ்வில் எதிர்காலச் சிந்தனை என்பது நிலைத்த, சிறப்பான இடத்தைப் பிடித்துள்ளது.*

*நிகழ்காலத்தில் வாழ்ந்தாலும், எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டே மனிதன் செயல்படுகிறான்.*

*இறந்தகால ஏமாற்றம், நிகழ்காலத் துன்பம் எதிர் காலத்தை நம்பிக்கையுடன் வரவேற்கின்றன அல்லது நம்பிக்கையின்மையுடன் எதிர் கொள்கின்றன.*

*வாழ்வியலில் எதிர்கால நம்பிக்கைகள் இப்பிறவி தாண்டியும் அமைகின்றன.*

*எதிர்காலத்தின் சரியான கணிப்பும், முறையான திட்டமிடலும், சூழலும் சரியாக அமையும் பொழுது எதிர்பார்த்த வெற்றி கிடைச்கின்றது.*

*மனிதர் வாழ்வில் எதிர்காலச் சிந்தனை என்பது சமயம், பருவம், பால், சூழல் முதலானவற்றைக் கடந்த நிலையில் ஆழ்கடல் நீரோட்டம் போன்று அமைந்திருக்கக் காண்கிறோம்.*

# எதிர்காலவியல் இலக்கியம்

எதிர்காலவியல் இலக்கியமும் பிறவகை இலக்கியங்களும்
எதிர்காலவியல் இலக்கியங்கள்
இலக்கிய இயல்பு
இலக்கிய நோக்கம்
இலக்கியப் பயன்

# எதிர்காலவியல் இலக்கியம்

காலச் சூழலுக்கு ஏற்ப புதிய புதிய பொருண்மைகள் இலக்கியத்துள் இடங்கொள்கின்றன. அவ்வகையில் இன்று எதிர் காலவியல் படைப்பிலக்கியத்துள்ளும் தடம் பதித்துள்ளது. தூது, உலா, பிள்ளைத்தமிழ் என்பன போன்று உரை நடையிலக்கியத்துள் பொருணிலை அடிப்படையில் காணும் தனிவகையாக 'எதிர்காலவியல் இலக்கியம்' அமைகின்றது. அதன் அறிமுகமாக இக்கட்டுரை அமைகிறது.

## எதிர்காலவியல் இலக்கியமும் பிறவகை இலக்கியங்களும்

படைப்பாளர் தாம் கண்ட, கேட்ட, அறிந்த, நடந்த, நடக்காத, நிகழ்வுகளைக் கொண்டு தம் புலமையால், கற்பனை வளத்தால் புத்தாக்கங்களைத் தருகின்றனர் என்ற நிலையில் எல்லாவகை யிலக்கியங்களும் ஒன்றுபடுகின்றன.

கருத்துகளைப் பயன்படுத்த இவர் கையாளும் மொழி நடை குறிப்பிட்டுச் சுட்டப்பட வேண்டியதாகும். அறிவியல், தொழில்நுட்பப் புரட்சியே எதிர்காலவியலுக்கு அடிப்படை யாகக் கருதப்படுவதால் அறிவியற் சொற்களும், கலைச் சொற்களும் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. அவை பற்றிய அறிவு இருந்தால் தான் இப்படைப்புகளை முழுமை யாகச் சுவைக்க முடியும். பொழுதுபோக்குப் புனைகதை களை எழுதப்படிக்கத் தெரிந்த கதை ஆர்வலர் அனைவரும் படிப்பது போன்று இதனைப் படிக்க இயலுமா என்பது ஐயமே. ரோலர் கோஸ்டர், ஸப்ஸானிக் 75, பாலிவினைல் (கி.பி. 2084; 1-1-3) போன்று பல சொற்கள் இடையிடுவதைச் சான்றாக்கலாம்.

படைப்பாளர் சுஜாதா, 'விஞ்ஞானக் கதை' என்பது வேறு ஜாதி. இந்தக் கதைகளை உணர்ந்து கொள்ளக் கொஞ்சம் சிந்தனையை நீங்கள் கூர்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். மற்றொரு காலத்தில் மற்றொரு சூழ்நிலையில் கதைகள் நடைபெற்றாலும் நாம் அடையாளம் கண்டுகொள்ளக் கூடிய உணர்ச்சிகளையும் அவை சொல்லும், மெலிதான சித்தாந்த

தத்துவப் பின்னணிகளும் தென்படும் எனத் தன் தேவன் வருகை, சிறுகதைத் தொகுதி முன்னுரையில் மொழிந்திருப்பதும் சுட்டத்தக்கது.

மற்றும் சுஜாதா, ஆய்வாளருக்கு அளித்த பதிலில், 'இவ்வகைப் படைப்புகளுக்கு அடிப்படை நிகழ்கால அறிவியல். மற்ற இயல்களில் செய்யும் ஆராய்ச்சிகளின் எதிர்காலச் சாத்தியக் கூறுகளை எண்ணிப்பார்த்து அது எந்தத் திசையில் செல்லலாம் என்று சிந்திக்கும் 'எதிர் நீட்டலில்' (extrapolation) உள்ள ஆர்வமும் சவாலும் ஆகும். இந்தக் காரியம் அத்தனை எளிதல்ல' என்று இவ்வகைப் படைப்புகளைப் படைப்பதற்கும் தனித்திறமை தேவை என்பதை வலியுறுத்தியுள்ளார். உயர் அறிவியல் அறிவு மிக இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

இங்கு அறிவியல் கதைகள் அனைத்தும் எதிர்காலவியல் இலக்கியமாகிவிட முடியாது என்ற உண்மையையும் குறித்தல் தேவையாகும். அறிவியல் கதைகள் அண்மை அல்லது வெகுதொலைவில் இருக்கும் எதிர்காலம் பற்றிய சிந்தனையை உள்ளடக்கும் போதுதான் அவை எதிர்காலவியல் இலக்கியமாகின்றன. எதிர்காலத்தையடிப்படையாக்கிப் படைக்கப்படும் எவ்வகையிலக்கியமும் இதன்பாற்படும் என்பதும் நவிலற்பாலது.

உலா, மடல், பள்ளு, பிள்ளைத்தமிழ் என்பன போன்று 'இவ்வகைக்குரிய பாடுபொருள் இது மட்டுந்தான்' என்ற வரையறை எதிர்காலவியல் இலக்கியத்திற்கு இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. எதனையும் பேசலாம்; அந்த எதுவும் அறிவியலோடும் தொழில்நுட்பங்களோடும் இணைத்துரைக்கப்பட வேண்டும் என்பது மட்டும் கண்டிப்பாகிறது.

காப்பியம், புராண இலக்கியங்களில் காண்கின்ற மீயியற்கை நிகழ்வுகள் போன்று இங்கும் படைப்பாளர் தம் மிகைக் கற்பனைகளை நடக்கக்கூடிய நிகழ்வுகள் எனப் படைக்கின்றனர். அதில் தேவர்களும் மிகையாற்றல் கொண்ட மானிடரும் வியத்தகு சாதனைகளைச் செய்ய எதிர்காலவியல் இலக்கியங்களில் அவை, இயல்பு நிலையிலேயே மானிடரால்

நிகழ்த்தப் படுகின்றன. இதற்கு அறிவியலின் பன்முக வளர்ச்சி காரணமாக்கப்படுகிறது. எனவேதான் நிகழக்கூடும் எனும் வாய்ப்புக் கூறினைக் கற்பார் பெறமுடிகிறது. சான்றாகச் சந்திர னில் விண்வெளி ஆய்வுக் கூடத்தில் மானிடர் வாழுதல், பிற கோள்களோடு தொடர்பு கொள்ளுதல், சூரிய ஒளியில் பெற்ற மின்சாரத்தால் இரவைப் பகலாக்குதல் (கி.பி. 2084) போன்றவற்றைச் சுட்டலாம்.

''அறிவியல் சாதனைகளைச் செய்வதற்கு, (இத்தகு) அறிவியல் கதைகள் ஒரு தூண்டுகோலாக இருப்பதுடன் மனித சமுதாயத்தில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அல்லது ஏற்பட வாய்ப்பளிக்கக் கூடிய மாற்றங்களை ஒரு நிழலாக நமக்குக் காட்டியது (காட்டுவது) மிகவும் பயனுள்ளதாகும்'' என்று எதிர்காலவியலறிஞர் ஆ. யோகமூர்த்தி கூறுவது பிற இலக் கியங்களினின்றும் இது தனித்து நிற்பதற்கான மற்றொரு கருத்தை அறிவித்தலாகும். இதனை அவர் தம் 'சுற்றுச்சூழல் எதிர்காலச் சிந்தனை' எனும் நூலில் மிக விரிவாகப் (பக். 80 - 87) பல சான்றுகள் கொண்டு நிறுவியுள்ளார்.

மேனாட்டார் அறிவியல் சிந்தனைகள் இவ்வகை யிலக்கியங் களுக்கு அடிப்படையாதலும் உண்டு.[1]

## எதிர்காலவியல் இலக்கியங்கள்

எதிர்காலவியல் அடிப்படையில் தமிழில் தோன்றி யுள்ள இலக்கியங்களில் எது முதலாவது எனத் தெளிவாகக் குறிக்க இயல வில்லை. அறிந்தவரையில் வல்லிக்கண்ணன், 1942 (செப்) நவசக்தி இதழில் படைத்த 'கி.பி. 2001' ஐ முத லாவதாகக் கொள்ளலாம். தொடர்ந்து சுஜாதா பல சிறுகதை

---

1. ''நான் படித்த நாவல்களின் பாதிப்பு சொர்க்கத் தீவில் இல்லவே இல்லை என்று சூடம் அணைத்துச் சத்தியம் பண்ணுவதற்கு நான் தயா ராக இல்லை. நிச்சயம் இருக்கிறது. ஹக்ஸ்லியின் போக்கனாவ்ஸ்கி முறையைப்பற்றி ஒரு அத்தியாயத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். லெவின் ஒரு வயது எல்லைக்குப்பின் மக்கள் கொல்லப்படுவதைத் தன் புத்தகத் தில் சொல்லியிருக்கிறார்.

சுஜாதா; சொர்க்கத்தீவு; முன்னுரை ப. 7.

களும் (தேவன் வருகை, கம்ப்யூட்டரே கதை சொல்லு) புதினங்களும் (என் இனிய இயந்திரா, மீண்டும் ஜீனோ, வாசனை, மஞ்சள் ரத்தம்) படைத்து வளர்த்து வருகிறார். கஸ்தூரி ரங்கன் தினமணிக்கதிரில் எழுதிய *'கி.பி. 2084'* தொடர்கதையும் இதன் பாற்படுவதே. அவ்வப்போது வார இதழில் ஆர்னிகா நாசர் இவ்வகைச் சிறுகதை படைத்து தனக்கென ஓரிடத்தைத் தக்க வைத்துள்ளார். (பில்லியனில் ஒருவன், ஆனந்த விகடன் *20.11.94*) மற்றும் கிருஷ்ணா டாவின்ஸ்கி .... என மிகச்சிலரே இதில் ஈடுபாடு காட்டியுள்ளனர்.

இவ்வகையிலக்கியம் தமிழில் மேலும் சிறப்புறுவதற்கு, நல்ல வாய்ப்பிருப்பதை ஆனந்த விகடனில் வெளிவந்த சிம்புவின் சிரிப்புத் துணுக்குகள் காட்டுகின்றன. அடுத்த நூற்றாண்டில் விமானப் பயணிகள் எண்ணிக்கை உயரும் என்ற செய்தியை எதிர்காலக் கணிப்பில் இவர் வான் வெளியில் விமானங்களின் எண்ணிக்கைப் பெருக்கால் பறவைகள் பறக்க முடியாது திணறுவதாக 'நான் பறந்து ஒரு வாரமாகப் போகுது! ஒரே நெருக்கடி ... இனிமே நடந்துதான் போகணும்னு நினைக்கிறேன்' எனும் துணுக்கில் காட்டிச் சிரிக்க வைக்கிறார். பிக்பாக்கெட் கேஸ்தான்! பர்சை எடுத்துட்டு..... மறதியில் பஸ்ஸுன்னு நினைச்சுக் குதிச்சிட்டான் என்பதும் மற்றொரு சான்றாகும்.

பொதுவாக எதிர்காலவியல் இலக்கியம் உரைநடையைக் கையாள்வதே அதன் இயல்பு நோக்கில் எளிதாகிறது. எனினும் கவிதையில் ஆங்காங்கே ஒரு சில தோன்றி நம்மை மகிழ்விக்கின்றன. இவற்றால் வடிவ வரையறையும் இவ்விலக்கியத்திற்கு இல்லை என்பதும் புலனாகிறது. பாரத சமுதாயத்தின் ஒருமையை விழைந்த பாரதி,

**சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்**<br>
**சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்**<br>
**வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்**<br>
**மையத்து நாடுகளில் பயிர்செய்குவோம்.**

**.........................**

**காசி நகர்ப் புலவர் பேசும் உரைதான்**<br>
**காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்**

**(பாரத தேசம்)**

எனப் பாடி, பிற கவிஞரையும் எதிர்கால நலன் எண்ணிப் பாட வழிகாட்டுகிறார். இங்கு உடுமலை நாராயண கவி எழுதி, என்.எஸ். கிருஷ்ணன் பாடி மிகவும் புகழ்பெற்ற பாடலொன்றும் சுட்டத்தக்கது.

**விஞ்ஞானத்தை வளர்க்கப் போறேண்டி**
**மேனாட்டானை விருந்துக் கழைச்சிக் காட்டப்போறேன்டி**
**தஞ்சாவூர் ஏட்டை மிதிச்சு தலைகீழாப் பாடம்படிச்சு**
**பொஞ்சாதி புருஷன் இல்லாம**
**புள்ளையும் குட்டியும் பிறக்கறாப்பல (விஞ்)**
**அஞ்ஞானத்தை அழிக்கப் போறேன்டி**
**அணுசக்தியாலே ஆயுளு விருத்திப் பண்ணப்**
**போறேன்டி**

..........................
**புஞ்சை நிலத்துப் பருத்திச் செடியில**
**புடவை ரவிக்கை வேட்டி காய்க்க**
**பஞ்சைக் கிழவர் தன்னை வாலப்பருவ மாக்கி**
**நாட்டைக் காக்க**
**கைத்திறமையைக் காட்டப் போறேன்டி**

..........................
**பள்ளிக் கூடத்துக்குப் போகாம பிள்ளைகள்**
**பாடம் படிக்க வேணும்.........''**

எனும் அப்பாடல் கவிஞரின் திறம்பட்ட எதிர்காலச் சிந்தனைகளைப் புலப்படுத்துகிறது. நகைச்சுவைக்காக எழுதப்பட்ட பாடலாயினும் இதனுள் எதிர்காலவியல் இலக்கிய இயல்பு நன்கு கால் கொண்டிருப்பது பாராட்டத்தக்கது. இன்று பெருஞ் செல்வாக்குடன் திகழும் புதுக்கவிதை வடிவிலும் சில கவிதைகளை இவ்விலக்கியப் பொருண்மையதாக இனம் காண முடிகிறது. சான்றிற்கு மு. மேத்தாவின்

**நாளை**

**உலக வீதிகளில் / ஊர்வலம் போகும் / ஆயுதங்கள்**
**வீடுகளுக்குள் ஒளிந்தபடி / எட்டிப்பார்க்கும்!**
**மனிதன் ...... (என்னுடைய போதிமரங்கள், ப. 28)**

எனும் கவிதையையும் துறவியின்,

**காற்றில் உடையும் பலூன்கள்**

எண்பது கோடி / இந்தியர்கள் / என்னமாய்
ஏளனப் படுகிறார்கள் / ஐநூறு நாடாளுமன்ற
உறுப்பினர்களால்!
அழுக்குத் துணிகளாய் / அரசியல் சட்டங்கள்
எப்போது நாம் / வெளுக்கப் போகிறோம்?
....................
கையடக்கப்பதிப்பாய் / மாற்றி / இந்தியாவைக்
கவர்ந்து செல / கட்சிகளுக்குள்ளே / கடும் மோதல்!
.....................
இது / இப்படியே நீடித்தால் / எதிர்கால இந்தியன்
வாக்குச் சாவடிக்குப் / போக மாட்டான்
ஆயுதசாலையைத்தான் / தேடுவான்
(ஞாபகப் பூக்கள், பக். 64-66).

எனும் கவிதையையும் சுட்டலாம்.

## எதிர்காலவியல் இலக்கிய இயல்பு*

1. இன்றைய உலக நடைமுறையிலிருந்து முழுமையாக வேறுபட்ட சூழல்களையும், பழக்கவழக்கங்களையும் கொண்ட சமூகத்தைக் காட்டுவது (ஒன்பதாவது பெண்); எவையேனும் சில கூறுகள் மட்டும் மாறியுள்ளதாகச் சுட்டுவது (சூரியன்) எனும் இரு நிலைகளையும் காணமுடிகிறது. அதாவது முற்றிலும் புதிய மனிதர், புதிய வாழ்வியல் என்பது ஒன்று; பழமையும் புதுமையும் கலந்தது மற்றொன்று. முன்னதை அதிவேக மாற்றம் என்றும் பின்னதை மிதவேக மாற்றம் என்றும் குறிப்பிடலாம்.

2. இவ்வகை யிலக்கியங்கள் நவிலும் எதிர்காலம் அண்மையில் எதிர்கொள்ள விருப்ப தொன்றாக (காலயந்திரம்) அல்லது பல நூற்றண்டுகள் கடந்த தொன்றாக (காலமானவர்) அமையக் காணலாம். இவை தாம் எந்தக் காலத்தைக் கற்பனை

---

* சுஜாதாவின் தேவன் வருகை சிறுகதைத் தொகுப்பில் உள்ள கதைகளை அடைப்புக் குறியுள் இருக்கும் பெயர்கள் சுட்டும்.

செய்கின்றன என்பதை நேரடியாக உணர்த்துகின்றன (நகர் வலம்) அல்லது மிகப் பிற்காலத்திய கதை என்பதை மறைமுக மாக எளிதாகக் கதைப்போக்கில் உணரும் வண்ணம் (அடிமை) காட்டுகின்றன.

3. இவ்வுலகில் தம் வாழ்வில் தாம் காண அல்லது பெற விரும்புவனவற்றை - எதிர்காலத்திலாவது பெறக்கூடும் அல்லது பெற வேண்டுமென எண்ணுவனவற்றையும் இவை கருவாகக் கொள்கின்றன (யயாதி).

4. சுற்றுப்புறம், சூழல், பழக்க வழக்கம் என அனைத்துக் கூறுகளிலும் புதுமையாக்கம் பொலிவுறுவதைக் காட்டிடி னும் அடிப்படைத் தேவைகள் இன, சமய வேறுபாடின்றி அனைவருக்கும் தடையின்றி நிறைவு செய்யப்படினும் தனி மனித நிறைவின்மை அமைவது - நிறைவில் நிறைவின்மை கொள்வது பொதுவான ஒன்றாக உணர முடிகிறது (ஒன்பதாவது பெண்). எனவே சமுதாய வெளிப்புற வாழ்வில் வளர்ச்சி, தனிமனித அகநிலை வாழ்வில் வீழ்ச்சி எனும் முரண் இதன் இயல்பாகிறது.

5. மானிட உழைப்பு குறைந்து, இயந்திரமயமாதல் காரணமாகத் தனிமனித உணர்வுகளும், உரிமைகளும் பாதிப்புக் குள்ளாவதும் வெளிப்படையாக உணர்த்தப்படுகிறது (அடிமை).

6. இன்று உலக நாடுகள் சிறப்பான அக்கறை காட்டும் அனைவருக்கும் கல்வி; ஆண் பெண் சமநிலை; வாழ்க்கைத் தர உயர்வு; பொருளாதாரச் சமத்துவம்; மக்கட் தொகை; உலக நாடுகளிடையே அமைதி என்பனவற்றிற்குப் படைப்பாளர் தம் நோக்கில் தரும் தீர்வுகளாகவும் இவ்வகையிலக்கியங்கள் அமைகின்றன.

ஆயின் அவையும் முற்றமுழுக்க நிறைவுடையனவல்ல; அவற்றால் புதிய குறைபாடுகள் தோன்றுவதையும் அவற் றிற்குத் தீர்வுகாண வேண்டியுள்ளதையும் (ரூல் நம்பர் 17) நேரடியாக அல்லது மறைமுகமாக உணர்த்துவதைக் காண லாம். எனவே ஒருவகை முரணிலையை இவ்வகையிலக்கியத் தின் பொதுக் கூறாக எண்ணத் தோன்றுகிறது.

7. இன்பக் கனவுலகின் எதிர்நிலையாக அமையும் துன்பக்கனவுலகுக்[2] (Dystopia) கற்பிதத்துடன் ஒருங்கு எண்ணும் வகையிலும் சில அமைதல் (வாசல், ரூல் நம்பர் 17) சுட்டற்பாலது.

8. கதை நிகழ்களன் பரந்து விரிந்து அண்டத்திற்கு அப்பாலும் வேற்றுக் கோள்களுடன் தொடர்பு கொண்டு அமைதல் பரவலாகக் காணப்படுகிறது (நகர் வலம்).

9. காண்டப் பிரிவினை யகன்று உலகம் ஒரு குடைக்கீழ் ஒருங்கிணைந்து செயல்படுவதாகக் காட்டலும் பொதுவானதாக அமைகிறது (தமிழாசிரியர்). இதனால் மனித சமுதாயம் ஒன்றே ஒன்றுதான், அதனுள் பிரிவினைகள் இல்லை என்ற ஒருமையுணர்வு மலர்வதாகக் காட்டப்படுகிறது. எனவேதான், 'அறிவியல் சார்ந்த பொதுவுடைமை' (Scientific Communism) என்ற கருத்தும் எதிர்காலவியல் பற்றி வழங்கப்படுகிறது.[3]

10. இன்றைய மனிதனின் நிலையிலிருந்து மாறுபட்டு நாளைய மனிதன் பெறப்போகும் வாழ்க்கை வசதி குறித்த வியப்பும், ஒருவகை அடிமைநிலை குறித்த இரக்கமும், இன்றைய தவறுகள் நாளைய சமூகத்தை எங்ஙனமெல்லாம் சீர்குலைக்கக் கூடும் எனும் எச்சரிக்கை கலந்த அச்சமும் (ஒன்பதாவது பெண்) இவ்வகைப்படைப்புகளில் எதிரொலிக்கின்றன.

11. கதையிலக்கிய உத்திகள் இங்கும் மேற்கொளப்படினும், உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம் போன்ற இலக்கிய அணிகளை விட கணினி, மின்னணுக் கருவிகள், தானியங்கிகள் போன்ற தொழில் நுட்பக் கருவிகளும் அவற்றின் செயற்பாடுகளுமே கதைக்களனில், போக்கில் ஆட்சி செலுத்துகின்றன.

---

2. The term Dystopia (bad place) has recently come to be applied to works of fiction which represent a new unpleasant imaginary world in which certain ominous tendencies of all present social, political and technological order are projected in some future culmination.

M.H. Abrams; A glossary of Literary Terms; p. 178.

3. The Futurists; p. 197.

### எதிர்காலவியல் இலக்கிய நோக்கம்

புதிய புதிய இலக்கிய உத்திகளைக் கொணர விரும்பும் படைப்பாளரின் புதுமை விளைவே இதன் தோற்றத்திற்கும் அடிப்படை. படைப்பாளர் காண விரும்பும் சமுதாயச் சீர்திருத்தத்திற்கும், கனவு வெளிப்பாட்டிற்கும் இவ்வகை நற்களனாகிறது.

### எதிர்காலவியல் இலக்கியப் பயன்

தமிழிலக்கிய வரலாற்றில், வளர்ச்சியில் புதியதொரு இலக்கிய வகை வரவேற்கத்தக்க நிலையில் அமைந்துள்ளது.

பொழுதுபோக்கிற்காகச் சிறுகதை, புதினம் எனப் படிக்கும் எளியோர்க்கும், பிறக்கும் அறிவியல் வளர்ச்சியை, பயனை எளிய முறையில் விளக்கிச் செல்லும் ஊடகமாக இவ் விலக்கியவகை பெரும் பயனுடைத்தாகிறது. வெகுவிரைவில் வரவிருக்கும் இருபத்தோராம் நூற்றாண்டை, அறிவியல் யுக மாக எதிர்காலவியலாளர் கருதுவதால் அதற்கேற்ப இன்றைய மக்கட் சமூகத்தைத் தயார் செய்யும் நிலையிலும் இவை பங்கேற்கின்றன எனலாம்.

நிகழ்கால இட, இனக் கலவரங்கள், அணு ஆயுதப் போர், வறுமை போன்ற சிக்கல்களால் தம் வழித்தோன்றல் கள் பெறப்போகும் அவலம் குறித்த அச்சம், எச்சரிக்கை என்பன தற்காலத்தவர்க்குத் தம் தவறுகளைத் திருத்திக் கொள்வதற் குரிய வாய்ப்பாகவும் பயன் படக்கூடும்.

இன்று தளர்நடை இட்டுக் கொண்டிருக்கும் 'எதிர்கால வியல் இலக்கியம்' மேலும் வளம் பெறுவதற்குரிய சூழல், தென்படுகிறது. இவ்வகைக் கதை எழுத்தாளர் எண்ணிக்கையும் பெருக இடனுண்டு.

# எதிர்காலவியல் இலக்கியப் பொருண்மை

பொருள் (பொருண்மை) சொல்விளக்கம்
காலம்
கல்வி
சமூக இயக்கம்
குடும்பம்
பெண்கள்
முதியோர்
பொதுவாழ்வியல்
அரசியல்
வேற்றுக் கிரகத் தொடர்பு
அறிவியல் கண்டுபிடிப்புகள்
உளவியல்
சமயம்
முன்னிகழ்வுகள்

எதிர்காலச் சமூகம் — வளமிக்கது
எதிர்காலச் சமூகம் — இரங்கத்தக்கது

எதிர்காலவியல் இலக்கியச் சிந்தனைகள்

# எதிர்காலவியல் இலக்கியப் பொருண்மை

இலக்கியத் தோற்றத்திற்கு அடிக்கல்லாய் அமைகின்ற பொருள் அதனைச் சிறப்பிக்கும் காரணிகளுள் ஒன்றாகவும் பெருமை பெறுகிறது. இதனை,

> **அறமுதல் நான்கென்றும் அகமுதல் நான்கென்றும்**
> **திறன் அமைந்த செம்மைப் பொருள் மேல் - குறைவின்றிச்**
> **செய்யப் படுதலால் செய்யுள்; செயிர் தீரப்**
> **பையத் தாம் பரவுதலால் பா**

என, யாப்பருங்கல விருத்தி மேற்கோள் நூற்பா மொழியும்[1].

## பொருள் (பொருண்மை) சொல் விளக்கம்

பொருள் எனும் சொல்லிற்கு, 'வஸ்து, சொற்பொருள், விஷயம், உண்மைக் கருத்து, காரியம், தத்துவம், மெய்ம்மை, நன்கு மதிக்கப்படுவது, கல்வி, அறிவு, கொள்கை, பயன், மோட்சம், கடவுள் , திரவியம், பல பண்டம், பொன், புத்திரன், தந்திரம், சுணங்கு, உவமேயம், உறுதி, அருத்தா பத்தி, அகமும் புறமுமாகிய திணைப்பொருள், அர்த்த சாஸ்திரம், தலைமை, யாதும் ஒன்று, உடைமை, பொருள் நூல், தன்மை, குணம்' ஆகிய பொருள்களை அகராதிகள் தருகின்றன.[2]

சொற்பொருள், உண்மைக் கருத்து, அகமும் புறமுமாகிய திணைப்பொருள், உடைமை என்பன இலக்கியத்தோடு தொடர்புடையன. இலக்கியத்தில் அமைந்துள்ள சொல்லுக்குப்

---

1. யாப்பருங்கலம் (விருத்தி உரையுடன்); கழகம்; சென்னை; 1976; ப. 220.

2. Tamil Lexicon - Vol. V; University of Madras; pp. 2935 - 2936.
   செந்தமிழ் அகராதி; ந.சி. கந்தையா பிள்ளை (தொகு); இ.ப. 1957; ப. 562.

பொருள் (Word meaning) இலக்கியத்தில் பொதிந்துள்ள முதன் மைக் கருத்து (Theme and thought); இலக்கியப் பொருள் (general content); குறிப்பிட்ட இலக்கிய வகை தனக்கு உரித்தாகக் கொண்டுள்ள பொருள் (Special Content of a genre) என இவற்றை விளக்கலாம்.[3] இலக்கியத்தின் கருத்தினையோ (Theme) நோக்கத்தினையோ (aim) உணர்த்துவதற்காக, நூல் முழுமையும் அதனுடன் தொடர்புடைய நிகழ்வுகளாக அல்லது எண்ணங்களாக அல்லது செய்திகளாகப் புலவர் படைத்து மொழிவனவற்றை உள்ளீடு எனலாம். இதுவே இலக்கியப் பொருள் என்று கருதும் நிலையில் அமைகிறது.[4]

இவற்றைக் கருத்துட் கொண்டு எதிர்காலவியல், தமி ழிலக்கியத்துள் புதியதொரு பொருண்மையாக இந்நூற்றாண் டின் இறுதிப் பகுதியில் இடம்கொண்டு வளர்ந்து வருவது இக்கட்டுரையுள் நோக்கப்படுகிறது. செய்யுளிலக்கியங்கள் மட்டுமின்றி உரைநடை யிலக்கியங்களிலும் அதன் பொருட் கூறுகளை வரையறை செய்து அறுதியிடல் இயலும் என்பதனை 'எதிர்காலவியற் பொருண்மையை'ப் பகுப்பாய்வு செய்வதன் வழி இக்கட்டுரை நிறுவுகிறது.

இறந்தகாலத்தைக் கருத்துட் கொண்டு, நிகழ்காலப் போக்குகளை அதனுடன் இணைத்து எதிர்காலத்தைக் கணிக்க முயலும் படைப்பாளருக்கு, எதிர்காலவியலறிஞருக்கு இல் லாத ஒரு தனியுரிமை உளது. அவரது கற்பனைத் திறனை, படைப்பாளர் என்ற நிலையில் தம் எதிர்காலச் சிந்தனையுள் இணைக்க எவ்வித தடையுமில்லை. எனவே அவர் தாம் விரும் பும் எதிர்காலத்தையும் தம் படைப்புகளில் காட்டுகின்றார். எதிர்காலம் பற்றிய அவர்தம் கணிப்புகளும், விருப்பங்களும் கலந்தே எதிர்காலவியல் இலக்கியங்கள் தோன்றியுள்ளன. எனவே பிறதுறைகளில் நிகழ்த்தப்படும் தெளிவான முறை யான எதிர்காலவியல் ஆய்வு முடிவுகளில் காணப்படும் சாத்தியக் கூறுகளை இலக்கியத்துள் காணல் அரிது என்பது தெளிவு. மற்றும் இலக்கியத்துள் அது தேவையற்றதுமாகும்.

---

3. ச. சிவகாமி; இலக்கியப் பொருட் பகுப்பாய்வு; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்; சென்னை; 1991; ப. 2.

4. மேற்படி; ப. 3.

பொதுவாக நிகழ்காலச் சமுதாய அவலங்களிலிருந்து ஒட்டு மொத்தமான மாற்றத்தை விரும்பும் படைப்பாளரின் உந்துதல், தான் காண விரும்பும் சமுதாயம், அது நிகழ்ந்தால் எப்படியிருக்கும் என்ற கற்பனை இவற்றின் அடிப்படையில் எதிர்காலவியல் இலக்கியம் எழுவதால் சமூகவியலுடன் நாம் காணும் பொருட்கூறுகள் அனைத்தும் இதனுள் இடம் பெறுகின்றன. எனவே சமூகத்துள் காணப்படும் எல்லா நிகழ்வு களும், சமூகத்தை உருவாக்கும் காரணி களும், அங்கத்தினரும் இதனுள் இடம் பெறுகின்றனர். இவற்றை வெளிப்படுத்தும் முறையிலும், அவற்றின் கருதுகோள் குறிப்புகளிலும் படைப் பாளர் வேறுபடுகின்றனர்.

எதிர்காலவியல் பொருண்மையில் உள்ளடங்கும் பொருட் கூறுகளை அளவிடும் முன் இவற்றை முன்னுணர்த் தல் தேவையாகும். ஆகவே இவற்றைக் கருத்துட் கொண்டு இனி இதன் பொருட்கூறுகளை ஒவ்வொன்றாக அணுகலாம். படைப்பாளர் காட்டும் அக்கறை, மற்றும் தம் படைப்பில் அளிக்கும் முதன்மைச் சிறப்பு இவற்றின் அடிப்படையில் இப்பொருட்கூறுகள் இங்கு வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

**காலம்**

கதையின் நிகழ்வு எதிர்காலத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை எவ்வகையிலேனும் உணர்த்துகின்ற னர். அப்பொழுதுதான் வாசகர், கதை நிகழ்வுகள் மற்றும் களம் தற்போதைய சூழலிலிருந்து முற்றிலுமாக மாறுபட்டு அமைவதை ஏற்றுக் கொள்ளவும், புரிந்து கொள்ளவும் முடியும். இதனால் படைப்பாளரின் கருத்துடன் ஒன்றிப் படைப்பை வெற்றிபெறச் செய்ய இயலும், படைப்பாளர் அடி நாதத்தினை, உயிர்ப்பினை வாசகர் உணர்ந்து கொள்ளும் பொழுதுதான், படைப்பின் நோக்கம் நிறைவேறுகிறது. பயன் உடைத்தாகிறது. எனவே இவ் எதிர்காலவியல் இலக்கியத்துள் அதன் நிகழ் காலம் சுட்டுதல் வேண்டப்படுகிறது. ''டிசம்பர் 31, கி.பி. 2021'' (என் 5); 9.9.2050, காலை 10 மணி' (ஆ.வி 20.11.94, 38) என்பது போன்று வெளிப்படையாகக் குறிக்கப்படுதல் பெரும்பான்மை. 'கி.பி. 2084' என்று கதைத் தலைப்பே எதிர்காலவியலை உணர்த்தி நிற்றலும் உண்டு. சில வேளைகளில் கதைப் போக்கே,

''கவனிக்கவும்! கவனிக்கவும்! படகு கடலுக்குள் செல்லப் போகிறது. இன்னும் மூன்று நிமிடங்களில் நாம் சென்னை நகரை அடையப் போகிறோம்.... இருபத்து ஒன்றாம் நூற்றாண்டின் இறுதியில் கடலில் மூழ்கிய சென்னை நகரத்தின் புராதனக் கட்டடங்கள் நவீன ரசாயனத்தின் உதவியால் பாசி நீக்கப்பட்டுச் சுத்தப் படுத்தப்பட்டு .... உங்களுக்காகக் காத்திருக்கிறது.... உங்கள் படகு சென்னை நகரின் புராதன வீதிகளின் ஊடே மிதந்து செல்லும்..... அவ்வப்போது கட்டடங்களின் வருணனை கிடைக்கும். நாம் இன்னும் இரண்டு நிமிஷங்களில் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையை அணுகுவோம்! ....'' என்பது போன்று (தே. 105) கதையோட்டத்தில் அறிவிக்கப்படலும் உண்டு.

**கல்வி**

சமூகத்தின் முன்னேற்றத்திற்குக் கல்வியின் தேவை மிக இன்றியமையாததாக இன்று உணரப்பட்டுவிட்ட சூழலில், நாளைய கல்வி எத்தகு வளத்துடன், சிறப்பாக அமையும் என்பதும் எதிர்காலவியல் இலக்கியத்துள் காட்டப்படு கிறது.

''இருபது குழந்தைகளும் அழகாக இருந்தார்கள், ஆரோக்கிய மாக இருந்தார்கள். சரியாகப் பத்துப் பேர் ஆண்கள், பத்துப் பெண்கள். எல்லோருக்கும் ஒரே வயது. ஒரே பிறந்த தினம். வகுப்பறைக்குள் பூக்களை இறைத்தது போல் உற்சாக மாகச் சிரித்துக் கொண்டு நுழைந்த உடனே ஒருவரையொரு வர் பார்த்துக் கொண்டு வரிசையாக நின்று கண்மூடி தியானத் தில் சில வினாடிகள் நின்றார்கள்.

எங்களது அன்றாட வாழ்க்கையை அமைத்து வரும் எங்களுக்கு எல்லாவிதமான பாக்கியங்களும் அளித்து வரும் கம்ப்யூட்டர் தாத்தாவுக்கு இன்றைய வந்தனங்கள் - என்று முணுமுணுத்துவிட்டு, 'நித்யா, நீங்கள் சுகமா?' என்றார்கள் ஒரே குரலில்.

சுகம் குழந்தைகளே! வந்தனம்

இன்று என்ன பாடம்?

*நீங்கள் என்ன படிக்க விரும்புகிறீர்கள்?*

*சரித்திரம்.*

*சரி உங்கள் சாதனங்களை அமைத்துக் கொள்ளுங்கள்.*

குழந்தைகள் தத்தம் மெத்தை நாற்காலிகளின் வளைந்த சுகத்தில் பதிந்து காதுகளில் இறகிலும் மெல்லிய ஒலிக்குழாய் களைப் பொருத்தி கொண்டு எதிரே திரையில் ஆவலுடன் பார்த்தனர்.

நித்யா மானிட்டரில் உட்கார்ந்து 'சரித்திரம்' இருபதாம் நூற்றாண்டு' ஆறாம் வகுப்பு என்று அடித்தாள். தயார் என்கிற விளக்கு எரிந்தது. 'காட்டி' என்கிற பட்டனைத் தொட்டாள்.

சுவரில் விரவியிருந்த திரையில் பிம்பங்கள் பிரகாச மடைந்து பிரமித்தன. மெலிதான சங்கீதம். மெலிதான வற் புறுத்தும் குரல் ஒன்று!....

குறுக்கீடு செய்யும் சிவப்பு விளக்கு எரியப் பாடம் நின்றது. 'சந்தேகம் யாருக்கு?' என்றாள் நித்யா. ....

பத்து நிமிஷம் பாடம் நடந்தால் ஒரு நிமிஷம் குழந்தை கள் சந்தோஷமடைய வேண்டும். மறுபடியும் பத்து நிமிஷம் பாடம் அல்லது விளையாட்டு.' என்று நாளை நிகழவிருக்கும் கல்வி முறை, இன்றைய தலைமுறையினரை ஏங்க வைப்ப தாக (தே. 5-7) அமையக் காணலாம்.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் கல்வி தருவதில் எவ் வித வேறுபாடும் காட்டப்படுவதில்லை என்பதையே ஒட்டு மொத்தமாக இவ்வகையிலக்கியங்கள் உணர்த்துவது குறிக்கத் தக்கது. அதே வேளையில் கல்வியை அனைவருக்கும் கட்டாய மாக்குதலும், கற்பிப்பதில் ஒரே நெறியைப் பின்பற்றுவதாகக் காட்டுவதும் சுட்டத் தக்கதாகும்.

**சமூக இயக்கம்**

முற்றிலுமாக, மாறுபட்ட ஒரு சமூகத்தை எதிர்கால வியல் படம் பிடிப்பதால் பல நிலைகளிலும் இன்றிலிருந்து தலைகீழான மாற்றங்களையே படைப்பாளர் படைத்துள்ளனர்.

சமூக உறவுகள் அங்குப் புறந்தள்ளப்படுகின்றன. சமூக அங்கத்தினர் அனைவரும் ஒரே மதிப்புடையவர் என்ற போர்வையாலும், ஒவ்வொருவரது பணிகளும், தேவைகளும் முன்கூட்டியே திட்டமிடப்பட்டு அதற்கேற்ப செயல்படுத்தப்படுவதாலும் சமூக உறவின் தேவை வேண்டாதது ஆகிறது அல்லது சமூகத்தை இயக்குவோரால் நீக்கப்படுகிறது. எதிர்காலச் சமூகத்தை மானுடன் இயக்கினாலும் சரி அல்லது கணிப் பொறி யியக்கினாலும் சரி அங்கே பால், இனம், சமயம், மொழி போன்ற வேறுபாடுகள் நீக்கப்படுகின்றன. ஆனால் ஒரு வகையான அடிமை வாழ்க்கையையே, சமூகத்தை இயக்கும் மேலிடத்திற்கு உட்பட்டு நடத்த வேண்டியிருப்பதையும் இக்கதையாளர் தருகின்றனர்.

''சுபிட்சம் வேண்டும்தான் ஆனால், அதற்கு அளிக்கப் படும் விலையையும் கவனிக்க வேண்டும். உரிமைகள் அனைத்தையும் பறிகொடுத்து உணவும் உடுப்பும் வீடும் பெற நாங்கள் விரும்பவில்லை. ஜீவாவின் அதிகாரத்தில் நாம் எல்லோருமே இந்த நாய்போல, இயந்திரங்கள் தாம். இனிய இயந்திரங்கள். நம் செயல்பாடுகள் நிர்ணயிக்கப்பட்டு விட்டன. நம் பாதைகளில் செல்ல வேண்டிய கோடுகள் எழுதப்பட்டு விட்டன. படிக்க வேண்டிய பாடங்கள்..... பாட வேண்டிய பாடல்கள் .... பெற வேண்டிய பிள்ளைகள் எல்லாமே நிர்ணயிக்கப்பட்டு விட்டன. உனக்கு அரசு அளித்திருக்கும் அனுமதியைப் பார். படுக்கையில் படுத்துப் புரளக்கூட அனுமதிக்கடிதம். பிள்ளை தான் பெற்றுக் கொள்ளலாம். பெண் என்றால் அரசாங்கத்திடம் ஒப்படைத்து விடவேண்டும்.'' (என். 140)

''இதுவரை எந்த இயந்திரமும் தப்பு செய்து பார்த்ததே இல்லை அவள். கோவாபரேட்டிவில் அரிசி பொறுக்கும் இயந்திரம் வாரரேஷன் ஒரு குந்துமணி அதிகப்படியாகக் கொடுக்காது. மின்சாரக் கட்டுப்பாட்டு இயந்திரம், கொடுக்கப் பட்ட யூனிட்டுகளுக்கு மேல் ஒரு செகண்டு தாமதிக்காது. ப்யூசைப் பிடுங்கிவிடும். மைக்ரோ ...... அத்தனையும் இது வரை ஒன்றும் பிசகியதில்லை' (என். 27) இந்நிலையே மற்றொரு கதையிலும்,

''நூற்றுக்கணக்கான வருஷங்களாக நாம் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கும் சம்பிரதாயங்களையும் மூட நம்பிக்கைகளையும் தகர்த்தெரியும் போர்! வீடு, நிலம், பணம், துக்கம், அழுகை, அப்பா, அம்மா என்னுடையது, உன்னுடையது, காதல், காமம், வெறி, சமூக ஜாதி, கதை, கட்டுரை, நிஜம், பொய் .... இவை ஒன்றும் இங்கு கிடையாது....

இங்கு என்ன இருக்கிறது சொல்லுங்கள்?

அமைதி, சந்தோஷம், ஆண், பெண், விஞ்ஞானம், இளமை, மனதில் உடலில் இளமை.

இவைகளை ஏன் விட்டு வைத்திருக்கிறீர்கள்?

இவைகள்தான் வாழ்க்கையின் ஆதாரமான விஷயங்கள், மனிதனின் ஆதாரத் தேவைகள் என்ன? உணவு, உடை, இடம், இங்கு உணவு எல்லாருக்கும் ஒன்றே, நான் தங்கும் இடமும், சுரங்கத்தின் கடைநிலைத் தொழிலாளி தங்கும் இடமும் ஒரே மாதிரி. நான் உடுத்துவது போல்தான் எல்லாரும் உடுத்துகிறார்கள்'' (சொ. 84).

''இங்கே மனிதர்கள் எப்படி மதிக்கப்படுகிறார்கள் தெரியுமா?.... ஒவ்வொரு நாளும் காலை சுகாதாரப் பகுதியில் அவர்களுக்கு மருந்து தரப்படுகிறது. அவர்கள் தேகபுஷ்டிக்கு என்று சொல்லப்படுகிறது. மருந்து அதற்கல்ல அவர்கள் தன்மான உணர்ச்சிகளைக் கொல்வதற்கு ... அவர்களின் புலாத்கார எண்ணங்கள் எல்லாம் சாகடிப்பதற்கு. அவர்கள் உள்ளே ஊறும் செக்ஸ் உணர்ச்சிகளை மடிய வைப்பதற்கு. சிறு வயதிலிருந்தே பன்னிப் பன்னிப் போதித்த பாடங்கள் அவர்களை அடிமைகள் ஆக்குகின்றன. அவர்களுக்குத் தாய், தந்தை கிடையாது. தீவின் ஏர்கண்டிஷன் சுகாதாரப் பகுதியில் அவர்களுக்கு, பிறந்த முதல் மாதத்திலிருந்து போதனை ஆரம்பமாகிறது. ஹிப்னோபீடியா என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். ''நீ அடிமைப்பணி செய்யப் பிறந்தவன்....'' என்று அவர்கள் தூக்கத்திலும் விழிப்பிலும் விடாது ஆறு வருடங்கள் போதிக்கப்படுகின்றது. அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்படும் தமிழில் ஆயிரம் வார்த்தைகளுக்கு மேல் கிடையாது. அவர்களுக்கு இருபதுக்கு மேல் எண்ணத் தெரியாது. அவரவர்களுக்கு

அளிக்கப்பட்ட தொழிற்திறனுக்கு மேல் ஒரு வரி அவர்களுக் குத் தெரியாது. சிரி என்றால் சிரிப்பார்கள். 'தலைகீழாக நில்' என்றால் நிற்பார்கள்.... அவர்களுக்குப் பெயர் கிடையாது. எல்லோரும் எண்கள். கம்ப்யூட்டரின் நினைவில் ஒரு கார்டு.... புஷ்டியாக, ஊட்டமாக வளர்க்கப்பட்ட ஆடுகள்.... ஆடுகள் கூடப் பரவாயில்லை. இன்றைக்கு இந்தத்தழை தின்ன வேண் டாம் என்று நினைத்தால் தின்னாமல் இருக்கலாம். இவர்கள் சொன்ன தழையைத் தின்ன வேண்டும். ஏன் என்கிற வார்த்தையே அவர்கள் பாடத்தில் கிடையாது, தெரியுமா,'' *(சொ. 91)*

இவ்வாறு அமைவதற்கான சாத்தியக்கூறு எங்ஙனம் அமைகிறது என்பதற்கான விளக்கத்தையும் அறிய முடிகிறது. ''அந்தக் கம்ப்யூட்டரின் முழுத்திறமையும் உபயோகிக்கும் படி அவர்கள் அந்தத் தீவின் ஆட்சிக்காக அமைத்திருந்த புரோகிராம்கள் எனக்கு ஆச்சரியம் தந்தன. மாஸ்டர் புரோ கிராம்கள் யாவும் டேப் சுருள்களில் இருந்தன. அவைகள்தான் அந்தத் தீவின் ஆணைகளைப் பிறப்பிக்கின்றன. டேப் சுருளில் பதிந்திருந்த சின்னச் சின்ன காந்த சக்திகள் அந்தத் தீவின் பிறப்பை, இறப்பை.... தொழில் உற்பத்தியை எல்லாவற்றை யும் கட்டுப்படுத்துகின்றன. இந்தப் புரோகிராம்களுக்கு என்று ஒரு லைப்ரரி இருந்தது. அவைகளில் புரோகிராம்கள் எண் வாரியாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் என்ன என்ன செய்கிறது என்று ஒரு அட்டவணை இருந்தது. புரோகிராம் என்பது கம்ப்யூட்டருக்கு ஒரு குறிப்பிட்ட செயல்களின் தொடர்ச்சியை நிகழ்த்துவதற்கு ஒருவிதமான நிகழ்ச்சி நிரல் என்று சொல்லலாம். வேறு வேறு ஸெல்களுக்கு வேறு வேறு புரோகிராம். உதாரணமாகத் தினம்தினம் சொர்க்கத் தீவின் சாலைகளில் இயங்கும் விளக்குகளைப் போக்குவரத்துக்கு ஏற்ப இயக்குவதற்கு ஒரு புரோகிராம். இந்தப் புரோகிராமில் எங்கள் பாஷையில் சப்ரூட்டின்கள் நிறைய இருக்கும். மற்றொரு புரோகிராம் சொர்க்கத் தீவின் பிரஜைகளுக்குத் தினசரி கொடுக் கப்படும் மருந்துகளின், அளவையும் நிதானத்தையும் கட்டுப் படுத்தும் புரோகிராம். இது ஒரு ஆச்சரியம் நிறைந்த விஷயம். ரசாயன முன்னேற்றத்தினால் விளைந்த மிக நூதன மருந்துகள் அளவுடன் அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. அம்

மருந்துகள் மக்களைக் கட்டுப்படுத்தி, பிறப்பித்த கட்டளைகளைக் கேள்வி கேட்காமல் தெய்வ வாக்காக நிறைவேற்றுவதற்கு அவர்கள் சிந்தனை சக்தியை மிகவும் குறைக்கின்றன என்று கண்டு கொண்டேன். மருந்தின் அளவையும் நிர்ணயிக்க அவ்வப்போது சிலரை Random ஆகத் தேர்ந்தெடுத்து ரத்தப் பரிசோதனை செய்து, அதன் விவரங்களைக்கம்ப்யூட்டருக்குக் கொடுக்க, கம்ப்யூட்டர் அந்த விவரங்களை அலசி மருந்தின் தரத்தை நிர்ணயிக்கிறது. ஒரு அளவுக்கு மேல் ரத்தத்தில் மருந்து அதிகமாகி விட்டால் சில தினங்களுக்கு வெறும் தண்ணீர்! கம்ப்யூட்டர் தந்த ஆணையின்படி ரசாயனப் பகுதியில் தானாகவே கலக்கப்பட்டு அந்த மருந்துகள் சொர்க்கத் தீவில் அங்கங்கே இருக்கும் சுகாதார நிலையங்களில் உள்ள சிறிய சிறிய மெஷின்களில் நிரப்பப்படுகின்றன. தினம் காலையில் தீவின் மக்கள் ஒவ்வொருவரும் அந்த மெஷின்கள் அருகில் வந்து அதில் கை வைத்து அந்த மருந்தின் இரண்டு துளிகளைத் தம் உடலில் இறக்கிக் கொள்கிறார்கள்.'' (சொ. 158) என மிக நீண்ட தெளிவான விளக்கத்தை இதற்குச் சான்றாக்கலாம்.

மக்கள் உணர்வுகள் இழந்த அல்லது இழக்கச் செய்யப்பட்ட நிலையில், சூழலில் வாழ்வதால் அவர்களுக்கும் அவர்களுக்கு அளிக்கப்படும் எண்களுக்கும் பெரிய வேறுபாடில்லை. 'இந்த நூற்றாண்டு முழுவதும் எண்கள் தானே... முன்னொரு காலத்தில் ஒரு சித்தர் பாடினார், 'இறைச்சி தோல் எலும்பிலும் இலக்க மிட்டிருக்குமோ' என்று. இந்த நாட்களில் எல்லாமே இலக்கம் தான்! சமூகப் பாதுகாப்பு எண்ணை மறந்தால் ஒரு ஆள் செத்தான்!'' என்பது (என். 27) இதனைச் சுட்டும்.

ஆகவே சமூக இயக்கமாக இக்கதைகளில் காட்டப்படும் நெறி, முற்றிலும் ஒரு அமைப்பிற்குக் கட்டுப்பட்டதாக, வேறு பாடுகளற்று ஒரே அமைப்பொழுங்கில் சிதைவற்று ஒரே சீராகச் செல்வதை அறிய முடிகிறது. இப்படிப்பட்ட இயக்கத்தால் தான் சமூக உறுப்பினர் அனைவருக்கும், வேறுபாடின்றி, தடையின்றி ஒரேவிதமான உணவு, உடை, உறையுள் எனும் மனிதனின் அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யவியலும் என்பது படைப்பாளரின் கருத்தாகப் புலப்படு

கிறது. சமத்துவத்திற்கு மனிதன் கொடுக்க வேண்டிய விலை உரிமை / விடுதலை என்பதாக அமைவதும் வெளிப்படுகிறது.

## குடும்பம்

ஆண், பெண் இணைவில், தாய், தந்தை, உடன்பிறந்தோர் என ஒரு கூரையின் கீழ் வாழும் சமூக நிறுவனம் குடும்பமாக இன்றமைதல் நாளை பெறும் சமூகமதிப்பும், எதிர்காலவியல் பொருண்மையின் பிறிதொரு சிறப்பான பொருட்கூறாகிறது. இது மூவகையாக இவ் விலக்கியங்களில் இயம்பப்பட்டுள்ளது.

இந்நூற்றாண்டின் தன்மையே, மரபுத்தொடர்ச்சியாகச் சில மாற்றங்களுடன் அமைவதை, கி.பி. 2084-இல் கஸ்தூரிரங்கன் காட்டுகிறார். 'ஏராளமான கிராமத்து ஜனங்கள் வந்து கொண்டிருந்தனர். ருமாவும் நரேனும் அந்த வட்டப் பிரதிமைக்கு முன்னே ஒரு பீடத்தில் அருகருகாக அமர்ந்து கொண்டனர். ஒரு புரோகிதர் முன்னே வந்தார். புரியாத மொழியில் மந்திரங்கள் ஓத ஆரம்பித்தார். நரேனின் கையில் ஒரு தாலிச் சரத்தைக் கொடுத்தார். ஷெனாய் வாத்தியம் ஓங்கி ஒலித்தது. பறைகள் அதிர்ந்தன. நரேன் ருமாவின் கழுத்தில் தாலியைக் கட்டினான். பிறகு இருவரும் வட்டப் பிரதிமையை மூன்று முறை வலம் வந்தனர்.

அதன் முன்னே விழுந்து வணங்கினர். சுற்றி இருந்தவர் மலர்களைத் தூவி ஆசிர்வதித்தனர். காலக் கடவுளின் முன்னிலையில் ஒரு கிராமத்துத் திருமணம் இனிதே நடந்தேறியது (17:25).... முன்காலத்தில் ஆயிரக்கணக்கான விருந்தாளிகளுக்குக் கல்யாணச் சாப்பாடு போட்டு அனுப்புவார்கள். இப்போதெல்லாம் கோயிலில் இனிப்புகள் வழங்குவதோடு சரி (18:2) என்று குடும்பத்து உறவினை அறிவிக்கும் திருமணச் சடங்கு முதல் வகையாகிறது.

தங்கள் வாழ்க்கைத் துணையைத் தாங்களே தேடிக் கொள்வோர் சமூக அமைப்பின்படி 'ஆண் - பெண் வாழ்க்கை ஒப்பந்தப்பதிவாளர்' அலுவலகத்தில் பதிவு செய்து கொள்

வதும் இதனுள் காட்டப்படுகிறது. மற்றும் ''புதிதாகத் தம்பதி களாகிறவர் யாராவது ஏற்கெனவே இன்னொருவருடன் வாழ்க்கை ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டிருக்கலாம். அப்படி இல்லை என்று நிச்சயம் செய்து கொள்வதற்குத்தான் இந்த கம்ப்யூட்டர் வெரிஃபிகேஷன்'' (17:2) அமைவதும் காட்டப் படுகிறது.

மற்றுமிரு வகைகளைச் சுஜாதா தம் படைப்புகளில் புலப்படுத்துகிறார். எதுவும் நிகழலாம்; எப்படியும் நிகழக் கூடும் என்பதால் ஒரு பொருள் குறித்தே பலவிதமான கற்பனை களை, கணிப்புகளை உருவாக்குவதற்கு எதிர்காலவியல் இட னளிக்கிறது. எனவே படைப்பாளர் தம்முள் முரண்படுகிறார் என்ற குற்றச்சாட்டிற்கு இங்கு இடனில்லை. இவரது கற்பனை முற்றிலுமாக மரபைப் புறந்தள்ளுகிறது. சமூக இயக்கத்தை இயக்கும் தலைமையே இன்னார்க்கு இன்னார் என்ற கட்டுப் பாட்டை விதித்தல் ஒருநிலை; தலைமை குறிப்பிடுபவரை, குறிப்பிட்ட நாளில் ஏற்றுக்கொள்ளும் இயந்திரத்தனமாக அது அமைகிறது. ''உங்கள் திருமண பர்மிட்டைக் காண்பி யுங்கள்..... பர்மிட் இல்லாமல் கல்யாணம் செய்து கொண் டிருக்கிறீர்கள். குழந்தை வேறு பெற்றுக் கொண்டு விட்டீர்கள். அரசாங்கத்துக்கு எதிராகக் குற்றம்.'' (தே. 113) என்பது சான்றா கிறது.

குடும்ப உறவு அல்லது அமைப்பில் நம்பிக்கையற்ற அல்லது தேவையற்றதாகக் கருதும் சமூக அமைப்பில், ஒரு வருக்கொருவர் என்ற கட்டுப்பாடகன்று தேவைக்கேற்ப என்ப தாக அமையும் என்பதை, 'இங்கே பிறப்புகள் எப்படி நிகழ்கின் றன தெரியுமா?... சில ஆண்கள் அதற்கென்றே இருக்கிறார் கள். அவர்களை மிகவும் புஷ்டியுடன் என்னென்னவோ பிரத்தியேக இன்ஜெக்ஷன் எல்லாம் கொடுத்துத் தனியாக வளர்க்கிறார்கள். அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள். ஒவ்வொரு பெண்ணும் அவள் பத்தொன்பதாம் வயதில் நாள் பார்த்து அங்கே அனுப்பப்படுகிறாள். அந்தப் பதினைந்து தினங்களில் அவளுக்கு ட்ரீட்மெண்ட்டின் தரம் மாறும்..... கர்ப்பமாகும் வரை அவள் அங்கே இருக்கிறாள். அப்புறம் அவள் ஓய்வு பெறுகிறாள். வேறு மருந்துகள்' (சொ. 92-93) என்பதாக மூன்றாம் வகை பேசப்படுகிறது.

குடும்ப உருவாக்கத்திற்கான அடிப்படையமைக்கும் திருமண உறவே இங்ஙனம் மாற்றம் பெறுவதால் இன்று வலியுறுத்தப்படும் கற்புநிலையும் வேண்டாததாகிறது. 'இந்தப் புதிய சகாப்தத்தில் கணவனைச் சட்டை போல மாற்றிக் கொள்ள அரசாங்கம் அனுமதிக்கும்போது, செக்ஸ் என்பதில் இச்சை மட்டும் மிச்சமிருக்க, அதன் மற்ற அவஸ்தைகளை யெல்லாம் மெஷின்களும் இன்க்யூபேட்டர்களும் எடுத்துக் கொண்டுவிட, பிறப்பு என்பது ஒரு அரசாங்கப் புள்ளி விவர மாக இருக்கும்போது, ஒரு ராத்திரி நானும் நீயும் சுகமாக இருப்பதில் எந்த விதமான ஒழுக்கப்பிரச்னையோ, கற்பிழப்போ நம்பிக்கைத் துரோகமோ இல்லாதபோது என்ன தயக்கம் நிலா' (என். 79-80) என அது சுட்டப்படுகிறது.

இங்கு ஆர்னிகா நாசர் ஆழமான உண்மையான காதலையும் படைத்திருப்பது (ஆ.வி. 4.12.94, அழிவின் விளிம்பில்) நவிலத்தக்கது. இவர் பிறிதொரு கதையில் எதிர் காலத்தில் ஆண் கர்ப்பமடையும் விநோதத்தையும், (ஆ.வ. 6.11.94, ஆண் கர்ப்பம்) கற்பித்துள்ளார். குடும்ப வாழ்விற்கு எடுத்துக்காட்டான பிள்ளைப்பேற்றிற்கும் அரசாங்கத்தின் அனுமதியை எதிர் நோக்கியிருக்கும் அவலம் நிகழக் கூடும் என்பதைச் சுஜாதா, ''நிலாவுக்கு உள்ளமெல்லாம் பதறியது. காரணம், அவள் மார்பில் பத்திரப்படுத்தியிருந்த அரசாங்கக் கடிதத் திலிருந்த அனுமதி -

*நிலா - சிபி*

*107836 - 11343 - இ*

உங்கள் இருவருக்கும் ஆண்குழந்தை பெற்றுக் கொள்ள அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. பெயர் மணி. இந்த அனுமதிப் பத்திரம் 2022-ம் ஆண்டு சூன் இருபத்தைந்து வரை செல்லும். அதற்குள் கர்ப்பம் ஏற்படவில்லையெனில் ஒரே ஒரு முறை அனுமதி நீடிக்கப் படுவதற்கு அரசின் மக்கடதொகை கட்டுப்பாட்டுப் பிரிவின் பகுதியில் விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும். கர்ப்பம் பெண் குழந்தை என்று தெரிந் தால் உடனே ம.க.பிரிவின் 'D' பகுதிக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும். மீறினால் குற்றம்.

ஒப்பம் **ஆ.எம்.**

இந்திய அரசு மக்கட் பிரிவுக்காக

என, என் இனிய இயந்திராவில் (5-6) உணர்த்துகிறார்.

இவற்றின் காரணமாக எதிர்காலச் சமுதாயத்தில் குடும்ப உறவுகள் அதிகமாகப் பாதிப்படையும் என்ற கணிப்பும் காணப் படுகிறது. அதனை, கிருஷ்ணா டாவின்ஸி தமது 'பதினைந்து நிமிடங்கள்' எனும் சிறுகதையில் (குமுதம்);

ஓ, நேரமாகி விட்டது. மகா எழுந்தாள். வாசலில் கார் ஹார்ன் சத்தம் கேட்டது.

மகா, இன்னும் கொஞ்சநேரம்... எனக்காக....

ஓ.... முடியாது..... திரும்பி நடந்தாள்

ஏறக்குறைய ஓடினாள். ராம் சந்தர் மூச்சிறைக்கப் பின் தொடர்ந்தார்.... 'மகா..... நில்லு .... நில்லு....

கார் கதவு திறக்க உள்ளே அமர்ந்து கொண்டாள். ஜன்ன லின் வழியே அப்பாவின் கலங்கிய முகத்தைப் பார்த்தாள். கார் உயிர் பெற்றது.

மகா, எப்போ? எப்போ மறுபடி வருகிறாய்?

மகா டிஜிடல் திரையைப் பார்த்தபடி 12.2.2299 மாலை ஏழுமணியிலிருந்து ஏழு பதினைந்து வரை நேரம் கொடுக்கிறேன். வருகிறேன் அப்பா.

கார் சீறிக்கொண்டு பறந்தது.

அவர் இன்னும் பன்னிரண்டு வருடங்கள் காத்திருக்க வேண்டும். அடுத்த பதினைந்து நிமிடங்களுக்காக

என நவின்றுள்ளார்.

குழந்தை வளர்ப்பு அரசின் பராமரிப்பிற்குட்படுவ தால் அதன் சிந்தனையில் கூட மாற்றங்கள் உருவாக்கப்படக் கூடும் என்பதைச் சொர்க்கத் தீவு ''உடல் நிலையத்தில் வரிசை யாக இன்க்யு பேட்டர்கள் போல ஒரு ஹால் நிறைய இருந்தன. அதில் ஒரே மாதிரியான சிவப்பு முகக்குழந்தைகள், முகத்தைச் சுளித்துக் கொண்டு அழுது கொண்டிருந்தன... எதிர்கால பொம்மைகள்..... ஒரு குழந்தை ஒரு சிறிய நாற்காலியில் உட்கார வைக்கப்பட்டு பெல்ட்டினால் நாற்காலியுடன் கட்டப் பட்டிருந்து. அதனருகில் ஒரு பெண், கையில் ஒரு பட்டன்.

இந்தப் பிள்ளை இயல்பாகவே அம்மா என்று சொல்கிறது.... ஒவ்வொரு தடவையும் அது அம்மா என்னும் போது அதற்கு அதிர்ச்சி தரப்படுகிறது. பதினைந்து நாட்களில் அந்த வார்த்தை அழிந்து விடும்.

அந்த சிசு மிரண்டு மிரண்டு பார்த்துக் கொண்டிருந்தது. பக்கத்தில் வைத்திருந்த வண்ணப் பூக்களைப் பார்த்துச் சிரித்து விட்டு 'ம்மா' என்றது.... அழகாக.

அந்தப் பெண் பட்டனை அழுத்த, அதற்குத் தூக்கி வாரிப் போட்டது!

''போக்கனாவஸ்கியின் முறை!' என்றார் டைரக்டர்'' என்பதாகக் காட்சிப்படுத்துகிறது.

நேரடி உறவின்றிக் குழந்தை உருவாக்கமும் தோன்றக் கூடும் என்பதை, 'தந்தை அல்லது கார்டியன் பெயர் - ருமாவைக் கேட்டபோது விழித்தாள். அவளுக்குத் தந்தை தாயார் என்று யாரும் இல்லை. சோதனைக் குழாயில், பிறந்து இன்குபேட்டரில் வளர்ந்தவள். கார்டியனென்று இருந்த அவளது செவிலித் தாய் இறந்து போய் விட்டாள். (கி.பி. 11:2) எனக் காட்டியுள்ளார்.

எனவே, குடும்பம் என்பது எதிர்காலத்தில் மக்கள் வரலாற்றியலில் மட்டுமே காணக்கூடியதொன்றாக மாறும் சூழல் நேரிடக்கூடும் என்பது இப்படைப்பாளர் எண்ணமாகிறது.

**பெண்கள்**

பெண்ணுரிமை, பெண்விடுதலை, பெண்கள் போராட்டம் எனப் பேசப்படும் இந்நாளின் மாற்றம், இவற்றின் காரணமாக எதிர்வரும் காலங்களில் வெற்றியடையும் என்பதே படைப்பாளரின் கருத்தாகக் காணப்படுகிறது. கல்வி, பணியாற்றல், உயர் பதவி என அனைத்திலும் ஆணுக்கு நிகராகப் படைக்கப்பட்டுள்ளனர். ஆர்னிகா நாசர் தம் சிறுகதையில் ஒரு பெண்ணையே நாட்டின் தலைவியாக்கி (எதிர் நிலை என்ற போதிலும்) அதற்குரிய தகுதிகள் அவளுக்கு உருவாக்கப் படும் என்பதைக் (ஆண் கர்ப்பம் ஆ.வி. 6.11.94) காட்டுகிறார்.

பெண்ணின் விருப்பின்றி ஓர் ஆண்மகன் அவளை அணுகுதலும் இயலாது என்பது, 'பெண்கள் அனுமதியின்றித் தொட்டால் இந்த நாட்டில் என்ன தண்டனை என்று தெரியுமா? பெண்கள் வெறும் போகப் பொருட்களோ நுகர் பொருட் களோ இல்லை என்று ஜீவாவின் கையேடு கூடக் குறிப்பிடு கிறதே! என்ன தைரியத்தில் என்னைத் தொடுகிறீர்கள்' என்று பெண்கள் துணிவுடன் எதிர்க்கும் நிலை (என். 154) குறிக்கப் படுகிறது. மற்றும், ''மானிட்டர் திரையில் அதிகாரியின் முகம் தெரிய, 'என்ன வேண்டும் பெண்ணே?' என்று சிரித்தார்.

'என் பெயர் நித்யா, என்னை என் வீட்டுக்கு அழைத்துச் செல்ல யாராவது ஒரு பெண்ணை அனுப்ப வேண்டும். என் விருப்பம் இல்லாமல் ஒருவன் என்னைத் தாயாக்க முயற்சி செய்கிறான்.

'அப்படியா? மிகப் பெரிய குற்றம்! உடனே அனுப்புகி றோம். பதினைந்து செகண்டுகளில். எங்கே இருக்கிறாய்....?' எனும் பகுதியும் இதனை வலியுறுத்தும்.

ஆண்டாண்டு காலமாகப் பெண்ணைத் தாழ்த்தியே வாழ்ந்த ஆணினம் அவ்வளவு சுலபமாகத் தன் பிடியிலிருந்து பெண்ணை விட்டுவிட இயலுமா, இயலாதே என்ற சிந்தனை யால் பெண் என்னதான் கல்வியில், பணியில், பொருளாதாரத் தில், அதிகாரத்தில் ஆணுக்கு இணையாக நின்றாலும் அவள் ஆணுக்கு ஒரு போகப் பொருளே என்பதில் மாற்றம் ஏற் படல் அரிது என்பதனையும் சுட்டியுள்ளனர். 'நீ ஒரு பெண். ஒரு போதைப் பொருள். நீ ஒரு அழகான உடல். உள்வட்டத்திற்கு ஏற்பட்ட மனித மெத்தை.... உன்போன்று முன்னூறு பெண்கள் இருக்கிறார்கள். நீ தேவையில்லை! உன்னைக் கொன்று விடலாம். (சொ. 146) என்பது சான்று.

**முதியோர்**

வாழ்வின் இறுதிக்கட்டத்தை நெருங்கிக் கொண்டிருப் போரைத் தற்காலச் சமுதாயமே ஒதுக்க முனைகையில் அவர் களது எதிர்காலம் எப்படியிருக்கும் என்ற வினாவிற்கும் இவ் விலக்கிய படைப்புகள் விடைபகர்ந்துள்ளன. அவ்விடைகள்

அவலமாக அமைந்திருப்பது உன்னத்தக்கது. ''வயசாயிடுத்துங்கற ஒரே காரணத்துக்காக என்னை இங்கு கொண்டு வந்திருக் காங்க. இந்த ஜீவாவுக்கு என்ன உரிமை இருக்கு? என்னை மரண பயத்தாலேயே பைத்தியமாக ஆக்கிட்டாங்க.... மருந்து பயத்திலேயே நான் பேசறதில்லை. பேசினா சண்டை வருது..... ஒரு டோஸ் கொடுத்தா ஒரு வாரம் கண்ணைச் சுழற்றுது.... என்ன ஒரு அநியாயம் பார்த்தியா?'' (என். 100 - 101). என்ற ஏக்கவுரை வாசகர் உள்ளத்தையும் கலங்கச் செய்யும்.

இயற்கை நியதிக்கு மாறாக, குறிப்பிட்ட வயதிற்குப் பின் மானிடரைக் கொல்விக்கும் நிலை கூடத் தோன்றலாம் என்ற அவநம்பிக்கை நிலையும் குறிக்கப்பட்டுள்ளது.

''ஆம்! ஐம்பத்து நான்கு வயது முடிந்ததும் உடனே கொன்று விடுவோம். தெரியாதா உங்களுக்கு? சத்யா சொல்ல வில்லையா?''

யூ மீன்.... கொல்கிறீர்களா?

இதில் என்ன ஆச்சரியம்? ஜனக்கட்டுப்பாடு. சத்யாவுக்கு இதில் மிகுந்த அக்கறை!

அது குற்றமில்லையா?

குற்றமா? அது விதி! கம்ப்யூட்டரின் விதி! ஒவ்வொரு வருஷமும் சராசரி கணக்கிட்டுக் கொல்லும் வயது சற்று மாறும்.... அதற்கென்றே கம்ப்யூட்டரில் தனி ப்ரோக்கிராம் இருக்கிறது.

எனக்குச் சற்று வியர்த்தது.

என்ன செய்வீர்கள்? ஒரு ஆளைக் கூப்பிட்டு, 'வா, வந்து செத்துப்போ' என்பீர்களா?

அதெல்லாம் இல்லை. ராத்திரி அமைதிப்படை வந்து அவனை அழைத்துப் போகும். காலை அவன் இருக்கமாட் டான். அவன் கார்டை நீக்கிவிடுவோம். வலியே தெரியாது என்று சொல்கிறார்கள். எனக்கு இன்னும் பதின்மூன்று வருஷம் இருக்கிறது' (சொ. 74) என்று அது மிக இயல்பானதொன்றாகச் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளமையும் காட்டப் படுகிறது.

இவற்றிற்கு முற்றிலும் மாறுபட்ட சூழலும் அமையலாம் என்ற நம்பிக்கைக் கீற்று, 'அவருக்கும் வயது நூறுக்கு மேல் ஆகிவிட்டது. உடம்பில் ஒவ்வொரு உறுப்பாகத் தேய்மானத்தில் மடிந்து போக உடனடியாகப் பதிலுக்கு உறுப்புகளைப் பொருத்திவிடும் டெக்னாலஜி வந்துவிட்டது. புரொபஸரின் இதயம் செயற்கை ரப்பர். கல்லீரல், கணையம், சிறுநீரகம் எல்லாவற்றையும் மாற்றியாகி விட்டது. ஒரு கண் செயற்கை. போட்டோ லென்ஸ் பொருத்தப்பட்டு மூளையுடன் இணைக்கப்பட்டது. முகத்தின் சுருக்கங்கள் பிளாஸ்டிக் சர்ஜரியில் சமனப்படுத்தப்பட்டவை. தலையில் வெள்ளை மயிர்தான் அவர் முதிர்ந்த வயதைக் காட்டிக் கொடுக்கும். அதையும் கூட சாயம், ஹேர் டிரான்ஸ்ப்ளான்ட் மூலம் இளமையாக்கிவிட முடியும், புரொபஸருக்கு அதில் நாட்டம் இல்லை' என (கி.பி. 1:3) மனிதன் இயற்கையை வென்ற பெருமிதத்துடன் ஒளிர்கின்றது.

## பொது வாழ்வியல்

பொதுவாக வாழ்க்கை முறையில் நேரிடக்கூடிய மாற்றங்களையும் இவ்வெதிர்காலவியல் கதைகள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

''பயோ - டெக்னாலஜியும் ரோபாட்டிக்ஸும் மனிதனின் தேவை, வசதி ஆகியவற்றில் வியக்கத்தக்க அளவில் முன்னேற்றம் காணச் செய்திருந்தன. அடிமை வேலைகளைச் செய்ய ரோபாட்டுகள் பயன்படுத்தப்படுகின்றன. அழகிய ரோபாட்டுகள் எல்லா வீடுகளிலும் பணியாட்களாக இருக்கின்றன. மெதுவாக ஊர்ந்த ரயில்கள் பஸ்கள் போய் குறைந்தது 300 மைல் வேகத்தில் போகும் தரை வாகனங்கள் ஒலி வேகத்தை விட மூன்று மடங்கு வேகத்தில் வானில் பறக்கும் மிஸைல் கிராப்டுகள், ...... பயோ டெக்னாலஜியினால் நிலங்களில் விளைச்சல் நூறுமடங்கு உயர்ந்து விட்டது. அக்வா கல்சர் மூலம் நீர்ப்பரப்புகளில் உணவுப் பொருள்களாக இருக்கும் தாவர இனம், மீன் இனம் பலமடங்கு பெருகியுள்ளன.'' என்று இம்மாற்றங்கள் பொதுநிலையில் (கி.பி. 4:20) விளக்கப் பெற்றுள்ளன.

'அரசாங்கத்துக்குத்தான் இரண்டு எழுத்துக்கு மேல் பெயர் உதவாதே. எல்லாருமே ரவி, புலி, புவி, மதி, சுசி, திரு.' என்பதாக (என். 6) மிகச் சுருங்கிய வடிவம் மக்கட் பெயராகச் சுட்டப்படுகிறது. ''என்ஜிபி.யில் பிடித்த கார் இது. என்.ஜி.பி. என்பது பழைய நாக்பூர். நியூடெல்லி என்டிஎல். மதறாஸ் இப்போது நீயூமெட்றாஸ் என்பதைக் குறிக்கும் என்எம்எஸ் ஆகிவிட்டது. இப்படி உலக நகரங்கள் அனைத்துக்கும் மூன்றெழுத்துப் பெயர்கள் வந்துவிட்டன. கம்யூனிகேஷன்ஸ் வசதிக்கு மூன்றெழுத்து வசதியாக இருக்கிறதாம்.'' என்று (கி.பி. 1:2) விளக்கமும் அளிக்கப்படுகிறது.

''ஹெளஸ் கீப்பர் சிரித்த முகம் மாறாமல் உணவு பரிமாறினாள். ஃபிரைய்ட் ரைஸ், ஸ்ட் ஃப்ட்பிரிஞ்சால், உருளைக் கிழங்கு பொறியல் என்று அடுக்கடுக்காய் தட்டுக்கள் நிறைய வகையாக வந்தன. தட்டுக்கள் அடியிலேயே பொருத்தப் பட்ட 'ஹிட்டீங் எலிமெண்ட்' உணவைச் சூடாக வைத்திருந்தது.

ருமா யு ஆர் எ செளத் இண்டியன். யு வில் லைக் ரைஸ் கேக்ஸ் என்றார், புறொபஸர். அடுத்த நிமிஷம் ஒரு பிளேட்டில் ஒரு ரூபாய் அளவுக்கு வெள்ளையாக ஒரு பொருள் வந்தது. ஒரு எவர்சில்வர் ஜாடி கூடவே வந்தது. அதன் மேல் பாகம் ஒரு பித்தானை அழுத்தினார் புறொபசர். ஜாடியின் மூக்கைப் பிளேட்டின் மேலே காண்பித்தார்.

'ஹிஸ்ஸ்' என்று நீராவி வெளிப்பட்டது. அரை நிமிடத்தில் ரூபாய் அளவு இருந்த அந்தப் பொருள் புஸ்ஸென்று உப்பி விட்டது. மல்லிகைப்பூ வெண்மை.

ஓ.... இட்லீஸ்...! மை ஃபேவரைட்! என்று குதூகலித்தாள் ருமா. 'இட்லிதான் டி - ஹைறட்ரேட் செய்து டப்பாவில் போட்டு வருகிறது. சாம்பார் வேண்டாமா.... இந்த மாத்திரைகளைப் பிளேட்டில் வைத்துக் கொள்' என்று பழுப்பு நிறமான மாத்திரைகளை ஸெல்போனிலிருந்து உறித்துக் கொடுத்தார் புறொபசர்.

நீராவியில் கரைந்து குழம்பாகிவிட்டது.

'இவற்றுக்குப் பெயர் காரி - பில்ஸ். வெளிநாடுகளில் ஏகக் கிராக்கி! உங்களது சாம்பார் பார்முலாவை வில்லைகளாகத் தயாரித்து வருகிறார்கள்' என்று (கி.பி. 12:?) உணவுப் பழக்கம் சுட்டப்படுகிறது.

''நரேனின் அம்மா இரண்டு டம்ளர்களில் ஸோமா ஜூஸ் கொண்டு வைத்தாள்.

அட இது கிராமத்திலேயும் இருக்கிறதா என்ன? என்று அதிசயித்தாள் ருமா.

நரேனுக்காக வாங்கி வைத்திருக்கிறோம். அவன் வேறு பானம் எதையும் குடிப்பதில்லை.

கொஞ்சம் விலை கூடுதல் ஆனால் இதுதான் ஆரோக்கியம் என்றான் நரேன்.

எங்களுக்குக் காபி, டீ தான் பழக்கம். கிராமங்களில் அதுதான் மலிவாகக் கிடைக்கிறது.

உணவு எல்லாம் புதிதாகச் சமைப்பீர்கள் இல்லையா? எங்களைப் போல டப்பாவிலிருந்து எடுத்துச் சாப்பிட வேண்டாமே!

எல்லாம் தோட்டத்தில் விளைந்த காய்கறிகள், பழங்கள், கோதுமை எங்கள் நிலத்திலேயே விளைகிறது. ''(கி.பி. 17:23) என்று அன்றும் கிராம, நகர வேறுபாடுகள் அமையும் என்பது உணவுப் பழக்கத்தின் வழி உணர்த்தப்படுகிறது.

மனிதனின் அடிப்படைத் தேவையுள் பிறிதொன்றான உடை பற்றிய எதிர்கால எண்ணங்களும் இடம் பெற்றுள்ளன. ''வெளிர் நீலத்தில் ஓவர் ஆல் போல அணிந்து கொண்டு என் எதிரே அந்தத் தடியர்கள்..... (சொ. 23)...... அவனும் இவர்கள் போல் வெளிர் நீலத்தில் அணிந்திருந்தான் (சொ. 36) என அனைவருக்கும் ஒரே விதமான உடை அமைய வாய்ப்புண்டு என்பது புலப்படுத்தப்பட்டுள்ளது.

'புத்துணர்ச்சியுடன் வெளிவந்து தன் நவீனப்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் ஆடைகளை அணிந்து கொண்டான்' (ஆ.வி. 13.11.94, ப.க 78) எனப் புதிய வரவுகளும் இடம் பெறுகின்றன.

உறையுள் அரசின் பொறுப்பில் அனைவருக்கும் அளிக்கப்படும் என நம்பப்படுகிறது. ''உங்க வீட்டு முன் அறைக்குப் புதுசா குடிவரப் போகிற மாணவன் நான். இந்தாங்க அரசாங்கக் கடிதம், அவன் தன் பைக்குள்ளிருந்த கடிதத்தை எடுத்துக் காட்ட, அவர்கள் முன்னறை அவனுக்கு அளிக்கப் பட்டிருந்ததை, வீட்டுவசதிப் பிரிவிலிருந்து தெரிவித்த ஆணைக் கடிதம்'' (என். 11); ''நரேனின் வீடு அடர்ந்த மாந் தோப்புக்கு நடுவே 12 வீடுகள் அடங்கிய ஒரு பெரிய கட்டடத்தில் இருந்தது. கீழ்ப்பகுதி கற்களாலும் மேற்பகுதி மரங்களாலும் கட்டப்பட்ட வீடுகள்.... சின்ன படகு மாதிரி அழகாக வசதியாக இருக்கிறது வீடு' என்றாள் ருமா. குடும்பத்துக்கு ஐநூறு சதுர அடி இடம் என்று ஒதுக்கியிருக்கிறார்கள். சொந்தமாக வீடு என்று யாருக்கும் இல்லை. இது கிராம வீட்டு வசதி வாரியத்தின் சொத்து. மாதம் ஐநூறு டாலர் வாடகை'' (கி.பி. 17:23) என்பன இதனைக் காட்டுகின்றன.

உலக நடப்பினை அறிந்துகொள்ளும் அத்தியாவசியமான செய்தி இதழ்கள் பற்றிய கருத்துக் கணிப்பும், 'வீட்டுக்கு வீடு என்று கோடிக்கணக்கான வீடுகளில் அமைக்கப்பட்ட சாதனங்கள் வீட்டுக் குள்ளேயே சுடச்சுடப் பட்டனின் தட்டலில் பத்திரிகை அடித்துக் கொடுத்து விடும். படித்துவிட்டு மற்றொரு பட்டனை மிதித்தால் காகிதம் அழிந்துபோய் அடுத்த பதிப்புக்குத் தயாராகி உள்ளே போய் விடும். குப்பை இல்லை, கூளம் இல்லை. காகிதம் எலெக்ட்ரோ காகிதம். சேதமடைய வேண்டியதில்லை. மேலும் எல்லோருக்கும் எல்லாச் செய்தியும் தேவை இல்லை. எனவே தலைப்புகளை மட்டும் முதலில் காட்டும். அதை மேய்ந்துவிட்டுத் தேவைப் பட்ட செய்தியை மட்டும் விவரமாகப் படித்துக் கொள்ளலாம். உங்களுக்கு விளையாட்டில் தனிப்பட்ட ஆர்வமா? விளையாட்டுப் பிரதியை மட்டும் வரவழைத்துக் கொள்ளலாம். பூமிக்கும் செவ்வாய்க் கிரகத்துக்கும் நடக்கும் கால் பந்தாட்டத்தைப் பற்றிக் கிராங்மன் போன்ற நிபுணர்களின் கட்டுரையுடன் அடித்துக் கொடுக்கும்' என (தே. 47) அமைகிறது. தகவல் மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்களின் பெருமிதத்திற்குரிய வளர்ச்சியைக் கி.பி. 2084 காட்டுகிறது.

''வீடியோ போன் ஒளிர்ந்தது. பீப் பீப் என்று சிவப்பு விளக்கு எரிந்தது.

புரொபசர் ரமேசன் கண்ட்ரோல் பட்டனை அழுத்தி எஸ் என்றார்.

இன்டெக்ஸ்பிரஸ் ரிப்போர்ட்டர் வான்ட்ஸ் டு ஸ்பீக் டு புரொபசர் ரமேசன்' என்றது வீடியோ செய்தி.

'புட் ஹிம் ஆன்' என்றார் புரொபசர்

வீடியோவில் ஒரு பெண்ணின் முகம் தெரிந்தது.

'புரொபசர் ரமேசன் - ஐயாம் இன்டெக்ஸ்பிரஸ் ரிப் போர்ட்டர் சர்மீ'

'எஸ் சர்மீ! உனக்கு என்ன வேணும்/ ஐயாம் பிஸி' 'டாக்டர் சதீஷ்.... உங்கள் கலீக் ஒரு ஸ்டேட்மெண்ட் தந்திருக்கிறார். வெரி டமேஜிங் அபௌட் யுவர் வொர்க்! புரொபசரின் முகம் மாறியது.

ஐடோன்ட் கேர் வாட் ஹி ஸேஸ்! ஜஸ்ட் நௌ ஐ ஸாக்ட் ஹிம். வேலையை விட்டு நீக்கிய கோபத்தில் ஏதாவது உளறி யிருப்பான்.

உளறல் இல்லை புரொபசர்.... ஹி ஹாஸ் சாலஞ்ச்ட் யூ டு எ டெலிஸ்க்ரீன் டிபேட்! உங்களோடு நேருக்கு நேர் வாதாட தயாராக இருக்கிறார்!

'ஐ ஸீ. நான் தயார்' என்றார் புரொபசர் பொறுமையாக.

'ஐல் ஸெண்ட் யூ ஹிஸ் ஸ்டேட்மெண்ட். பிறகு விவாதத் திற்கு எங்கள் பத்திரிகை சார்பில் ஏற்பாடு செய்கிறோம். என்று மறைந்து போனாள் அந்தப் பெண் நிருபர்'' (கி.பி. 11:?) என்பது அதில் ஒரு பகுதியாம்.

போக்குவரத்தும் வெகுவாக மிக உயர்ந்த அளவில் முன் னேற்றம் அடையக் கூடும் என்பதனை இப்படைப்பாளர் அறிவிக்கின்றனர். ''அந்த ஏபிஸி வண்டி நாலாபுறமும் மூடப் பட்டு சற்றுக் கூண்டு வண்டிபோலவே இருந்தது. தெருக் கைதிகளைப் பொறுக்கிச் செல்வதற்கென்று ஏற்பட்ட வண்டி. அது பத்திரமாகவே இருக்க, ரவி ரோபாட்டின் இடத்தில்

உட்கார்ந்து கொண்டான். ஜீனோ, சிபி, நிலா மூவரும் பின் பக்கம் ஏறிக்கொள்ள, ரவி ஒரு கம்பத்தில் நிறுத்தி வண்டியை சார்ஜ் பண்ணிக் கொண்டான்'' (என். 123); 'எத்தனை தூரம் வந்திருக்கிறான் இந்தப் பிரயாணத்துக்காக.... அஸ்ட்ரா - 7-இல் அவனுக்கு விடுமுறை கிடைத்து, நித்யாவுக்கு விடுமுறை கிடைத்து அங்கிருந்து ரிஸர்வேஷன் கிடைக்காமல் அந்தரத் தில் தொங்கும் அந்தப் பிளாட்பாரத்தில் இரண்டு தினங்கள் கழித்து இடம் கிடைத்து, கிரகப் பிரயாணக் கப்பலில் பூமிக்கு வந்து .... மற்றொரு பூமிப் பிரயாணம் செய்து.... (தே. 103); 'தலையெங்கே வாலெங்கே என்று காண முடியாத, மலைப் பாம்பு போல் நீண்டு படர்ந்த த்ருவே 13-ல் நரேனின் ரோலர் கோஸ்டர் கார் ஒரே சீராக ஸப்ஸானிக் 75' வேகத்தில் நழுவிப் பறந்து கொண்டிருந்தது. பழைய கணக்குப்படி மணிக்கு 550 மைல்'' ...... இந்த ரோலர் கோஸ்டர் பாதையில் மட்டுமே தனியார் கார்கள் போக முடியும் அதுவும் இரண்டுபேர் மட்டும் உட்காரக் கூடிய 'பபிள்' நீர்க்குமிழி வடிவக்கார். மேல் பகுதி ஸீ. த்ரு பாலிவினைல் கண்ணாடி. கீழ்ப்பாதி ஃபைபர் க்ளாஸ். அடியில் மாக்னெட் பிளேட்டு காந்தப்பாதை மேல் அரை அடி விலகி மிதந்து பறக்கும் அற்புத சவாரி ... காந்தப் பாளங் கள் பொருத்தப்பட்ட ஆர்சி பாதை தரையிலிருந்து 30 அடி உயரத்தில் அலுமினியம் பிளாட்டினக் கலப்புக் கம்பங்களின் மேல் அமைக்கப்பட்டிருந்தது. கார் பாதையை விட்டு விலகினால் நேர் கீழே சிகப்புப் பாதையில் போய் விழும். மணிக்கொரு முறை அது வழியே செல்லும் சரக்கு ரயிலின் பாதைத் தடங் கலை விலக்கும் கைகள் அதைத் தூக்கி எறிந்து விடும்'' (கி.பி. 1: 1-3) என்பனவாகக் கதாசிரியரின் கற்பனைகள் இதில் சிற கடித்துள்ளன.

சுற்றுப்புறச் சுகாதாரம் மிகுந்த அக்கறையுடன் பேணப் படும் என்பது 'வெள்ளை மயில் போல விசிறியடித்த நீர்த் திரையால் கடைசன்னல்கள் அலம்பப்பட, ஆளுருவமே இல்லா மல் எல்லாமே சாது இயந்திரங்கள் தத்தம் வேலையைப் பார்த் துக் கொண்டிருந்தன. சாலையில் காகிதக் குப்பை பொறுக்கு வது, வீட்டு வாசல் குப்பைகளைச் சேகரிப்பது, அலம்புவது பெருக்குவது - 'எத்தனை சௌகரியம் இயந்திரங்களால்' (என். 21-22) எனக் காட்டப்படுகிறது.

''புத்தாண்டை எதிர் நோக்கி வானம் வெளிச்சத்தில் ஆர வாரித்துக் கொண்டிருந்தது. தெருக்களில் மக்கள் அனுமதிக்கப் பட்ட மகிழ்ச்சியில் உற்சாகமாக ஊடாடிக் கொண்டிருந்தார் கள்' (என். 1) என்பதால் விழாக்களும் அவை தொடர்பான கொண்டாட்டங்களும் எதிர்வரும் காலத்திலும் தொடரும் எனத் தெரிகிறது.

பொழுது போக்குகளுக்கும் இடனுண்டு என்பதும், அதன் பின் ஜேவ் என்கிற விளையாட்டு விளையாடினார்கள். கிரிக்கெட், ஹாக்கி போன்றவற்றைத் தடைசெய்ததிலிருந்து, அரசாங்கம் சொல்லிக் கொடுத்த விளையாட்டுகளில் தலையா யது ஜேவ். மனிதர்களும் ரோபாட்டுகளும் விளையாடும் ஆட் டம். ஜேவ் என்கிற ஒரு ரோபாட் இயங்கும். அதை மனித கட்சிக்காரர்கள் பிடிக்க வேண்டும். பிடித்துக் கொல்ல வேண்டும். ரோபாட் மிகத் திறமையாக ஓடும். அது யாரை யும் எதிர்க்காது. யாருக்கும் துன்பம் கிடையாது. முட்டாது, மோதாது, மைதானத்தின் எல்லையை மீறாது. அதைப் பிடிக்க வேண்டும். அவ்வளவுதான்; ஜேவ் ஆடுவதற்கு, பிடிப்போன் எடுப்போன், அடிப்போன் என்று தனித்தனி விபாகங்கள் உண்டு. கடைசியில் ரோபாட்டைக் கொல்கிறவனுக்கு வெற் றிச் செல்வன் (வெ.செ) என்கிற பட்டம் ஜீவாவே கொடுப் பார். (என். 75 - 76) என்பதால் அறியலாம்.

ரோபாட் சர்க்கஸ் என்பது நாட்டின் வருஷாந்திர மெகா விழா! பல்வேறு திசைகளிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும், ரோபாட்டுகள் வந்திறங்கி சதுரங்கம், ஜேவ், ஜுக்கு நடனம், மெட்டுக்கட்டும் போட்டி, சின்தஸைஸர்கான போட்டி என்று எத்தனையோ நிகழ்ச்சிகள். யார் மனிதன், யார் இயந்திர ரோபாட் என்று சொல்ல முடியாதபடி மானிடர்களிடையே இயந்திரப் புழக்கம் (என். 215) எனும் சிந்தனை வெளிப்பாடு விழாவும் பொழுது போக்கும் ஒருங்கிணைந்து செயல் படுவது, புதிய விழாக்களின் இணைவு, மனிதர்க்கு இணையாக இயந் திரங்கள் செயல்படுதல் என்பனவற்றை முன்னுணர்த்துகின் றன. இன்றைய சீட்டாட்டமும் தொடரும் வாய்ப்புள்ளதைச் சுட்டியுள்ளனர். (ஆ.வி. 20:1.1.94).

மக்கள் பேசும் மொழியிலும் மாற்றம் ஏற்படக்கூடும் என்பது,

''புதுத்தமிழா?

ஆம், கம்ப்யூட்டருக்காக நாங்கள் அமைத்துக் கொண்ட சுலபமான தமிழ் இது.

சுலபமா? தலைகால் புரியவில்லையே?

விதிகள் தெரிந்தால் சுலபம். மொத்தம் முப்பத்து மூன்று எழுத்துக்கள் தாம். பன்னிரண்டு உயிர் எழுத்துக்கள் இருபத் தொரு மெய் எழுத்துக்கள். 'ந' கிடையாது. ஒற்றெழுத்துப் புள்ளி கிடையாது. பழைய தமிழில் க் என்பது புதிய தமிழில் க. பழைய க இதில் க அ. கா என்பது க ஆ. கி என்பது கஇ. இப்பொழுது பாருங்கள் ச உ ர அ ங க அ த த இ ல என்பது சுரங்கத்தில் என்று ஆகிறது. கொஞ்சம் பழக வேண்டும்!

இதில் என்ன பலன்?

இருநூற்று எழுபத்தாறு எழுத்து எங்கே? முப்பத்து மூன்று எங்கே! ASc Code இல் சுலபமாக அடக்கி விட்டோம். இதைத்தான் எங்கள் பள்ளியிலும் இனி சொல்லிக்கொடுக்கப் போகிறோம்! (சொ. 72-73) என அம்மாற்றம் விவரிக்கப் பட்டுள்ளது.

எதிர்காலச் சமூகத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரம் மிக உயர்ந்ததாக, வசதிகள் மிகுந்ததாக இருக்கும் எனவே பெரும்பான்மை உணர்த்துகிறது. அன்றாடப் பணிகளில் இயந் திரங்களின் தலையீடு / உதவி தவிர்க்க இயலாது என்பதும் வலி யுறுத்தப்பட்டுள்ளது. இவற்றிற்குத் தேவையான பணப்புழக்கம் பற்றியும் சில குறிப்புகள் தென்படுகின்றன. ''கூடுதல் கட்டணம் 3000 டாலர்கள் என்றது ரோபாட். நரேன் தனது அடையாளக் கார்டை எடுத்துக் கொடுத்தான். அதிலேயே அவனுடைய பாங்குக் கணக்கின் இருப்பு விவரம் இருந்தது. அதில் மைனஸ் 3000 என்று பதிவு செய்துவிட்டுத் திருப்பிக் கொடுத்தது ரோபாட். கம்ப்யூட்டர்கள் உடனடியாகப் பாங்கில் அவன் கணக்கிலிருந்து 3000 டாலர்களை எடுத்து ஆர்சி டிரான்சிட் தயாரிப்புக்கு மாற்றி விடும். டாலர் நோட்டுகள், செக்குகள்,

எல்லாம் ஐம்பது வருடங்களுக்கு முந்திய புராதன விஷயங் கள். இப்போது சிலிக்கன்சிப் பதிந்த பிரிண்டிங் அடை யாளக் கார்டை வைத்துக் கொண்டு உலகத்தையே சுற்றி வந்து விடலாம். தேவையான ஷாப்பிங் செய்து கொள்ளலாம். ஹோட்டலில் சாப்பிடலாம் சினிஸ்பெக்டகிள் போகலாம்' (கி.பி. 3:?) என்பதை இதற்குச் சான்றாக்கலாம்.

எதிர்காலச் சந்ததியினரின் வாழ்வியல் நடைமுறை யின் அனைத்துக் கூறுகள் பற்றியுமே கணிப்புரைகள் எழுந் திருப்பதும் கருதத்தக்கது. ஒட்டமொத்த சமுதாய மாற்றத்தைப் பலரும் எதிர் நோக்குகின்றனர், விரும்புகின்றனர் என்ப தையே இது காட்டுகிறது.

**அரசியல்**

சமூக வாழ்வில் எத்தகு மாற்றங்களும், விந்தைகளும் நிகழ்ந்தாலும் அவற்றை நடத்திச் செல்ல, கண்காணிக்க என ஒரு அரசாங்கம் உறுதியாக இருக்கும் என்பதே எதிர்கால வியல் படைப்பாளரின் நம்பிக்கையாக இருக்கிறது. அவ்வாறு அமையும் அரசாங்கம் பெரும்பாலும் சர்வாதிகாரத்தனத் துடன் இயங்கக் கூடும் என்பதும் பொதுவான கணிப்பாகிறது.

'ஒரு நூற்றாண்டில் அரசியல் எல்லைகள் மாறி விட் டிருந்தன. மக்களின் பாகுபாடு, மொழி, கலாச்சாரத்திற்கு ஏற்ப சிறுசிறு தனியாட்சி வட்டங்கள், அவற்றைச் சேர்த்து ஒரு நாடு, நாடுகள் அடங்கிய சமஷ்டி, சமஷ்டிகளுக்குப் பொதுவான சில அமைப்புகள் ஏற்பட்டிருந்தன. என்டிஎல் சுகாதார அமைப் பின் கேந்திரமாக இருந்தது. யுரேஷியா சமஷ்டியின் தலைநக ரான டிஆர்என் (டிரானா) அணுசக்தி அமைப்பின் கேந்திரம், அமெரிக்க சமஷ்டியின் தலைநகரான எம்என்ஜி (மனாகுவா) சீதோஷ்ண கட்டுப்பாடு கேந்திரமாக இருக்கிறது. ஆஸ்திரேலியா வின் என்சிபி (நீயூ கான்பெர்ரா) கடல் வளங்களைக் கட்டுப் படுத்தும் கேந்திரமாக இருக்கிறது. ஆப்பிரிக்க சமஷ்டியின் தலைநகரம் ப்ரிட்டோரியா. இங்கே விண்வெளிக் கட்டுப்பாடு கேந்திரம் இருக்கிறது. (கி.பி. 4:7) என உலகமுழுவதும் ஒருங்கிணைந்து செயல்படும் சூழல் உருவாகும் என்ற கருத்தும் பேசப்பட்டுள்ளது.

அரசியல் பற்றிய நம்பிக்கையான சூழலும் நம்பிக்கை யற்ற சூழலும் காணப்படுவது படைப்பாளரின் விருப்பத் தைப் பொறுத்தமைகிறது. முழுநிலையில் மக்களனைவரை யும் அடிமைகள் போல் நடத்தும் அரசிற்கு எதிராக, அனைத்து அறிவியல் வளர்ச்சியையும் முறியடித்து நடக்கக் கூடிய எதிர்ப்புப் போராட்டங்களும் நிகழக்கூடும் எனவும் கணிக்கப் படுகிறது.

''மாம்பலத்தில் கூட்டம் அதிகமாகி விட்டது. ஒரு ஆள் உள்ளே வந்து துண்டுப் பிரசுரங்களைக் கொடுத்தான். ஜீவா வுக்குப் பகிரங்கக் கடிதம்!

பொய் வியாபாரியே! வயதானவர்களைக் கொல்ல உனக்கு என்ன உரிமை? தப்பிப் போன கருக்களைக் கலைக்க என்ன உரிமை? கடுமையான நூல்களைத் தடைசெய்ய என்ன உரிமை? பாட்டையும் கூத்தையும் பண்பாட்டையும் நீக்க உனக்கு என்ன உரிமை? பதில் சொல் உலுத்தனே, டிசம்பர் மூன்று ஞாபகம் இருக்கட்டும்.'

இவண்

ம.க.தி (மக்களாட்சி திரும்ப வரும் கடிதம்)

என்பது (என். 49) இதனை உணர்த்துகிறது.

அரசாங்க இயக்கத்திற்குத் துணை நிற்க பெரிதும் கணிப் பொறிகளே பயன்படுத்துவதாகக் காட்டுப்படுகின்றன. அத னுடன் இணைக்கப்படும் தொடர்புக் கருவிகள் வழி மக்கள் கட்டுப்படுத்தப்படுவதும் சுட்டப்படுகிறது. 'நிலா விவி திரையைப் போட, அதில் அவள் முகம் பெரிதாக விரிந்தது. ஜீவாவைக் கொலை செய்ய முயற்சித்த இந்தப் பெண் ஆபத்தானவள். எங்கிருந்தாலும், யார் கண்டாலும்.... ஜீவா வின் மேல் பயங்கர வெடிகுண்டு வீசிய அந்தப் பெண் நிலா வும், அவளுக்கு உதவிய இயந்திர நாயும் தலைமறைவாக இருக்கிறார்கள். அவர்களையும் விரைவிலேயே காவல்படை பிடித்துவிட இருக்கிறது. இவ்விருவருக்கும் யாரும் சரண் அளிக்கக் கூடாது. அளித்தவர்கள் வாழ்நாள் குறைக்கப்படும், நிலா, நீ எங்கிருந்தாலும் சரண் அடைந்து விடு! காவல் படையை எதிர்ப்பது விரயம்' (என் 191-192) என்பது எடுத்துக் காட்டு.

தவறு செய்பவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனைகள் புதுமையானதாகவும், கொடுமையானதாகவும் அமையுமென்பர். 'ஜீனோ என்ன இது, பொம்மைகளா? இல்லை. சஸ்பெண்டட் அனிமேஷன்! இவர்கள் எல்லோருக்கும் உயிரூட்டம் குழாய்களின் மூலம் கிடைக்கிறது. சக்திக் கதிர்களின் மத்தியத்தில் தத்தம் தசைகளின், நரம்புகளின் செயலிழந்து அப்படியே நிற்கிறார்கள்.

எத்தனை நேரமாக?

வருஷக் கணக்கில். ஜோம்பிகள் என்று இவர்களுக்குப் பெயர்' (என் 202) என்பதால் இதனைப் பெறலாம். அரசாங்க விதிமுறைகளைச் செயல்படுத்தவும் மீறுபவர்களைத் தண்டிக்கவும் இன்றைய நடை முறையிலிருக்கும் சட்ட அமைப்பு தொடர்ந்து எதிர்காலச் சூழலுக்குஏற்ப செயல்படும். காலம் மாறினாலும் சட்டம் முதலான ஒழுங்கு விதிகளின் உயிர்ப்பு நின்று நிலவும் என்பதும் (தே. 106-115) சிறப்பாக விவரிக்கப் பட்டுள்ளது.

தமது தேவைகளைப் பெற அரசாங்கத்துடன் இயந்திரங்கள் வழி உடனடியாக அணுகி நிறைவேற்றிக் கொள்ளும் வாய்ப்பினை, 'தூக்கம் இல்லையா? அதற்கு ஒரு சாதனம். நாக்குக் கேட்கும் ருசிக்குப் பட்டனைத் தட்டினால் சுடச்சுட உணவு. தனிமையாக இருக்கிறதா? நட்புத்தேவையா.... சென்ட்ரலுக்கு விவரம் சொன்னால் போதும் ஆணா? பெண்ணா? உயரம்? நிறம்? ஏதேனும் பிரத்தியேக குணாதிசயங்கள்? ஐந்து நிமிடங்களில் கேட்ட அளவுகளுடன் குணாதிசயங்களுடன் ஓர் அழகான ஆண் வந்து நிற்பான். 'என் ஆருயிரே' என்பான் (தே. 59) என எதிர்கால அரசியல் உறுதியளிக்கிறது.

அரசின் செயற்பாட்டிற்குத் துணை நிற்கும் காவற்படையும் எதிர்காலத்தில் தொடரவிருப்பதை, அமைதிப்படையாக இவ்விலக்கியங்கள் பேசுகின்றன. ''யார் நீ என்றேன். 'அமைதிப்படை! நீங்கள் அரைமணியில் வருவதாகச் சொல்லி விட்டுச் சென்றீர்கள். திரும்ப வரவில்லை.... அங்கே உங்களுக்காகக் காத்திருக்கிறது'. நேரமாகி விட்டது. இவர்களுடன் நீங்கள் பேசுவது தப்பு. அவன் டார்ச் கௌதமின் மேல்பட்டது.

'எடு உன் கார்டை இந்த நேரத்தில் வெளியே இருப்பது மகத்தான குற்றம்! ஒரு பெண்! பெண்ணே உன் கார்டையும் கொடு. நாளை அமைதிப்படை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்'' (சொ. 97) என்பதாக அது நிலவுகிறது.

தனித்தனி நாடுகள், அவற்றிற்கென தனித்தனி அரசியல் கோட்பாடுகள், நடைமுறைகள் என்று எதிர்காலம் இயங்க விருப்பினும், அனைத்தும் ஒருங்கிணைந்து செயல்படக்கூடிய சாத்தியக்கூறுகளும் அதிகமாக இருப்பதைப் படைப்பாளர் உன்னியுள்ளனர். ''உலக கவுன்சிலில் ஆசியா, அமெரிக்கா, ஹிரோஷிமா, ஆப்ரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய ஐந்து சமஷ்டிகளின் பிரதிநிதிகள் இடம் பெற்றுள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு தலைநகரில் இயங்குவது. ஒவ்வொரு சமஷ்டியிலும் 35 நாடுகள் அந்தந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவை இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு நாட்டிலும் நாடாளுமன்றங்கள் சமஷ்டித் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றன. ஐந்து சமஷ்டிகளின் கவுன்சில் உலக விஷயங்கள், பாதுகாப்பு, சீதோஷ்ணம், விண்வெளி முதலான பொறுப்பான விஷயங்களை நிர்வகித்து வருகின்றது. உலக கவுன்சிலின் ஆணையை எந்த நாடும் மீற முடியாது. மீறினால் அந்த நாடு வறட்சியாலோ, வெள்ளத்தாலோ தாக்கப்படும்போது உதவி கிடைக்காது. மேலும் உலக வளங்களிலிருந்து கிடைக்கும் செல்வத்தில் அந்த நாட்டுக்குரிய பங்கும் கிடைக்காது.

இந்த அமைப்பு ஏற்பட்ட பிறகு உலக நாடுகள் ஓர் வரை யறைக்குடபட்ட சுதந்திரத்தோடும் - போர் அபாயம் - இயற்கை உற்பாதங்கள் இவற்றிலிருந்து பாதுகாப்புடனும் வாழ்ந்தன.

உலக நாடுகளிடையே வியாபாரம், பிரயாணம், போக்குவரத்து இவற்றிற்குக் கட்டுப்பாடுகள் இல்லை. கஸ்டம்ஸ், விசா, போன்ற புராதனத் தடைகள் இல்லை. யார் வேண்டுமானாலும் எங்கேயும் போகலாம். எந்தச் சூழ்நிலையிலும் வேலை வாய்ப்பு, வாழ்க்கை வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளலாம்'' (கி.பி.7:?)

''உலக அரசின் புதிய திட்டம் ஃபிளாஷ். உலகின் பத்திரத்தைப் பாதிக்கக்கூடிய மகத்தான, மிகத் தீவிரமான அபாயம்

நேர்ந்தால் உலகின் அத்தனை செய்திச் சாதனங்களையும் ஒரே சமயத்தில் கவர்ந்து ஒரே செய்தியை அனுப்ப ஏற்படுத்திய ஒரே ஒரு சாதனம். எலெக்ட் ரானிக்ஸ் நிபுணர்களின் மூன்று வருஷ உழைப்பிற்குப் பின் ஏற்படுத்திய ஒரு சூப்பர் சாதனம்! அது ஆத்மாவின் அலுவலகத்தில் ஒரு தனி அறையில் இரட்டைப் பூட்டுப் போட்டிருக்கிறது'' (தே. 143) என்பன அவர் தம் எண்ணத்தை விளக்கி நிற்கின்றன. போர்களற்ற, அமைதியான வாழ்வு அமைய உலகம் முழுவதும் முழுநிலையில் ஒருங் கிணைந்து செயல்பட வேண்டும் என்ற வேணவா இங்ஙனம் வெளிப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் அறிவியலின் வளர்ச்சி, மனிதனை எல்லாச் சூழல்களிலும், எல்லாச் செயற்பாட்டிற்கும் இயந் திரங்களையே நம்பி, அவற்றின் துணையுடன் மட்டுமே இயங்கக் கூடியதாக ஆக்கும் என்ற கணிப்பும் அறிவுறுத்தப்படுகிறது. இது, ''ஜீனோ முன்னும் பின்னும் குதித்து ஒரு மாதிரி சப்தம் பண்ணியது. கேட்டும் கேளாத மாதிரி சப்தம் பண்ணியது! முட்டாள் ஜனங்கள்! எதற்கெடுத்தாலும் இயந்திர சாதனங் களை நம்புவது ஒரு விதத்தில் சௌகரியமாகப் போயிற்று. காவலர்கள் சுயமாகத் தேடுவதில்லை. அல்டராஸானிக் டிடெக்டர் உபயோகிக்கிறார்கள். அவற்றைக் குழப்புவது மிக எளிது! ட்ர்ர்ர் டர்ர் ட்ர்ர் என்று சப்தமிட்டால் போதும். காவலர்கள் அதோ இதோ என்று மாயமானைப் போல வேறு எதையோ துரத்திக் கொண்டு செல்ல, இருவரும் ஓரத்தில் உட்கார்ந்தார்கள்'' (என் 209) என்னும் கூற்றில் ஒளிந்திருக்கக் காணலாம்.

## வேற்றுக்கிரகத் தொடர்பு

சந்திரன், சுக்கிரன், செவ்வாய் என்று தற்காலச் சூழலில் நிகழ்த்தப்படும் ஆய்வுகள் எதிர்வரும் காலத்தில் மிக நல்ல பலன்களை நல்கக்கூடியன. மனிதனின் உலகம் பூமிக்கிரகம் மட்டும் என்ற நிலை மாறி அவனது ஆட்சி பிற கிரகங்களிலும் கால்கொள்ளும் என்ற கணிப்பு எதிர்காலவியல் இலக்கியப் படைப்பாளரிடையே ஆணித் தரமாகப் பதிந்துள்ளது. எனவே தம்படைப்புகளில் அச்சிந்தனைகளுக்கும் மிகுந்த இடனளித் துள்ளனர்.

''எங்கள் பயணத்தின் குறிக்கோள் ஆஸ்டிராய்ட் 99ஐ அடைவது. ஏற்கெனவே ஏழு கப்பல்களில் அங்கே சரக்கு போயிருக்கிறது. எட்டாவது தான் தொலைந்துபோய் விட்டது. ஒன்பதாவதாக நாங்கள் செல்கிறோம் 99-ல் குடியிருப்பு அமைக்க. கொஞ்சம் அம்மோனியா அதிகமாக இருந்தாலும் விண்வெளியில் மனிதப் புழக்கத்திற்கு ஏற்ப ஒரு உபகிரகம் இருப்பதைக் கண்டுபிடித்து அதன் வெளிக்காற்றைக் கொஞ்சம் கொஞ்சமாக ரசாயன மாறுதல்கள் செய்து ஒரு பிரும்மாண்ட மான ஜியோடஸிக் அமைத்து அதனுள் சகல சௌகரியங்க ளும் பண்ணிக்கொடுத்துப் பெரிய கப்பலில் கொஞ்சம் கொஞ்சமாக மனிதர்களைக் குடியேற்றப் போகிறார்கள். அந்தக் குடியேற்றத்திற்கு நாங்கள் தான் அடிகோலிகள், முன்னோடிகள். மொத்தம் பதினெட்டு ஃபிளைட்டுகளில் ஆரம்பக் காரியங்கள் முடிந்துபோய் விடும். அதன்பின் குடி யேற்றம். இப்போதே பெரிய பட்டியல் காத்திருக்கிறது. 99க்கு போவதற்குச் சிபாரிசு கேட்டு ஜனங்கள் அலைகின்றனர். பூமி அவ்வளவு தூரம் வெறுத்துப் போச்சுப் பல பேருக்கு'' (நிலம் 58-59) என்று மனிதன் தன் நன்மைக்கு ஏனைய கிரகங்களைப் பயன் படுத்தப் போவது இயம்பப்பட்டுள்ளது.

பிற கிரகங்களால் மானிடருக்கு இடர்களும் வருவதற்கு, வாய்ப்புண்டு என்ற அச்சமும், 'படையெடுப்பு! மெர்க்குரி கிரகக் கொள்ளைக்காரர்களிடமிருந்து ..... உடனே அவர்களில் ஒருவன் எதிரே இருந்த இயந்திரத்தின் மீது பாய்ந்து சிகப்புப் பொத்தான் ஒன்றை அழுத்தி 'அலர்ட்! அலர்ட் படையெடுப்பு எல்லா விண்வெளி நிலையங்களும் கவனிக்க.... என்று சங்கேத பாஷையில் அதிவேகத்தில் சொற்பொழிய ஆரம்பித் தான்.

மற்றொரு கிரகத்தின் ஒற்றர்களுக்குத் தமிழ்ப்பாடம், கற்றுக் கொடுத்து, அவர்கள் இந்த வழக்கொழிந்த மொழியில் செய்தி அனுப்பிக் கொண்டு...... அதைக் கடைசி நேரத்தில் தற்செயலாகக் கண்டுபிடித்து, அந்தத் தாக்குதல் தவிர்க்கப் பட்டு நம் உலகம் பிழைத்த செய்தியெல்லாம் இனி பழைய செய்தி'' (தே. 76) என்பதில் வெளிப்பட்டு நிற்கக் காணலாம்.

''நீரா கிரக அரசின் சார்பில் எங்கள் பிரஜை 11334 மிஸ் சுமியை உங்களுடன் சினேகிக்க இசைந்ததற்கு நன்றி. குழந்தை பிறந்தவுடன் தெரியப்படுத்துவோம்''. (குமுதம். மிஸ் சுமி) என்பது இருவேறு கிரக உயிரினங்களின் உடற் கலப்பையும் பிற கிரகங்களின் மனித இருப்பையும் வெளிப் படுத்துகிறது.

## அறிவியல் கண்டுபிடிப்புகள்

எதிர்காலவியல் ஆய்வும், இலக்கியமும் முழுக்க முழுக்க அறிவியலைப் பயன்படுத்தியே அமைகின்றன. எனவே இதன் அடிப்படையான அறிவியலின் வளர்ச்சியும் நாளை எங்ஙனம் அமையும் என்று கற்பிக்கப்பட்டுள்ளது. அவர்தம் கற்பனையில் பல அரிய அறிவியற் கண்டுபிடிப்புகள் இடம்பெறுகின்றன. அவை கதையை நகர்த்திச் செல்வதில் பெரிதும் துணையாகின்றன என்பதும் நவிலற்பாலது. அத்தகு கண்டுபிடிப்புகளில் ஒரு சில இங்குக் காட்டப் படுகின்றன.

புதிய புதிய உயிரினங்களை ஜீன் மேப்பிங் செய்து, உரு வாக்கக்கூடும் என்பதை, ''இந்தச் சிறு தசைப்பகுதியை டிஸ் யுகல்ச்சர் பண்ணி டினோசரின் ஜீன் கோட் என்ன என்பதைக் கண்டுபிடிக்கப் போகிறேன் - கண்டுபிடித்து? அதை ஜீன் மேப்பிங் செய்யப் போகிறேன். ஒரு நூறு அடி நீளமுள்ள தொட்டியில் ஜீவராசிகள் வளரத் தேவையான அனைத்து உயிர்ச் சத்துகளையும் திரவ நிலையில் நிரப்பி, சதா தொட்டி இடம், வலம் ஆடிக்கொண்டே இருக்கச் செய்யப்போகிறேன். அதில் டினோசரின் ஜீன் கோட்டைச் செலுத்தி உயர்வகை மின்சாரம் பாய வைக்கப் போகிறேன். விளைவு, அடுத்த சில மாதங்களில் நம்மிடம் ஆண் - பெண் டினோசர் குட்டிகள்'', ''இப்போ தெல்லாம் அரசாங்கம் ஆளுக்கொரு டினோசர் குட்டி இலவசமாக வழங்குகிறது. டினோசர் பாலினால் தயாரிக்கப் பட்ட டீ, காபி அபரிமித சுவை. என்னதான் பிளாக்மெயில் பண்ணியிருந்தாலும் தெரிந்தோ தெரியாமலோ மக்களுக்கு ஆடு, மாடு, ஒட்டகத்தைவிட சூப்பர் வீட்டு வளர்ப்பு மிருகத்தை மீண்டும் உயிர்ப்பித்துத் தந்த விபின் மேத்தாவைப் பாராட்டி

வீதிக்கொரு சிலை வைத்தார்கள்'' (ஆ.வி. 13.11.94 - டினோசர் ஜாக்கிரதை) என இன்றைய நடைமுறையைக் கிண்டலடித்துக் காட்டுகிறார் ஆர்னிகா நாசர்.

மருத்துவத் துறையிலும் பல அரிய கண்டுபிடிப்புகள் வியக்கத்தக்க வகையில் அமையும் என்பதை, 'நண்பர்களே'' இந்த பாடிஸ்கானரைப் பற்றி உங்களுக்கெல்லாம் தெரியும். இருபதாவது பரம்பரை - ஜெனரேஷன் - கம்ப்யூட்டர் இது..... ஒரு சூப்பர் டாக்டர் 'என்று கூடச் சொல்லலாம். நோயாளியைப் பரிசோதித்து டெம்பரேச்சர் முதல் நோயின் காரணம் அதற்கான மருத்துவம், மருந்து எல்லாவற்றையும் ஒரு நொடியில் சொல்லிவிடக்கூடிய அற்புத சிருஷ்டி என்றார்'' (கி.பி. 4:?) என்பதில் பெறலாம்.

அறிவியலின் ஆற்றல் வேளாண்மையிலும் எதிரொலிப்பதை, 'வயல்களில் நெல்லும் கோதுமையும் ஆளுயரத்துக்கு மேல் வளர்ந்து தானியக் கதிர்களைத் தாங்கி நின்றன. பயோ டெக்னாலஜியின் கண்டுபிடிப்புகள் அதிக வீரிய விதைகளைத் தந்து உற்பத்தியைப் பன்மடங்கு அதிகரித்துவிட்டன. அன்று ஒரு ஹெக்டேரில் ஐந்து டன் நெல் விளைந்தால் அது சாதனையாகக் கருதப்பட்டது. இன்று அதே பரப்பில் 50 டன் தானியங்கள் அறுவடை செய்வது சர்வ சாதாரணம்.

உழுவது, நீர்ப்பாய்ச்சுவது, களையெடுப்பது, அறுவடை செய்வது; எல்லாவற்றுக்கும் தானாக இயங்கும் இயந்திரங்கள் வந்துவிட்டன.

கால் ஏக்கர், அரை ஏக்கர் என்று இப்போது பயிர் செய்யப்படுவதில்லை. கட்டாயக் கூட்டுப்பண்ணை முறை அமுலுக்கு வந்து அரசும் விவசாயிகளும் சமபங்கு உரிமையாளர்களாக இருக்கின்றனர். அரசு விதைகளும், நீரும், உரமும், விவசாய யந்திரங்களும் தருகிறது. விளைபொருளை கொள் முதல் செய்து தேவைப்பட்ட இடத்திற்கு எடுத்துச் சென்று விநியோகித்து வருகிறது. குடியானவர்கள் உழைப்பை மட்டும் தந்து நல்ல கூலியும் லாபத்தில் பங்கும் பெற்று வந்தனர். பெரும்பாலும் இயந்திரங்களைப் பராமரிப்பதும் மேற்பார்வை செய்வதும் தான் அவர்களது வேலை' (கி.பி.17:22) என்பது தெரிவிக்கின்றது. எனவே எல்லாத் துறைகளிலும் அறிவியல்

கண்டுபிடிப்பு அடுத்து வரும் காலங்களில் கோலோச்சும் என்பதே இவற்றில் உண்மையாக்கப்படுகின்றது.

மக்கட் தொகை உயர்வு இன்றைய இந்தியாவிற்கு மிகப் பெரிய சிக்கலாக விளங்குவதால் இதன் தொடர்நிலை பற்றியும் இவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். மக்கட் தொகைக் கட்டுப்பாட்டையும் இயந்திரங்களே மேற்கொள்ளும் சூழல் அமைவதை ''நாட்டின் பரப்பு இவ்வளவு, நாட்டின் உணவு உற்பத்தி இவ்வளவு.... உற்பத்திப் பெருக்கு இவ்வளவு..... கனிவகைகள் இவ்வளவு..... இயந்திர உற்பத்தி இவ்வளவு.... அடுத்த நூறு ஆண்டுகள் எவ்வாறு இருக்க வேண்டும் அதற்கு ஏற்ப இன்றைய ஜனத்தொகை எவ்வளவு இருக்க வேண்டும்? எவ்வளவு பேர் இருக்கிறார்கள்? எவ்வளவு பேர் உபரி ஆசாமிகள்.... எவ்வளவு மருத்துவர்கள் வேண்டும்.... எவ்வளவு கலைஞர்கள் வேண்டும்..... எவ்வளவு கணிதம், எவ்வளவு பௌதிகம்..... எவ்வளவு விவசாயம்..... எவ்வளவு தொழில்கள் .... எவ்வளவு தொழிலாளிகள்.... கணவர்கள் எவ்வளவு .... மனைவிகள்.....

அபாரமான கம்ப்யூட்டர் இயந்திரம் கடைசித் தோட்டிவரை சரிபார்த்துச் சொல்லி விட்டது. மேலும் இந்த ஆதாரத் திட்டத்தின்படி நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் ஒரு பரிசோதனை நடத்தி அவன் புத்திசாலித்தனம் என்ன.... அவன் லாயக்கு என்ன..... எல்லாவற்றையும் அந்த இயந்திரமே கணித்து..... யாரார் இருக்க வேண்டும்..... யாரார் இறக்க வேண்டும் என்று பட்டியலிட்டது. அபார இயந்திரம்!' (தே 83-84) என்று காட்டியுள்ளனர். மக்கட் தொகை தொடரும் சிக்கலாகவே அமையும் என்பது இவர் கணிப்பு.

எனினும் மீண்டும் இளமையை, குழந்தைமையைப் பெற வைக்கும் மருந்துகள் (தே. 87-97); சோதனைக் குழாய் வழி, செயற்கை கருப் பெட்டியில் செயற்கையாக, ஆர் என்எடி என்ஏக்களை ஆராய்ந்து குறையுற்றவைகளை எறிந்துவிட்டு அழகும், அறிவாற்றலும் நல்ல பண்புகளும் உள்ள ஆண் அல்லது பெண்ணை உருவாக்கித் தரும் 'முறை (கி.பி. 2:10) போல்வனவும் நிகழக்கூடும் என்ற கருத்தும் காணப்படுவது சுட்டத்தக்கது.

**உளவியல்**

கதையிலக்கியப் படைப்பு உளவியல் பாங்குடன் அமையும் பொழுது அதன் யதார்த்தத் தன்மை மிகுகின்றது! முழுக்க முழுக்க இப்படியும் நிகழக்கூடும் என்று கற்பனைக்கே முதலிடம் கொடுத்து, நடைமுறை யதார்த்த வாழ்வினின்று முற்றிலுமாக விலகியிருக்கும் கதையமைப்பைக் கொண்ட எதிர்காலவியல் இலக்கியத்துள் உளவியல் இடம் பெறும் பொழுது அது அக்கதைக்குச் சற்று இயற்கைத் தன்மையைக் கொடுக்க முனைகிறது; சுவையும் கூடுகிறது. எனவே உளவியல் சார்ந்த உரையாடலுக்கும் இதனுள் இடனளிக்கப்படுகிறது.

''இந்த ஆட்டத்தின் காரணம் என்ன தெரியுமோ? ஜனங்களின் கொல்லும் இச்சையைத் தணிப்பது. எல்லாருக்கும் ஒரு பாசாங்கு இச்சை. கடைசியில் பார்.

என்ன ஆகும்?

ரோபாட் தோற்றே ஆக வேண்டும். அதை எல்லாரும் சேர்ந்து ஹதம் பண்ணி விடுவார்கள். 'கொல் கொல்' என்றன நாற்பதாயிரம் குரல்கள்! இப்போது ஜேவ் நட்ட நடுவே அகப்பட்டு அதன் உடலில் முதல் குத்துப்பாய குபுக்கென்று ரத்தம் பொங்கியது பிரம்மாண்டமான ..... திரையில் தெளிவாகத் தெரிந்தது.....

வன்முறைக்கு ஒரு வடிகால்! எல்லாருமே அந்த ஜேவ் பொம்மையைத் தத்தம் வெறுப்புக்களின் குறியீடாக நினைத்துக் கொள்ள முடியும். நீ என்னவாக நினைத்தாய் நிலா?

எனக்கு எதுவும் நினைக்கத் தோன்றவில்லை.

நான் அதை ஜீவாவாக நினைத்தேன். ஜீவா அந்தமாதிரி குபுக்கென்று ரத்தம் பாய்ந்து, அந்தப் பொய் வியாபாரியின் நிஜ ரத்தம் பாய்ந்து பத்துப் பதினைந்து தினங்களாவது துடிக்க வேண்டும்....'' (என். 77-78) என்று என்னதான் இயந்திர வாழ்க்கை வாழ்ந்தாலும் அடிமன உந்துதல் உறுத்தவே செய்யும் என்பதை இப்பகுதி விளக்குகிறது!

கதை மாந்தரின் ஆழ்மன ஓட்டத்தையே எதிர்கால வியல் சூழலில் கதைப்பொருளாக்கிப் படைக்கவியலும் என்பதைச் சுஜாதாவின் 'அடிமை' சிறுகதை காட்டுகிறது. *(தே. 18-31)* முழுக்க முழுக்க இயந்திரங்கள் மனிதன் வாழ்வில் பங்குகொள்ளும் பொழுது அது அவனின் உள்ளத்திலும் போராட்டத்தை விளைக்கக்கூடும், பாதிப்படையச் செய்ய வியலும் என்பதனை இக்கதை அடிக்கருவாகக் கொண்டுள்ளது.

இதுபோன்றே இவரின் புதினப் படைப்பான 'சொர்க்கத் தீவும்' உளவியலுக்கு முதன்மையளித்துப் படைக்கப்பட்ட தாகும். மனிதனின் சிந்தனா சக்திக்கும், உணர்ச்சிக்கும் களனான உள்ளத்தைச் செயலிழக்கச் செய்யும் ஆற்றல் வளர்ந்து வரும் அறிவியலுக்கு உண்டு; உயிரற்ற மனிதன் பிணமாவான்; உள்ளமற்ற மனிதன் இயந்திரமாவான் என்ற கருத்தை வலியுறுத்துவதாக அக்கதையமைப்பும் போக்கும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. எவ்வளவுதான் அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சியால் மனிதனின் வாழ்க்கைத் தரமும், வளமும் உயர்ந்தாலும் அதற்கு விலையாக, அவன் தன்னை விலங்கிலிருந்து வேறுபடுத்திக்காட்டும். 'உள்ளத்'தை ஈடு வைக்க வேண்டிய கட்டாயமும் ஏற்படக்கூடிய சூழல் உருவாகலாம்; எச்சரிக்கை தேவை என்பதையே இச்'சொர்க்கத்தீவு' சொல்லாமல் சொல்கிறது.

**சமயம்**

இறைவன் இருக்கிறான்; இல்லை என்று இருவித கருத்துகள் இந்நூற்றாண்டில் நிலவுகையில் இதன் முடிவு அடுத்த நூற்றாண்டுகளில் எவ்வாறிருக்கும் என்ற கருத்துக் கணிப்பிற்கும் இவ்வகை யிலக்கியங்கள் இடந்தருகின்றன. மனித குலத்தில் பெரும் பான்மையோர் வாழ்வோடு ஏதேனும் ஒரு சமயத்தின் பெயரில் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளமையால் இப் பொருட் கூறிற்கும் இதனுள் சிறப்பிடம் நல்கப்படுகிறது.

இருக்கின்ற சமயங்கள் அழிந்து புதியதோர் சமயம் தோன்றக் கூடும் என்பதனை 'அவளுக்குக் கடவுள் மீது நம்பிக்கை, பக்தி என்று எதுவும் இருந்ததில்லை. அவளைப் போல பெரும்

பாலான நகரவாசிகள் கடவுள் என்பது மூடநம்பிக்கை அல்லது தமக்குச் சம்பந்தமில்லாத, பகுத்தறிவுக்கு ஒவ்வாத புதிரான விஷயம் என்று நினைத்திருந்தார்கள். கோயில்கள் தொழு வாரின்றிச் சிதிலமாகிவிட்டன. சில தொல்பொருள் மதிப்புக் காகப் பராமரிக்கப்பட்டு வந்தன. பார்வையாளர்கள் வந்து சிற்பங்களின் அழகைப் பார்த்துவிட்டுச் சிலாகித்துச் செல் வார்கள்.

ஆனால் மனிதனுக்கு ஒரு கடவுள் வேண்டியிருந்தது. வேதங்களில் சொல்லப்பட்ட காலம் தான் இறைவன் என்ற தத்துவம் வலுப்பெற்றது. காலம் பிரத்தியட்ச உணர்வாக இருந்த தாலும் கடவுளுக்குரிய குணங்கள் அதற்குப் பொருந்தியிருந்த தாலும் காலமே கடவுள் என்ற நம்பிக்கை தோன்றிப் பரவிற்று. கிராமங்களில் அதற்குப் பிரதிமைகள் எடுக்கப்பட்டுக் கோயில் கள் கட்டப்பட்டன. பழைய முறையில் கோபுரங்கள், மசூதி கள், சர்ச் என்ற ஆடம்பரங்கள் எதுவும் இல்லாத வெட்ட வெளியில் காலச் சக்கரத்தைப் பிரதிமையாக வைத்துத் தொழ லாயினர்.

அவரவர் விருப்பப்படி பூசைகளும் சடங்குகளும் செய்து போயினர். பழைய மரபுகளில் ஊறியவர்களும் ஏற்றுக் கொள்ளும் உலகப் பொதுக்கடவுளாகக் 'காலம்' ஏற்றுக் கொள்ளப்பட்டது' (கி.பி. 18:?) எனும் இப்பகுதி காட்டுகிறது.

வருங்காலத்திலும் கடவுள் நம்பிக்கை நீடிக்கும் என்ற கருத்தும் உண்டு (ஆ.வி. 27.11.94. கடவுள் தாத்தா). 'ஹ! கடவுள் என்பது மனிதனின் கண்டுபிடிப்பு. நூற்றாண்டுக் கணக்காக மனிதன் உண்டு வந்த ஓப்பியம்! கடவுள் சொர்க்கம் நரகம் என்றெல்லாம் பயம் காட்டி மனிதனைத் தளையில் ஆழ்த்தி யிருந்த மதங்களை முதலில் ஒழித்துக் கட்டினேன்' (தே. 84) என்று ஆட்சியைக் கையகப்படுத்துவோர் சமூகச் செயற்பாட் டிற்குச் சமயமும் சமய உணர்வும் தேவையில்லையென்று புறக்கணித்தாலும் (தே. 146 - 147) மக்களின் அக உணர்வி லிருந்து அதனை அகற்ற இயலாது என்பதும் பிறிதொரு கணிப் பாகிறது. இதனை,

''கீதை என்று ஒரு புத்தகம் இருக்கிறது. அரசாங்கம் தடைசெய்த புத்தகம் (குரலைத் தாழ்த்தி) அதன் கையெழுத்துப்

பிரதி ஒன்று என்னிடம் இருக்கிறது. என்ன அபாரமான பாடல்கள் தெரியுமா?

என்ன சொல்கிறது

அது கடவுளே சொன்ன பாடல்கள்

கடவுள் பெயர் என்ன?

கிருஷ்ணர்! அவர்தான் கடவுள் .... கீதையில் தெளி வாகச் சொல்லியிருக்கிறார். யுகத்துக்கு யுகம் நான் தோன்று வேன் என்று.....

கடவுள் வந்தால் என்ன, வராவிட்டால் என்ன.... என் தூக்கம் கெட்டுவிட்டது. பக்கத்து வீட்டில் தினம் பஜனை செய் கிறார்கள். இதையெல்லாம் அரசாங்கம் அனுமதிக்கிறது.

அரசாங்கத்தால் ஒன்றும் செய்ய முடியவில்லை நிலைமை அளவுக்கு மீறிவிட்டது.

ஏன்யா, எத்தனை கடவுள் இருக்கிறார்கள் ஒருத்தன் கிருஷ்ணன், ஒருத்தன் அல்லா, ஒருத்தன் யேசு! நீர் புதுக்கட்சி! அக்னி! எத்தனை பேர் அய்யா தோன்றப் போகிறார்கள்.... அங்கே இடம் இருக்குமா?

அக்னிதான் கடவுள் (தே. 148-151)

என்பது எடுத்துக்காட்டாகிறது. எனவே நாளையும் கடவுள் இருக்கிறார், இல்லை எனும் முரண்பாடு தொடரும் (தே. 151) என்பது எதிர்காலச் சிந்தனையாளரின் துணிபாகிறது.

## இலக்கியம்

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடுகள் மொழிக் குத் தரும் சிறப்பைக் குறைக்கக் கூடும் என்ற எண்ணத்தை எதிர்காலவியல் இலக்கியங்கள் தருகின்றன. எனவே அதனுள் எழும் இலக்கியங்களின் நிலை பற்றிய கருத்தும் எண்ணப்பட வேண்டியதாகிறது. 'உயர்தர ஆஸ்பத்திரி போல மார்பளவு வெள்ளைச் சில்லுகள் பதித்து பச்சைக் கோடுபோட்டு அங் கங்கே ஜீவாவின் சிரிப்பு முகம், வாசகங்கள். சில இடங்களில் திருக்குறள் (என். 110) எனத் திருக்குறள் எதிர்காலத்திலும்

சிறப்புறும் எனச் சுஜாதா கருதுகிறார். ஆனால் இலக்கியக் கல்வி வெறும் பொழுதுபோக்காக மாறக்கூடும் என்பதையும் அவர், 'தபாரு ஜீனோ! சிலப்பதிகாரம் பற்றியெல்லாம் பேச இது சமயம் இல்லை. நிலா, இந்த நாய்க்கு ஏதோ பொழுது போக்குக்காகக் கத்துக் கொடுக்கப் போய் பயங்கரமான மெமரி. கன்னாபின்னா என்று வகைவகையா தகவல் சேகரிச்சு வச்சிருக்கு. திருக்குறள் முழுவதையும் ஒரு ஓரத்தில் போட்டு வெச்சிருக்கு. எனக்கும் உபயோகமாயிருக்குமே என்று போட்டதுதான் வம்பு (என். 129) என்பதால் உணர வைக்கி றார். இன்றைய தமிழே பழந்தமிழாகி; அதைக் கற்பார் யாரு மிலாச் சூழல் ஏற்படும் என்பது (தே. 64) அவரது கணிப்பு.

இதற்கு முற்றிலும் மாறுபட்ட கருத்துடையவராகக் கஸ்தூரி ரங்கன் காணப்படுகிறார். 'தமிழ் இலக்கியம் படித் திருக்கிறாயா? என்றார் புரொபசர்.

நிறைய! சங்ககாலப் பாட்டுக்கள், நாலாயிரம் வருஷத் துக்கு முந்தியவை. சிலப்பதிகாரம், திருக்குறள், பாரதி, பாரதிதாசன்.... கிரேட் பொயட்ஸ்.....

நல்ல இலக்கியம் என்றைக்கும் அழியாது. இப்போது எல்லாம் மைக்ரோ பிலிமிலும் காசெட்டுகளிலும் இருக் கின்றன. முன்பு காகிதங்களில் அச்சடித்து பைண்டு செய்து புத்தகங்களாக அடுக்கி வைத்திருக்கிறார்கள்......

எனக்குக் கூட நீ சொன்ன பெயர்களெல்லாம் பரிச்சய முண்டு. ஹிந்தி தான் படித்தேன். ஆனால் உலகத்து மொழிகள் எதுவானாலும் உடனடியாக மொழிபெயர்ப்பு செய்து தரும் கம்ப்யூட்டர் வந்தபிறகு எல்லா இலக்கியமும் படிக்கலாம்!....

உண்மைதான், முன்பு தமிழில் புத்தகம் போட்டால் ஆயிரம் இரண்டாயிரம் போகும். இன்று மிலியன் கணக்கில் மைக்ரோ பிலிம் பிரதிகள் எடுத்து விடுகிறார்கள்.

ஏன் கதைக் கருவைக் கொடுத்துவிட்டால் சிறுகதை யாகவோ, நாவலாகவோ எழுதித்தரும் கம்ப்யூட்டர்கள் இருக்கின்றனவே. சில தானே யோசித்துக் கூட எழுதி விடு கின்றன என்றாள் ருமா.

அப்படித்தான் நிறையப்பேர் கம்ப்யூட்டர் எழுதினதைத் தான் எழுதியது என்று விளம்பரப்படுத்திக் கொண்டு திரிகிறார் கள் என்றான் நரேன்' (கி.பி. 12:3) என்பது அவரது கணிப்பு.

## முன்னிகழ்வுகள்

கதைக்களனில் உருவாக்கப்படும் நிகழ்ச்சிகள் எதிர் காலத்தியதாகக் காட்டப்படினும் வாசகர் நிகழ்காலத்தவர் ஆதலின், கதையை அவர் படிக்கும் பொழுது அவருக்குத் தோன்றும் மயக்கறுத்துத் தெளிவு காட்டவும் கதையின் போக்கை முழுமையாக உணர்த்தி நிற்கவும் முன்னிகழ்வு கள் இத்தகு கதைகளில் பரவலாகப் பேசப்படுகின்றன.

''ஏன் விஷமாயிற்று? நம் முன்னோர்கள் செய்த பாவங் களால், அவர்கள் செய்த மெஷின்களால்! ராட்சதக் குண்டு களால்! ஒருவருடன் ஒருவர் நேசமாக இருக்க முடியாத தேசிய அகங்காரங்களால்! எதிர்காலத்தைப் பற்றிய கவலையே இன்றி இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் நேர்ந்த மகா மகா யுத்தத்தினால் .... அதனால் விளைந்த தாமோ ந்யூக்ளியர் தாண்டவத்தினால். பூமி எங்கும் மெதுவாகப் பரவிய கொல்லும் கதிர்கள் காற்றில் கலந்து .... ஐரோப்பா.... அரேபியா.... இந்தியா.... ஆஸ்திரேலியா.... என்று அந்தப் போர்வை ஒவ்வொரு தேசத்தையும் அரவணைத்துக் கொள்ள .... பள்ளம் தோண்டி, கான்கிரீட் சுவர் அமைத்து ஈயத்தில் உறவாடி..... மறைந்து.... எலிகள் போல் முயல்கள் போல்!.... கீழே! கீழே! மேலே இரவு முழுதும் நெற்கதிர்கள் ரேடியேஷ னில் ஜொலிக்கின்றன. ஏக்கர் ஏக்கராக மாம்பழம் ... தென்னை, பலா.... சீசனுக்குச் சீசன் பூத்துப் பழுத்து முதிர்ந்து உதிர்ந்து மறுபடியும் பூத்துப் பழுத்து.... ஒன்றையும் தொடமுடியாது.... ரேடியேஷன்'' என்று (தே. 38) காரணகாரிய விளக்கமாகவும் அது பயன் கொள்கிறது.

'2014 உலகப் போருக்கு முன்பு இந்தியாவின் ஜனத் தொகை நூற்றைம்பது கோடிக்கு மேல் போய் பெரும்பாலும் நகர்ப்புறங்களில் சேரிகளில் ஜனங்கள் குடியிருந்தார்கள். போரில் உலகத்தின் வடக்குப் பகுதி ஜனத் தொகை பெரிதும்

அழிந்துவிட்டது. சைனாவின் ஜனத்தில் 75 சதவிகிதம் குண்டு களின் உஷ்ணத்தினாலும் தொடர்ந்து ஏற்பட்ட குளிரினாலும் நோயுற்று இறந்து விட்டார்கள். ஐரோப்பா, பிரிட்டன், கானடா, ஜப்பான் எல்லாம் அநேகமாக அழிந்துவிட்டன. எஞ்சி யிருந்தவர்கள் தெற்கே பல நாடுகளுக்குத் தஞ்சம் புகுந்தார் கள். தேசங்களின் எல்லைகள் குலைந்து போயின'' (கி.பி. 18:?) என்று உலக ஒருமை ஏற்பட்டதற்கான காரணம் காட்டப் பட்டுள்ளது.

எதிர்காலத்திய சமூக, அரசியல் மாற்றங்களுக்கு அடிப் படையாக உலகப்போர் அமையும் என்ற ஒருமித்த கருத்து இங்கு நோக்கத்தக்கது. மற்றும் முன்னிகழ்வுகளாக இக்கதை களில் இடம் பெறுவன, இன்றைய சூழலில் நிகழ்ந்தனவாகவோ அன்றி, தற்காலச் சமூகத்திற்கும், காட்டப்படும் எதிர்காலச் சமூகத்திற்கும் இடைப்பட்ட காலமாகவோ இருத்தற்கூடும் என்பதனையும் மேற்காட்டிய இரு சான்றுகளும் நவில் கின்றன.

**எதிர்காலச் சமூகம்**

பொதுவாக எதிர்காலத்தில் தோன்றக்கூடிய சமூகத் தின் வாழ்க்கை எப்படியிருக்கும்? போற்றக் கூடியதாகவா? அன்றி இரக்கத் திற்குரியதாகவா என்ற வினாவிற்கும் எதிர் காலவியல் இலக்கியங்கள் விடையளிக்கின்றன. முன் காட்டி யுள்ளன போலவே இதிலும் முரண் கருத்துகளே அமைகின் றன. வளமுடைய சமுதாயம், இரங்கத்தக்க சமுதாயம் என இரண்டுமே கணிப்பின் முடிவாகிறது. அவை எவ் வகையில் ஏன் இவ்வாறு அமைகின்றன என்பதற்கான பதிலும் அவற் றுள் காணக்கிடக்கிறது.

**வளம் மிக்கது**

மேகமண்டலத்துக்கும் மேலே நிற்கும் 7000 அடி உயரக் கட்டிடம். இதுபோல் நாலைந்து என்டிஎல்லில் உள்ளன. ஒவ்வொன்றுக்கும் தனித்தனி ஸோலார் பேனல் கூரை உண்டு. பகலில் சூரிய வெளிச்சமும், இரவில் ரிப்ஃளெக்டர்

ஸாட்டலைட் தரும் வெளிச்சமும் இடைவிடாத மின் சப்ளைக்கு வசதியாக இருந்தன.

நீர்வீழ்ச்சி மின்சாரம், அனல் மின்சாரம், அணு மின் சாரம் முதலான புராதன அமைப்புகள் இப்போது எங்கும் இல்லை. டிரான்ஸ்மிஷன் டவர்ஸ், கம்பிகள், கம்பங்கள் எல்லாம் போய்விட்டன. சூரிய ஒளி மின்சாரம் நகரங்கள், கிராமங்கள் எல்லா இடங்களிலும் கிடைக்கின்றது. தொழில், விவசாய உற்பத்திகள் பலமடங்கு பெருகிவிட்டன. வாழ்க்கை வசதிகள் உயர்ந்துவிட்டன (கி.பி. 4:17) என்பது சான்று.

**இரங்கத்தக்கது**

எதிர்காலத்தில் அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி மானுட சமுதாயத்திற்குச் சொர்க்கத்தையே பூவுலகில் உரு வாக்கித் தந்துவிடும் என்ற கருதுகோள் பொருந்தாது; மிகப் பெரும் அழிவுகளில் சிக்குண்டு இரங்கத்தக்கச் சூழலில் அல்லல்படும் நிலையே அமையும் என்பது பலவாறாக இவ்வகை யிலக்கியங்களில் காட்டப்பட்டுள்ளன. அவற் றிற்கும் அடிப்படைக் காரணமாக அறிவியல் வளர்ச்சியைச் சுட்டியிருப்பது கவனிக்கத்தக்கது.

''கடவுளே! என்ன அழகாக இருக்கிறது! எப்பொழுது நாங்கள் வெளியேறப் போகிறோம்? இன்னும் கொஞ்ச நாட்கள்தான் என்ற பொய்யை எத்தனை நாட்கள் புகட்டப் போகிறோம்!

பூமிக்கு அடியே இருக்கிற தானியத்தைப் பகிர்ந்து கொண்டு, இருக்கிற நம்பிக்கைகளைப் பகிர்ந்து கொண்டு, மெலிதாக வம்ச விருத்தி பண்ணிக் கொண்டு, தினம் தினமாக, தலைமுறை தலைமுறையாக..... எப்படி நூற்று எழுபது வருஷங்களைக் கழிக்கப் போகிறோம்? என்று எண்ணி னான் ஆத்மா. (தே. 45) என்பது இதற்குச் சான்றாகும்.

பெருகிவரும் மக்கட்பெருக்கமும் வேதனையான வாழ்க்கையையே கொணரும் என்ற கருத்தும் ''ஏராளமான ஜனங்கள் சாலையின் இருமருங்கிலும் நடந்து கொண்டிருந் தார்கள். நடப்பதற்கே போதிய இடமில்லாமல் ஒருவர் மேல்

ஒருவர் அடிக்கடி முட்டி மோதிக்கொண்டு போனார்கள். ஏராளமான சைக்கிள்களும் போராடின. அகலமான சாலை. இரண்டாகப் பிரிக்கப்பட்டு நடுவே ஒதுக்கப்பட்ட பகுதியில் பாட்டரி சக்தியால் ராட்சச பஸ்கள் ஜனங்கள் நிரம்பி வழிய விரைந்து கொண்டிருந்தன. ஒலி பெருக்கி சொல்வது எவருக்கும் புரியாத குழப்பம். சுவரொட்டிகளில் அந்த ராணுவ உடை ஆசாமி ஒரே மாதிரி சிரித்துக் கொண்டிருந்தார். அடுத்த வாரத்திலிருந்து அதிக அளவு சோயாபீன்ஸ் என்று சந்தோஷமாக அறிவித்தது சுவர்ச் செய்தித்தாள்'' (தே. 109) என்பதில் பெறப்படுகிறது.

உலகமே அழிந்துபடும், மனித சமுதாயமே முற்றிலுமாக மறைந்துவிடும் ஆபத்தும் ஏற்படக்கூடும் என்பதும், 'அவசரச் செய்தி அறிக்கை. அமெரிக்காவின் மிகப்பெரிய அணு உலை மிகப் பெரிய தீ விபத்தில் சிக்கி வெடித்தது. இதனால் உலகம் முழுவதும் முப்பதாயிரம் அறுபதாயிரம் ரெம் கதிரியக்கம் பரவியுள்ளது. இதனால் உலகின் அனைத்து உணவு தானியங்களும் பாழாகியுள்ளன. கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளன. நீர்நிலைகள் கூடக் குடிக்கத் தகுதியில்லாததாக ஆகியுள்ளன. உலகமே இப்போது அபாயகரமான அழிவுப் பாதையின் விளிம்பில் நிற்கிறது. இந்த உலகப்பிரச்னையை விவாதிக்க உலக நாடுகளின் பிரதிநிதிகள் இன்று மாலையோ இரவோ கூட இருக்கிறார்கள். அடுத்த செய்தி அறிக்கை அரை மணிநேரத்தில்.... செய்தி வாசிப்பாளரின் குரல் கம்மியது. வேதனையை அடக்க முடியாமல் கதறிக்கதறி அழுதார். (ஆ.வி. 4.12.94; 56) எனக் காட்டப்பட்டுள்ளது.

பொதுநிலையில் எதிர்காலம் பற்றிய படைப்பாளரின் எண்ணமாக இவை உள்ளன எனவும் இவற்றின் அடிப்படையிலேயே அவரது எதிர்காலவியல் படைப்புகள் அமைகின்றன எனவும் கொள்ளலாம். படைப்பாளரின் படைப்புகள் இவற்றையே வலியுறுத்துகின்றன.

## எதிர்காலவியல் இலக்கியச் சிந்தனைகள்

எதிர்காலவியல் இலக்கியத்துள் அமையும் பொருட்கூறுகள் முழுமையான 'எதிர்காலச் சமுதாயத்தைப் பிரதி

பலிக்கின்றன. அவற்றை உற்று நோக்குகையில் மேலும் பல எண்ணங்கள் எதிர்காலவியல் சிந்தனையாக அமைகின்றன.

1. இயந்திரங்களுக்கும் மனிதருக்கும் இடையே வேறுபாடு இல்லாமல் போகும் காலமும் வரலாம்.

2. மனிதன் படைத்த இயந்திரங்கள் தானே சிந்தித்துச் செயலாற்றக் கூடிய வல்லமையையும் பெறக்கூடும்.

3. எவ்வளவுதான் வாழ்க்கைத்தரம் உயர்ந்து, கேட்டது கிடைக்கும் சூழலில் வாழ்ந்தாலும் ஒருவிதமான அடிமை வாழ்வே அவன் மேற்கொள வேண்டிவரும்.

4. முழுக்க முழுக்கக் கற்பனைக்கே இடனாகும் இலக்கியப் படைப்பாயினும் அருகி சில கூறுகள் எதிர்காலத்தில் நிகழ்ந்து விடவும் வாய்ப்புண்டு.

5. நம்பிக்கை, நம்பிக்கையின்மை; வளர்ச்சி, வீழ்ச்சி; அச்சம், எதிர்பார்ப்பு எனப் பலவான முரண்கூறுகளின் உள்ளடக்கமாக, மனிதனுக்கும் அறிவியலுக்கும் இடையே நடக்கும் போராட்டமாக எதிர்காலத்தை இவ்விலக்கியங்கள் காட்டுகின்றன.

6. நிகழ்காலச் சிந்தனைகளும், செயற்பாடுகளும் எதிர்காலத்தை நோக்கியே ஆதலின் எதிர்காலவியல் இலக்கியமும் இன்று எழுவது இயல்பாகிறது.

## சுருக்கவிளக்கம்

ஆ.வி - ஆனந்த விகடன் (வார இதழ்)

| | | |
|---|---|---|
| 6.11.94 | - | ஆண் கர்ப்பம் |
| 13.11.94 | - | டினோசர் ஜாக்கிரதை |
| 20.11.94 | - | பில்லியனில் ஒருவன் |
| 27.11.94 | - | கடவுள் தாத்தா |
| 4.12.94 | - | அழிவின் விளிம்பில். |
| | - | ஆர்னிகா நாசர் |

என் - என் இனிய இயந்திரா, சுஜாதா;

கி.பி.கி.பி. 2084; கஸ்தூரி ரங்கன்;

சொ - சொர்க்கத் தீவு; சுஜாதா;

தே - தேவன் வருகை; சுஜாதா;

நிலம் - நிலம் நீர் நெருப்பு காற்று ஆகாயம்; சுஜாதா;

# இன்பக் கனவுலகச் சமுதாயம்

இன்பக் கனவுலகம் - விளக்கம்
இன்பக் கனவுலக வியல்பு
இன்பக் கனவுலகின் வகைகள்
தோற்றக்களம்
தோற்றமும் வளர்ச்சியும்
சமூகத்தின் செயற்பாடுகள்

பொருள் - பொருள்பங்கீடு
கல்வி
தேர்தல்
மகளிர் - குழந்தைகள் - முதியோர்

சமூக நலம்
துன்பக் கனவுலகு

# இன்பக் கனவுலகச் சமுதாயம்

நன்மைகளை மிகுவிக்கவும் தீமைகளைக் களையவும் மானிடர் தம்முள் இணைந்து செயல்படத் தொடங்கிய போது சமூகம் உருவாயிற்று. விதிமுறைகளும் கட்டுப்பாடுகளும் இயக்கங்களும் சமூகவாழ்வைச் சீர்படுத்தினும், குறைகளை முற்றாக ஒழிக்க இயலவில்லை. சமூக முரண்பாடுகளும், ஏற்றத்தாழ்வுகளும் சிக்கல்களும், தீமைகளும் நீங்கிய குறை யற்ற சமுதாயத்தைக் காண ஆன்றோர் விழைந்தனர். சமுதாய அங்கத்தினர் அனைவரும் பொருள், தகுதி, சமூகநலம் என அனைத்திலும் வேறுபாடற்ற சமநிலை காணலும், நோய் நொடியற்ற நலவாழ்வு பெறலும் 'எந்நாளும் இன்பமே அல்லால் துன்பமில்லை' எய்தலும் அவர்தம் குறிக்கோள். மக்கள் நல்வாழ்விற்கும் தாழ்விற்கும் பொருளாதாரம் மற்றும் அரசியல் அடிப்படையாக அமைதலால் அவர்தம் சீர்திருத்த எண்ணங்கள் அவற்றைச் சுற்றியே அமைந்தன. அந்நன்னோக் குத் திட்டங்கள், செயற்படுத்தலில் தோன்றும் தடைகள் காரண மாக ஏட்டளவில் நின்றுவிட்டன. கற்பனையிலும் கனவிலுமே இடம் பெறத்தக்கனவாகின.

முழுக்க முழுக்கச் சமுதாய நன்மைகள் மட்டுமே உள் அடக்கிய, நடைமுறைபடுத்தற்கியலாத இத்தகு கற்பனை களைச் சமூகவியலார் 'இன்பக்கனவுலகாக'க் (Utopia) குறிக் கின்றனர். முழுமையாகச் செயற்படுத்தாவிடினும் அவற்றுள் ஒருசில கூறுகளையாவது அவ்வப்போது பயன்கொள்ளும் முயற்சிகள் காணப்படுகின்றன.[1] இலக்கியப் படைப்பாளரும்

---

1. This is not to say that whenever important changes or reforms have been made Utopian writing has played a prominent role. It is only to say that Utopian literature is a contribution to the conscience of society. The Utopian works of the eighteenth & nineteenth centuries in Europe, performed there tasks especially well perhaps Marxism is the only Utopian or quest utopian, body of thought that large number of men have actually tried to translate into practice.

   David L. Sills (ed.); International Encyclopaedia of the Social Sciences - Vol. 15-17; p. 269.

சமூகச் சீர்திருத்துநரும் இவ்வின்பக் கனவுலகினைக் கற்பித்துள்ளனர். இங்குத் தமிழிலக்கியப் படைப்பாளர் கண்ட இன்பக் கனவுலகம் காட்டும் செம்மைச் சமுதாயம் ஆய்வுப் பொருளாகிறது.

**இன்பக்கனவுலகம் - விளக்கம்**

ஆங்கிலத்தில் சுட்டப்படும் 'Utopia' என்பதன் மொழி பெயர்ப்பாக 'இன்பக்கனவுலகம்' அமைகிறது. இதனைப் புனைவுலகம், பொன்னுலகம் என்றும்[2] கற்பனையுலகம் அல்லது இலட்சியபுரி என்றும்[3] குறிக்கோட் சமுதாயம் என்றும்[4] உன்னத உலகம் என்றும்[5] புது உலகம் என்றும்[6] அறிஞர் நவின்றுள்ளனர். இப் பொருளடிப்படையில் தாம் படைத்த பாடல்களுக்குப் பாரதியும் பராதிதாசனும் முறையே கற்பனையூர் எனவும் புத்துலகம், புதிய உலகு எனவும் தலைப் பிட்டுள்ளனர்.

குறைபாடுகள் நிறைந்த நிகழ்கால உலகைப் புதிதாக, நிறைவுடையதாக உருமாற்றம் செய்ய விழைதல்; அவ்வுரு மாற்றத்தைச் சிறந்த குறிக்கோள்களின் அடிப்படையில் நிகழ்த் துதல்; கற்பித்துரைத்தல் என்னும் எண்ணங்களில் இத்தமிழாக் கங்கள் அமைகின்றன.

'உடோபியா' என்ற சொல் கிரேக்க மொழியில் இல்லை, இடம் என்று பொருள்படும் இரு சொற்களின் இணைவாகத் தோன்றியது.[7] பகல் - இரவு, தோற்றம் - மறைவு, ஒளி- இருள்,

---

2. தா.வே. வீராசாமி; தமிழ் நாவல் வகைகள், ப. 36.
3. க.த. திருநாவுக்கரசு, பேராசிரியர் மு. வரதராசனாரின் படைப்பிலக் கியம், ப. 179.
4. ச.வே. சுப்பிரமணியன், இளங்கோவும் கம்பனும், ப. 148.
5. வை. சச்சிதானந்தன், மேலை இலக்கியச் சொல்லகராதி ப. 221.
6. கி. கஸ்தூரிரங்கன் தினமணிக்கதிர் 13.1.1991, ப.இ.
7. Compounded from Greek words for 'not' (ou) and place (topos), and something 'nowhere' the word implies an element of fantasy and 'Utopian' as an adjeclive is used to suggest the impossibly optimistic. William Bestan (ed;); Encyclopaedia Britannica, Vol. 22, p. 821.

மலை - மடு, வளம் - வறுமை, வளர்ச்சி - வீழ்ச்சி, நன்மை - தீமை, என முரண்களால் அமைந்த உலகில் மனமகிழ்ச்சி தரும் நன்மை நிறைந்த இன்பம் ஒன்றினை மட்டும் நிலை பெறச் செய்ய உன்னுதல் 'உடோபியா' ஆகிறது. இத்திட்ட மிடலின் வெற்றியும் வாழ்வும் நனவுலகில் அமைதற்குச் சற்றும் வாய்ப்பில்லை; கனவுலகில் மட்டுமே நிகழ்தற் கூடும். எனவே உடோபியா' என்பதன் உட்பொதி பொருளான நிறை இன்பத்தின் வேட்கையும், அஃது நிறைவேறாமை யும் இணைந்த நிலையில் இங்கு 'இன்பக்கனவுலகம்' என்ற தொடர் கையாளப்பட்டுள்ளது.

## இன்பக் கனவுலக வியல்பு

நன்கு திட்டமிடப்பட்ட சமுதாயமாக, குறையே காண முடியாததாக, ஏற்றத்தாழ்வற்ற நிலையில் அனைவரையும் சமமாகப் போற்றுவதாக, இல்லாமை இல்லையென்பதாக அமைதல் இதன் இயல்பு. குறிப்பாக அரசியல், பொருளாதாரம், உணவு, உடை, இருப்பிடம், கல்வி, பெண்ணுரிமை போன்றன வற்றில் சீர்திருத்தக் கருத்துகள் முதன்மை பெற்றிருக்கக் காண லாம். இதனை ''மானிடரால், மானிடருக்காகக் கற்பிக்கப் பட்ட மானிட சமுதாயமாக'' நவில்வர்.[8] கற்பித நிலையில் அமையினும், நடப்பியல் சமுதாயச் சீர்மைக்கு ஒத்துவரக் கூடிய, கடைப்பிடிக்கக் கூடிய சில நல்ல வளர்ச்சிக் கூறு களும் உண்டு.[9] வாழ்வின் அனைத்துத் துறைகளையும் நன் நோக்குடன் மிகு விழைவுடன் கற்பித்திருப்பினும், படிப்பதற் கும் கேட்பதற்கும் சுவைதரினும் நடைமுறை வாழ்க்கைக்குப்

8. Utopia, which is essentially that of a planned imaginary human community, humanly organised for human well being. S.H. Steinberg (ed.) Cassell's Encyclopaedia of World Literature, Vol. 1., p. 573.

9. A description of society in its ideal moment of perfection would not merely throw a light upon its real nature but indicate the possibilities of development.

Joseph, T. Shipley, Dictionary of World Literary Terms, p. 350.

பெருமளவில் ஒவ்வாது வெகு தொலைவாகத் தனித்து நிற்கும் பண்புடையது.

**இன்பக் கனவுலகின் வகைகள்**

மேனாட்டினர் இன்பக் கனவுலக இலக்கியங்களை இரு வகையாகப் பகுப்பதை, ''கற்பனையுலகப் புனைகதைகளை இரு வகையாகப் பாகுபாடு செய்வர். 'கூர்தலறக் கற்பனையுலகப் புனை கதைகள்' (Evolutionary Utopias) எனவும், 'சமுதாயப் புத்தமைப்பு கற்பனையுலகப் புனைகதைகள் (Utopias of social reconstruction) எனவும் வகைப்படுத்துவர்'', என எடுத்துக் காட்டுவர்.[10] அறிவியல் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டதை முன்னது சுட்டுகிறது. மு.வ. வின் கி.பி. 2000 இதற்குச் சான்றாகும். அறிவியலுக்கு அதிகச் சிறப்பின்றிக் காட்டும் சீர்திருத்தக் கதைகளைப் பின்னது பேசுகிறது. கி. கஸ்தூரிரங்கனின் 'புத்துலகம் இன்றே' இதற்குக் காட்டாகும்.

தமிழில் காணப்படும் இன்பக் கனவுலகக் கதைகளை நோக்கக் கீழ்க்காணும் வகைமைகள் அமைகின்றன.

1. வெளிப்படையாக, திட்டமிடப்பட்ட இன்பக் கனவுலகைப் படைத்தல். இதில் சமுதாயச் செழுமைக்கு, சீர்மைக்கு அடிப்படையான பொருளியல், அரசியல், தொழில், கல்வியியல், ஒழுகலாறுகள் முதலானவற்றில் மிகுகவனம் காட்டப் பட்டிருக்கும். ஆண் - பெண், ஏழை - பணக்காரன் என எவ்வகையிலும் வேறுபாடற்ற, தன்னிறைவு பெற்ற சமுதாயமாக அவை மிளிரும். 'கி.பி. 2000' சிறந்த எடுத்துக்காட்டாகும்.

தம்முடைய புனைவுலகில் செய்யப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் எவ்வகையில் செயற்படக் கூடியன; அதன் மேன்மைகள் எத்தகையன என்பனவற்றைத் தெளிவாக இவை உணர்த்தி நிற்றல் சிறப்புக் கூறாகும்.

2. சமுதாயத்திற்கு இன்றியமையாதனவற்றுள் ஏதேனும் ஒன்றினை மட்டும் முதன்மைப்படுத்தி விரிவான வரைவு

10. க.த. திருநாவுக்கரசு, முன்சுட்டியது, ப. 180.

தருவன மற்றொரு வகை. பெண்ணுரிமை பேசும் வ.ரா. வின் 'கோதைத் தீவு' இதற்குச் சான்றாம்.

3. நிகழ் உலகின் மாற்றம் எப்படியிருக்க வேண்டும் என்பதை மட்டும் நவில்வன பிறிதொரு வகை. அம்மாற்றங் கள் எப்படி நிகழக்கூடும்; எப்படிச் செயற்படுத்த வேண்டும் என்பதற்கான விளக்கங்களை இவற்றில் காணற்கியலாது. நாமக்கல் கவிஞரின் காந்தி கண்ட இராமராச்சியத்தை உட் கொண்டு படைத்த அவனும் அவளும் விரும்பிய நாடு, பாரதியாரின் 'புதிய கோணங்கி' போன்றன இதனுள் சிறப் புறுகின்றன.

4. நடப்பியல் வாழ்வுடன், அதனின்று விலகியமையும் தனிமனிதனின் இன்பக்கனவுலகினைப் படைத்துக் காட்டல் இஃதாகும். தனிமனிதன் மாறினால் சமுதாயமும் மாற்றம் பெறும்; சமுதாயச் சீர்மைக்குத் தனிமனித மனமாற்றம் இன்றி யமையாதது என்பதை இத்தகையன உள்ளுறுத்துகின்றன. பாரதியாரின் 'ஞானரதம்', ஜெயகாந்தனின் 'ஒரு மனிதன், ஒரு வீடு, ஒரு உலகம்' ஆகியன இதன்பாற்படுகின்றன.

5. நிகழ்கால உலகின் அவலங்களை முறையாகக் காட்டி அவற்றினின்று மீட்சியுற வெழுந்த புரட்சியை இன்பக் கன வுலகாக்கிக் காட்டுவது இவ்வகையாகும். படைப்பின் இறுதிப் பகுதி மட்டுமே இவ்வுலகை விளக்கி நிற்கும், சமுதாயத்தின் ஒட்டு மொத்தமான மாற்றமாக அமையாது ஒரு சிலவற்றை மட்டும் கதைப்போக்கிற்கேற்ப முதன்மைப்படுத்தி அமை தல் இயல்பு. இவற்றை முழுமை இன்பக்கனவுலக இலக்கிய மாகக் கொள்வதைவிட 'இன்பக் கனவுலக நோக்கு இலக்கிய' மாகக் (Quasi-Utopian Literature) கொள்வது பொருந்தும். வையவனின் 'இன்று புதிதாய்ப் பிறந்தோம்'; வாசவனின் 'புதிய யுகம் பிறக்கிறது' போன்றன சான்றுகள்.

இன்பக்கனவுலகப் படைப்புகளின் கருத்துப் புலப் பாட்டிலும் இரு நெறிகளைக் காணமுடிகிறது. முழுக்க முழுக்கப் படைப்பாளரின் சொந்தக் கருத்துகளின் அடிப்படை யில் எழும் கற்பனைப் புனைவுகள் முதலாவதாகும். மு.வ.வின் 'கி.பி. 2000' ஜெயகாந்தனின் - 'ஒரு மனிதன், ஒரு வீடு, ஒரு உலகம்' போல்வன சான்றாம். ஏதேனும் ஓர் வகையில்

புகழ்பெற்றவரின் கருத்துகளை அடியொற்றிப் புனைந்துரைத்தல் இரண்டாவதாகும். காந்தீயத்தை மையப்படுத்தி எழுந்துள்ள 'அவனும் அவளும் விரும்பிய நாடு', 'புத்துலகம் இன்றே' போன்றமைவன காட்டாம்.

வெளியீட்டு முறைமையிலும் இன்பக்கனவுலகு மூவகை காண்கிறது. பக்தியையும் அறத்தையும் முன்னிறுத்தி அமைவன முதலாம் வகை. இவற்றுள் புராணங்களும் 'சிறப்பிடம் கொள்கின்றன. பாரதியாரின் ஞானரதம் இவ்வழியில் இயன்றது. சமுதாயச் செம்மைக்கு அறிவியலையும் புரட்சி எண்ணங்களையும் துணைகொண்டு காட்டல் இரண்டாம் வகை. 'கி.பி. 2000' த்தை இதனுள் கருதலாம். பழ நெறிப் பற்றாளரை முன்னதும் புதுநெறி வேட்கையாளரை பின்னதும் உணர்த்துகின்றன.

நடப்பியல் சார்த்தி எள்ளற் சுவையுடன் இன்பக் கனவுலகிற்கு வழிகாட்டல் மூன்றாம் வகை. சோவின் 'இன்பக் கனா ஒன்று கண்டேன்' இதனைக் காட்டுகிறது.

### தோற்றக் களம்

தாம் வாழும் சமுதாயத்தின்பாற் கொண்ட எதிர்பார்ப்புகள் நிறைவேறாமை; சமுதாயத்திடம் மனநிறைவின்மை; சமுதாயக் குறைபாடுகளால் மன பாதிப்பு முதலானவை படைப்பாளரைத் தூண்டுகின்றன. சமுதாய எழுச்சியை ஆழமாக எண்ணுவதன் மூலம் குறைபாடுகளுக்குரிய காரணங்கள் புலனாகின்றன. உடன் அக்குறை தீர்ப்பதற்கான நெறிகளும் அவரவர் கற்பனைக்கும், விருப்பிற்கும் தக எழுகின்றன. சமூக மேம்பாட்டிற்கான சிந்தனையில் மிகத் தீவிரமாக நிற்போரில் சிலர் நேரிடையாகப் புகுந்து தம் உழைப்பால் மாற்ற முயல்கின்றனர்; சமூகத் தொண்டராகின்றனர். சிலர் எழுத்துருவில் தம் சிந்தனைகளை வெளியிடுகின்றனர். அவற்றுள் சில நடைமுறைக்கு ஏற்புடையதாகிறது. சில நடைமுறைக்கு வாய்ப்பாக அமைவதில்லை. பொன்மலர் நாற்றமுடைத்து என்பது போன்று கற்பனையுலகிற்கே பொருந்துவதாகிறது; 'இன்பக் கனவுலக' இலக்கியமாக மலர்கிறது.

பிறபல இலக்கிய வகைமைகளைப் போன்றே இது வும் படைப்பாளர் வாழும் சமுதாயத் தாக்கத்தினால் எழு கிறது. எனவே அவ்வவ் காலச் சமுதாயச் சிக்கல் 'இன்பக் கனவுலகில்' சிறப்பிடம் பெறுகிறது. வ.ரா.வின் கோதைத் தீவில் மகளிர் முன்னேற்றம் முன்னிற்பதும், சோவின் 'இன்பக் கனா ஒன்று கண்டேனில்' அரசியல் சிறப்புறுவதும் இக் காரணம் பற்றியே எனலாம். சுருங்கக் கூறின் சமுதாய அவலம் கண்டு வெதும்புவோரின் ஆக்கம் நிறைந்த சிந்தனையே இத்தகு இலக்கியத்திற்குத் தோற்றுவாயாகிறது.

**தோற்றமும் வளர்ச்சியும்**

கிரேக்க அறிஞர் பிளாட்டோ படைத்த 'அரசியல்' நூலே 'இன்பக்கனவுலக' இலக்கியங்களுக்கு அடிப்படை என்பது பொதுவான கருத்து. உடோபியா என்ற சொல்லாட்சி யையும் தனித்த முதல் இலக்கியத்தையும் படைத்த மூலவ ராகப் பதினைந்தாம் நூற்றாண்டைச் சார்ந்த தாமஸ் மூர் கருதப் படுகிறார்.[11] உலகில் எங்குமில்லாத நல்ல இடத்தைக் கற்பித்து, அதில் நன்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் அரசு எங்ங னம் இயங்கும் என்பதைப் புனைந்துரைத்துள்ளார். தொடர்ந்து மேலை நாடுகளில் பல நூல்கள் தோன்றியுள்ளன.[12] இந் நூல் முதன்முதலாக இலத்தீனில் 1516 இலும், ஆங்கிலத்தில் 1551 இலும் வெளிவந்துள்ளது.[13]

தமிழிலக்கியத்துள் உயர்வு நவிற்சியாகச் சேரமான் யானைகட் சேய்மாந்தரஞ் சேரல் இரும்பொறையைக் குறுங் கோழியூர்க் கிழார் பாடிய புறநானூற்றுப் பாடல் இன்பக் கனவுலகிற்கு வித்திட்டுள்ளது.

---

11. Plato's first great successor was Sir. Thomas More, the Renaissance humanist; and More gave a name to this whole literature. 'Utopia' is a pun; Outopia, no place and Eetopia, the good place. These two modes of Utopia divide the whole literature more or less, into Utopias of escape Utopia and Utopias of reconstruction. Both aspects of Utopia are present in More's work. - Dictionary of World Literary Terms; p. 350.

12. Encyclopaedia Britannica, Vol. 22, p. 821.

13. மேற்படி.

**அறிவும் ஈரமும் பெருங் கண்ணோட்டமும்**
**சோறு படுக்கும் தீயோடு**
**செஞ்ஞாயிற்றுத் தெறல் அல்லது**
**பிறிது தெறல் அறியார் நின்நிழல் வாழ்வோரே**
**திருவில் அல்லது கொலைவில் அறியார்**
**நாஞ்சில் அல்லது படையும் அறியார்.....**
**(புறம். : 20:671)**

**மாந்தரஞ் சேரல் இரும்பொறை ஓம்பிய நாடே**
**புத்தேள் உலகத்து அற்று' எனக் கேட்டுவந்து**
**இனிது கண்டிசின் பெரும (புறம்: 22:34-36)**

*என்பன அவர்தம் மொழி. சேரனின் செங்கோலாட்சிப் புலவர் கூற்றில் இன்பக்கனவுலகாக மாறியுள்ளது. மற்றும் கடலுள் மாய்ந்த இளம்பெரு வழுதியின் 'உண்டாலம்ம இவ்வுலகம்' (புறம் - 182) பாடலும் பிசிராந்தையார் 'யாண்டு பலவாக நரைஇல ஆகுதல் யாங்கு ஆகியர்?' என்ற வினாவிற்கு விடுத்த விடையும் (புறம்: 191) இதனுள் எண்ணத்தக்கன. பாண்டியன் பாடல்*[14] *தனிமனிதன் சீர்மையைக் காட்ட, பிசிராந்தையார் பாடல்*[15] *குடும்பம் - சமூகம் - நாடு என முப்பகுதியும் முறைப்பட அமைந்து சிறப்பதைத் தருகிறது. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பி, பிறர் நலம்*

---

*14.* உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவு இலர்
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சி
புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்; பழி எனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்
அன்ன மாட்சி அனையர் ஆகி
தமக்கு என முயலா நோன்தாள்
பிறர்க்கு என முயலுநர் உண்மையானே (புறம் 182)

*15.* யாண்டு பல ஆக, நரையில ஆகுதல்
யாங்கு ஆகியர்? என வினவுதிர் ஆயின்
மாண்ட என மனைவியொடு, மக்களும் நிரம்பினர்
யான் கண்டனையர் என் இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான், காக்கும், அதன் தலை
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர் யான் வாழும் ஊரே (புறம் 191)

பேணும் பொதுவுடைமைக் கொள்கையை இளம்பெருவழுதி வலியுறுத்தக் காணலாம்.

**யாதும் ஊரே; யாவரும் கேளிர்;**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா**
**நோதலும் தணிதலும் அவற்றோரன்ன...**

எனப்பாடிய சங்கப்புலவர் கணியன் பூங்குன்றனாரின் பாடல் தத்துவ நோக்கில் துன்பத்தில் தளரும். மனித மனத்தை இன்ப மயமாகக் காணச் செய்கிறது. தொடர்ந்து வள்ளுவர்,

**தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்**
**செல்வரும் சேர்வது நாடு** (731)
உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு. (734)

என அறநோக்கில் நாட்டியல்பை வகுத்துரைக்கிறார். சமுதாய நலந்தேடும் காப்பியப் புலவரும் இன்பக்கனவுலகினை நாட்டு, நகர் வளங் காட்டலில் சுட்டிச் செல்கின்றனர். இளங்கோ படைத்த ஐவகை மன்றமும் சமுதாயத்தை மேனிறுத்தி இன்பக்கனவுலகாக்கும் இயல்பின. கம்பன் காட்டிய கோசலமும் பலர் பாராட்டிய இன்பக் கனவுலகே. 'அடிகள் குறையுடைய சமுதாயத்தைக் காட்டி, குறைநீக்க வழிகளும் சுட்டினர் என்றால், கம்பர் குறையற்ற, நிறைகளே உடைய சமுதாயத்தைக் காட்ட முயல்கின்றார் எனலாம். 'உடோபியா' எனக் கூறப்படும் குறிக்கோட் சமுதாயத்தைப் படைத்தளிக்கும் பாங்கு, கவிஞரின் தனித்தன்மையாகும் என்பர்.[16]

புராணங்களும், காப்பியங்களும் காட்டும் விண்ணுலகும் குறையற்ற மண்ணுலகும், நாட்டுப்புறக் கதைகளும் பாடல்களும் காட்டும் மிகைக் கற்பனைகளும் இன்பக் கனவுலகின் எதிரொலி எனக் கருதலாம். நாட்டுப்புறக் கதைகளான பழங்கதைகளை இவ்விலக்கிய வகையின் முன்னோடியாகச் சுட்டுதலும் உண்டு.[17]

---

16. ச.வே. சுப்பிரமணியன், முன்சுட்டியது

1. International Encyclopaedia of the Social Sciences, Vol. 15-17, p. 267.

இன்பக் கனவுலகப் படைப்பில் பக்திநெறியும் சிறப் புறுகிறது. நாவுக்கரசரின் 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' சம்பந்தரின் 'மண்ணில் நல்ல வண்ணம் வாழ லாம்'; தாயுமானவரின் 'அன்பர் பணிசெய எனை ஆளாக்கி விட்டு விட்டால் இன்ப நிலை தானே வந்தெய்தும் பரா பரமே' எனும் மொழிகளும் இவண் இணைத்து நோக்கத் தக்கன.

முழுமையான நிலையில் 'இன்பக் கனவுலக' இலக் கியங்களை இந்நூற்றாண்டில் காண முடிகிறது. கவிதைகளாக வும், கதைகளாகவும் அவை மலர்ந்துள்ளன. பாரதியாரின், 'போகின்ற பாரதமும் வருகின்ற பாரதமும்', 'புதிய கோணங்கி'; பாரதிதாசனின் 'புதிய உலகு செய்வோம்', 'கொட்டு முரசே', நாமக்கல் கவிஞரின் 'அவனும் அவளும் விரும்பிய நாடு'; கே.சி.எஸ். அருணாசலத்தின் 'வெற்றிப் பயணம்' போன்றன கவிதையுருக் கொண்டுள்ளன. பாரதியார் ஜான் ஸ்கர் என்ற ஆங்கிலக் கவியின் 'The Town of Lets Pretend' என்ற பாடலைத் தமிழில் 'கற்பனையூர்' என மொழிபெயர்த்திருப்பதும் சுட்டத் தக்கது.

சுத்தானந்தபாரதியாரின் பாரதசக்தி மகாகாவியம் (1948) திரு.வி.க.வின் பொருளும் அருளும் அல்லது மார்க்ஸிய மும் காந்தியமும்' (1951) என்பனக் காப்பிய உரு கொண் டுள்ளன. ''மார்க்ஸியத்தின் உயிர்நாடி பொருள், காந்தியத் தின் உயிர்நாடி அருள். இரண்டும் சேர்ந்த ஒன்று வருங்காலப் புது உலகத்தை நல்வழியில் அமைக்க வல்லதென்பது எனது கருத்து. அக்கருத்தை உரைநடையில் விரிந்த ஒரு நூலாக்க யான் எண்ணியதுண்டு. அவ்வெண்ணம் ஈடேறவில்லை. ஆகவே இந்நூலைச் சுருங்கிய முறையில் அகவற்பாவில் இயற்ற லானேன்'' எனும் திரு.வி.க. கூற்று உணர்த்தற்பாலது.[18]

உலகில், சிறப்பாகப் பாரதத்தில் நடைபெற்ற வர லாற்று நிகழ்வுகளைக் கருத்துட் கொண்டு, எதிர்காலத்தில் எப்படி இருப்பின் மானிட சமுதாயம் நலம் பெறும் எனத் தாம்

---

18. நூல் முன்னுரை

கனவு காணும் உலகினைச் சுத்தானந்த பாரதியார் பாரதசக்தி மகாகாவியத்துள் காட்டியுள்ளார். 'ஒன்றே கடவுள் ஒரு வான் குடைக்கீழ் ஒன்றே உயிர்க்குலம் என்றே விளக்கி இன்றும் என்றும் எங்கும் இன்பமே காணத் துடிக்கும் இக்காவியம்' என்பது அவர் வாயுரை (பாரத சக்தி மலர்ச்சி).

உரைநடையில் வ. ராமசாமியின் 'கோதைத்தீவு' (1945) முதனூலாகத் தெரிகிறது. தொடர்ந்து மு.வ, 'கி.பி. 2000' புனைந்துள்ளார் (1947), ஜெயகாந்தன் 'ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்' (197) ஜய ஜய சங்கர (1977) என இரு புதினங் களைப் படைத்துள்ளார். கி. கஸ்தூரி ரங்கனின் 'புது உலகம் இன்றே' (1991) தினமணி கதிர் தொடர்கதையாகும். இதன் முற்பகுதி எனக் கருதத்தக்க வகையில் 'புதியதோர் உலகம் செய்வோம்' எனும் தொடரினைத் தினமணிகதிரில் இவர் அளித்துள்ளார். புதிய உலகு தோன்றுதற்குரிய பின்புலமாக அத்தொடர் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சோவின் 'இன்பக்கனா ஒன்று கண்டேன்' (1972) நாடக வடிவினதாகும். திட்டமிட்ட இன்பக்கனவுலகைப் படைத் துக் காட்டும் இவர் நாடகத்தின் இறுதிப்பகுதியில் மனித னின் தன்னலம் மற்றும் பேராசை காரணங்களாக அஃது சீர்குலைவதைச் சுட்டியுள்ளார். பொதுவாக நன்னோக்குடன் படைக்கப்படும் இன்பக் கனவுலக இலக்கியங்கள், என்றேனும் ஓர் நாள் கனவு நனவாகாதா என்ற ஏக்கத்துடன் அல்லது நம்பிக்கையுடன் முடிவுறக் காணலாம். ஆயின் இந்நாடகம் ஆசிரியரின் நம்பிக்கையின்மையை வெளிப்படையாகக் காட்டி முரணுகிறது.

இங்குக் குறிக்கப்பட்டுள்ளன மட்டுமே தமிழில் இவ் வகை சார்ந்த படைப்புகள் என்பதில்லை. ஒரு பருந்துப் பார்வையில் கிடைத்தன மட்டுமே சுட்டப்பட்டுள்ளமையால் மேலும் பல கிடைத் தற்கு ஏதுண்டு.

இவ்விலக்கியங்களை ஒட்டுமொத்தமாக நோக்கின், இவற்றின் படைப்பாளர், எவற்றை இன்பக்கனவுலகிற்கு அடிப்படையாகக் கொண்டுள்ளார் என்பதை அறிய முடி கிறது. பழமைக்குச் சிறப்பளித்து, கள்ளங்கபடற்ற குழந்தை

மனத்துடன் வாழக்கற்றல்; எதிலும் அழகினைக் காணல் என்பன பாரதியார், ஜெயகாந்தன் ஆகியோருக்குக் கருவி ஆகின்றன. பொதுவுடைமை நோக்குப் பரவலாக, எல்லா மொழி இன்பக் கனவுலக இலக்கியங்களுக்கும் பொது வாகிறது. பாரதிதாசனும் திரு.வி.க.வும் இதனைப் போற்றி யுள்ளனர். காந்தீயச் சிந்தனை நாமக்கல்லாருக்கும் கஸ்தூரி ரங்கனுக்கும் வழிகாட்டியாகிறது. பக்தி நெறியே ஏற்புடைத் தாகச் சுத்தானந்த பாரதியார் மேற்கொண்டுள்ளார். அறநெறி யும் மனிதநேயமும் இணைந்து உணர்த்திய அறிவுப்பாதை இன்பக்கனவுலகிற்கு அழைத்துச் செல்வதை மு.வ.விட மும் சோவிடமும் காணலாம். இவ்விருவருள் சோ காட்டி யுள்ள நம்பிக்கையின்மை மு.வ. வைத் தனித்து உயர்நிலை பெறச் செய்கிறது. புதுநெறி படைக்கும் வேகம் வ.ரா. விற்குத் துணையாகக் காண்கிறோம்.

எவ்வகையிலும் தீமையற்ற அல்லது துன்பம் என்றால் என்ன என்பதையே உணர முடியாத இவ்வின்பக் கனவுலகின் பழைய வடிவமாக அல்லது தோற்றுவாயாகக் குறள் முதலாய அறநூல்களைக் கொள்ளலாமோ என்ற எண்ணமும் இவண் எழுகின்றது. இவ்விருவகையின் நோக்கமும் உயர்ந்த, உன்னத வாழ்க்கை என்பதும் இணைத்துக் காணத்தக்கது. இவ்வெண் ணத்தினை வலியுறுத்துவதாக,

> **நம்பிக்கையும் தெளிவும் பெற்று உணர்ந்து எண்ணத் தொடங்கிவிட்டால் படிப்படியாக உலகம் சீர்படுவது உறுதி. எண்ணமே வாழ்வு. எண்ணம் சீர்பட்டால் உலகம் சீர்படுவது திண்ணம். ஒருவர் இருவர் எண்ணிப் பயன் இல்லை. மக்கள் பெரும்பாலோர் எண்ண வேண்டும். அவ்வாறு எண்ணும் நாள் என்று வருமோ, அன்றே புத்துலகம் பிறந்து விடும்.... வாழ்க்கையில் ஒவ்வொரு சிக்கலையும் எதிர்ப்படும் போது ஒதுங்கிச் செல்வதும் உண்டு; ஒதுக்கிச் செல்வதும் உண்டு. ஒதுங் கிச் செல்லும் வாழ்க்கை அச்சம் நிறைந்த வாழ்க்கை; ஒதுக்கிச் செல்வதோ அக்கறை அற்ற வாழ்க்கை இந்த இரண்டும் பயனற்றவை. சிக்கலைத் தீர்த்து வெல்லும் வீரமே வேண்டும். அதுவே புத்துலகின் திறவுகோல் (கி.பி. 2000, முன்னுரை)**

எனும் மு.வ. கூற்று அமையக் காணலாம்.

### *சமூகச் செயற்பாடுகள்*

இனி, தமிழறிஞர் காட்டும் இன்பக் கனவுலகின் சமூகச் செயற்பாடுகள் அமையுமாற்றை, சமூகத்தின் இன்றியமையாக் கூறுகள் அல்லது முதன்மைக் கூறுகள் வழிக்காட்டலாம். இங்கு மு.வ.வின் 'கி.பி. 2000'மும் கஸ்தூரி ரங்கனின் 'புது உலகம் இன்றே' (பு. உ.இ)வும் அடிப்படையாக அமைகின்றன.

### 1. பொருள் (Money): பொருட் பங்கீடு

உலக இயக்கத்திற்கு மட்டுமன்றித் தீர்வு காண இயலாத பல்வேறு சிக்கல்களுக்கும் ஆணிவேராக நிற்பது செல்வம் எனப்படும் பொருள். எனவே இன்பக் கனவுலகச் சிற்பிகள் இதற்கு மிகுந்த சிறப்பளித்துத் திட்டமிடுகின்றனர். அனைவருக்கும் உழைப்பினை உறுதிப்படுத்தி; உற்பத்தியைப் பொதுவாக்கி; உணவு, உடை, இருப்பிடம் அனைத்திலும் ஒருமையைக் காட்டுகின்றனர்.

உணவுப் பொருள் உற்பத்தி, தொழிற் பொருள் உற்பத்தி, இருப்பிடத் தூய்மை என எல்லாப் பணிகளையும் பட்டியலிட்டு, சுழற்சி முறையில் அனைவரும் பங்கேற்கின்றனர். தலைமைப் பொறுப் பென்பது பெயரளவில் மட்டுமே அமைகிறது. கி.பி. 2000இல் தலைமை யென்பதின்றிப் பொதுத் தொண்டர் எனப்பலர் கூடி, ஒவ்வொரு துறைக்கும் பொறுப் பேற்றுச் செயல்படுகின்றனர். பொறுப்பேற்கும் பொதுத் தொண்டர் தேர்ந்தெடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. உழைப்பில் தலைவரும் பங்கேற்பதைப் பு.உ.இ. காட்டுகிறது.

உற்பத்தியில் தன்னிறைவு கொள்ளல், புறத்திருந்து எதனையும் பெறாமை என்ற கொள்கையோடு பு.உ.இ அமைகிறது. உலகின் எல்லா நாடுகளும் ஒருங்கிணைந்து, அவரவர் மக்கட்தொகை, தேவை, உற்பத்தி இவற்றிற்கேற்ப பங்கிடுதலையும், பண்டமாற்றலையும் கி.பி. 2000 காட்டுகிறது. தான், தன் இனம், தன் நாடு என்ற வேற்றுமை முழுமையாக மறைந்து உலகம் முழுமையும் ஒன்றுகூடி அமைதியின்பம் காணல் இதன் தனிச் சிறப்பு.

பொதுவானதோரிடத்திருந்து எவ்வேற்றுமையுமின்றி மக்கள் தங்கள் தேவைகளைப் பெற்றுக் கொள்வதால் அனைவரும் சமநிலை பெறுகின்றனர்; இல்லாமை இல்லாதாகிறது. மனக்கசப்பும் வேற்றுமையுணர்வும் மறைந்தொழிவதுடன் 'பொருளின்' தேவையும் ஒழிகிறது. இதனால் பொருள் சேர்க்கையும், தொடரும் சிக்கல்களும் விலக்கப்படுகின்றன. 'எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே இல்லாரும் உடையாரும் இல்லை'' (166) எனும் கம்பன் கவிக்கு இவர்கள் செயல் வடிவம் காட்டியுள்ளனர்.

## 2. கல்வி

'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றையவை' (குறள் 400) ஆதலின் கல்விக்கு இங்குத் தனிப் பேரிடம் உண்டு. இரு நூல்களுமே கட்டாயக் கல்வியையும் கல்விச் சீர்திருத்தத்தையும் காட்டினும் கி.பி. 2000 தரும் கல்வி உயர்ந்து நிற்கிறது. அதனைப் படைத்தவர் பெரும் பேராசிரியர் என்பது தலையாய காரணம். மாணாக்கரின் சிந்தனையைத் தூண்டுவதாக, விருப்பத்தோடு அவர்கள் அதில் பங்கேற்பதாக இருநூல்களுமே காட்டுகின்றன. உளவியலறிந்த செயற்பாடு இதற்குக் காரணம்.

ஒரு வகுப்பறைக்கு மாணாக்கர் இருபது பேர் மட்டும்; விளக்க வேண்டிய பாடப்பகுதியை மிகுதியும் காட்சிப் பொருளாக்கல்; மாணாக்கரிடம் வினா கேட்பதன் வழி சிந்திக்கத் தூண்டுதல் - அவர்களையும் வினாயெழுப்ப வைத்தல்; அவ்வவ் துறை வல்லுநர் கொண்டு சொற்பொழிவாற்ற வைத்தல்; மாணாக்கரை ஆய்வுக் கட்டுரை படைக்கச் செய்தல்; கல்விச் சுற்றுலா கட்டாயமாதல்; வீதிதோறும், கல்வி நிறுவனங்கள் தோறும் சிறந்த நூல்நிலையம் அமைத்திருத்தல் என மிகச் சிறப்பான கல்வி முறையைப் பேராசிரியர் மு.வ. புகுத்தியுள்ளார்.

உயர்நிலைப் பள்ளி மாணாக்கர் காலையில் கல்வி கற்கின்றனர்; மாலையில் தொழில் கற்கின்றனர். இதன் வழி உழைப்பிற்கு வழியும், உழைப்பின் பெருமையும் உணர்த்தப் படுகின்றது. மற்றும் இவர்கள் உயர்நிலைப் பள்ளிக்கல்வி

முடிந்தவுடன் ஐந்து ஆண்டுகள் தொழிற்சாலைகளில் பணி புரிந்தபின்புதான் கல்லூரிப் படிப்பிற்குச் செல்லவியலும். பு.உ.இ. ஆசிரமத்தில் உலக மொழிகள் ஐந்தினைக் (ஆங்கிலம், ரஷியன், பிரெஞ்ச், ஸ்பானிஷ், சீனம்) கற்பித்தல் நவிலத் தக்கது. கல்லூரி மாணாக்கர் குறிப்பிட்டதொரு துறை என்றின்றிப் பல்துறைக் கல்வி தேர்ந்தவராக விளங்குதலும், ஆசிரியப்பணி மிக உயர்ந்த பணியாக மதிக்கப்படுதலும் அறிவு நூல் படைத்தலில் அவர்தம் பணி சிறப்புறுதலும் கி.பி. 2000 காட்டும் செம்மையாம்.

கல்வி என்பது வாழுங்காலம் முழுவதும் தொடர வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் கி.பி. 2000 பொது மக்களுக்காக வீதி நூலகங்களைக் காட்டுகிறது. அவற்றில் இருக்கும் ஆசிரியர், வாசகருக்கு எழும் ஐயங்களைத் தீர்த்து வைப்பதாகப் பணியாற்றுதலும் போற்றத்தக்கது.

### 3. தேர்தல்

எவ்வகை ஆட்சியாயினும் நடைமுறையில் ஆளுமை காரணமாகப் பல குறைபாடுகளுக்கு இடனாகிறது; சமூகச் சீர்குலைவிற்கும் காரணமாகிறது. எனவே கி.பி. 2000, நிர்வாகத்தை நடத்திச் செல்லும் பொறுப்பில் உள்ளோரைத் தொண்டராகக் குறிப்பிடுகிறது. அரசியல் கட்சிகளோ, இன, சமய, மொழி யடிப்படையிலான தேர்வுகளோ இவற்றில் இடம் பெறுதலில்லை. கல்லூரியில் தேர்வு பெற்றிருக்க வேண்டும் என்பது கி.பி. 2000இன் தேர்தலில் நிற்போருக்குரிய விதியாகும். தேர்தல் முறை குடவோலை முறையைப் பின்பற்றுகிறது. பதவிக்காலம் ஓராண்டு தகுதியுடையோர் அனைவர் பெயரையும் குடத்துளிட்டுத் தேவையான எண்ணிக்கைக் கேற்ப தொண்டர் இங்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

படிநிலைத் தேர்வு முறையை (பஞ்சாயத்து - நகராட்சி - கிராமக் குடியரசு - மாவட்ட மன்றம் - மாநில மன்றம் - பிரதேச மன்றம் - சான்றோர் மன்றம்) பு.உ.இ. காட்டுகின்றது. பொருளாதாரம், கல்வி எனச் சமூக அளவில் ஏற்படவேண்டிய பெரிய மாற்றங்களுக்கு அடிப்படைத் தேவை அரசியல் மாற்றம்

என்ற உணர்வில் பு.உ.இ. இதில் மிகத் தெளிவான விளக்கத் தினை அளிக்கிறது. தேர்ந்தெடுப்போர் ஐந்தாண்டு பதவி வகிப்பர்; நல்லவர் என்று பஞ்சாயத்து - நகராட்சியில் பெயர் வாங்கியோரே தேர்தலுக்கு நிற்க முடியும்; ஒரே பதவியினை இருமுறைக்கு மேல் வகித்தல் இயலாது; தேர்ந்தெடுக்கப்பட் டோர் மீது குற்றம் சுமத்தப்படின் வெளிப்படையாக நீதி விசா ரணை நிகழ்த்தப்படும். குற்றம் புரிந்திருப்பின் அவர் தகுதி யிழந்தவராவார் என்பன போன்ற பல கொள்கைகள் இதில் வலியுறுத்தப்படுகின்றன.

### 4. மகளிர், குழந்தைகள், முதியோர்

மகளிருக்குச் சமவுரிமை வழங்கப்பட்டு விடுவதாலும், தம் துணையைத் தாமே, தேர்ந்து கொள்ள முடிவதாலும் அமைதியான இல்லத்திற்குப் பங்கம் இன்மையாலும் இச்சமு தாயத்தில் இவர்கள் உயர்வாகவே போற்றப்பட்டுள்ளனர். கி.பி. 2000இல் நிர்வாகப் பொறுப்பில் மகளிர் மிகுதியாகப் பங்கேற்றலும் சுட்டத்தக்கது.

சமுதாயத்தை நிலை நிறுத்தற்கும் எதிர்காலத்தில் சிறந்த குடிமகனாய் உருவாக்குதற்கும் குழந்தை நலம் குறித்தும் கருத்து செலுத்தப்பட்டுள்ளது. மூன்று வயது வரையிலும் குழந்தைகள் தம்விருப்பம்போல் விளையாடவும், சித்திரம் வரையவும் பு.உ.இ. இடமளிக்கிறது. கி.பி. 2000 இவ்வித்து களைப் பேணி நல் மரமாக்குதலைத் தெளிவான, வரை யறைகளுடன் பேசுகின்றது. இதில் முதியோருக்குப் பெரும் பங்களித்தல் கருதத்தக்கது. குழந்தைகள் பராமரிப்பில் கவலை யின்றிப் பெற்றோர் தம் பணியில் ஈடுபடல், பணியிலிருந்து ஓய்வு பெற்ற முதியோர் இன்பமாகப் பொழுதைச் செல விடல் என இரு பெரும் பயன்பாட்டையும் இஃது இணைத் துள்ளது. குழந்தைகள் வளருமிடத்தைப் 'பேரின்பம்' எனப் பெயரிட்டிருப்பது பொருத்தமாக உள்ளது.

### 5. சமூக நலம்

சமூக அங்கத்தினர் பின்பற்ற வேண்டிய சில ஒழுகலாறு களையும் இவை தருகின்றன. சமூகச் சிக்கல்களைத் தோற்று

விக்கும், வளர்க்கும் சமய, இன பேதங்கள் முற்றிலுமாக நீக்கப் படுகின்றன. அங்கத்தினர் அவரவர் விருப்பம் போல் வழி பாடு நிகழ்த்த கி.பி. 2000 அனுமதிக்கிறது. குற்றம் செய்தோ ரைத் திருத்தும் வழிமுறைகளும் (வேலையற்ற நிலையில் தனிமைப்படுத்துதல் போல்வன) இதில் காட்டப்படுகின்றன. உழைப்பிற்கேற்ற ஓய்வும் இருநூல் சமுதாயங்களிலும் கட்டாய மாக்கப்பட்டுள்ளது. ஓய்வு நேரத்தில் இனிமையான பொழுது போக்கிற்கும் வழிவகைகள் காட்டப் பட்டுள்ளன. கி.பி. 2000 இல் விடுமுறையில் வெளிநாட்டுப் பயணம் அனுமதித்தல் குறிப்பிடத்தக்கது. சுற்றுப்புறச் சூழல் தூய்மை, அழகு, உடல் நலம் பேணல் (இரண்டிலும் இயற்கை மருத்துவம்), விளை யாட்டிற்குச் சிறப்பளித்தல், சமூகத்திற்குத் தீங்கு ஏற்படுத் துவனவற்றை (மது....) முற்றிலுமாக ஒழித்தல் போல்வன வும் இயம்பப்பட்டுள்ளன.

இவற்றையும் இதுபோன்ற பிற இன்பக்கனவுலகச் சமு தாயங்களையும் இணைத்து நோக்குகையில் மு.வ. படைத் துள்ள கி.பி. 2000 மிகச் சிறப்பானதாக மட்டுமன்றி நடைமுறை யில் செயற்படுத்தக்கூடிய பண்புகள் நிறைந்தும் காணப்படு வது பாராட்டத்தக்கது. உலகம் முழுமையினையும் ஒருங் கிணைத்துப் பார்த்துள்ள பார்வை இதன் பெருஞ்சிறப்பாம். இந்நூல் உலகமொழிகள் அனைத்திலும் மொழிபெயர்க்கப் படின் தமிழின் பெருமை மேலும் விளக்கமுறும். இனம், சமயம் சார்பற்ற நிலையிலான புத்துலகம் எனக் கஸ்தூரிரங்கன் குறிப் பிடினும் அந்தணரினமும் இந்து சமயமும் சிறப்பிக்கப்பட் டிருத்தல் வெளிப்படை.

## துன்பக் கனவுலகு

இன்பக் கனவுலகிற்கு எதிர் நிலையாக அமையும் துன் புலகை (Dystopia)யும்[19] இலக்கியத்துள் காணமுடிகிறது. இன்பக்

19. The term Dystopia (bad place) has recently come to be applied to works of fiction which represent a very unpleasant imaginary world in which certain ominous tendencies of our present social, political and technological order are projected in some future culmination.

M.H. Abrams; Glossary of Literary Terms, p. 1178.

கனவுலகில் தொடங்கித் துன்பக் கனவுலகில் முடிவடையும் 'இன்பக்கனா ஒன்று கண்டேன்' இதனுள்ளும் அடங்கக் காண்கிறோம். தற்காலப் புதுக்கவிதைகள், குறிப்பாகச் சமூக அவலங்களைச் சுட்டி, வருந்துவனவாக அமைகின்றன. சுஜாதா வின் 'ரூல் நம்பர் 17' சிறுகதையை இங்கும் கருதலாம்.

**முடிவுரை**

இன்றைய சமூக, அரசியல் அவலங்கள் தொடர்ந்து பல நல்ல இன்பக்கனவுலகப் படைப்பிற்கு வடிகாலாக நிற்கின் றன. சமுதாயச் சீர்திருத்தத்தின்பால் அக்கறை கொண்டுள்ள படைப்பாளர் யாவரும் இதில் தம் கருத்துகளை வகுத்துரைத் தல் உன்னதத்தக்கது. அவை அனைத்தும் ஏட்டளவில் நின்று விடாமல் இயன்ற வரையில் நடைமுறைப்படுத்த முயலுகை யில் தமிழ்ச்சமுதாயம் உறுதியாக உய்வு பெறும்.

# இளங்கோவின் இன்பக்கனவுலகம்

இளங்கோவும் இன்பக் கனவுலகும்
வெளிப்பட உணர்த்தல்
மறைந்து நிற்றல்

# இளங்கோவின் இன்பக்கனவுலகம்

இலக்கிய இன்பம் ஒன்றையே படைப்பு நோக்காகக் கொள்ளும் படைப்பாளர் ஒருவகையினர். இலக்கிய இன்பத்துடன் தம் கொள்கைகளை, எண்ணங்களை இணைத்துத் தருவோர் பிறிதொரு வகையினர். இவ்விரண்டாம் வகையினரிடம் சமுதாய விழிப்புணர்ச்சி மேலோங்கி நிற்கக் காணலாம். தான் வாழும் சமுதாயத்தின் பால் அக்கறை கொணடு, அதன் மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் இலக்கியங்களைப் படைப்பவனே உயர்ந்த படைப்பாளி ஆகிறான். சங்கம் தொட்டு இன்றுவரை இவ்வகையினர் மரபாகத் தொடரக் காண்கிறோம். இவர்களுள் முதல் காப்பியமாம் முத்தமிழ்க் காப்பியம் - சிலப்பதிகாரம் படைத்த இளங்கோவும் ஒருவர். காப்பியப் போக்கில் ஓர் குறிக்கோட் சமுதாயத்தைக் காண அவர் விழைதல் மிகத் தெளிவாக வெளிப்படுகிறது. அவற்றை ஒருங்கிணைத்து நோக்கும் பொழுது இன்று திறனாய்வாளர் தனித்துப் போற்றும் இன்பக் கனவுலகாக (Utopia), இளங்கோ காண விரும்பிய உலகாக அவை ஒளிர்கின்றன. காப்பியத்தின் அடிப்படை நோக்கான மூன்றுடன்[1] இதுவும் ஒன்றாக இணைந்திருக்குமோ என்ற எண்ணமும் இங்கெழுகிறது. இதன் வெளிப்பாடே இக்கட்டுரை.

## இளங்கோவும் இன்பக்கனவுலகும்

இளங்கோ வாழ்ந்த சமுதாயமும் குறைகள் நிரம்பியதே. புலையும் கொலையும், சூதும் வாதும், போட்டியும் பொறாமையும், ஆணவமும் அழிவும், பொறுப்பின்மையும் மடியும்,

---

1. அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரணமாகச்
சிலப்பதிகாரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள் (பதிகம் 55-60)

ஏற்றமும் இறக்கமும், நெறிபிறழலும், சமயப் பூசலும், போரும் அழிவும் என அனைத்துக் கொடுமைகளும் சூழ்ந்திருந்த தைக் கதைப் போக்கு உணர்த்துகிறது. புலவரின் கற்பனைத் திறனுக்கும், எண்ணப் புலப்பாட்டிற்கும் காப்பிய வகைமை பேரிடங் கொடுத்தலின் இளங்கோ, தாம் காண விரும்பிய சமுதாயத்தை இடையிடையே உணர்த்தியுள்ளார். சிறுமையுற் றிருந்த சமுதாயம் பெருமைகொளத் தாம் காட்டும் வழி முறைகளை, வெளிப்பட நேரிடையாகவும், கரந்து மறைமுக மாகவும் வெளிப்படுத்தியுள்ளார். அவை இன்பக்கனவுலகிற்கு வழிகாட்டுதலாக அமைகின்றன.

### வெளிப்பட உணர்த்தல்

ஒரு நாடு எப்பொழுது மிகச் சிறந்த ஆட்சியின் பாற் படுகிறது; அமைதி நிரம்பிய அச்சமற்ற வாழ்க்கைக்குரியதா கிறது என்பதனைப் பாண்டி நாட்டின் பெருமையில் புனைந் துள்ளார்.

**கோள்வலு ளியமுங் கொடும்புற் றகழா**
**வாள்வரி வேங்கையு மான்கண மறவா**
**அரவுஞ் சூருமிரை தேர் முதலையும்**
**உருமுஞ் சார்ந்தவர்க் குறுகண் செய்யா**
**செங்கோற் றென்னவர் காக்கு நாடென**
**எங்கணும் போகிய விசையோ பெரிதே**
**பகலொளி தன்னினும் பல்லுயி ரோம்பும்**
நிலவொளி விளக்கி னீளிடை மருங்கின்
இரவிடைக் கழிதற் கேத மில்லென (13; 5-13)

என விலங்குகளின் நிலையே இத்தகு புகழுக்குரியது என்றால் அந்நாட்டு மாந்தர் இன்னும் எவ்வளவு உயர்ந்த நிலையில் இருப்பர் என எண்ணச் செய்து நம்மை வியக்க வைக்கிறார். அறிவுக் குறைபாடுடைய உயிர்களே உயரிய வாழ்க்கை நடத்தும் பொழுது ஆறறிவு மானிடர் நிலை இன்னும் உன்னதமாகத்தான் இருக்கும் என ஒன்றால் மற்றொன்றை விளக்குகிறார்.

இந்நிலை எங்ஙனம் அடைதல் கூடும் என வினவி அதற் காகச் சிந்தித்ததன் விளைவே அவருடைய கற்பனையில்

தோன்றிய, பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய பொது அறு சிறப்பில் புகாரில் உள்ள ஐம்பெருமன்றங்களாகும். இன்பக் கனவுலகக் கற்பனையில் இளங்கோவும் ஆழ்ந்திருந்திருக் கிறார் என்பதற்கு இம்மன்றங்கள் மிகச் சிறந்த சான்றாகும்.

பிறர் பொருள் வெளவியோரைத் தண்டித்துத் திருத்து வது **வெள்ளிடை மன்றம்;** கூன், குறள், ஊமை, செவிடு, அழுகு மெய்யாளர் போன்றோர் முழுகி, பழுதில் காட்சி நற்றிறம் பெற உதவும் **இலஞ்சி மன்றம்;** வஞ்சமுண்டு மயற்பகை உற்றோர், நஞ்சமுண்டு நடுங்கு துயருற்றோர், அழல்வாய் நாகத்தால் கடியுண்டோர், கழல்கட் கூளிக் கடுநவைப் பட் டோர் முதலானோர் தொழ அவர் துயர் தீர்க்கும் **நெடுங்கல் மன்றம்;** தவமறைந்து ஒழுகும் தன்மையிலாளர், அவ மறைந்து ஒழுகும் அலவற் பெண்டிர், அறைபோகமைச்சர், பிறர்மனை நயப்போர், பொய்க்கரியாளர், புறங்கூற்றாள ரைக் கைக்கொள் பாசத்துக் கையகப்படுத்திப் புடைத்துண் ணும் **பூதச்சதுக்கம்;** அரசு முறை தவறினும், அறங்கூறவையம் நடுநிலை பிறழினும் நாவொடு நவிலாது நவைநீருகுத்துப் பாவை நின்றழும் **பாவை மன்றம்** (5: 111-138) என்பனவாக அவை அமைகின்றன.

இவற்றால் தனிமனிதத் தவறுகளும், ஆட்சியாளர் தவறுகளும் தடுக்கப்படுகின்றன. உலகில் தோன்றிய மாந்தர் அனைவருக்கும் இன்றியமையாத உடற்பிணி நீக்கத்திற்கும் வழியமைகின்றது. பிறரால் தோற்றுவிக்கப்படும் துன்பத்தி னின்றும் விடுதலை கிடைக்கிறது. உள்ளும் புறமும் பண்படு கின்றன. அச்சுறுத்தலையும் வழிபாட்டையும் குறையற்ற வாழ் விற்கான வழியாக எண்ணுகிறார் இளங்கோ. சமுதாயத்தில் ஒவ்வொரு அங்கத்தினரையும் கருத்துட் கொண்டு வடிக்கப் பட்ட கற்பனையாகவும் இவை அமைகின்றன.

எண்ணிய எண்ணம் நிறைவேறாமையே வாழ்க்கைப் போராட் டங்களுக்கும் பிழைகளுக்கும் அடிப்படைக் காரண மாகிறது. இதனையும் கருத்துட் கொண்ட கவிஞர் மதுரை செல் லும் வழிகளை விவரிக்கும்பொழுது 'இட்ட சித்தி எய்துவீரா யின் இட்ட சித்தி யெய்துவிர் நீரே' (ப. 102-103) எனக் கற்பிக் கிறார். எண்ணிய எண்ணியாங்கு எய்தும் பொழுது அமைதியும்

நிறைவும் ஒருங்கே நிலவும் என்பது அடிகளின் கருத்தாகலாம்.

மக்களின் இன்பநிறை நலவாழ்விற்கு மேற்கண்டவாறு கற்பித நெறிகளைக் காட்டிய இளங்கோ, அவர்தம் முயற்சியில் பெறுதற்குரிய வழிகளையும் வகுத்துள்ளார். 'வாய்மையின் வழாது மன்னுயிர் ஓம்புநர்க்கு யாவதும் உண்டோ எய்தா அரும் பொருள் (11: 158-159); செம்மையிலோர்க்குச் செய்தவம் உதவாது (23; 172) என்பன அவை. நடப்பியல் உலகில் நல்லொழுக்கம், நன்னெறி காட்டி நல்வழிப்படுத்தும் என்பதில் மிகுந்த நம்பிக்கையுடையோராக இளங்கோ காட்சியளிக்கிறார். அறநெறியும் மனிதநேயமும் இணைந்து உணர்த்தும் அறிவுப்பாதையைக் காப்பியத்தின் முடிவில் தோன்றித் தம் கூற்றாக அறிவுறுத்தியிருப்பதும் இவண் சுட்டத்தக்கது.[2] அவ்வழி இயல்பு நிலையில் மிக எளிதாக மானிடர் அனைவரும் பின்பற்றத்தக்கதாக, அமையினும் முற்றிலும் கைக்கொள்வார் அரிதாதலின், கேட்பதற்கும் படிப்பதற்கும் சுவைதரும் கற்பனையாகவே கரைந்து விடுகிறது. முழுமையாகக் கைக்கொள்வார் காணல் அரிது என்பதனை

2. திருத்தகு நல்லீர்,
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வம் தெளிமின் தெளிந்தோர் பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்
ஊன்உண் துறமின் உயிர்க் கொலை நீங்குமின்
தானம் செய்ம்மின் தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் தீ நட்பு இகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருள்மொழி நீங்கன்மின்
அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை அஞ்சுமின் பிழையுயிர் ஓம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது ஒல்லுவது ஒழியாது
செல்லும் தேஎத்துக்கு உறுதுணை தேடுமின்
மல்லன் மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கென் (30.185-202)

இளங்கோ அறிந்தாராயினும் உணர்த்தல் தம் கடன் என்ற பொறுப்பிலும், ஒரு சிலராவது போற்ற மாட்டாரா எனும் எதிர்நோக்கிலும் இங்ஙனம் அடுக்கியுள்ளார் எனலாம்.

**மறைந்து நிற்றல்**

சிலம்பின் கதைப் போக்கும் அமைப்பும் இளங்கோ விரும்பிய இன்பக்கனவுலகினை, ஆழ்பொருளாக மறைந்து நின்று குறிப்பால் உணர்த்துகின்றனவோ எனும் எண்ணத்தைத் தருகின்றன. இதற்கான காரணிகளைக் கீழ்க்கண்டவாறு வரிசைப் படுத்தலாம்.

1. இளங்கோ வாழ்ந்த காலம் மூவேந்தர் மற்றும் சிற்றரசரிடையே அவ்வப்போது போர் நிலவிக் கொண்டிருந்த காலம். அரச வாழ்வினின்றும் விலகி துறவு வாழ்க்கை மேற்கொண்டு உலகினைப் புதிய கண்ணோட்டத்துடன் அணுகிய போது இவ்விழி நிலை அவரை உறுத்த, மூவேந்தரையும் சிறப்பித்து மூவேந்தரையும் ஒருங்கிணைத்து ஒற்றுமை கொளச் செய வேண்டும் என்ற பெருநோக்கும் சிலப்பதிகாரப் படைப்பிற்குத் தூண்டுகோலாயிருந் திருக்கலாம். தமது எண்ணத்தை இலக்கியப் படைப்பாக வெளிப்படுத்தியுள்ளார் எனலாம். மூவேந்தர் ஒன்று படின் கீழிருக்கும் சிற்றரசரும் பகைகடிந்து நட்புப் பாராட்டல் எளிதாகும். இவ்வெண்ணம் இலக்கியத்திற்கு ஏற்புடையதாயிற்றேயன்றி நடைமுறை வாழ்வியலுக்குப் பொருந்தாமையைத் தொடர்ந்த போர்கள் உணர்த்துகின்றன.

புகார், மதுரை, வஞ்சி என மூவேந்தருக்கும் மூன்று காண்டங்களைப் படைத்துத் தனிச்சிறப்பளித்த இளங்கோ, அவர் தம் ஒற்றுமையே தம் வேணவா என்பதனைத் தமிழ் வேந்தர் மூவர் பொருட்டுமாகச் சேரன், (25: 168-172) காவா நாவிற் கனகவிசயரை எதிர்ப்பதன் மூலம் வெளிப்படுத்துகிறார். கற்புத் தெய்வ வழிபாட்டில் மூவேந்தரையும் தனித்தும் (அம்மானை, கந்துகவரி, ஊசல்வரி) இணைத்தும் (வள்ளைப் பாட்டு) மகளிர் பாடுவதாக அமைத்து உறுதிப்படுத்துகிறார். தம் செயலை இகழ்ந்துரைத்த சோழ பாண்டியரை எதிர்த்துச் சேரன் வீறுகொண்டெழும் பொழுது மாடல மறையோன் குறுக்கிட்டு அவன் சீற்றம் தணிவித்து மறக்கள வேள்வி ஒழித்து அறக்கள

வேள்வி செய்ய ஆற்றுப்படுத்தலும் (28:85-132) இதனை வலியுறுத்தக் காணலாம். ஒருவர் பொறை இருவர் நட்பு என்பதை இங்கே இளங்கோ அறிவுறுத்துகிறார்.

2. சமயப் பூசல்களுக்கிடையே பிறிதொரு நிலையில் பிளவு பட்டு நிற்கும் தமிழகத்தைச் சமயப் பொறையால் ஒன்றுபட, வேற்றுமையில் ஒற்றுமைகாண அழைக்கிறார் இளங்கோ. மானிடரிடையே வேற்றுமைகளும் அதன் விளைவாகத் தொடரும் பல தீமைகளும் எங்கெங்கே எப்படி உருவாகின்றன; அவற்றை எப்படிக் களைந்து அமைதி பெறச் செய்யலாம் என்ற உணர்விலேயே அவர் முழுமையாக மூழ்கியிருந்தார் போலும். எனவே ஒன்றுபட்ட தமிழகத்திற்கு மூவேந்தர் ஒற்றுமை மட்டுமல்ல சமயப் பொறையும் மிகத் தேவை என்பதை உணர்ந்து அதற்கேற்ப காப்பியத்தைப் புனைந்துள்ளார்.

சமணத்துறவியான இளங்கோ, தம் கதை மாந்தரைச் சமண சமயம் சார்ந்தோராகக் காட்டினும் புறச் சமயத்தாரைப் புறக்கணிக்காதோராகப் படைத்துக் காட்டுகிறார். வேட்டுவ வரியிலும், ஆய்ச்சியர் குரவையிலும் கண்ணகியை முன்னிலைப் படுத்தியிருப்பது இதனை உணர்த்தும். தாம் சொல் ஒன்றும் செயல் ஒன்றுமாக முரண்படுபவர் அல்லர் என்பதையும் தம் சமயப் பொறையால் வலியுறுத்துகிறார். தம் சமண சமயத்திற்குக் காட்டிய சிறப்பை வேட்டுவவரியில் கொற்றவை வழிபாட்டிலும், ஆய்ச்சியர் குரவையில் திருமால் வழிபாட்டிலும், குன்றக் குரவையில் முருகன் வழிபாட்டிலும் காட்டுகிறார். காப்பியத்தின் பிறிதொரு கதைத் தலைவியை இறுதியில் புத்தசமயம் தழுவச் செய்திருப்பதும் இணைத்து நோக்கத்தக்கது. சேரன் செங்குட்டுவன் சைவ, வைணவ நெறிகளைப் போற்றுவதாக அமைவதும் (26:53-67) இந்திர விழவின் போது பல்வேறு தெய்வங்களுக்கும் வழிபாடு இயற்றுதலும் (5: 163-178) ஒருங்கு எண்ணத்தக்கன. ஆயர் முதுமகள் மாதரி சமணத்துறவி கவுந்தி அடி பணிதலும், அவர் அவ்விடைக்குல மடந்தையிடம் கண்ணகியை அடைக்கலமாக ஒப்படைத்தலும் கூடக் குறிப்பிடத்தக்கன.

காலங் காலமாகச் சமயப் பூசலால் சீர்குலைந்து நிற்கும் தமிழகத்திற்குச் சமயப் பொறை என்பதும் இன்பக் கனவுலகக் கூறாக நிற்றல் வெள்ளிடை மலை.

3. இவை தவிர சமுதாயத்திடையே புரையோடிப் போயிருந்த புண்களை ஆற்றவும் இளங்கோ முன்வந்துள்ளமை தெளிவாகிறது. மக்களிடையே உயர்வு தாழ்வு காணும் நிலையை வெறுக்கும் கவிஞர், உயர்ந்தோர் தலைவனாக அமையும் இலக்கிய மரபை முதற்கண் கோவலன் கண்ணகியரைத் தலைவராக்கி உடைக்கிறார். பொருள் வளத்தால் இவர் உயர் நிலையிலிருப்பினும் தலைமைப் பொறுப்பு பிறருக்கும் (வணிகக் குலத்திற்கும்) வேண்டும் என்ற எண்ணம் இங்கு வெளிப்படுகிறது. மற்றொரு தலைவியாம் மாதவி பரத்தையர் குல மகள் என்பதும் உன்னத்தக்கது.

பரத்தமை ஒழுக்கை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும்; பரத்தையரின் இழி நிலையைப் போக்க வேண்டும் என்ற உந்துதலின் விளைவுகளே மாதவியைக் குலமகளாகச் சிறப்பிப்பதும், மணிமேகலையுடன் துறவு மேற்கொள்ளச் செய்வதும் என எண்ணலாம்.

மற்றும் பெண்மை ஆண்மையால் அழிக்கப்படல் ஆகாது; வணங்கப்படல் வேண்டும் என்ற கருத்தின் வெளிப்பாடே கண்ணகி தெய்வமாதலும், மாதவி பெருமை மிகு நிலை பெறலும் எனலாம். பெண்மை ஆணின் ஆணவத்திற்கு அடி பணியாது விழித்துக் கொண்டு போராடும்பொழுது தான் சிறுமை மாறி பெருமை பெற வழியேற்படும் என்று கண்ணகி வழக்கால் விளக்குகிறார். இவை, சமுதாயம் பெண்களை மதித்துப் போற்ற வேண்டும் என்ற குறிக்கோளை வலியுறுத்துகின்றன.

மேற்கண்டன சமுதாயத்தைக் குறிப்பாகப் பெண்ணின் உயர்வை இளங்கோ பெரிதும் விரும்பி வேண்டியதைக் காட்டுகின்றன. முதலில் மிக இயல்பு நிலையில் சாதாரணப் பெண்ணாகத் தோற்றம் தரும் கண்ணகி அதற்கு முற்றிலும் முரண்பட்ட நிலையில் பின் பொங்கி யெழுவதும், அக வாழ்க்கையின்பத்திற்காகச் சோம குண்டம், சூரிய குண்டம் முதலானவற்றில் மூழ்கி நிகழ்த்தும் வழிபாட்டை மறுத்துரைப் பதும் எண்ணத்தக்கன. கோசிகாமாணி கொணரும் மாதவி

யின் முடங்கலைக் கோவலன் 'எற்பயந்தோற்கும் மண்ணுடை முடங்கல் பொற்புடைத்தாகப் பொருளுரை பொருந்தியது (13:89-99) எனப் பாராட்டுவதும் அவர்தம் இழிவகற்றி உயர்வுகாட்டுதல் பொருட்டே எனத் துணியலாம்.

4. **மாதவி மரபின் மாதவி இவளெனக்
காதலிக் குரைத்துக் கண்டுமகிழ் வெய்திய
மேதகு சிறப்பின் விஞ்சையன் அன்றியும்
அந்தரத் துள்ளோர் அறியா மரபின்
வந்து காண்குறூஉம் வானவன் விழவும்
(6: 69-73)**

எனும் வரிகள் ஆழ்ந்து சிந்தித்தற்குரியன. மண்ணுள்ளோர் விண்ணுலக இன்பம் துய்க்க விழைதலே இயல்பு. அடிகள் இதனை மாற்றி அந்தரத்துள்ள வானவர் இம்மண்ணுலகு வந்து மகிழ்வதாக அமைத்துள்ளமை பொருள் பொதியுரையாகத் தோன்றுகிறது. ஏன் இம் மாற்றம் என எண்ணும் பொழுது விடை கிடைக்கிறது. இம்மண்ணுலகம் விண்ணவரும் போற்றும் வளமுடையதாக, சிறப்புடையதாக அமைய வேண்டும் என்ற இன்பக்கனவின் வெளிப்பாடே இம்மாற்றம் என்பது புலப்படுகிறது. நம்மினும் மேலோராக, எவ்வகைத் துன்பமும் அறியாராக, இன்பம் ஒன்றிலேயே திளைப்போராக கற்பிக்கப்படும் வானவர் கூட இம்மண்ணுலகிற்கு வந்து இன்புறும்படியாகப் புகார் அமைகிறது அல்லது அமைய வேண்டும் என்ற இளங்கோவின் விருப்பு, அவர் காண விரும்பும் இன்பக்கனவுலகிற்கான ஒரு குறிப்பாக அமைகிறது எனலாம்.

## முடிவுரை

மேற்கண்டனவற்றைத் தொகுத்து நோக்குங்கால் சமுதாய மேம்பாடு அல்லது சீர்திருத்தம் என்பது இளங்கோவின் உள்ளத்தில் கனன்று கொண்டிருந்திருத்தல் வேண்டும்; அதற்

கான வழிவகைகள்ஓர் இன்பக் கனவுலகை அவர் தம்முள் வடித்திருக்க வேண்டும்; அதனை இயன்றளவு தம் படைப் பில் புகுத்தியுள்ளார் என எண்ணப் பெரிதும் வாய்ப்புளது! மேலாய் வில் இது உறுதிப்படுமானால் தமிழில் 'இன்பக் கனவுலகை'க் கொணர்ந்த முதல்வராகக் கொள்வதற்கும் இடனுண்டு.

கவிஞர் ஒரு நோக்கில் இலக்கியம் படைப்பினும் சுவைஞர் அதில் பல நோக்குகளை அவரவர் திறனுக்கேற்ப வெளிப்படுத்து கின்றனர். அவ்வகையில் இளங்கோ படைத்த சிலப்பதிகாரத்தில் அவர், இன்பக் கனவுலகச் சிற்பியாகவும் வெளிப்போந்துள்ளார் எனும் பார்வைக்கும் இடனுண்டு என்பதில் ஐயமில்லை. தாம் காண விரும்பும் இன்பக் கனவுலகு எத்தகையது என்பதுடன் நில்லாது, எங்ஙனம் அஃது அமைதல் கூடும் என்பதையும் இணைத்து உணர்த்தியிருப்பது இளங்கோ வின் தனிச்சிறப்பாம்.

# இருபத்தோராம் நூற்றாண்டுத் தமிழ்

தமிழ்மொழி
தமிழிலக்கணம்
தமிழிலக்கியம்
தமிழ்க்கல்வி
தமிழாய்வு
மக்கள் தொடர்பு கருவிகளில் தமிழ்
செயத்தக்கன
தொகுப்புரை

# இருபத்தோராம் நூற்றாண்டுத் தமிழ்

''என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை கொண்டவர்களின் வரிசை குறுகிக்குறுகி என்னுடன் நின்றுவிடப் போகிறது. எனக்கு அச்சமாக இருக்கிறது. இந்த நூற்றாண்டில் இப்போது பேசப்படுவதும் தமிழ்தான். தமிழா அது.... பழந்தமிழிலிருந்து இந்த நவீன விபரீதம் எவ்வளவு மாறிவிட்டது! உருத்தெரியாமல் இவர்கள் விஞ்ஞான வேட்கைக்கும் அவசரத்துக்கும் வளைந்து கொடுத்து... இன்றைக்கு உள்ள பல்லாயிரக் கணக்கான தமிழர்களில் ஒருவருக்கேனும் பழந்தமிழ் தெரியாது. பழந்தமிழ் தெரிந்த ஒரே ஒருவன் .... இதோ நான் தான்.... இன்றைய தமிழை நான் வெறுக்கிறேன். சொற்களெல்லாம் ஓரசை ஈரசைச் சீர்களில் அடங்கி எத்தனையோ மொழிகளின் பாதிப்பை ஏற்றுக் கொண்டு இலக்கணம் மாறி, விகுதிகள் தேய்ந்து ஏதோ ஒரு சுருக்கெழுத்துப் போல் ஆகிவிட்டது.... தமிழா இது'' எனும் கற்பனை, இக்கட்டுரை எழுதுவதற்கு அடிப்படையாகும். சில நூற்றாண்டுகளுக்குப்பின் தமிழ் மொழியின் நிலை குறித்து எழுத்தாளர் சுஜாதாவின் கற்பனையாக (தே. 63) இது அமைகிறது. எதிர்காலவியல் அணுகுமுறையைத் தமிழ் மொழி குறித்த ஆய்வில் மேற்கொள்வது அதன் திட்டமிட்ட வளர்ச்சிக்குப் பயன்தரும். தமிழின் எதிர்காலம் குறித்து அறிஞர் சிலரும் கணித்துள்ளனர்.[1]

---

1. க. கைலாசபதி; இலக்கியச் சிந்தனைகள்; விஜயலட்சுமி புத்தக சாலை; கொழும்பு; 1983; பக். 137-143.
டேவிட் பிரபாகர் (பதி); தமிழர் எதிர்காலவியல் (எதிர்காலத்தில் தமிழ்க் கவிதை - பாரதி புத்திரன்; எதிர்காலத்தில் தமிழ் மொழி - ப. டேவிட் பிரபாகர்; எதிர்காலத்தில் தமிழகத்தில் கல்வி வளர்ச்சி - சா. நடராசன். எதிர்கால இந்தியாவின் சூழ்நிலையும் கல்வி வளமும் - பா. தயானந்தன், இனி - மாணவர் ஆசிரியர் உறவு நிலை - தி. ரா. செல்வராசன், எதிர்காலத் தமிழர் பண்பு - நிர்மல் செல்வமணி); 1993
ஜெயகாந்தன்; இனிமேல் கவிதைக்கு இடமில்லை; தினமணி சுடர், ஏப். 23, 1994 (நேர்காணல்)
மண்டபம் விசுவநாதன்; தமிழை மறக்கும் தமிழர்கள்; தினமணி சுடர்; டிச. 4.1993; ப. 29.
விட்டல்ராவ்; மரபு தொடர்கிறது; இந்தியா டுடே - இலக்கிய ஆண்டு மலர் / 1993 - 1994; ப. 7.

இங்கே தமிழ்மொழி, தமிழிலக்கணம், தமிழிலக்கியம், தமிழ்க்கல்வி, தமிழாய்வு, மக்கள் தொடர்புக் கருவிகளில் தமிழ் எனும் அறுகோணங்களில் தமிழின் எதிர்காலம் கணிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் மொழி

இயல், இசை, நாடகம் என முத்தமிழாக வழங்கிய நிலை அறிவியல் தமிழ் என்பதன் இணைவுடன் நான்காக வளர்ந்து நிற்றலை இன்று காண்கிறோம். நாடகத்தமிழ் என்ற ஒன்று இன்று இருக்கிறதா? அது எதைக் குறிக்கிறது? பிற இலக்கியப் படைப்பிலிருந்தும் மொழியில் எங்ஙனம் மாறுபட்டமைகிறது எனும் வினாக்கள் தோன்றுகின்றன. இலக்கியத் தமிழ், வழக்குத் தமிழ், மக்கள் தொடர்புக் கருவித் தமிழ் என மூவகை இன்று நிலவக் காண்கிறோம். எதிர்காலத்தில் இவையே முத்தமிழாக உருவெடுக்க வாய்ப்புண்டு.

''தினமணி உள்ளிட்ட தமிழ் நாளிதழ்களும், வார மாத ஏடுகளும் தற்பொழுது சென்னை வாசிகளுக்குக் கிடைக்கு முன் சிகாகோவாசிகளுக்குக் கிடைக்கும் வாய்ப்பை இணையம் ஏற்படுத்தியுள்ளது. தமிழ்கூறும் நல்லுலகத்து அறிஞர் பலரின் முயற்சியால் இன்று, தமிழிலேயே இணையத்தின் ஊடாக மின்னஞ்சல் (E - mail) அனுப்பவும் தகவல் பரிமாற்றம் செய்து கொள்ளவும் விவாதங்கள் புரியவும் முடிகிறது. தமிழர்களின் ஆசைகளையும் தேவைகளையும் முன்னிறுத்தி அவர்களுக்காக இன்று நூற்றுக் கணக்கான வலைப்புலங்கள் (Web - sites) முளைத்தபடி இருக்கின்றன. இதற்குச் சான்றாக 'தமிழ்' என்ற வார்த்தை 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வலைப் பக்கங்களில் (Web - page) காணப்படுவதாக 'இன்ஃபோசீக்' எனும் வலைப்புலம் தெரிவிக்கிறது. மற்ற இந்திய மொழிகளை நோக்குகையில் இது குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும்.

இணையத்தில் 'மதுரைத்திட்டம்' (Project Madurai) என்ற பெயரில் சங்க காலம் தொட்டு இன்றுவரை தமிழில் வெளிவந்திருக்கும் பல நூல்களைத் தொகுத்து, உலகின் அனைத்து நாடு

களில் வாழும் தமிழர்களும் பயன் பெறும் வகையில் அவற்றை வலைப்பக்கங்களாக அமைக்கும் பணியில் பலர் ஈடுபட்டிருக்கின்றனர். தமிழக அரசு, தமிழ்ப்பல்கலைக்கழகம் (தஞ்சாவூர்), சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம், உலகத் தமிழ் மொழி அறக்கட்டளை (சிகாகோ), போன்ற நிறுவனங்கள், நா. கோவிந்தசாமி (சிங்கப்பூர்), சீனிவாசன் (கனடா) போன்ற தனியார் என இப்பணியில் முனைப்புடன் செயல் படுவோரின் பட்டியல் நீண்டமைவது மகிழ்ச்சிக்குரியதாம்.

தமிழ்த் தகவல் பரிமாற்றத்தை எளிதாக்குவதற்காக 'தகுதரக்' (TSC11 - Tamil Standard Code for information interchange) கோட்பாடுகள் வரையறுக்கப்பட்டுள்ளன. தமிழிலேயே மின்னஞ்சல் அனுப்புவதற்கும் விவாதங்களில் பங்கேற்கவும் வகை செய்யும் விதமாகக் கிடைக்கின்றன'' என்பதனை நோக்க[2] **'கணினித் தமிழ்'** என ஒன்றும் நான்காம் தமிழாகத் தோன்ற மிகுந்த வாய்ப்புள்ளது.

அண்ணா பல்கலைக் கழகத்தில் அண்ணா பல்கலைக் கழகம், தமிழ்ப் பல்கலைக் கழகம், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் ஆகிய மூன்றும் இணைந்து கணிப்பொறித் துறையில் தமிழைப் பயன்படுத்த முனைந்து வரும் தனியார் நிறுவனங்கள், பொறியாளர் ஆகியோர் ஒத்துழைப்போடு நடத்தப்பட்ட கருத்தரங்கின் (5, 6 ஆகஸ்டு 1994) தொகுப்புரையும் மேற் கூறிய கருத்திற்கு அரணாகிறது.

1999, பிப்ரவரியில் தமிழக அரசு நடத்திய Tamil Net - 99 (தமிழ் இணையம்) கருத்தரங்கம், உலகளாவிய நிலையில் அனைத்துவகைக் கணினிகளின் விசைப்பலகைகளில் ஒரே சீரான தமிழ் எழுத்து வடிவங்களைத் தரவும், அவற்றிற்கான குறியீடுகளிலும் ஒருமைத்தன்மையை உருவாக்கவும் முடிவெடுக்கப்பட்டதும் நோக்கத்தக்கது. தமிழுக்கு இணையம் உருவாக்கி, உலகத்தமிழர்களை ஒருங்கிணைக்கும் இம்முயற்சியின் வெற்றி, தமிழின் பெருமையை, சீரிளமைத்திறத்தை உலகு வியக்கச் செய்யும்.

---

2. தினமணி, பொங்கல் மலர் - 1999 - கடல் கடந்த தமிழர்கள் - அமெரிக்கா மெ. மெய்யப்பன் பக். 43-44.

தொன்று தொட்டு வரும் எழுத்துச் சீர்திருத்தம் உறுதியாக அடுத்த நூற்றாண்டிலும் தொடரும். அப்பொழுது கணினிகளில் எளிதாகக் கையாளக்கூடிய வகையில் அவை உரு மாற்றம் பெறக்கூடும்.

மக்கள் தொடர்புக் கருவிகளில் (இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி......) மட்டுமின்றித் தமிழ்க் கல்வியாளர் எழுத்துகளிலும் வல்லினம் மிகுமிடங்களும், மிகாவிடங்களும் பிழையாக அமைவதை நோக்கும் பொழுது, இனி வல்லின மிகுதல் வழக்கொழிந்து விடும் எனத் தோன்றுகிறது.

ந, ன ஒலிப்பிலும், பொருளிலும் வேறுபாடற்ற நிலை இன்று தெளிவாகக் காணக் கிடைக்கிறது. (நடத்துநர்- நடத்துனர், இயக்குநர் - இயக்குனர்). இது போன்றே ர, ற; ல, ள, ழ வேறுபாடு ஒலிப்பில் எழுத்தில் பிழைபடப் பார்க்கிறோம். மற்றும் பல உயிர் மெய்களின் பயன்பாடின்மையும் (ஙூ, ஙௌ) உன்னத்தக்கது. எனவே இவற்றையும் உள்ளடக்கிய நிலையில் தமிழ்மொழியின் எழுத்துச் சீர்திருத்தம் இடம் பெறும். பயன்பாடற்றன புறந்தள்ளப்படக் கூடும். எளிமை, தெளிவு, காலவிரைவு என்பன முதன்மை நிலையில் கருத்துட் கொளப்படும். எழுத்துச் சீர்திருத்தத்தில் வா.செ. குழந்தைசாமி, கொடுமுடி சண்முகம் போன்ற பொறியியல் அறிஞர்களும், அரசும் ஈடுபாடு காட்டுவது சுட்டத்தக்கது.

## தமிழிலக்கணம்

சொற் புணர்ச்சியிலும், தொடரமைப்பிலும் மாற்றங்கள் நிகழ்வதை மொழியியலார் எடுத்துக்காட்டுகின்றனர். பெருகி வரும் பொருண்மை, வகைமைகட்கேற்ப பொருளிலக்கணமும், யாப்பிலக்கணமும், பாட்டியல் இலக்கணமும் துணை நிற்க இயலாமையை அறிஞர் உணர்த்துகின்றனர். வளர்ந்து வரும் புதிய துறைகளுக்கேற்ப புத்திலக்கணம் படைக்கும் முயற்சியும் காணப்படுகிறது.[3] இவற்றை நோக்கப் பரந்து விரிந்த

3. இக்காலத் தமிழியல் (படைப்பிலக்கியம் பற்றிய அறிமுக இலக்கணம்); சொ. சிங்கார வேலன்; ஞானவேல் பதிப்பகம்; மயிலாடுதுறை; 1987.

நிலையில் புதுத்தமிழ் இலக்கணம் தோன்றுவதற்கான வாய்ப்பு மிக ஒளிமயமாகவே உளது. மொழியியல் வல்லுநரும் திற னாய்வாளரும் இதில் பெரும்பங்கேற்பர் எனலாம். அவ்வாறு எழும் நூல் தொல்காப்பியம், நன்னூல், நம்பியகப் பொருள், யாப்பருங்கலவிருத்தி, தண்டியலங்காரம் என்பன போன்று முதன்மைச் சிறப்புடையதாக அமையும்.

## தமிழிலக்கியம்

இருபத்தோராம் நூற்றாண்டில் தமிழிலக்கியப் படைப் பும் பெரும் மாற்றத்தைக் கொண்டிருக்கும் என்பதில் ஐய மில்லை. புதிய பொருண்மைகளுக்கும் வகைமைகட்கும், வடி வங்கட்கும் 19இன் இறுதியும் இந்நூற்றாண்டும் மிகுந்த வர வேற்பளித்தது அடுத்த நூற்றாண்டிலும் தொடரும். குறிப்பாக இலக்கியப் பொருண்மை அச்சிறப்பினை மிகுதியாகவே பெறும். அறிவியலின் ஆதிக்கம் வலுப்பெறும் என்பதும் சொல்லாமலே விளங்கும்.

இன்று இலக்கியத்துள் பெண்ணியம் பெறும் சிறப் பிடத்தை எதிர்த்து 'ஆணியம்' தோன்றவும் கூடும். இது போன்றே தலித் இலக்கியத்திற்கு எதிர் அல்லது முரண் நிலையில் பிறர் குரலெழுப்பக் கூடும். படைப்புகளின் வழி இந்நிலை வரின் இனப்பாகுபாடு மேலும் புரையோடும். எதிர்நோக்கும் நன்மை கள் விளைதற் கில்லை.

பொது மக்களிடையே விழிப்புணர்ச்சி தோன்றியிருப்ப தாலும், தரமான இலக்கியங்களை நாடும் போக்கு மெல்ல மிகுதிப்பட்டுக் கொண்டிருப்பதாலும் தரமான எழுத்துகளை நல்கும் படைப்பாளரே வெற்றி பெற முடியும் என ஊகிக்க வும் இடனுண்டு.

காலத்தின் அருமையும், இயந்திரமயமாதலும் பேரி லக்கி யங்களை விட குறுமையிலக்கியப் படைப்பிற்கே வர வேற்பளிக்கும். உடனடிப் படைப்புகளை விட நன்கு திட்ட மிடப்பட்டு அறிவார்ந்த ஆழ்ந்த சிந்தனையுடனான படைப்பு களே ஏற்கப்படும். வாசகரின் விழிப்புணர்ச்சி படைப்பாள ரின் ஏமாற்றுதலை எளிதில் இனங்கண்டு அவரையும் அவர்

படைப்பையும் புறந்தள்ளும். வாசகரின் ஐயங்களுக்கும் வினாக் களுக்கும் தெளிவாகவும் பொறுப்பாகவும் மனநிறைவளிப்ப தாகவும் பதிலிறுப்போரே தொடர்ந்து படைப்பாளியாக உலா வர இயலும். எனவே படைப்பாளரும் பலதுறையறிவு பெற்றோ ராயிருத்தல் தவிர்க்க இயலாததாகும்.

உலக மொழிகளுடனான உறவு மேலும் நெருக்க முறும்; மொழிபெயர்ப்புகள் பெருகும். இவற்றின் காரண மாகப் புதிய வகைமைகளும், வடிவங்களும் இலக்கியத் துள் இடம்பெறும் என்பதும் எளிதில் ஊகிக்கக் கூடியதே. அதே வேளையில் யாப்பிலக்கணத்தைப் பின்பற்றும் மரபுக் கவிதை அருக, உரைநடையிலக்கியம் மேலும் வலுப்பெறும்.

குழந்தையிலக்கியம் பற்றியும் இவண் எண்ணுதல் தேவை யாகும். கல்வியின் இன்றியமையாமையைப் பாமர ரும் நன்கு உணர்ந்து கொண்ட நிலையில் கல்விக்கண் அனை வரும் பெறக் கூடும். ஏட்டுக் கல்வியுடன் பொது அறிவும் வேண்டப்படுதலின் தமிழில் பின்தங்கிய நிலையில் உள்ள குழந்தையிலக்கியம் மற்றும் சிறுவரிலக்கியம் விரைந்த வளர்ச்சியை அணுகக்கூடும். அம்புலி மாமாக் கதைகள் ஒதுக்கப்படும். புராணக் கதைகளும் தேவதைக் கதைகளும் அறிவியல் கற்பனையுடன் இணைந்தொரு புதிய மாற்றத்தைத் தரக்கூடும். நூல் வடிவை விட ஒலி நாடாவிலும், ஒளி நாடா விலும் இவ்வகை யிலக்கியம் வெளி வருவது பெருகும்.

கன்னட இலக்கியத்தின் எதிர்காலம் குறித்து, கன்னட எழுத்தாளர் யூ.ஆர். அனந்த மூர்த்தியின் கருத்தான (தின மணி சுடர் 11-12 - 92 - 93, ப. 31) ''இது வரையில் முன்வாசலில் மெத்தப் படித்தவர்களும் அறிவாளிகளும் இருந்து வந்தார்கள் என்றால், புழக்கடையில் பெண்கள், தீண்டத்தகாதவர், பிற் பட்டோர் என்று காலம் காலமாய் ஒதுக்கி ஒடுக்கி வைக்கப் பட்டோர் இருக்கின்றனர். இவர்கள் மாபெரும் சக்தியாக உரு வாகி எழுத முனையும் ஒளிமயமான எதிர்காலத்துக்காக இலக் கிய உலகம் காத்திருக்கிறது உறுதியாய்.'' என்பது தமிழிலக்கியத் திற்கும் முற்றும் பொருந்துவதாகும்.

இன்றிருக்கும் இலக்கியங்களின் உயிர்ப்பும் கருதப்பட வேண்டியதாகும். காலத்தை வென்று நிற்கும் திருக்குறள் உறுதியாக அடுத்த நூற்றாண்டிலும், உலகளாவிய சிறப்புடன் தமிழுக்குப் பெருமை தரக்கூடியதாக நிலவும். உலக மொழி கள் அனைத்திலும் மொழிபெயர்க்கப்படும் வாய்ப்பும் மிகும். இதற்காக, பிற மொழியினர் நன்குணர்ந்து கொள்ளும் பொருட்டு அதன் சிறப்புகள் உலகத்திற்குத் தெளிவாக எடுத்துச் சொல்லப்படும். தொல்காப்பியமும் இம்மேன்மையுறும். இவ்விரு நூல்களும் ஆய்வுலகில் பேரிடங்கொள்ளும். சங்க இலக்கியங்களிலும் இச்சிறப்பை எதிர்நோக்கலாம். இதன் காரணமாக எஞ்சியுள்ள வடமொழி மாயை முற்றிலுமாக அகன்று, தமிழும் வடமொழிக்கு வழங்கியுள்ள நன்கொடை கள் வெளிச்சமிட்டுக் காட்டப்படும். எனவே உலகளாவிய மொழியறிஞர் பார்வை தமிழில் படர்தல் ஐயத்திற்கு அப்பாற் பட்ட உண்மையாகக் கூடும்.

ஏனையவற்றைப் பொறுத்த வரையில் சிலம்பு, கம்பன், பாரதி படைப்புகள் போல்வன போற்றிப் பாதுகாக்கப்படும். இன்று மறுசிந்தனைகளுக்கும் மீள்வாசிப்புக்கும் ஆட்பட் டுள்ள புராணங்கள் மற்றும் பக்தியிலக்கியங்களின் ஆளுமை ஐயத்திற்குரியதே. அறிவியலின் ஆதிக்கத்தால் அவை தம் செல்வாக்கினை நிலைநிறுத்திக் கொள்ள இயலுமா என்பதும் சிந்தனைக்குரியதே. தத்துவச் சிந்தனைகள் அறிவியல் பார்வை யுடன் மேலோங்குமாயின் இவை எந்த அளவிற்கு அன்று பயன்படக்கூடும் என்பதைப் பொறுத்தும் இவற்றின் தேவை யமையும்.

குறிப்பிட்ட கொள்கையைப் பின்பற்றி அதனைச் சுற்றியே வட்டமிடும் படைப்புகள் செல்வாக்கிழந்து மறைத லும் இயல்பே. தற்சிந்தனை மிகுதிப்பட்டு, மொழி வெறித் தூண்டல்கள் முனை மழுங்கப்பட்டுச் செயலிழக்கும். படைப் போடு படைப்பாளியும் ஆய்விற்கு உட்படுத்தப்படுவராதலின் இலக்கியப் போலிகள் புறத்தொதுக்கப்படுவர். இயல்பை உணர்த்தி மனித நேயத்தைச் சிறப்பிப்பன உய்தி பெறும். விறலி விடுதூது, காதல் போன்ற இரண்டாந்தர, மூன்றாந்தர இலக் கியங்களும் மறைந்தொழியும்.

## தமிழ்க் கல்வி

வளர்ந்து பெருகிக் கொண்டிருக்கும் மழலைப் பள்ளி களின் செல்வாக்கினை நோக்கும் பொழுது தமிழ்மொழி வழிக் கல்வியும் தமிழைக் கற்பித்தலும் எதிர்நோக்கும் வெற்றி ஐயத் திற்குட்பட்டது. மொழியறிவு புறக்கணிக்கப்படுகின்ற இன் றைய சூழலே மேலும் வலுப்பெறும் எனத் தோன்றுகிறது. இச்சூழல் ஒழிந்து தமிழ்க்கல்வி தழைத்தோங்க அரசு எடுக் கும் முயற்சிகளுக்குப் பொது மக்கள் அளிக்கும் ஆதரவின் அளவைப் பொறுத்தே அதன் வெற்றியமையும். இன்று தாய்த் தமிழ்ப் பள்ளிகள் பன்னிரண்டு ஒருங்கிணைந்து செயல்படல் 'மெல்லத் தமிழ் இனி வாழும்' எனும் நம்பிக்கையையும் ஒரு புறம் (தினமணி பொங்கல் மலர் 1999) துளிர்விடச் செய்துள்ளது.

தமிழையே பாடமாகக் கொண்டு அமையும் உயர் கல்வியும் பெரும்மாற்றங்கட்கு உட்படும். இன்று சில தன் னாட்சிக் கல்லூரிகளில் தமிழ் மாணாக்கர்க்கு வலியுறுத்தப் படும் பிற மொழியறிவு செல்வாக்குப் பெறும். பன்மொழி யறிவு படைத்தோராகவும் பலதுறையறிவுடையவராகவும் உயர்கல்வி சிறப்புறும். இதனால் தமிழாய்வும் உயர்தரம் பெறும். ஆனால் இக்கல்வி பெறுவார் எண்ணிக்கை குறிப்பிடத் தக்கவளவு வீழ்ச்சியுறலாம். தமிழின் உயர் கல்வி நிலையில் பெருஞ் சீர்திருத்தங்கள் மேற்கொளப்படுவது உறுதி. பிற துறைகளில் தமிழ் நூல்கள் படைத்தல் மேலும் வேக முற்றுத் தமிழாய்விற்குப் பெருந்துணையாகும்.

தமிழ்வழிக் கல்வியின் பெருக்கம் கேள்விக்குரிய தாயினும் மருத்துவம், பொறியியல் தொழில் நுட்பங்கள், வேளாண்மை போன்ற துறைகளில் பொது அறிவு நோக்கில் வெளிவரும் தமிழ் நூல்களின் எண்ணிக்கை பெருமளவு பெருகும் வாய்ப்புண்டு

கணினி வழித் தமிழ்க் கல்விக்கு வித்திட்டுள்ளமை (உலகத்தமிழ் மொழி அறக்கட்டளை) பாராட்டி வரவேற்கத் தக்க செய்தியாகும். திட்டமிட்டபடி இது செயல்படின் இன்று பிற நாடுகளில் வாழும் தமிழறியா தமிழர்கள் தமிழறிவு

பெறவும், தமிழ் கற்க விரும்பும் பிறமொழியினர் பெருகவும் பேரிடனுண்டு.

**தமிழாய்வு**

ஒப்பியலாய்வே முன்னிற்கும் எனத் தோன்றுகிறது. பிறமொழிகளுடன், பிற துறைகளுடன் என்ற பாங்கிலமையும் ஒப்பியலாய்வுகள் பரவலாக்கப்பட்டு விரிந்து நிற்கும். பிற மொழிகளுடனான ஒப்பியலாய்வு பெரிதும் மொழி பெயர்ப்புகளின் துணையுடன் என்றமையாது அவற்றின் மூலங்களைக் கொண்டே அமைதற்குப் பேரிடனுண்டு. ஒருவகையில் அத்தகையன மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும் என்ற நிலையும் உருவாகக் கூடும்.

படைப்புடன் படைப்பாளரின் பின்புலமும், வாழ்க்கையும் ஆய்விற்குட்படுத்தல் வலியுறுத்தப்படும். அறிவியல் அடிப்படையிலான ஆய்வே ஏற்கப்படும். எனவே ஆய்வாளரும் பன்மொழியறிவினராகவும், பல்துறையறிஞராகவும் அமையக்கூடும். இச்சூழல் தமிழின் சிறப்பிற்கும் வளர்ச்சிக்கும் வழிவகுக்கும்.

பலவிதமான அரசியல், சமயச் சூழல்களால் காலம் காலமாகப் பல்வகை மாற்றங்களுக்கு உட்பட்டே தன்னை நிலை நிறுத்திக் கொண்டுள்ள தமிழ்மொழி எதிர்வரும் மாற்றங்களுக்கும், சீர்திருத்தங்களுக்கும் இடனளித்துத் தமிழாய்விலும் புதிய பாதையைக் காணும். மேம்போக்கானவையும், நயம் பாராட்டலும் ஏற்கப்படா, புதியன காணலும் ஆழங் கால்படலுமே வேண்டப்படும்.

இதுவரை வெளிவந்துள்ள தமிழ் நூல்கள், ஆய்வுகள், இவற்றின் முழுமையான அடைவுகளின் தேவை இன்று உணரப்பட்டுள்ள நிலையில் மிக அண்மையில் இம்முயற்சி முறையாகவும் முழுமையாகவும் மேற்கொள்ளப்படும் என எதிர்நோக்கலாம். பலவகையான பொருட்களஞ்சியங்கள் தமிழிலும், அவற்றின் பிற மொழி யாக்கங்களும் தோன்றும்.

சித்தமருத்துவமும் மனையியலும் இன்று பெறும் வரவேற்பு இவை தொடர்பான சுவடிகளுக்கு மறுவாழ்வு தரும் என

நம்பலாம். இவற்றின் காரணமாகத் தமிழரின் பிறகலைக ளான கூவக்கலை, சோதிடக்கலை போன்றவற்றிலும் ஆய் வாளர் பார்வை படியக்கூடும். எனவே தமிழரின் பழம்பெரு மையும் உண்மைப் புகழும் உலக அரங்கில் முழுநிலையில் அடுத்த நூற்றாண்டில் தெளிவாகப் புலப்படுத்தப்படற்குரிய வாய்ப்பு ஒளிமயமாகவே உள்ளது. இதன் காரணமாகச் சுவடி யில் இன்று உறங்கிக் கொண்டிருப்பன பதிப்பிக்கப்பட்டுப் பெருமிதத்துடன் உலாவரக் கூடும்.

பொதுமக்களைத் தொடர்பு படுத்தி, அவர்களுக்குத் தேவைப் படுவனவற்றை நல்கும் ஆய்வுகளும் பெரிதும் வரவேற்கப்படும். மேனாட்டு ஆய்வுப் போக்குகள் உடனுக் குடன் தமிழுலகுக்கு அளிக்கப்படும். மேலை அணுகுமுறை களைக் கொண்டுத் தமிழை அளவிட்டமைக்குப் பதிலாகத் தமிழர் சிந்தனைகள், கொள்கைகள் மேலையிலக்கியத் திற னாய்விலும் மேற்கொள்ளப்படும்.

நாட்டுப்புறக்கலைகளின் வளர்ச்சியிலும், பரப்பிலும் ஆய்விலும் பெரிதும் ஈடுபாடு காட்டும் பாங்கும் வளர்ந்து வருவதால் நாட்டுப்புறக் கலைகள் புத்துயிர்ப்பும் மறுமலர்ச்சி யும் பெறக்கூடும். மற்றும் இது தமிழிசையின் பரப்புதலையும் தூண்டும்; சிறப்பை மிகுவிக்கும்.

### மக்கள் தொடர்புக் கருவிகளில் தமிழ்

தமிழின் வாழ்வும் வளர்ச்சியும் மக்கள் தொடர்புக் கருவிகளான இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி போன்ற வற்றாலும் அமைதல் குறிப்பிடத்தக்கது. எனவே அவை பற்றி யும் சிந்தித்தல் இங்குத் தேவையாகிறது. இவற்றுள் தொலைக் காட்சியின் பங்கு பெரிதாக அமையும். காலத்தின் தேவை, பொழுதுபோக்கிற்கு அளிக்குமிடம், பயன்படுநிலை போன்றன வற்றைக் கருத்துட் கொள்ளும் பொழுது தொலைக்காட்சி யின் ஆளுமை முதன்மை பெறுகிறது. படைப்புகள் தொலைக் காட்சி ஒளிபரப்பை மையமிட்டு அமைதல் தவிர்க்க இயலாத தாகும். எனவே, தரமான, புதிய உத்தி சார்ந்த பல படைப்பு களை எதிர்நோக்கலாம்.

இன்றுப் பரவலாக மலினப்படுத்தப்பட்டுள்ள இலக்கியங்கள் வீழ்ச்சியுற்று, கல்வியறிவின் காரணமாகத் தரமான படைப்புகள் மீண்டும் இதழ்களில் ஏற்றங்கொள்ளலாம். புற்றீசல்களான பருவகால இதழ்களுக்கிடையில் இன்று ஆங்காங்கே முளைவிட்டு வரவேற்புப் பெற்றுக் கொண்டிருக்கும் இலக்கிய இதழ்களை நோக்க இவ்வெண்ணம் எழுகிறது. எதை எழுதினாலும் எப்படி எழுதினாலும் விலைபோகும் என்ற எண்ணம் மாற்றம் காணும்.

தமிழ் மொழியை எளிமைப்படுத்துதலில் இவற்றின் பங்குக் குறிப்பிடத்தக்கதாக அமையும் என்பதும் சுட்டத்தக்கது. அறிவியல் முன்னேற்றம் இதழ் வாசிப்பைச் சுருக்கினும் முற்றிலுமாக ஒழித்தற்கில்லை. எனவே தன்னைத் தக்கவைத்துக் கொள்வதற்கான போட்டியில் புதுமைகள் வரவேற்கப்பட்டுத் தரமானவையே இடம்பெறக்கூடும் என நம்பலாம். இலக்கிய வரலாற்றை நோக்கும் பொழுது தரமான ஆர்வலர் இன்மையே இடைக்காலத்து எழுந்த தரமற்ற எழுத்துகளுக்குக் காரணமாவதைக் காண்பதால், இலக்கியத் தரத்தை உறுதிப்படுத்துவதில் வாசகர்க்குரிய பங்கை உணரலாம். இன்று வாசகர் தரமும் உயர்ந்து கொண்டிருப்பதை நோக்கும் பொழுது எதிர்காலம் தரமான இலக்கியப் படைப்பிற்கே முதன்மையளிக்கும் என்பதை உய்த்துணர முடிகிறது.

**செயத்தக்கன**

தமிழின் சிறப்பு பார் ஓங்க செயத்தக்கன யாவை என உன்னுதல் எதிர்காலவியல் ஆய்வின் அடுத்த நிலையாகும். எனவே அதுவும் இங்குக் கருதப்படுகிறது.

தமிழக அரசின் உதவித் தொகை பெறுவோர் எச்சூழலில் எதற்குப் பெறுவதாயினும் அவர் தமிழ்க்கல்வி பெற்றவராக அல்லது பெறுபவராக இருத்தல் வேண்டும்; தமிழ் மொழியறிவால் ஒரு குறிப்பிட்ட நிலை வரையிலான தேர்ச்சி பெற்றாலன்றி மேல்கல்வி பயில இயலாது; ஆண்டுதோறும் பள்ளி இறுதிநிலைத் தேர்வு, + 2 தேர்வுகளில் தமிழ்க்கல்வியில் சிறப்பான தேர்ச்சி பெறுவோர்க்குச் சிறப்புச் சலுகை

களை அதிகரித்தல்; இவர்தம் எண்ணிக்கையை குறிக்கத்தக்க அளவு மிகுதிப் படுத்துதல்; இவை தவிர, ஏனைய கல்விக் காலத்தின் பல்வேறு காலக்கட்டங்களிலும் தமிழ்க்கல்வி யில் சிறந்தோரைத் தேர்ந்து அவர்களுக்கும் சிறப்புச் சலுகை வழங்கல்; ஆண்டுதோறும் அரசே பொதுத் தேர்வுகள் வழி குறைந்தது 1000 மாணாக்கரையாவது தேர்ந்து அவர்களுக்கும் பல புதிய சலுகைகள் வழங்குதல் (மேற்கல்விக்கான உதவித் தொகை, பயணச் சலுகை, போல்வன); இவ்வாறு தமிழ்க் கல்வி வழி தம் உயர்வை நிலை நாட்டுவோர்க்கு வேலை வாய்ப்பினை உடனடியாக வழங்கல் என்பனவற்றை அரசு மேற்கொள்ளின் இன்றுள்ள பிறமொழி மோகம் மறைந்து தமிழ்ப்பற்று தழைத்து எதிர்வரும் காலம் தமிழ்க் காலமாகத் துலங்கும்.

கண்காணிப்புக் குழு ஒன்றினை நிரந்தர நிலையில் உருவாக்கி, விளம்பரங்கள், சுவரொட்டிகள், பெயர்ப்பலகை கள் போன்றவற்றில் காணப்படும் எழுத்துப்பிழைகள், சொற் பிழைகள் நீக்கப்படின் தூயதமிழ் விரைவாகக் கால்கொளும். தொலைக் காட்சியில் இன்று அவ்வப்போது நிகழும் எழுத்துப் பிழைகள், ஒற்றுப் பிழைகள் ஆகியனவும் அறவே ஒழிய அக் குழு தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இங்ஙனம் பிறவற்றிலும் நிகழும் பிழைகளைச் சுட்டித் திருத்தம் செய்ய முனைவோர்க்கு ஊக்கப்பரிசு அளித்துப் பாராட்டலாம். இந் நிலை குறைந்தது பத்து ஆண்டுகளுக்காவது நீடித்தால் தமிழ் மொழி வழக்கிலும் உறுதியாகச் செம்மையுறும்.

முற்காலத்திய அரங்கேற்றமுறையை மீண்டும் கொணர் தல் மிகத் தேவையாகும். முற்றமுழுக்கத் தமிழறிவில் தலைப் பட்ட நடுநிலையாளர் ஒன்றுகூடி அவர் முன் எத்துறைத் தமிழ் நூலும் அரங்கேற வேண்டும். அவற்றை அவர்கள் ஒப்புக் கொண்டால் மட்டுமே அந்நூலுக்கான 'நூலக ஆணை' வழங்கப் படல் வேண்டும். இந்நிலை தோன்றின் தரமான நூல் வெளி யீட்டில் தமிழகம் தலைநிமிர்ந்து முன் நிற்கும்.

ஆண்டுதோறும் ஒவ்வொரு துறையிலும் வரும் சிறந்த தமிழ் நூல்களுக்கு வழங்கப்படும் பரிசில் திங்கள் தோறும் என விரிவுபடுத்தின் தமிழாய்வும் விரைவுபடும். குறைந்தது ஐந்

தாண்டுகளுக்கொருமுறை என்ற கால இடைவெளியில், இங்ஙனம் அதிகமான முறை தேர்வு செய்யப்படுவோருக்குத் தனித்த சிறப்பளிக்க வேண்டும். மற்றும் மாநில அளவில் வழங்கும் சிறந்த எழுத்தாளர் பரிசினை முதற்கண் மாவட்டம் தோறும் விரித்து வழங்க வேண்டும். பின் அவர்களிலிருந்து மாநில அளவிலான தேர்ச்சியைக் கொள்ளலாம். இது தமிழ் எழுத்தாளருக்கு மிகப் பெரிய ஊக்கமாக அமைந்து தமிழின் வளர்ச்சி தழைத்தோங்கும். தமிழ்க்கல்வியும் இதன் வழி ஊக்கம் கொள்ளும்.

படைப்பிலும் ஆய்விலும் ஒருபுறச்சார்பு அமைதல் தமிழின் வளர்ச்சியைக் குறுக்கும் ஆதலின் கடியப்பட வேண்டிய தாகும். பன்முகப் பார்வைகளும் நடுநிலை நோக்கும் இடம் பெறல் வளமான தமிழுக்கு வழிகாட்டலும் இன்றியமை யாததுமாகும். தி.க. சிவசங்கரனின், 'தமிழியம், பெண்ணியம், தலித்தியம், சுற்றுச் சூழலியம், மார்க்ஸியம்' ஆகிய பஞ்சசீலக் கொள்கையை இலக்கியத்தில் ஏற்படுத்த வேண்டும் (தினமணி 10.5.99) என்ற கூற்றின் ஏற்புடைமை வினாவிற்குரியது.

மிகச்சிறப்பான ஆய்வுகளை, தமிழ்மொழிக்கும் தமிழ்ச் சமுதாயத்திற்குமாக அமைவனவற்றை, புதிய சிறந்த முடிபு களைக் கண்டுதருவனவற்றைப் பாராட்டுவதோடு அமையாது அவற்றைச் செய்து முடித்த இளம் ஆய்வாளருக்கு உடனடி வேலை வாய்ப்பு எனின் தமிழாய்வுலகும் புத்தெழுச்சியும் பொலிவும் பெறும். தமிழ்க்கல்வியில் தேர்ந்தோர்க்கு உடனடி வேலை என்ற சூழல் உருவாகும் பொழுதுதான் அதன் நோக்கம்முழு வெற்றி பெறும்.

தமிழ் மேலாய்விற்குத்துணை செய்யும் வகையில் பல் வகைப் பொருட்களஞ்சியங்களும், சொல்லடைவுகளும், ஆய் வடங்கல்களும் உடனடியாக உருவாக்கப்படல் இன்றியமை யாததாகும்.

'தமிழ்க்கலைஞர் கழகம்' என ஒன்று அரசின் ஆதர வில் அல்லது வளமுடை நிறுவனங்களின் புரத்தலில் உரு வாக்கப்படல் வேண்டும். அது தமிழ்க்கலையின் பல்வேறு பிரிவுகளிலும் தேர்ந்தோர்க்கும், நலிந்தோர்க்கும் உதவுவதாக வும், அவர்களைக் கொண்டு, கலை நிகழ்ச்சிகளைப் பிற

மாநிலங்களிலும், பிற நாடுகளிலும் நிகழ்த்தித் தமிழின் மணம் பரப்பலாம். ஆண்டுதோறும் இது நிகழின் தமிழ்க் கலைகள் அழிவிலிருந்து மீட்கப்படுவதுடன் வியக்கத்தக்க உயர்வையும் அடையும். இலக்கியப் படைப்பாளரையும் பெருமை செய்வதுடன், பொருளாதார நிலையில் பின்தங்கியிருக்கும் சிறந்த படைப்பாளருக்குத் தேவையான பொருளுதவியும் செய்தல் வேண்டும். இக்கழகம் தேர்வு செய்யும் நூல்கள் உடனுக்குடன் பிற இந்திய மொழிகளிலும் உலக மொழிகளிலும் மொழி பெயர்க்கப்படல் வேண்டும். இக்கழகத்தால் சிறப்புப் பெறும் கலைஞர், சிறப்புப் படைப்பு போல்வன கேள்விகளுக்கு அப்பாற்பட்ட பெருமையுடையன என்ற எண்ணமும் அதன் செயன்மையால் ஏற்பட வேண்டும். இக்கழக முத்திரை திறமைக்கான எவரும் மறுக்கவியலா உயர் சாட்சி என அது அமைய வேண்டும்.

இவ்வெண்ணங்கள் செயலாக மாறின், எத்தனை நூற்றாண்டாயினும், அறிவியல் தொழில் நுட்பம் எவ்வளவு தான் உலகை மாற்றினும் தமிழ், 'என்றுமுள இன் தமிழாக' நிலைத்து நிற்கும் என்பது உறுதி. அரசின், தமிழார்வலரின் கருத்தோட்டத்திற்குப் பொதுமக்களும் உரிய மதிப்பளித்து அவற்றை ஏற்றுச் செயற்பட முனையின், 'உயர்தனிச் செம்மொழி'யாகத் தமிழ் மீண்டும் விரைவில் தலைநிமிர்ந்து உலகெங்கும் தனி முரசு கொட்டும்.

சுதேசமித்திரன் நிருபர் செந்தில்நாதன், தமிழில் செய்தி நிறுவனம் ஒன்று உடனடியாகத் தேவையென அண்ணாபல்கலையில் நிகழ்ந்த 'தமிழும் கணிப்பொறியும்' கருத்தரங்கில் வலியுறுத்தியுள்ளார்; உலகளாவிய தமிழமைப்புகளின் ஒருங்கிணைப்பின் தேவையும் உணரப்பட்டுள்ளது.[4] தமிழ்ச் சான்

4. வா.மு.சே. ஆண்டவர்; உலகளாவிய தமிழ் அமைப்புகள்; பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்; சென்னை; 1996, ப. 130.

றோர் பேரவை, தமிழ், தமிழர் நலன்களை முன்னிறுத்தித் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் போராடிக் கொண்டிருக்கும் தமிழ் அமைப்புகள் மற்றும் இயக்கங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்துச் செயல்பட முன் வந்துள்ளது; மற்றும் உலகத் தமிழ்மொழி அறக்கட்டளையின் (சிகாகோ) திட்டப் பணிகள் என்பனவற்றை நோக்கத் தமிழுக்கு நல்ல எதிர்காலம் உறுதியாக உண்டு எனும் கொள்கையே வலுப்பெறுகிறது.

சிறந்த தமிழ்நூல்களுக்குப் பரிசில் வழங்க, மாநில, மைய அரசுகளுடன் பல தனியார் அறக்கட்டளைகள், நிறுவனங்கள், சங்கங்கள் முன்வந்துள்ளமையும் குறிப்பிடற்பாலது. ராஜாசர் அண்ணாமலைப் பரிசு, சரஸ்வதி பரிசு, அக்னி அட்ஷரா விருது, அமுதசுரபி + சுஜாதா பிலிம்ஸ் பரிசு, இலக்கியச் சிந்தனை பரிசு, பாண்டிச்சேரி பல்கலைக் கழகப் பரிசு, திருப்பூர் தமிழ்ச் சங்கப் பரிசு, ரங்கம்மாள் நினைவுப் பரிசு, கலைமகள் நாராயணசாமி பரிசு, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கப்பரிசு, ஸ்டேட் வங்கிப் பரிசு என அவற்றின் பட்டியல் நீளுகிறது. இவற்றில் தரமான இலக்கியங்கள், தமிழாய்வுகள் தோன்றுதற்குரிய சூழலும் தூண்டலும் அமைய தமிழின் ஆளுமை எதிர்காலத்திலும் சிறந்தோங்கும் என்பது வலுப்படுகிறது. நீலபத்மனாபன், (தினமணி 12.3.99) தி.க.சி (தினமணி 27.3.99) போன்றோர் விரும்பும் 'தமிழ்ச் சாகித்திய அகாதமி'யின் எழுச்சியும் தோன்றின் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் உடனடி மேம்பாட்டிற்கும் உறுதியான வழியுண்டு.

தமிழில் கணிப்பொறி பற்றி அதிகாரப் பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட அருஞ்சொல் அகராதியும், என்சைக்ளோபீடியாவும் உண்டாக்க வேண்டும். ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கும் தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கும் வார்த்தைகளை மாற்ற கம்ப்யூட்டரின் உதவியை நாட வேண்டும். அவற்றை விலை மலிவாக்கி மக்களிடம் பரப்ப வேண்டும். எழுதுவோர் அனைவரும் அதே சொற்களை ஒருமுகமாகப் பயன்படுத்திக் குழப்பங்களைத் தவிர்க்க வேணடும். தகுதியுள்ள புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்குத் தக்க நிறுவனம் ஒன்று தரச்சான்று வழங்க வேண்டும் எனும் சுஜாதாவின் (குமுதம், 21-ன் விளிம்பு) கருத்தும் வரவேற்கப்படுவதாம்.

## தொகுப்புரை

முற்றிலும் ஊகங்களின் அடிப்படையில் எழுந்துள்ள இவ்வெண்ணங்களுக்கு அடிப்படையான தரவுகளை முழுமையாகத் தொகுத்து, விரிவாக ஆராயும் பொழுது மற்றும் பல சிந்தனைகள் முகிழ்க்க இடனுண்டு; கூறியுள்ளன முரண்படற்கும் ஏதுவுண்டு. பார்வைகள் வேறுபடுவது போன்று இதன் கருத்துகளில் வேறுபாடு தோன்றற்கும் வாய்ப்புண்டு. ஊகங்கள் அனைத்தும் மெய்யாவதில்லை. எனவே இங்குக் காட்டியுள்ளபடிதான் நடக்கும் என்றும் கூறுதற்கியலாது. அதிலும் இலக்கியமும் அது தொடர்பான ஆய்வும் அவ்வவ் காலச் சூழலை ஒட்டியே இயங்கும் என்பதும் இங்குக் கருத்திற் கொளற்பாலதாம்.

# நிறைவுரை

எதிர்காலவியல் என்பது கலை, அறிவியல் என எல்லாத் துறைகளுக்கும் பொதுவானது. முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொளல் என்பது இதற்கு அடிப்படையானது. எதிர் காலவியல் கணிப்புகள் மகிழ்ச்சியையும் தரலாம். அச்சத்தை யும் விளைக்கலாம்.

ஒரு துறையின் எதிர்காலம் அதனோடு தொடர்புடைய பிற துறைகளையும் சார்ந்தமைகிறது. சான்றாகத் தமிழின் எதிர் காலம் அதனைப் பேசும் தமிழரின் அரசியல், பொருளாதார, பண்பாட்டுச் சூழல், அதில் எழும் இலக்கியம் - அதற்குரிய வாசகர் வட்டம் என்பனவற்றையும் உட்கொண்டமைகிறது.

இலக்கியம் தவிர்ந்த ஏனைய துறைகளில் கணக்கியல் முன்னிற்க இலக்கியத்துள் அறிவியல் சார்ந்த கற்பனை அடித் தளமாகிறது. பொருண்மை இவ்வகை இலக்கியத்தைத் தனி வகையாக்குகிறது. எவ்வகை வடிவிலும் இடம் பெறலாம். வடிவ வரையறையில்லை.

கணக்கியல் சரியான அளவீட்டால் உறுதியான முடி வினைத் தருவதால் பிறதுறைகளின் எதிர்கால நோக்கு உண்மை யாதற்குப் பெரிதும் வாய்ப்புண்டு. எதிர்பாராத இயற்கை நிகழ்வுகளால் மாற்றம் ஏற்படவும் கூடும். சான்றாக, 'சுமார் 134 ஆண்டுகளுக்கு ஒரு முறை புவி அருகே வந்து போகும் 'ஸ்விப்ட் - டட்டில்' எனும் வால்விண்மீனின் சுற்றுப் பாதை முந்திக்கு இப்போது சுருங்கிவிட்டதால் - அடுத்த முறை வருகையில் சரியாகச் சொன்னால் கி.பி. 2126 ஆகஸ்டு 14 அன்று நேராக இது புவியின் மீது மோதி இந்த யுகத்தையே முடித்து வைக்கும் என்பது வானவியலார் ஒரு சிலரின் கருத்து.

அது, சூரிய மண்டலத்தினுள் நுழையும் போது நொடிக்கு 60 கிலோ மீட்டர் வேகத்தில் (சாதாரணப் பேருந்தை விட 3600 மடங்கு) அசுரப்பாய்ச்சல் பாயும். இந்த வால்விண்மீன் மோதினால் ஏற்படும் பிரமாண்ட வெடிப்பில் இங்கே என்ன

நடக்கும் என்று நினைத்துப் பார்க்க முடியாது. எனினும் போதிய கால அவகாசம் இருப்பதால் அதி நவீன ஏவுகணைகளின் உதவியால், நம்மைத் தாக்க வரும் அந்த வால் நட்சத்திரத்தைப் பாதை விலக்கிவிட முடியும் என்று மட்டும் நம்பலாம். (இருபத்திரண்டாம் நூற்றாண்டில் உலகம் அழியுமா? நெல்லை சு. முத்து, மஞ்சரி 1993 பிப். ப. 5-8) என்பதைக் காட்டலாம்.

ஆனால் இலக்கியத்தைப் பொறுத்தளவில் படைப்பாள ரின் கற்பனையே முன்னிற்பதால் அவரவர் விருப்பிற்கேற்ற, இயல்பிற்கேற்ற கற்பனைகளுக்கிடையே முரண்பாடுகள் மிகுதி யாக அமைகின்றன. கற்பனையாதலின் இவற்றின் நடை பெறு தற்குரிய வாய்ப்பும் மிகமிக அருகியது.

எதிர்காலவியல் இலக்கியங்களில் இடம் பெறும் பொருட் கூறுகளைத் தனித்தனியே எடுத்துக் கொண்டு ஆய்வது சுவையானதாக அமையும். படைப்பாளர்காட்டும் நிலை தோன்று தற்குரிய அடிப்படைக் காரணங்கள் யாவை; அம்முடிவை ஏன் படைப்பாளர் தரவேண்டும்; படைப்பாளர் கருத்துப்படி அவற் றுள் எத்தனை நிகழக் கூடிய வாய்ப்பினைப் பெறுகின்றன என விரிவாக ஆராயும் பொழுது எதிர்காலவியல் கல்வி சிறப்புறும்.

# ஆய்வுக் களங்கள்

**சங்க இலக்கியம்** - பாட்டும் தொகையும்; நியூசெஞ்சுரி புக்ஹவுஸ்; சென்னை; 1981

**திருக்குறள்** மூலமும் பரிமேலழகர் உரையும்; கழகம்; சென்னை;

**சிலப்பதிகாரம்;** உ.வே. சா. (பதி); தமிழ்ப் பல்கலைக்கழகம்; தஞ்சாவூர்; 1985.

**கம்பராமாயணம்;** கம்பன் கழகம்; சென்னை; 1984

**என இனிய இயந்திரா,** சுஜாதா; குமரிப்பதிப்பகம்; நாகப்பட்டினம்; 1992

கி.பி. 2000 (சிந்தனைக் கதை); மு. வரதராசன்; பாரி நிலையம்; சென்னை; 1957.

கி.பி. 2084, கஸ்தூரி ரங்கன்; தினமணி கதிர் 20.1.85 முதல் தொடராக

சொர்க்கத்தீவு; சுஜாதா; குமரிப் பதிப்பகம்; நாகப்பட்டினம்; 1975

தேவன் வருகை; சுஜாதா; குமரிப் பதிப்பகம்; நாகப்பட்டினம்; 1977.

நிலம் நீர் நெருப்பு காற்று ஆகாயம்; சுஜாதா; பாரதி பதிப்பகம்; சென்னை; மூ.ப.டிச. 1986.

புது உலகம் இன்றே; கஸ்தூரிரங்கன்; தினமணி கதிர்; 1991 (தொடர்)

ஆனந்த விகடன் (வார இதழ்)

06.11.94 ஆண் கர்ப்பம்
13.11.94 டினோசர் ஜாக்கிரதை
20.11.94 பில்லியனில் ஒருவன்
27.11.94 கடவுள் தாத்தா
11.12.94 அழிவின் விளிம்பில்
- ஆர்னிகா நாசர்

# துணை நூல்கள்


**அறிவியல் உருவாக்கத் தமிழ்;** கி. கருணாகரன், சி. சண்முகம், சி. சிவசண்முகம் (பதி); மணிவாசகர் பதிப்பகம்; சென்னை; மு.ப. 1989.

**இக்காலத் தமிழியல்;** சொ. சிங்கார வேலன்; ஞானவேல் பதிப்பகம்;மயிலாடு துறை; மு.ப. 1987.

**இலக்கியச் சிந்தனைகள்;** க. கைலாசபதி; விஜயலட்சுமி புத்தக சாலை; கொழும்பு; மு.ப. சன. 1983.

**இலக்கியத்தில் பழம் புதுமையும் புதுப்பழமையும்** (மூலபடிவத் திறனாய்வு); கா. செல்லப்பன்; மீரா பதிப்பகம்; புதுக்கோட்டை;மு.ப. நவ. 1986.

**இளங்கோவும் கம்பனும்;** ச. வே. சுப்பிரமணியன்; உலகத்தமிழ்க் கல்வி இயக்கம்; சென்னை; 1986.

**இன்றைய உலகில் இலக்கியம்;** இ. முருகையன்; சென்னை புக்ஸ்; சென்னை; மு.ப. பிப். 1988.

**உலகளாவிய தமிழ் அமைப்புகள்;** வா.மு. சே. ஆண்டவர்; பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்; சென்னை; 1996.

**எதிர்காலச் சிந்தனை - சுற்றுச்சூழல்;** ஆ. யோகமூர்த்தி; சேகர் பதிப்பகம்; சென்னை; மு.ப. டிச. 1993.

**ஒரு விஞ்ஞானப் பார்வையிலிருந்து;** சுஜாதா; நர்மதா பதிப்பகம்; சென்னை; மு.ப.டிச. 1987.

**காலம் தேடும் தமிழ்;** மணவை முஸ்தபா; மீரா பப்ளிகேஷன் சென்னை; மு.ப. டிச. 1987.

**தமிழ் இலக்கிய வகையும் வடிவும்;** ச.வே. சுப்பிரமணியன், தமிழ்ப்பதிப்பகம்; சென்னை; 1984.

**தமிழ் நாவல் வகைகள்; தா.வே. வீராசாமி;** தமிழ்ப்பதிப்பகம்; சென்னை; 1974.

**தமிழர் எதிர்காலவியல்;** ப. டேவிட் பிரபாகர் (பதி); சென்னைக் கிறித்தவக் கல்லூரி; சென்னை; 1993.

**தமிழில் இயங்கியல் ஒரு பார்வை;** ஆதி; அன்னம்; சிவகங்கை; மு.ப. ஆக. 1983.

**தேவைக்கேற்ற தமிழ்;** கொடுமுடி சண்முகப் பிரகதம்; மணிவாசகர் பதிப்பகம்; சென்னை; மு.ப. நவ. 1990.

**தொல்காப்பியம்;** ச.வே. சுப்பிரமணியன் (பதி. & உரை); மணிவாசகர் பதிப்பகம், சென்னை ; 1998.

**நவீன இலக்கியத்தின் அடிப்படைகள்;** க. கைலாசபதி; மக்கள் வெளியீடு; சென்னை; மு.ப. நவ. 1980.

**பன்முகத் தமிழ்;** தமிழியல் துறை - புதுவைப் பல்கலைக் கழகம்; மணிவாசகர் பதிப்பகம்; சென்னை; அக். 1991.

**பேராசிரியர் மு. வரதராசனாரின் படைப்பிலக்கியம்;** க.த. திருநாவுக்கரசு; பாரி நிலையம்; சென்னை; 1984.

**மேலை இலக்கியச் சொல்லகராதி;** வை. சச்சிதானந்தன்; மாக்மில்லன் இண்டியா லிமிட்டெட்; சென்னை; 1983.

**Cassells Encyclopaedia of World Literature** Vol. I; S.H. Steinberg (ed); Cassells & Company; London; 1973.

**Dictionary of World Literary Terms;** Joseph T. Shipley; George Allen and Unwin; London; 1970.

**Encyclopaedia Britannica** - Vol. 9; William Benton (Publisher); Ency. Brit. INC; Chicago; 1992

**Futurists;** Alvin Tofler (ed); Random House; Newyork; 1972.

**Glossary of Literary Terms;** M.H. Abrams;

**International Encylopaedia of the Social Sciences,** David L. Sills (ed), The MacMillan Company & The Free Press, New York; 1968.

**Problems of Futurology;** V. Narayankaran Reddy; Sterling Publishers; New Delhi; 1985.

# சிறப்புச் சொல்லகராதி

(எண் – பக்க எண்)


அக்பர்ன், வில்லியம். எப். 19
அகவல் மகளிர் 38
அகஸ்டிக் காம்தே 12
அண்ணா பல்கலைக்கழகம் 155, 166
அதியமான் 34
அதிவேக மாற்றம் 75
அம்புலி மாமா கதைகள் 158
அரங்கேற்றம் 164
அரசியல் 130
அரவிந்தர் 20
அருணாசலம் கே.சி.எஸ் 133
அவனும் அவளும் விரும்பிய நாடு 128, 129, 133
அறவிலக்கியம் 39
அறிவியல் சார்ந்த பொதுவுடைமை 77
அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னுணர்த்தல் 28
அனந்தமூர்த்தி யூ.ஆர். 158
ஆணியம் 157
ஆர்னிகா நாசர் 73, 91, 111
ஆல்வின் டோஃப்ளர் 10, 13, 15, 19
ஆழியிழைத்தல் 38
ஆற்றுப்படை 36
ஆனந்தவிகடன் 73
இம்மை மறுமைக்கோட் பாட்டியல் 13
இலட்சியபுரி 125
இளங்கோவடிகள் 39, 132
இன்பக்கனவுலக நோக்கு இலக்கியம் 128
இன்பக்கனா ஒன்று கண்டேன் 129, 134
உடுமலை நாராயண கவி 74
உயர் உளவியல் 13
உலகத் தமிழ்மொழி அறக்கட்டளை155, 167
உலகை நெறிப்படுத்தும் திட்ட நிறுவனம் 17
உன்னத உலகம் 125
எண்ணியல் 15
எதிர் நீட்டல் 71
ஐயங்கார் எம்.எஸ். 20
ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம் 128, 134
ஔவையார் 34
கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி 131, 132
கண்காணிப்புக் குழு 164
கணியன் பூங்குன்றனார் 132
கணினித்தமிழ் 155
கதையிலக்கிய உத்திகள் 77
கம்பன் 132, 159
கற்பனையுலகப் புனைகதைகள் 127
கற்பனையுலகம் 125
கற்பனையூர் 125,133
கனவு 38
கஸ்தூரி ரங்கன் 73,89,117,127,129, 134,135
கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் 155
கிருஷ்ணன் என்.எஸ். 74
கிருஷ்ணா டாவின்ஸ்கி 73, 92
குழந்தையிலக்கியம் 158
குறள் 135, 159
குறிக்கோட் சமுதாயம் 125
குறுங்கோழியூர்க்கிழார் 130
கூர்தலறக் கற்பனையுலகப் புனைகதைகள் 127
கொட்டு முரசே 133

கோடிட்டுப் பார்த்தல் 38
கோதைத் தீவு 128, 130, 134
கோப்பெருஞ் சோழன் 36
கோவிந்தசாமி, நா 155
சங்க இலக்கியம் 159
சம்பந்தர் 133
சமுதாயப் புத்தமைப்பு கற்பனைபுலகப் புனை கதைகள் 127
சமூக உறவுகள் 85
சமூகநிலை முன்னுணர்த்தல் 28
சமூக மெய்யியல் 12, 13
சமூகவியல் 82
சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகம் 155
சித்த மருத்துவம் 161
சிம்பு 73
சிலம்பு 35, 38-40, 159
சிவசங்கரன் தி.க. 165, 167
சிறுவரிலக்கியம் 158
சீனிவாசன் 155
சுத்தானந்த பாரதியார் 133-135
சுதேசமித்திரன் 166
சுஜாதா 22, 70-72, 90, 91, 114,117, 141, 162, 167
செந்தில்நாதன் 166
செவியறிவுறூஉ 7
சோ 129, 134
ஞானரதம் 128, 129
டானியல் பெல் 19
தமிழ்க் கலைஞர் கழகம் 165
தமிழ்ச் சாகித்திய அகாதமி 167
தமிழ்ப் பல்கலைக்கழகம் 155
தமிழக அரசு 155
தமிழிசை 162
தமிழில் செய்தி நிறுவனம் 166
தலித் இலக்கியம் 157
தனிப்பாடல்கள் 25
தனிமனித அகநிலை வாழ்வில் வீழ்ச்சி 76
தாம் விரும்பும் எதிர்காலம் 27
தாமஸ் மூர் 130
தாயுமானவர் 133
திரு.வி.க. 133, 135
தினமணிக் கதிர் 73
துறவி 74
துன்பக் கனவுலகு 77, 140
தேவதைக் கதை 158
தொல்காப்பியம் 3, 25, 37, 157, 159
நம்பியகப் பொருள் 157
நவசக்தி இதழ் 72
நன்னூல் 25, 157
நாட்டுப்புறக் கலை 162
நாமக்கல் கவிஞர் 128, 133, 135
நாவுக்கரசர் 133
நாளை என்பது இன்றே 31
நான்காம் தமிழ் 155
நிகழ்வதற்கு வாய்ப்புள்ள எதிர்காலம் 27
நிகழக்கூடிய எதிர்காலம் 27
நிமித்திகர் 38
நிலையாமை 38
நியூஸ்கூல் ஃபார் சோஷியல் ரிசர்ச்10
நீலபத்மனாபன் 167
நுண்ணறிவாளரின் முன்னுணர்தல்28
பழமைப் பற்றாளர் எதிர்கால வியல்16
பராசக்தி மகாகாவியம் 133, 134
பாப்கிராஸஸ் 5
பாரதி 73, 125, 128, 133, 135, 159
பாரதிதாசன் 125, 135
பாரதி-நேற்று இன்று நாளை 40
பிசிராந்தையார் 36, 131
பில்போடொமாஸோ மாரினெட்டி 9

பிளாட்டோ 130
பிளெட்ச் தீம் ஓ 10
புத்துலகம் 125
புதிய உலகு 125
புதிய உலகு செய்வோம் 133
புதிய கோணங்கி 128, 133
புதியதோர் உலகம் செய்வோம் 134
புது உலகம் 125
புதுத்தமிழ் இலக்கணம் 157
புதுமையாக்கம் 76
புராணக்கதை 158
புள்வரவு 38
புனைவு சமூகவியல் 13
புனைவுலகம் 125
பெண்ணியம் 157
பெஸ்ட் ஹேவ் லடா 20
பொதுப்போக்கு அடிப்படைக் கணிப்புநெறி 28
பொதுப்போக்குக் கணிப்புரை 15
பொதுமக்கள் எதிர்காலவியல் 16
பொருளும் அருளும் 133
பொன்னுலகம் 125
போகின்ற பாரதமும் வருகின்ற பாரதமும் 133
போலக், பிரெட், எல் 9, 20
மதுரைத் திட்டம் 154
மறு சிந்தனை 159
மனையியல் 161
மார்கரெட் மீடு 19
மார்ஷல் மக்லுஹன் 23
மிதவேக மாற்றம் 75
மீள்வாசிப்பு 159
மு.வ. 127, 135
மேத்தா மு. 74
யாப்பருங்கல விருத்தி 80, 157
யோகமூர்த்தி, ஆ, 72
வ.ரா. 128, 130, 134, 135
வருங்காலவியல் 3
வருநாளியல் 3
வல்லிக்கண்ணன் 72
வலம்புரி ஜான் 40
வள்ளுவர் 34, 37
வாட்கின்ஸ் 12
விரிச்சி கேட்டல் 38
வெற்றிப் பயணம் 133
ஜயஜய சங்கர 134
ஜான் ஸ்கர் 133
ஜெயகாந்தன் 128, 134, 135
ஹெர்பர்ட் ஸ்பென்சர் 12
ஹெர்மன் கான் 19
ஹோம் ஜர்னல் 12

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.

### அண்மை வெளியீடுகள்

| | ரூ. பை. |
|---|---|
| அழகன் பெருமாள் கதை (சு.ப.) | 45.00 |
| Translation Theory and Application (தொ.நூ.) | 35.00 |
| Sound Correspondences between Tamil and Japanese | 40.00 |
| Social Life of the Tamils | 70.00 |
| Narriṇai Four Hundred (English Translation) | 175.00 |
| உ.வே.சா. நூல்களில் சொல்லும் சுவையும் | 18.00 |
| Four Long Poems from Sangam Tamil (தொ.நூ.) | 30.00 |
| முத்ரா ராக்ஷஸம் (மொ.பெ.-ம.ப.) | 40.00 |
| Manimekalai (மொ.பெ.) | 20.00 |
| நாலடியார் மூலமும் உரையும் ஆங்கில மொழிபெயர்ப்புடன் (மொ.பெ.ம.ப.) | 90.00 |
| தமிழ் - ஆங்கிலம் - அகராதி - பகுதி 4 (ம.ப.) | 125.00 |
| தமிழ் - ஆங்கிலம் - அகராதி - பகுதி 3 (ம.ப.) | 225.00 |
| தமிழ் - ஆங்கிலம் - அகராதி - பகுதி 2 (ம.ப.) | 200.00 |
| தமிழ் - ஆங்கிலம் - அகராதி - பகுதி 1 (ம.ப.) | 150.00 |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் (ம.ப.) | 125.00 |
| சங்க இலக்கிய ஆய்வுகள் (தொ.நூ.) | 30.00 |
| தொல்காப்பிய ஆய்வுகள் (தொ.நூ.) | 20.00 |
| Indian Epistemology | 125.00 |
| தமிழர் சமூகவியல் சில பார்வைகள் | 35.00 |
| பயிலரங்கக் கவிதைகள் (தொ.நூ.) | 18.00 |
| தமிழ் நாடகம் நேற்றும் இன்றும் (தொ.நூ.) | 30.00 |
| பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் (தொகுதி 2) | 80.00 |
| தாய்நாட்டிலும் மேலை நாடுகளிலும் தமிழியல் ஆய்வு (தொ.நூ.) | 75.00 |
| ஜப்பானியக் காதல் பாடல்கள் | 75.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |

---

No. 399 **தமிழ் இலக்கியத்தில் எதிர்காலவியல்** Rs. **45/-**